தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1981ஆம் ஆண்டு ஏப்ரல் 9

பங்குனி 27, ரௌத்திரி—திருவள்ளுவர் ஆண்டு 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு ''

மாறுபட்ட கொள்கைகளை உடைய பல்வேறு குழுக்களும், உடனிருந்தே பாழ்படுத்தும் உட்பகையும், அரசனைத் துன்புறுத்தும் கொலைத் தொழில் பொருந்திய குறும்பரும் இல்லாததே நாடாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தென்னாற்காடு மின் திட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

*வினா எண். 708—திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மின் திட்டத்தை (தமிழ்நாடு மின் சார வாரியம்) இரண்டு திட்டங்களாகப் பிரிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்

(அ) ஆம்.

(ஆ) இப்பொருள் மின் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எப்போது இந்த மின் திட்டத்தை இராண்டாகப் பிரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விரைவிலே அதுபற்றி மின் வாரியம் முடிவெடுக்கும்.

திரு செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டாக பிரிக்க இருக்கும் அந்தத் திட்டத்தில் எந்தெந்த பகுதிகள் சேர்க்கப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும், ஏற்கனவே தென் ஆற்காடு மாவட்டம் இரண்டு அபிவிருத்தி மாவட்டங்களாக இயங்குகின்றது. அந்த அடிப்படையில் மின் வாரியம் பரிசிலிக்கும்.

ஆதிதிராவிடர்கள் மற்றும் மலைவாழ் மக்களுக்கு விவசாய பம்பு செட்டுகளுக்கான மின் இணைப்பில் முன் உரிமை வழங்கல்.

*வினா எண் 709—திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிப்பதில் ஆதிதிராவிடர்களுக்கும் மலைவாசிகளுக்கும் முன்னுரிமை வழங்க அரசு அனுமதித்துள்ளதா?

(ஆ) ஆதிவாசிகள், அறிவிக்கப்பட்ட பகுதிகள் அல்லாத இடங்களில் விவசாயம் செய்தாலும் அவர்களுக்கும் இந்த சலுகை விரிவு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிப்பதில் மலைப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினரின் (Tribal People) பம்பு செட்டுகளுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது,

(ஆ) ஆதிவாசிகள், அறிவிக்கப்பட்ட பகுதிகள் அல்லாத இடங்களில் விவசாயம் செய்தால் அவர்களுக்கு தனியான முன்னுரிமை அளிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு தி. க. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் இணைப்பு கொடுப்பதில் ஆதிவாசிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே மாதிரி 2, 3 ஏக்கர்கள் வைத்திருக்கும் சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது ஆதிவாசிகளுக்கு மட்டும்தான். அதாவது மலைவாழ் ஆதிவாசிகளுக்கு மட்டும் தான். ஆதிதிராவிடர்களுக்கு அல்ல ; சிறு விவசாயிகளுக்கெல்லாம் கொடுக்கின்ற அத்தகைய உத்தேசம் எதுவும் தற்போது இல்லை.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் மின் இணைப்புப் பெறுவதற்காக சில பேர்கள் முதலில் மலைவாழ் ஆதிவாசிகள் பேரிலே நிலத்தை எழுதி வைத்து, மின் இணைப்பு கிடைத்த பிறகு அந்த நிலத்தை தங்கள் பெயரில் திருப்பி எழுதிக்கொள்வதாகச் சொல்லப் படுகிறதே, அதைப்பற்றி அரசுக்கு ஏதாவது தகவல் வந்திருக் கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசுக்குத் தகவல் ஏதுமில்லை. ஆனால், அப்படியும் ஏமாற்றக் கூடியவர்கள் நம் சமுதாயத்திலே இருக்கிறார்கள்.

திரு. வெ. அரங்கராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிவாசிகள் என்பது மலைப் பிரதேசத்திலே வாழ்கின்ற மக்களுக்கு மின் இணைப்பில் முன்னுரிமை கொடுப்பதாக கூறப்படுகிறது. மலைவாழ் ஆதிவாசிகளிலே 39 பிரிவுகள் இருக்கின்ற காரணத்தினால், கீழே, தரையிலே குடியிருப்பவர்களுக்கும் அந்த மின்இணைப்பு முன்னுரிமையைக்கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஹில் ஏரியா டெவலப்மென்ட், மலையிலே இருக்கின்றவர்களுக்கு செய்யக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களின் அடிப்படையில் வருகிறது. அந்த ஆதிவாசிகளுக்கு மட்டும் நாம் முன்னுரிமை தருகிறோம். அதை மற்றபடி கீழ்ப்பகுதியிலே இருக்கின்றவர்களுக்கு, சம நிலத்திலே இருக்கின்றவர்களுக்கு தரவேண்டுமென்ற அடிப்படை வந்தால், மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் சொன்னது தான் நடக்கும்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிவாசிகள் இல்லாத பகுதிகளில் முன்னாள் ராணுவத்தினர் குடும்பத்தினருக்கு இந்த முன்னுரிமை கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி ஆதிவாசிகளைப் பற்றியது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்கு மின் இணைப்புக்கொடுப்பதில் முன்னுரிமை தருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அம்மா திரி வழங்கப்பட்டதில், மின் இணைப்பு கேட்டு எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன ? அதில் எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தற்போது என்னிடம் விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திருச்சி மலைக்கோட்டைக்கு '' இழுவை இரயில் '' அமைக்கும் திட்டம்.

*வினா எண் 710—திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மலைக்கோட்டைக்கு விஞ்ச் (Winch) அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைக்கோட்டையில் இருக்கிற உச்சி பிள்ளையார் கோவிலுக்கு அதிகமான அளவில் பக்தர்கள் தினசரி செல்கிறார்கள். அடுத்த ஆண்டிலாவது பழனியில் இருப்பதைப் போன்று இழுவை இரயில் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு இழுவை இரயில் அமைப்பதை முன்பே பரிசீலிக்கப்பட்டு 9.60 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. அதற்கு தொழில் நுட்ப ரீதியில் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்லப்பட்டது. உச்சி பிள்ளையார் இருக்கிற குன்று பகுதி அதிக உயரமில்லாத காரணத்தால் நடந்து சென்று வருவது நல்லது என்று பக்தர்கள் அபிப்பிராயப்பட்டதால் அது கைவிடப்பட்டது.

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் ஆலயத்திலுள்ள '' இரட்டைத் திருமாளிகை''.

*வினா எண். 711—திரு. க. பாரமலை : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரம் நகரிலுள்ள அருள்மிகு ஏகாம்பரநாதர் கோவிலில் '' இரட்டை திருமாளிகை '' எனப்படும் பகுதி முள் புதர்கள் வளர்ந்து பக்தர்கள் போக முடியாத அளவிற்கு

1981 ஏப்ரல் 9]

சீர்கெட்டுப்போயிருப்பது பற்றி அரசுக்குத் தகவல் எதுவும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அப்பகுதியை சீரமைப்பதற்கு அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ). ஆண்டு தோறும் இரட்டைத் திருமாளிகையின் எதிரில் வளரும் செடி, கொடிகள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், திருமாளிகையைச் செப்பனிடவும், ஆலயத்தில் இதர திருப்பணிகளைச் செய்யவும், திருப்பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரட்டை திருமாளிகைக்குச் சொந்தமான நிலங்களை, கோவிலிலிருந்து எந்தவித அதிகாரமும் இல்லாது பயிர் செய்து அனுபவித்து வருகிறார்கள். எந்தவித குத்தகையும் கொடுப்பதில்லை. இதில் அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இரட்டை திருமாளிகை திருப்பணி பற்றி கேள்வி இருக்கிறது. அதற்கான விவரங்கள் தான் என்னிடம் இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் தக்க தகவல்களைத் திரட்டித் தரலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பதிலிலே இருந்து இந்த இரட்டை திருமாளிகையின் முன் செடி, கொடிகள் வளர்ந்திருப்பது உண்மைதான் என்பது தெரியவருகிறது. அவற்றை அப்புறப்படுத்தி பரிகாரம் காண்பதற்கு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தினசரி பக்தர்கள் கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வருகிறார்கள். ஆகவே, இதை மேலும் காலம் கடத்தாமல் விரைவில், அசெம்பிளி கூட்டம் முடிவதற்கு முன்னாலே, செடி, கொடிகளை அப்புறப்படுத்த உத்தரவு போட்டு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரட்டைத் திருமாளிகை என்னும் கட்டிடம் பெரிய காஞ்சீபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் ஆலயத்தின் ஒரு பகுதி. 1900 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4 ஆம் தேதி நடந்த ஆலய கும்பாபிஷேகத்திற்கு முன்னாலே ஆலயத்தின் அமைப்பு, தற்போதைய அமைப்பிலிருந்து மாறுபட்டு இருக்கிறது. அதற்குப்பிறகு, இரட்டை திருமாளிகை உபயோகத்தில் இல்லாது இருந்து வருகிற காரணத்தால் முள் புதர்கள் வளரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவை ஆண்டுக்கொரு முறை அப்புறப்படுத்தப்பட்டு சுத்தப்படுத்தப்படுகிறது. மேலும், தினசரி பக்தர்கள் இதை பயன்படுத்துவதில்லை. ஆலயத்தின் அருகே இருப்பதால் சீர்திருத்தி, நல்ல முறையில் வைக்கவேண்டுமென்று திருப்பணிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

[1981 ஏப்ரல் 9

தாரமங்கலத்தில் சுற்றுலா வாரியம் மூலம் தங்கும் விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண் 712—திரு. செ. செம்மலை : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் சுற்றுலா வாரியத்தின் மூலமாக தங்கும் விடுதி கட்ட அரசிடம் திட்டமுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தற்போது இல்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படி உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். தாரமங்கலம் சிற்பக்கலைக்கு பெயர் பெற்ற இடம். மாண்புமிகு அமைச்சர் அவர்களே கண்டு களித்திருக்கிறார்கள். தினசரி நூற்றுக்கணக்கான பேர்கள் சிற்பக்கலையைப் பார்வையிடுகிற நிலை இருக்கிறது. ஆகவே, உடனடியாக சுற்றுலா வாரியம் மூலமோ, அல்லது அறநிலையத்துறை மூலமாகவோ தங்கும் விடுதியை கட்ட முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9—10]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் ஆலயத்திலே மிகச் சிறந்த சிற்பங்கள் இருப்பது உண்மை. அந்தச் சிற்பங்கள் அந்த ஆலயத்திலே இருக்கின்றன என்பதுகூட தமிழகத்திற்குள்ளே ஏன் குறிப்பாக சேலம் மாவட்டத்திற்குள்ளே கூட பரவவில்லை என்பது என்னுடைய கருத்து. அதைப் பரப்பி, சிற்பக் கலையைப் பற்றிய சிறப்பை எடுத்துச் சொல்லி மக்களை அங்கே வரவழைத்ததற்குப் பிறகு அந்த முயற்சிகளை அறநிலையத் துறையோ அல்லது சுற்றுலாத் துறையோ மேற்கொள்ள இயலும்.

கிருஷ்ணகிரியில் சுற்றுலா மாளிகை கட்டும் திட்டம்.

*வினா எண். 713—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் பயணிகள் (சுற்றுலா) மாளிகை (Tourist Bungalow) கட்டும் உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்பணி எப்போது மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) : கிருஷ்ணகிரியில் சுற்றுலா மாளிகை கட்டும் திட்டம் ஒன்றும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், அங்கு ஒரு சாலை ஓரத் தங்கும் விடுதி (Motel) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் கட்டப்பட்டு வருகிறது.

1981 ஏப்ரல் 9]

திரு. பி. எஸ். துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கும், ஆந்திரத்திற்கும் மையத்திலே இணைப்புச் சாலைகள் அமைந்திருக்கின்ற இடத்திலே அது இருப்பதால் அங்கே சுற்றுலா விடுதி கட்டினால் அங்கே வந்து தங்குகிறவர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு மேலும் அந்த இடத்திலே கட்டுவதற்கு உத்தேசம் உண்டா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அந்த வினாவிற்கு விடையளிக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு தேசிய நெடுஞ்சாலையில் உள்ள போக்குவரத்து முக்கியமாக உள்ள இடமாக இருப்பதால் தேசிய நெடுஞ்சாலை எண் 46, கிருஷ்ணகிரியில் உள்ள போகனப்பள்ளி கிராமத்திற்கு அருகில் சாலையோர தங்கும் விடுதியொன்று அமைக்க திட்டமிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த விடுதியில் 10 அறைகளையும் உணவு உட்கொள்ளும் அறையையும் உரையாடல் கூடமும் சமையல் அறையும் மற்றும் மேலாளர் அறையும் கட்டப்படுகிறது. அதன் மதிப்பீடு சுமார் 7.5 இலட்சம் ரூபாய் என்று சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர் தகவல் தந்திருக்கிறார்கள்.

திரு. டி. தீர்த்தராமன் : தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியில் கட்டவில்லையென்றாலும் ஒசூரில், அது தொழில் அபிவிருத்தி அதிகமாக உள்ள இடமாக இருப்பதால், அங்கே வந்து தங்குகிறவர்களுக்கு வசதியாக இருக்கின்ற முறையிலே அங்கேயாகிலும் கட்ட அரசு முன்வருமா.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ஒசூர் இப்போதுதான் வளர்ச்சியடைந்து கொண்டு வருகிற தொழிற் பகுதியாக விளங்கிக் கொண்டு இருக்கிறது. ஒசூருக்கு வருகின்றவர்கள் அநேகமாக பெங்களூரிலே இறங்கி அங்கே வந்து விட்டு பெங்களூருக்கே சென்று விடுகிறார்கள். எதிர்காலத்திலே அதன் வளர்ச்சியைக் கருதித்தான் சுற்றுலா விடுதி அங்கே கட்ட இயலுமா என்பதை சுற்றுலாத்துறை பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 714 முதல் 717 வரை உள்ளாட்சித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

தேவக்கோட்டை அரசு மருத்துவமனை.

*வினா எண் 718—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தேவக்கோட்டையில் உள்ள அரசினர் மருத்துவமனை தலைமை அதிகாரி மீது புகார்கள் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) ஆம்.

(ஆ) தேவக்கோட்டை அரசினர் மருத்துவமனை மருத்துவ அதிகாரி டாக்டர் இராசலட்சுமி மீது கூறப்பட்ட புகார் குறித்து இராமநாதபுரம் மாவட்ட மருத்துவ அதிகாரி விசாரணை நடத்தி அரசுக்கு அறிக்கையொன்றினை அளித்துள்ளார்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, அரசினர் மருத்துவமனையிலே பணி புரியும் மருத்துவ அதிகாரிகள் 3 ஆண்டுகளுக்குமேல் தொடர்ச்சியாக இருந்திருக்கிறார்கள். 3 ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்யக்கூடியவர்களை மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? இதிலே அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் இராசலட்சுமி என்பவர் 1979ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள்முதல் தேவக்கோட்டை அரசினர் மருத்துவ மனையில் மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். இப்போது 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3 ஆம் நாளன்று அந்த இடத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டு இருக்கிறார்.

பேரணமல்லூர் தொகுதியில் மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 719—திரு. பி. எம். வெங்கடேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதியில் ஒன்றியத்தின் பொது பண்டில் இருந்து மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:

இல்லை.

திரு. பி. எம். வெங்கடேசன் : தலைவர் அவர்களே, பெரணமல்லூர் பேரூராட்சியிலே எந்தவிதமான நிதி வசதியும் இல்லாத காரணத்தாலும் அங்கே 15 ஆயிரம் மக்கள் தொகை இருக்கின்ற காரணத்தினாலும் உடனடியாக இனியாவது மருத்துவ மனையை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, விடை இல்லை என்று தான் சொன்னேன். இப்போதும் அதையே தான் சொல்ல வேண்டும்.

1981 ஏப்ரல் 9]

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மருத்துவ மனைகள் இல்லாத இடங்களிலே ஊராட்சி ஒன்றியங்கள் அவர்களாகவே முன்வந்து நிலத்தை இனாமாகக் கொடுத்து மருந்துகளைக் கொடுத்தால் டாக்டர்களை அரசு நியமிக்கும் என்ற விதி இருக்கிறதே, அந்த விதி அடிப்படையிலேயாவது ஊராட்சி ஒன்றியங்களில் அப்படி முன்வருகிற இடங்களிலே மருத்துவ அதிகாரிகளை அரசு செலவில் நியமிக்க அரசு முன்வந்து அப்படிப்பட்ட மருத்துவ மனைகளைத் தொடங்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த நிலைமைகளுக்கேற்ப அந்த நிலைமைகளை ஆராய்ந்து, பின்னர் முடிவெடுத்துக் கொள்கிறோம். We take decision on the merits of individual cases.

கலவை, விஷாரம் பேரூராட்சிகளிலுள்ள அரசு மருந்துவமனைகள்.

*வினா எண். 720—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதியில் உள்ள கலவை, விஷாரம் பேரூராட்சிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளை மக்கள் வசதிக்கு ஏற்ப விரிவுபடுத்தும் வகையில் மேலும் மருத்துவர்களை நியமிக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இல்லை.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கலவை பேரூராட்சி மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லை என்பதும், அதே சமயத்தில் விஷாரம் பேரூராட்சியில் ஆண் டாக்டர் இல்லை என்கிற காரணத்தினால், ஏழை எளிய மக்கள் அதிகம் பணம் செலவு செய்து தனிப்பட்ட டாக்டர்களிடத்திலே வைத்தியம் பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால், இந்த இரண்டு இடங்களிலும் பெண் டாக்டர் ஒருவரையும், ஆண் டாக்டர் ஒருவரையும் நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நிச்சயமாக அந்த முயற்சியை அரசு எடுக்கும். கலவையைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரியாக இருந்த அந்த மருந்தகத்தை கவர்ன்மென்ட் டிஸ்பென்சரியாக மாற்றி, இப்போது 10 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக இருக்கிறது. அங்கே

ஆண்களுக்கு 5 படுக்கைகளும், பெண்களுக்கு 5 படுக்கைகளும் இருக்கின்றன. 1–7–1970 முதல் அது அரசாங்க மருத்துவ மனையாக இயங்கிக்கொண்டு இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்கள் அதை இன்னும் விரிவுபடுத்தி கிச்சன் பிளாக், மெடிக்கல் ஆபிசர்ஸ் குவாட்டர்ஸ், மெட்டர்னிட்டி அசிஸ்டன்ட் குவாட்டர்ஸ் போன்றவைகள் கட்டவேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் உள்ளது. மேல்விஷாரத்தைப் பொறுத்தவரையில் அது ஒரு லோக்கல் பண்டு ஆஸ்பத்திரியாக இருந்தது. அது அரசாங்க டிஸ்பென்சரியாக 21–11–1972 முதல் மாற்றப்பட்டது.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மக்கள்தொகை பெருகி வரும் இந்த நாட்களில் பல ஆண்டுகளுக்கு முன்பு குறைந்த படுக்கைகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மருத்துவமனைகள் அசுத்தமான முறையில் நடந்துகொண்டு வருகின்றன. ஆகையினால் அந்த மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், கட்டட வசதியையும் ஏற்படுத்தினால், சுற்றுப்புற கிராம மக்களுக்கு, வசதி அற்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் பயனடையத் தக்க வகையில் இதை விரிவுபடுத்த அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவ அதிகாரி அரசுக்குத் தந்திருக்கிற பரிந்துரையை வைத்துக் கொண்டுதான் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று சொன்னேன். அந்த பதிலே நிச்சயமாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் திருப்தி அளிக்கும் என்று கருதுகிறேன்.

திரு. ப. தீர்த்தராமன் : தலைவர் அவர்களே, அரசாங்க டிஸ்பென்சரியிலே ஒரு நாளைக்கு 250-க்கும் மேற்பட்ட பேஷன்டுகள் வருவதால், அங்கே இருக்கின்ற ஒரே டாக்டர் அவர்களைச் சரியாக கவனிக்க முடியவில்லை. எனவே, இதுபோன்ற மருத்துவமனைகளில் கூடுதலாக மருத்துவர்களை நியமிக்கும் திட்டம் அரசுக்கு இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு கொள்கைப் பிரச்சினை. நேற்றையதினம்கூட, இதுபற்றி விரிவாகவும், விளக்கமாகவும் சொல்லியிருக்கிறேன்.

1981 ஏப்ரல் 9]

சீர்காழி அரசு மருத்துவமனை.

*வினா எண் 721—திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், சீர்காழி அரசு மருத்துவமனையில் எக்ஸ் கதிர் கருவி வேலை செய்யவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) ஆம். சீர்காழி அரசு மருத்துவமனையில் உள்ள எக்ஸ் கதிர் கருவி 13-2-1981 அன்று பழுதுபார்க்கப்பட்டு இயங்கும் நிலையில் உள்ளது.

திருப்பத்தூரிலிருந்து குப்பத்திற்கு (ஆந்திர மாநிலம்) புதிய பேருந்து விடும் திட்டம்.

*வினா எண். 722—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரிலிருந்து ஆந்திர மாநிலம் குப்பத்திற்கு புதிய பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் பகுதியில் இருந்து குப்பம் பகுதிக்கு வியாபார போக்குவரத்து அதிகம் இருக்கிற காரணத்தினாலும் போக்குவரத்து சாலை வசதியும் இருக்கிற காரணத்தினாலும், மாநிலத்தின் ஓரப்பகுதி மக்களுக்கு பயன்படும் காரணத்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து, புதிய பேருந்து விட ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூருக்கு நேரடியாக பேருந்து இல்லை என்று சொன்னாலும், பேரணாம்பட்டிலிருந்து பேருந்து விடப்படுகிறது. தனியாக அதற்கு ஒரு பேருந்து வேண்டும் என்ற நிலை இருக்குமானால் பரிசீலித்து அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

[1981] ஏப்ரல் 9

(முற்பகல 9-20)

திரு. தி. அன்புமகன் : தலைவர் அவர்களே, பேரணாம்பட்டுக்கும் திருப்பத்தூருக்கும் இடையே அதிக தொலைவு இருக்கிற காரணத்தால், திருப்பத்தூரில் இருந்து குப்பம் செல்வதற்கு குறுக்குப் பாதை இருப்பதால், அந்தப் பாதை வழியாக புதிய பேருந்து விடுவதால் அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை ஏற்படும் என்கிற காரணத்தால், புதிய பேருந்து விடும் முயற்சியை அரசு மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதிகாரிகள் மூலமாக அதற்கான ஆய்வு அங்கே நடத்தி, தேவைப்படுமானால் புதிய பேருந்து விடப்படும்.

திரு. செ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் இப்படி பல இடங்களுக்கு பேருந்து வேண்டும் என்கிற தேவையிருக்கிறது. ஆனால், புதிய வழித்தடங்களை ஏற்படுத்தக்கூடாது என்று அரசாங்கம் தடை விதித்து இருப்பதால், அதைச் செய்ய இயலாது என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆகவே, அந்தத் தடையை நீக்கி புதிய வழித்தடங்களை இப்படிப்பட்ட பகுதிகளில் ஏற்படுத்தித் தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, புதிய வழித்தடங்கள் ஏற்படுத்துவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. தேவையான இடங்களில் தேவையான பேருந்துகள் விடுவதற்கு இப்போது வாய்ப்பு இருக்கிறது.

திரு. பி. எஸ். துரைசாமி : தலைவர் அவர்களே, திருப்பத்தூரிலிருந்து குப்பம் செல்வதற்கு பேருந்து தேவை என்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட நாட்களாகக் கேட்டு வருகிற காரணத்தால், மீண்டும் அந்தத் திட்டத்தைப் பரிசீலித்து, புதிய பேருந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, வாணியம்பாடி, ஆம்பூரில் இருந்து திருப்பத்தூர் வழியாக பேருந்து இருந்த காரணத்தால்தான் இதுவரையில் அதைப்பற்றி அரசு கவனிக்காமல் இருந்தது. இப்போது அந்த இடத்தில் இருந்து வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற காரணத்தால் அங்கே இருக்கும் சூழ்நிலைகளைப் பார்த்து தேவை இருக்கிறது என்று கருதினால் ஆவன செய்யப்படும்.

[1981 ஏப்ரல் 9]

காஞ்சீபுரத்திலிருந்து பெங்களூருக்கு விரைவுப் பேருந்துப்பணி

* வினா எண். 723—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரத்திலிருந்து பெங்களூர் வரை விரைவு வண்டி விட மக்கள் கோரிக்கை மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(ஆ) எப்போது விட உத்தேசிக்கப்பட்டுள்ளது?

(இ) மக்களின் போதிய இடவசதி முன்னிட்டு கூடுதல் விரைவு வண்டி விட ஏதாவது திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ), (ஆ) மற்றும் (இ): இதற்கான நடவடிக்கைகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் எடுத்து வருகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, எடுக்க இருக்கின்ற நடவடிக்கைளின் மூலம் எத்தனை பேருந்துகள் விட ஏற்பாடு செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் 5 பேருந்துகளை 9 முறை இயக்கிக்கொண்டு வருகிறோம். இன்னும் தேவை என்று கருதப்படுமானால், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் எத்தனை முறை விட முடியுமோ அதற்கான ஏற்பாடு செய்யப்படும். கருநாடக மாநிலத்திற்கும், நம்முடைய மாநிலத்திற்கும் இடையே இருக்கின்ற ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இதை இயக்கிக்கொண்டு வருகிறோம். ஒப்பந்தத்தில் இருப்பதற்கும் மேலாக அதிகமான அளவிற்குப் பேருந்துகள் விட வேண்டும் என்று சொன்னால், இரண்டு மாநிலத்திற்கும் டாக்ஸ் செலுத்த வேண்டியிருக்கும்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேருந்துகள் காஞ்சீபுரத்தில் இருந்து செல்வதாகச் சொன்னார்கள். காஞ்சீபுரம், ஆரணி, போன்ற இடங்கள் பட்டுக்குப் புகழ் பெற்ற நகரங்களாகும். அந்தப் பட்டுத் துணிகளைத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருள்களை பட்டு, கோரா பெங்களூரில் இருந்துதான் அந்தத் தயாரிப்பாளர்கள் பெற்று வரவேண்டியிருக்கிறது. ஆகவே, தினந்தோறும் பெங்களூர் சென்று வர வேண்டிய நிலைமையில் அங்கே அதிகமான அளவிற்குப் பயணிகள் இருக்கின்றனர். இந்தப் பேருந்துகள் சென்னையில் இருந்து வருகிற காரணத்தால், தனியாகக் காஞ்சீபுரத்தில் இருந்து, அல்லது ஆரணியில் இருந்து

காஞ்சீபுரம் வழியாக பெங்களூருக்கு புதிய பேருந்து விட அரசு முன்வருமா? திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகத்தின் மூலம் சாத்தியம் இல்லை என்று சொன்னாலும், சேலத்தில் இருந்து அதிகமான பேருந்துகளை அண்ணா போக்குவரத்துக் கழகம் விடுவதுபோல், காஞ்சீபுரத்தில் இருந்து தந்தை-பெரியார் போக்குவரத்துக் கழகம் மூலம் புதிய பேருந்து வசதியை பெங்களூருக்குச் செய்து தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பேருந்துக் கழகத்தின் மூலம் விடுவது என்கிற பிரச்சினை இங்கே இல்லை. எந்தப் போக்குவரத்துக் கழகமாக இருந்தாலும் அந்தப் பகுதியில் பேருந்து வசதி தேவை என்று கருதினால் விடுவதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால், இங்கேயுள்ள பிரச்சினை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் 5 பேருந்துகள் 9 முறை கருநாடக மாநிலத்தோடு அமைந்துள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் விடப்படுகின்றன என்பதாகும். அவர்கள் மேலும், பேருந்துகளை விடுவதற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்றால், நாம் விடுகின்ற கூடுதல் பேருந்துகளுக்கு, இரண்டு மாநில வரியும் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படும். இருப்பினும், மாநிலத்தில் உள்ள மக்களின் வசதியைக் கருதி, தேவைப்படின் அதைச் செய்ய அரசு தயாராக இருக்கிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, என்னுடைய மூலக் கேள்வி காஞ்சீபுரத்தில் இருந்து பெங்களூருக்கு புதிய பேருந்து விடப்படுமா என்பதாகும். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது சென்னையில் இருந்து காஞ்சீபுரம் வழியாக பேருந்துகள் செல்வதைக் குறிப்பிட்டார்கள். அந்தப் பேருந்துகள் சென்னையில் இருந்து வருவதால் காஞ்சீபுரத்தில் இருந்து செல்லும் பயணிகளுக்கு அதில் இடம் கிடைக்க வாய்ப்பு இருப்பது இல்லை. ஆகவே, காஞ்சீபுரம்-பெங்களூருக்கு இடையே அதிக அளவில் தொழில் தொடர்பு இருக்கிற காரணத்தால், அங்கேயிருந்து நேரடியாக ஒரு விரைவுப் பேருந்து விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நானும் பதில் சொல்கிற நேரத்தில் காஞ்சீபுரத்தில் இருந்து பேருந்துகள் ஓடுகின்றன என்று சொல்லவில்லை. சென்னையில் இருந்து ஓடுகின்றன என்று தான் சொன்னேன். அந்த வகையில்தான் 5 பேருந்துகளை 9 முறை இயக்குகிறோம். அதற்கான வகையில் தான் தற்போது ஒப்பந்தம் இருக்கிறது. உங்களுடைய உணர்வுகளை கருநாடக மாநிலத்திற்கு எடுத்துச்சொல்லி, கூடுதலாகப் பேருந்துகள் விடுவதற்கு முயற்சி எடுக்கப்படும். அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்றால், இரண்டு மாநிலத்திலும் டாக்ஸ் கட்டி நாம் பேருந்து ஓட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

1981 ஏப்ரல் 9]

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலேயிருந்தும், காஞ்சீபுரத்திலேயிருந்தும் பெங்களூருக்குச் செல்லும் வண்டிகள் குடியாத்தம் மார்க்கமாக செல்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பார்த்து, அந்த வழித்தடத்தைப் பார்த்த பின்னர்தான் அதைப்பற்றி முடிவு சொல்ல முடியும்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தலைமை அலுவலகம்

*வினா எண். 724—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக தலைமையிடம் திருச்சிக்கு மாற்றுவதற்கு அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) : ஆம். இது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. த. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தலைமையிடத்தைத் திருச்சிக்கு மாற்றுவதற்கு எப்பொழுது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது? எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் இன்னும் கொஞ்சம் அதிகமான பேருந்துகள் வந்த பின்பு திருச்சிக்குக் கொண்டு போகும்பொழுது பணிமனைகள் விரிவாக்கப்பட வேண்டும். இதற்கான ஏற்பாடுகளைச் செய்த பின்பு அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. த. ஆறுமுகம் : தலைவரவர்களே, திருச்சியில் பணிமனை கட்டுவதற்கான இடம் வாங்கப்பட்டுள்ளதா? எவ்வளவு இடம் வாங்கப்பட்டுள்ளது? எப்பொழுது வேலை துவங்கப்படும் என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருச்சியிலே இடம் எவ்வளவு வாங்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், அங்கே இதை மாற்ற வேண்டுமென்ற கருத்து மட்டும்தான் வந்திருக்கிறது. என்னென்ன

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி இனிமேல்தான் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏறத்தாழ 443 பேருந்துகள் இருக்கின்றன ; 135 பேருந்துகள், சென்னையில் இருப்பதால் அதை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் பொழுது திருச்சியிலே அதிகமான பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட முறை ஏற்பட்ட பின்னர்தான் அதை மாற்றுவதற்கான காரியங்களைக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநிலத் தலைநகரத்தைத் திருச்சிக்கு மாற்றிய பிறகு இது மாற்றப்படுமா அல்லது அதற்கு முன்பே இது மாற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதற்கோ முடிச்சுப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்கள் தனி என்பதைத் தயவு செய்து மறந்து விட வேண்டாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின், தலைமையிடத்தைத் திருச்சிக்கு மாற்றுவதற்கான குறிப்பு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவ்வாறு மாற்றுவதற்கான காரணம் என்ன ? அதன் மூலம் கிடைக்கும் பலன் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் தமிழகம் பூராவும் நாம் இயக்குகிறோம். மற்றப் போக்குவரத்துக் கழகங்கள் சில குறிப்பிட்ட மாவட்டங்களில் தான் இயங்குகின்றன. ஆனால், தமிழ்நாடு முழுவதும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மத்திய இடமாக திருச்சி வருகிறது. எனவேதான், அங்கே கொண்டு வர வேண்டுமென்ற உணர்வைத் தெரிவித்திருக்கிறார்கள். அதில் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன ; அவைகளையெல்லாம் ஆய்ந்து கொண்டிருக்கிறோம். எனவே, முழுவதையும் இப்பொழுதே சொல்லிவிட முடியாது. ஆராய்ந்த பிறகு, உங்களுக்குச் சொல்லிவிட்டுத்தான் நிச்சயமாக மாற்றுவோம்.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தலைமையிடத்தைச் சேலத்திற்கு மாற்றுவதற்கு அரசு முயற்சியெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

1981 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இடைப்பாடி என்று கேட்கவில்லை, அதைப் பொறுத்த வரையில் சந்தோஷப்படு கிறேன். சேலம் ஒரு ஓரமாகப் போய் விட்டது. மத்தியிலே உள்ள இடமாக வர வேண்டுமென்றுதான் திருச்சியைப்பற்றி எடுக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட எந்த நோக்கத்தோடும் அது எடுக்கப்படவில்லை.

சின்னாளப்பட்டியில் கைத்தறித் துணிகள் விற்பனை.

*வினா எண். 725—திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாவட்டம் சின்னாளப்பட்டியில் கைத்தறித் துணிகள் விற்பனைத் தேக்கத்தினால் நெசவாளர்கள் பாதிக் கப்பட்டுள்ளது பற்றி கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) ஆம்.

(ஆ) சின்னாளப்பட்டிப் பகுதியில் தேங்கியிருந்த கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்ய 1980 ஆம் ஆண்டு செப் டம்பர் திங்கள் 25 ஆம் நாள் அன்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. தீபாவளி மற்றும் பொங்கல் சிறப்புத் தள்ளுபடி மானியத்தைப் பயன்படுத்தி சுமார் ரூபாய் 27 இலட்சம் மதிப்புள்ள துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, தீபாவளி நேரத்தில் விற்பனை செய்தது போக தற் பொழுது மிகவும் அதிகமான துணிகள் தேக்கமாக இருப்பதால் அங்கேயுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையிலே செயல்பட முடியாமல், அங்கேயுள்ள நெசவாளர்களுக்கு இன் றைக்கு வேலை கொடுக்க முடியாமல் இருக்கிறது. இதனால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப் போக்கு வதற்கு தற்பொழுது என்ன திட்டத்தை அரசு எடுத்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது அதிக விற்பனையாகும் பாலிஸ்டர் ரகம், கோடம்பாக்கம் சேலைகள், ஸ்பன் சேலைகள் மற்றும் கைலிகள் ஆகியவை அதிகமாக விற்பனையாகிக் கொண் டிருக்கிறது. சின்னாளப்பட்டியில் தயாரிக்கப்பட்டு வருகின்ற

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

புடவைகளுக்குத் தற்போது கிராக்கி இல்லாத காரணத்தினால் மேற்படி ரகங்களை மாற்றியமைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது 500 தறிகள் இதில் ஈடுபடுத்தப்பட்டு இருக்கின்றன. மேலும், மதுரை வட்டாரக் கைத்தறி மற்றும் துணிகள் இயக்குநர் சில்லரை விற்பனை ஏற்பாட்டை விரிவாக்கித் துணிகள் மேலும் தேங்குவதைத் தவிர்க்க வழிவகைகளை ஆராய்ந்து கொண்டு வருகிறார்கள்.

[முற்பகல் 9—30.]

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னாளப்பட்டியைப் பொறுத்த வரையில், 20,000-க்கு மேற்பட்டத் தறிகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஸ்பன், கோடம்பாக்கம் போன்ற ரகங்களுக்கு 500 தறிகள் தற்பொழுது ஒதுக்கியிருப்பதாகக் கூறினார்கள். அது மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே, வருகின்ற ஆண்டிலே, இந்த ஸ்பன், கோடம்பாக்கம் போன்ற ரகங்களுக்கான தறிகளை அதிகமாக ஒதுக்கும் ஆலோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னாளப்பட்டியிலிருக்கிற மொத்தத் தறிகள் 3,753. ஆகவே, புதுரக துணிகளை உற்பத்தி பண்ணுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர் கூறிய முறைகளைக் கொண்டு செயலாற்றலாம்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் தேங்கியிருக்கக்கூடிய இந்தக் கைத்தறி துணிகளை சொஸைட்டிகளிலேயே விற்பனை செய்வதற்காக, அரசாங்கம் கைத்தறி கண்காட்சிகளில் அனுமதித்திருக்கிற தள்ளுபடியான 20 சதவீதம் தொகையை சொஸைட்டிகளுக்கும் அனுமதிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி கண்காட்சிகளிலே இடம் பெற்றிருக்கிற கூட்டுறவுச் சங்கம் சார்பாக விற்பனையாகின்ற கடைகளுக்கு 20 சதவீதம் கொடுப்பதற்கான அறிவிப்பை ஏற்கெனவே அரசு அறிவித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கைத்தறித் துணி தேக்கம் என்பது அடிக்கடி தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிற நிகழ்வாக இருக்கிறது. ஆகவே, கைத்தறி துணிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலே, இன்ன, இன்ன ரகங்கள் கைத்தறி துணிகளுக்கென்று

மட்டும் ஒதுக்கி அரசாங்கம் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கத் தயாராக இருக்கிறதா ? எதிர்காலத்திலே அது மாதிரியான நிகழ்வுகள் ஏற்படாமலிருக்க தொலைநோக்குத் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேக்கங்கள் ஏற்படுவதற்குக் காரணமே, ஒரே ரக துணிகளை உற்பத்தி செய்வதால்தான் அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகிறது. அதை மாற்றுவதற்குத் தான் டிசைனிங் சென்டர்ஸ் 5 இடங்களில் இப்பொழுது ஏற்பாடாகியிருக்கிறது. அவ்வப்போது தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான சூழ்நிலைகளை நெசவாளர்களுக்குக் கொடுத்து, எதிர் காலத்திலே தேக்கம் இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கும் திட்டத்தை இந்த அரசு வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னாளப்பட்டியில் மட்டும் அல்லாமல், தமிழகமெங்கும் கைத்தறி துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அந்தக் காலத்தில் கைத்தறி துணிகள் தேங்கியிருந்த பொழுது, அந்த நெசவாளர்களுடைய வறுமையைப் போக்குகின்ற வகையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறி துணி மூட்டைகளைச் சுமந்து விற்றார்கள். அதுபோல், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கைத்தறி துணி மூட்டைகளைச் சுமந்து விற்று, தேங்கியிருக்கிற அந்தத் துணிகளை விற்பதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய காலம் நெசவாளர்களைக் கவனிக்காத ஒரு சூழ்நிலையில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆதரவுக் கரம் கொடுத்தார்கள். இப்பொழுது நெசவாளர்களின் முன்னேற்றத்திலே இந்த அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்கிற காரணத்தால்தான் தோளிலே தூக்கிச் செல்லாமல், அதற்கு மாற்றாக மற்ற மாநிலங்களிலும் வெளி நாடுகளிலும்கூட, விற்கின்ற சூழ்நிலையை உருவாக்கி, தேக்கமே இல்லாத சூழ்நிலையை உருவாக்க, நெசவாளர்கள் மனதிலே ஒரு குளிர்வான எண்ணத்தை உண்டு பண்ணக்கூடிய திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாவினுடைய அடிச்சுவட்டிலே இந்த அரசு நடக்கிறது என்பதை இந்தத் தமிழகம் அறிந்ததே. பொதுவாக, கைத்தறி துணிகள் எவ்வளவு தேங்கிக் கிடக்கின்றன. கைத்தறி கண்காட்சியில் 20 சதவீதம் கைத்தறிக்குத் தள்ளுபடி கொடுக்கிறோம்

ஆனால், தீபாவளி, பொங்கலுக்கு 30 சதவீதம் கொடுத்து விற்பனை செய்து, தேக்கம் இல்லாமல் அனைத்து கைத்தறி துணிகளையும் விற்பனை செய்திருக்கிறோம். 10 சதவீதம் குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன? மத்திய அரசு தள்ளுபடிக்கு ஏதாவது வழி செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது கணக்குப்படி தற்சமயம் ரூபாய் 35 கோடிக்கு தேக்கம் இருக்கிறது. அதிலே ரூபாய் 20 கோடி கோ-ஆப்டெக்ஸிலும், ரூபாய் 15 கோடி கூட்டுறவுப் பிரதமச் சங்கங்களிலும் தேக்கம் இருப்பதால், அதைப் போக்குவதற்காகத்தான் கைத்தறிக் கண்காட்சியிலே, பிரதம சங்கங்கள் வைத்திருக்கின்ற காட்சிக்கூடங்களுக்கு 20 சதவீதம் கொடுக்கப் பட்டிருக்கின்றது. அதில் 10 சதவீதத்தை மாநில அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. 10 சதவீதம் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட மத்திய சர்க்கார், கடைசி நிமிடத்திலே அதை வாபஸ் பெற்ற காரணத்தால், நெசவாளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக 20 சதவீதம் கைத்தறி கண்காட்சியிலே, இடம் பெற்றிருக்கிற பிரதம சங்கக் கடைகளுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று நம்முடைய நாட்டிலேயிருக்கிற கைத்தறி துணிகளுக்கு வெளிநாடுகளில் இருக்கிற கிராக்கிகளைப் பற்றி தெரிந்து வைத்திருக்கிறார்கள். இன்றைக்குப் பெரும்பகுதி கூட்டுறவுச் சங்கங்களிலே கையில் துணி தேக்கம் இருக்கின்ற காரணத்தாலே, திரும்ப இயக்க முடியாமலும், வேலை கொடுக்க முடியாமலும், பல இடங்களில், ஏன் தமிழகம் பூராவும் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, சத்திரப்பட்டியில்கூட, போராட்டம் நடந்து, நேற்று சர்வ கட்சியைச் சேர்ந்த அத்தனை பேரும் ராஜபாளையத்திலே கைது செய்யப்பட்டிருப்பதாகவும்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கைத்தறி துணிகள் தேங்கி இருப்பதைப்பற்றிய மூலக் கேள்வியில், சத்திரப்பட்டியையெல்லாம் கொண்டு வந்தால் என்ன அர்த்தம்? சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் கேட்டால் பிரயோசனம் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி: ஆகவே, 3 மாதங்களுக்குமேல் எந்தக் கூட்டுறவுச் சங்கத்திலும் துணி தேக்கம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எந்த எந்த ரக துணிகளுக்கு அதிக கிராக்கி இருக்கிறதோ அந்த ரகத்தை நீங்கள் உற்பத்திச் செய்யச் சொல்லி, எந்த நேரத்திலும் தேக்கம் இல்லாமல்

அல்லது 3 மாதங்களுக்கு மேல் தேக்கம் இல்லாமல் பார்த்து, அவ்வப்போது கொள்முதல் செய்து, நெசவாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல், நிரந்தரமாக அவர்களுக்கு வேலை கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, தனியார் துறையில் வேலை பார்க்கும் நெசவாளர்களையும், கூட்டுறவுத் துறையில் வேலை பார்க்கும் நெசவாளர்களையும், இந்த இரண்டு துறைகளிலும் உற்பத்தியாகும் துணிகளின் தேக்கத்தைப் பற்றியும் இணைத்துக் கேட்டிருக்கிறார்கள். தனியார் துறையில் அரசு தலையிட முடியாது. கூட்டுறவுத் துறையிலே தயாரிக்கின்ற துணிகள் தேக்கத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தீபாவளி, பொங்கல் பண்டிகைக் காலங்களில் 20% தள்ளுபடி கொடுப்பதைப் போன்று ஆண்டு முழுவதும் கைத்தறித் துணிகளின் தேக்கத்தைப் போக்கும் வகையில் தள்ளுபடி கொடுத்து நெசவாளர்கள் குடும்பங்களை வாழ வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, தற்போது நிலவிவரும் பஞ்ச நிலைமையைக் கருதி, ஒரு பஞ்சநிவாரண நடவடிக்கையாக தேங்கி கிடக்கின்ற அனைத்து கைத்தறித் துணிகளையும் அரசு கோவாப்டெக்ஸ் மூலம் வாங்க ஏற்பாடு செய்யுமா? மேலும் ரிபேட் கொடுப்பதைப்பற்றிச் சொன்னார்கள் தற்போது ஆயிரம் ரூபாய்க்குமேல் துணி வாங்கினால் ரிபேட் வழங்கப்படுவதில்லை. ஒரு பட்டுச்சேலை விலையே தற்போது 1000 ரூபாய்க்குமேல் வந்துவிடுகிறது. 1000 ரூபாய்க்கு குறைவாக பட்டுச்சேலை வாங்க முடியாது. ஆகவே, அரசு இதை மறுபரிசீலனை செய்து, எவ்வளவு தொகைக்கு வாங்கினாலும் ரிபேட் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் ; தலைவரவர்களே 1000 ரூபாய்க்கு வாங்கப்படுகிற துணிகளுக்கு 20% தள்ளுபடி கொடுக்கப்படுவதில்லை என்றால் அது மத்திய சர்க்கார் கொள்கையை அனுசரித்துச் செய்யப்படுகிறது. நெசவாளர்கள் உற்பத்திச் செய்யும் துணிகளை பெருமளவில் விற்பனை செய்யும் ஒரு முயற்சியாக இந்தத் தடையை நீக்க வேண்டுமென்று நாம் மத்திய சர்க்காரை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வருகிறோம். இந்தத் தடை நீங்கினால் எவ்வளவு தொகைக்கு துணி வாங்கினாலும் தள்ளுபடி கொடுக்கலாம்.

ஆண்டாள் நெசவாளர் சங்கம், திருவில்லிபுத்தூர்

*வினா எண். 726—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருவில்லிப்புத்தூர் 268 ஆண்டாள் நெசவாளர் சங்கத்தில் வசூல் செய்யப்பட்ட சம பங்கு சிக்கன நிதியை உறுப்பினர்களுக்கு திரும்பக் கொடுப்பதில் ஏன் காலதாமதம் ஏற்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : கூட்டுறவு மத்திய வங்கிகளில் செலுத்தப்பட்ட சமபங்கு சிக்கன நிதியை உடனடியாகத் திருப்பி கொடுப்பதாயிருந்தால் அவற்றின் நிதி நிலை பாதிக்கப்படும். இப்பிரச்சினைக்கு முடிவு காண்பது பற்றி அரசு ஆய்வு செய்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சமபங்கு சிக்கன நிதித் திட்டத்தை அரசு கைவிட்டுவிட்டதா? அதற்குப் பதிலாக சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் வைக்கப்பட்டுள்ளதா? அதில் இந்த சமபங்கு சிக்கன நிதி சேர்த்து வைக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் சேராத நெசவாளர்களுக்கு இந்த சமபங்கு சிக்கன நிதியை திருப்பிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல சமபங்கு சிக்கன நிதியை அடியோடு விட்டுவிடவில்லை. 1962–ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதி 1975 நவம்பர் வரை இருந்தது. அந்த சம பங்கு சிக்கன நிதியை சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தோடு இணைத்திருப்பதால் அதன் அடிப்படையில் இறந்துபோனவர் குடும்பத்திற்கு முன்னால் 500 ரூபாய் கொடுக்கப்பட்டது. இப்போது 3000 ரூபாயாகக் கொடுக்கப்படுகிறது. இதில் சேராத நபர்களுக்கு ஏறத்தாழ 82 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. இதை ஒட்டுமொத்தமாக வங்கியிலிருந்து எடுத்து வழங்கினால் அந்த வங்கி நிதி நெருக்கடியால் பாதிக்கப்படும் என்பதால் இந்த அரசு நிதித்துறையை கலந்துபேசி, விரைவில் முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-40]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்கள் இறந்தால் சேமநலநிதியிலிருந்து 3000 ரூபாய் கொடுப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் இந்தக் காலத்தில் 3000 ரூபாய் என்பது 30 ரூபாய் மாதிரி இருக்கின்றது. ஆகவே 10,000 ரூபாய் சேமநலநிதியிலிருந்து கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, 1962–லே ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்

தின் மூலம் 1980—வரை 500 ரூபாய் மட்டுமே கொடுக்கப்பட்டு வந்தது. கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தொகையினை 3000 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தி இருக்கிறார்கள். ஆனால் இப்போதுள்ள விலைவாசிப் படி இந்தப் பணம் காணாது என்று சொல்கிறார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். இதை மனதிலே கொண்டு அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு சங்கத்திலே சேர்ந்தவர்கள் இறந்துவிட்டால் 500 ரூபாய்க்கு பதிலாக 3000 ரூபாய் கொடுப்பதாகசென்ற பட்ஜெட் டின்போது அறிவித்தார்கள். ஆனால் அந்தத் தொகையினை வழங்குவதற்கு இன்னும் அரசு உத்தரவு வரவில்லை என்று சொல்லி குடியாத்தத்திலே உள்ள ஒரு கூட்டுறவு சங்கத்திலே இறந்துவிட்ட ஒருவருக்கு 500 ரூபாய்தான் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இது குறித்து அமைச்சருக்கு எழுதி இருப்பதாகவும் சொன்னார்கள். இது அமைச்சரின் கவனத்திற்கு வந்ததா? அரசு நடவடிக்கை எடுத்ததா?

மாண்புமிகு எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் 1—3—1980-லிருந்து நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு இருக்கின்றது. இதிலே கையெழுத்து ஆகி நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆனால் இதுசம்பந்தமாக ஏதாவது புகார் இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக அது நிவர்த்தி செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம்-வாதம்சேரியிலுள்ள
நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண் 727. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் திரு ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கைத்தறி கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் வாதம்சேரியிலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஒன்றில் சுமார் 55 ஆயிரம் ரூபாய் கையாடல் நடைபெற்றுள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்

(அ) ஆம்.

(ஆ) மேற்படி சங்கத்தின் நிதியிலிருந்து ரூ. 54,953.60 கையாடல் செய்யப்பட்டது. கோவை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை நடந்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 9]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் தலைவரவர்களே, கிட்டத்தட்ட 55,000 ரூபாய் அளவுக்கு கையாடல் நடந்திருக்கின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தக் கையாடலிலே யார் யார் ஈடுபட்டவர்கள் ? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது ? மேலும் இந்தப் பணத்தைத் திரும்பப் பெற்று அதைக் கணக்கிலே வரவு வைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர்அவர்களே, இதிலே சம்பந்தப்பட்டிருப்பவர்கள்—எஸ். மந்திராசலம்-பெரியவலம்புரிச்சேரி, ஆர். பாலசுப்பிரமணியம், வேலுசாமி கவுண்டர், பெரியசாமி செட்டியார், திருமலைச்சாமி, ஆர். மந்திராசலம், என். தண்டபாணி ஆகிய ஏழுபேர்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த வழக்கு நீதிமன்றத்திலே இருப்பதால் நீதிமன்றத்தின் முடிவினை அனுசரித்து நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, கையாடலுக்காக கோர்ட்டிலே வழக்கு நடக்கின்றது என்பது ஒருபுறம் இருந்தாலும் கையாடல் செய்யப்பட்ட பணத்தைத் திரும்பப் பெற்று வரவு வைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது. பணத்தைத் திரும்பப்பெற நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசின் கடமையல்லவா ? அந்தக் கடமையை நிறைவேற்ற தனியாக ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசாங்கத்தினிடத்திலே திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, அரசு வழக்கறிஞரிடத்திலே இதுகுறித்து கருத்து கேட்கப்பட்டிருக்கின்றது. அந்தக் கருத்து வந்தவுடன் இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு என். ஏ. பூங்காவனம் : தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையில் ஊழல் நடப்பது சம்பந்தமாகக் கேள்வி வந்திருக்கின்றது. வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு பால் சொசைட்டியிலே ஊழல் நடந்தது. அதுசம்பந்தமாக நான் எழுதிக் கொடுத்திருக்கின்றேன்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எல்லாம் என்னிடத்திலே நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ கேட்க வேண்டும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே: இப்படி ஊழல் நடந்தது சம்பந்தமாக நான் கொடுத்தபோது......

1981 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை என்னுடைய அறையிலே கொண்டு வந்து கொடுத்தால் நான் அமைச்சர் அவர்களிடம் சொல்லி நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைக் கொடுத்த பொழுது **இப்படிச் சொன்னால் அந்தக் குற்றத்தைப் பற்றி யாரிடம் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம்தான் சொல்ல வேண்டும். என்னுடைய அறையில் வந்து சொல்லுங்கள். எழுதிக் கொடுங்கள். நான் நடவடிக்கை எடுக்கிறேன். திரு. பூங்காவனம் ** என்று கூறியதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. தகவல் கோரல்.

அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 246-ன் கீழ் அவை உரிமை மீறல் பிரச்னை ஒன்றை எழுப்பியிருக்கிறேன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் மீது நீங்கள் எழுப்பிய உரிமை மீறல் பிரச்னையைப் பற்றி, அவருக்குத் தெரிவித்திருக்கிறோம். பதில் வந்தவுடன் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருடைய குறைபாட்டின் காரணமாக மணச்சநல்லூரிலே 6-ம் தேதி போராட்டம் நடைபெற்றது குறித்து .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்னை முடிந்து போய், இப்போது அங்கே மில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனால்தான் அதை எடுக்கவில்லை.

ஆ. சென்னை நகரில் ஆபாசச் சுவரொட்டி.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாகவே, சென்னை நகர சுவர்களில் ஆபாசமான, மிகவும் அருவருக்கத்தக்க, நாமெல்லாம் பார்த்து வெட்கப்படக்கூடிய சுவரொட்டி ஒன்று

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் திரைப்பட சுவரொட்டி ஒன்றைப் பற்றி குறிப்பிடுகிறீகள் என்று நினைக்கிறேன் சென்சார் போர்டு மத்திய அரசி சம்மந்தப்பட்டது. மனிதனுடைய பகுத்தறிவு வளர்ச்சிக்கு விஞ்ஞான அடிப்படையில் அப்படிப்பட்ட படங்கள் தகுதியானவை என்று நினைத்துத்தான் அனுமதித்திருக்கிறார்கள். இது ஒரு பெரிய பிரச்சனை யாகாது.

இ. அரசு பேருந்தில் ஜாஸ் இசை ஒலிபரப்பு பெறுவது.

திரு. உ. சுப்பிரமணியன் மான்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களிடமிருந்து பாதுகாப்பு கோருகிறேன், நேற்று இரவு திருச்சியிலேயிருந்து சென்னைக்கு சூப்பர் டீலக்ஸ் பஸ்ஸிலே வந்தேன். சூப்பர் டீலக்ஸ் பஸ்கள் சாய்ந்து உட்காருவதற்கு சௌகரியமான வண்டி, அப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் இரவு முழுவதும் தூங்கவிடாமல், ஜாஸ் மியூசிக்கை உரக்க ஒலிபரப்பிக் கொண்டிருந்தார்கள். யாருமே தூங்க முடியவில்லை. அதை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது முடிவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரயாணிகள் அது போன்ற வண்டிகளில் ஏறும்போதே ஸ்பீக்கர் இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டுதான் ஏறுகிறார்கள். அந்த வகையில் அது வாவேறகப்பட்ட முறை. உறுப்பினர் அவர்களுக்கும் இசையில் பெரு விருப்பம் இருந்தாலும், ஜாஸ் மியூசிக் பிடிக்கவில்லையோ என்னவோ தெரியவில்லை.

(முற்பகல் 9-50)

3 ஒத்திவைப்பு தீர்மானம்.

வறட்சியால் மாநிலம் பாதிக்கப்பெற்றிருக்கும்போது
கூட்டுறவு கடன்களை வசூலித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், எஸ், ஆண்டித்தேவர், சோ. அழகர்சாமி, இரா கருப்பைய்யா, என்.ஏ. பூங்காவனம், ஏடி. கருப்பைய்யா, ரா. கிருஷ்ணன், என். வரதராசன், எம். செல்லமுத்து, எம். பழனிவேல், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் இரெ. இராசமாணிக்கம் ஆகியோர்.

''தமிழகம் முழுவதும் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் கூட்டுறவு வங்கிகளும் நிலவள வங்கிகளும் விவசாயிகள் வாங்கியுள்ள பழைய கடன் பாக்கிகளுக்காக ஜப்தி நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்பது பற்றி

ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள கூட்டுறவு இயக்கங்களிலே, குறிப்பாக நிலவள வங்கிகளில் நிலத்தில் பயிரிடுவதற்காக, கிணறு வெட்டுதல், டிராக்டர் வாங்குதல் போன்றவற்றிற்கு கடன் பெற்று, அந்தத் தவணையை செலுத்தாது, கடன் பாக்கியை வசூல் செய்யக்கூடிய வகையில் விவசாயிகளுடைய சொத்துக்களை, பண்டங்களை கூட்டுறவு அதிகாரிகள் ஜப்தி செய்திருக்கின்ற நிலைமை இன்று தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே நடைபெற்று வருகிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இன்றைக்கு தமிழகத்தில் மொத்தமுள்ள 16 மாவட்டங்களில், 11 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. விவசாயப் பெருமக்கள் கடுமையான மின்சாரப் பற்றாக்குறையால், கிணற்றின் அடியிலே இருக்கக்கூடிய கொஞ்சம் தண்ணீரைக் கொண்டு, தங்கள் உயிரைக் கொடுத்து, பயிர்களைக் காத்துக் கொண்டிருக்கின்றனர். இருக்கின்ற பயிர்களைக் காக்க தண்ணீரை மட்டுமல்ல, கண்ணீரையும், வியர்வையும், உதிரத்தையும் கொடுத்து உழைத்து வருகின்ற இந்த பெருமக்கள், இந்த ஆண்டு விளைச்சல் எந்த அளவுக்கு இருக்கும், போதிய விளைச்சல் கிடைக்குமா, செலவழித்த அளவுக்கு விளைச்சல் கிடைக்குமா என்பது கேள்விக் குறியாக இன்றைக்கு தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. விளைச்சல் இல்லாமல் இப்படி அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், இன்றைய தினம் கூட்டுறவு நிலவள வங்கி அதிகாரிகள் கெடுபிடியில் இறங்கியிருக்கிறார்கள் என்பதை இந்தப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறேன். ஓரளவு விளைந்த நிலங்கள், தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்ட நிலங்கள் என்று இப்படி பல்வேறு இடங்கள் இருக்கின்றன. இந்த இடங்களிலே எல்லாம் இப்பொழுது ஜப்தி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதிலே சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்று பாகுபடுத்தி, அதாவது 5 ஏக்கர் மேல் நிலம் வைத்திருப்பவர்களை பெரிய நிலச்சுவான்தார்கள் போலவும், வாங்கியர் கடனை வேண்டுமென்று செலுத்தாது போலவும் இம்மாதிரி கெடுபிடி செய்வது நியாயமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நிலம் எவ்வளவுக்கெவ்வளவு இருக்கிறதோ, அவ்வளக்கவ்வளவு அதிகமாகக் கடன் சுமை இருக்கிறது. இந்த நிலைமையிலே, இந்த அரசாங்கம் ஒரு விளம்பரம் கொடுத்திருக்கிறார்கள். அது நேற்றைய தினம் காலையிலும், மாலையிலும் பத்திரிகையிலே வந்திருக்கிறது விவசாய பெருமக்கள் போராடக்கூடிய இந்த நேரத்திலே வந்திருப்பது, வெந்த புண்ணிலே வேலை

பாய்ச்சுவது போல் இருக்கிறது. அந்த விளம்பரத்தில் ''கூட்டுறவு இயக்கத்தில் அதிக எண்ணிக்கையுள்ள சிறு விவசாயிகளின் சராசரி கடன் பாக்கி தலைக்கு ரூ. 400 தான், இதில் தவணை தவறியது இன்னும் குறைவு. ஆனால். எண்ணிக்கை குறைந்த பெரிய விவசாயிகள் கொடுக்கவேண்டியது ரூ. 72 கோடி. அதாவது சராசரி தலைக்கு ரூ. 800. கூட்டுறவு இயக்கத்தையே சீர்குலைத்து ஏழை விவசாயிகள் எந்த நன்மையும் அடைய முடியாமல செய்து. அவர்களுக்கு அதிக வட்டிக்கும். தங்கள் பணத்தைத் தந்து அவர்களைத் தங்களின்கீழ் என்றென்றும் கட்டுப்பட்டவர்களாக வைத்திருந்து நாளடைவில் அவர்களது சொத்து சுகங்களையும் தாங்கள் தந்த கடனுக்காக கபளீகரம் செய்ய திட்டமிடுகிறார்கள். ஆடு நனைகின்றதே என்று ஓநாய் அழுத கதைதான்'' என்று கூறப்பட்டுள்ளது. ஆக இந்த விளம்பரம் காலைப் பத்திரிகையிலும், மாலைப் பத்திரிகையிலும் போடப்பட்டிப்பதைப் பார்த்தேன் அரசங்கக் கணக்குப்படி, பெரிய விவசாயிகள் கொடுக்கவேண்டிய கடன் 72 கோடி ரூபாய்: அதாவது சராசரி தலைக்கு 800 ரூபாய் என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள், ஆனால், அதே நேரத்தில் கொடுக்கவேண்டிய 72 கோடி ரூபாயில் தலைக்கு 800 ரூபாய் என்று சொன்னால், தமிழகத்தில் இருக்கின்ற தவணை தவறிய பெரிய விவசாயிகள் அதாவது ஓநாய்கள் 9 இலட்கம் இருக்கின்றது என்று இந்த அரசு சொல்லலாமா என்று கேட்க விரும்புகிறேன். ஓநாய் என்று இந்த விவசாயச் சமுதாயத்தைச் சொல்லலாமா? மக்களுடைய வரிப்பணத்திலிருந்து அரசாங்கம் செலவு செய்து விவசாயிகளை ஓநாய் என்று சொல்லலாமா? இந் விளம்பரம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்ததா என்று கேட்க விரும்புகிறேன்.

5 ஏக்கர்களுக்கு மேல் வைத்திருப்பவர்கள், விவசாயித்தைத் தவிர வேறு தொழிலை செய்பவர்களாக இருந்தால் அவர்களிடமிருந்து அந்த கடன் தவணையை அரசாங்கம் கெடுபிடி செய்து வசூல் செய்யலாம். விவசாயத்தையே நம்பியிருக்கின்ற விவசாயிகள்மீது விவசாயக்கடன், பளு இருக்கின்றபோது, அரசு அவர்களுக்கு கருணை, பரிவு காட்டக்கூடாதா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கபடு. சூது இல்லாத அப்பாவி விவசாயிகள் உண்மையிலேயே அவர்களிடம் பணம் இல்லாததால்தான் இந்தக் கடனைத் திருப்பிக் கட்ட முடியவில்லை, இதை யாரும் சந்தேகிக்க வேண்டியதில்லை, அதிலே அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். வறட்சியால் பாதிக்கப்பட்ட எங்கள் திருமங்கலம் கூட்டுறவு நிலவள வங்கியில் கடன் வாங்கிய 32 பேர்கள் மீது இந்த மாதிரி நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுவதாக எனக்குச் செய்தி வந்திருக்கிறது. அதேபோல், மதுரை மாவட்டம், நிலக்கோட்டை தாலுகாவில் வாடிப்பட்டியில் 27-3-1981-ல் அறிவிப்பு

1981 ஏப்ரல் 9] *[திரு. என். எஸ். வி. சித்தன்]*

இன்றி அதிகாரிகள் வந்து, ஜப்தி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வீட்டிலே இருக்கிற தானியங்கள், பொருள்கள் நகைகள் முதலிய எல்லாவற்றையும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இன்னொன்றையும் சொல்வேன், வாடிப்பட்டியில் காலம் சென்ற வீரப்பன் என்பவருடைய மகளின் நகைகளை எல்லாம் எடுத்து போயிருக்கிறார்கள்.

மற்றொன்று வாடிப்பட்டியில் கோவிந்தன் என்பவரின் சகோதரர் ஜெயராமன் குடும்பத்தினர் கடன் பாக்கிக்காக ஜாமீன் போட்ட ஒருவரின் வீட்டிலே போய் அங்கு புத்தி சுவாதினமில்லாமல், படுத்த படுக்கையாய் ஒருவர் இருக்கிற நிலையில் அந்த வீட்டிலே நெல்லைக் கூட எடுத்துப் போயிருக்கிறார்கள் என்ற செய்தியும் எனக்கு கிடைத்திருக்கிறது.

பொன்னேரி தாலுக்கா அழிஞ்சிவாக்கத்தில் இராமச்சந்திர நாயுடு மனைவி பத்மாசனி அம்மாள் வீட்டில் முன் அறிவிப்பு கொடுக்காமல் அங்கே போய் உடனடியாக கையெழுத்து வாங்கிக் கொண்டு ஜப்தி செய்திருக்கிறார்கள். சிறு விவசாயியாக இருக்கிறவர்களில் கூட இந்த ஜப்தி நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டம், பாபநாசம் தாலுக்கா 49 தெற்குப்பட்டம் கூட்டுறவுச் சங்கம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கம் என்று சொன்னால் தமிழ் நாட்டில் 10 ஆயிரம், 11 ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கும். உதாரணத்திற்கு ஒன்று சொன்னால் போதும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 49 தெற்குபட்டம், அரித்துவராமங்கலம், பெருங்குடி கிராமங்களில் 7-4-81 அன்று ஜப்தி செய்ய போலீஸ் லாரி இரண்டு போலீஸ் ஜீப் 5 டாக்ஸி 5. இப்படி ஒரு பெரிய பட்டாளத்துடன் போய் அங்கே ஜப்தி செய்திருக்கிறார்கள். ஏதோ கொலை, கொள்ளை செய்தவர்களைப் பிடிப்பது போல கிராம மக்களைப் பயமுறுத்தி இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல கூட்டுறவுத் துறை அதிகாரிகள் சுமார் 50-க்கும் மேற்பட்டவர்கள்—அந்த ஊரில் செல்லம்மாள் என்பவருக்கு அந்த ஊரில் 3 ஏக்கர் 17 சென்ட் தான் நிலம் இருக்கிறது. சிறு விவசாயி என்று 1,900 ரூபாய் 1980 ஆண்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அங்கே போய் நெல் மூட்டைகளை கைப்பற்றிச் சென்றிருக்கிறார்கள்.

இன்னும் சொல்வேன், வலங்கைமான் கூட்டுறவு நிலவள வங்கியிலே பழனிவேல் சேதுராயர் என்பவர் கொடுக்கவேண்டிய கடனுக்காக ஜப்தி செய்கிற நேரத்திலே எந்தவித பொருளும் இல்லை, மனைவியினுடைய தாலிதான் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். தாலியை பிடுங்கி வந்து பேங்க் ஆப்.

தமிழ் நாடு, திப்பிராஜபுரத்தில் அடகு வைத்து —விவரத்தை சொல்கிறேன், ஜுவல் லோன் 47/81 7-4-81, தாலியை அடகு வைத்து அவருடைய தம்பியினுடைய மகன் பி,இளவரசு என்கிற பெயரிலே ரூ 1,550 பெற்றிருக்கிறார்கள் என்ற செய்தியை நான் சொல்ல விரும்புகிறேன் நான் அமைச்சரை இந்தஅரசை கேட்டுக் கொள்வதெல்லாம் அரசரங்கம் கடன் பாக்கியை வசூலிக்காமல் தொடர்ந்து தாராளமாக இருந்ததும் தவறு இப்போது கெடுபிடி செய்து வசூல் செய்வதும் தவறுதான். ஓரளவாவது அவர்கள் மீது அக்கறை காட்டி இந்த வறட்சியான சூழ்நிலையில் விவசாய பெரு மக்களுக்கு மேலும் தொல்லை கொடுக்காத அளவிற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைச்சர் பதில் சொல்லலாம். கூட்டுறவு நிலவள வங்கி எல்லாம் எப்படி நடக்கும். அவர்களுக்கு சம்பளம் எப்படிக் கொடுப்பது புதிதாக கடன் கொடுக்க வேண்டுமே என்பார்கள். ஆகவே தமிழகத்திலே விவசாய மக்க ளிடத்திலே உள்ள பதட்டநிலையைப் பற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைத்து அனுமதி வழங்க உங்களைக் கேட்டு வலி யுறுததுகிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே தமிழ் நாட்டில் கூட்டுறவு நிலவள வங்கி விவசாயி களுக்கு கொடுத்த கடனை ஜப்தி செய்வதன் மூலம் வறட்சியால் வாடுகின்ற தமிழக மக்களுக்கு ஒரு புறம் தமிழக அரசு நிவாரணம் என்று பல லட்க்கணக்கான ரூபாய்களை அறிவித்து குடிநீர்கூட இல்லை என்று சொல்கிற நிலையில் மக்களுக்கு குடிநீர் பூர்த்தி செய்வோமே என்று அரசுபல நல்ல திட்டங்களை அறிவித்து விட்டு அந்த விவசாயிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து அகவர்களுடைய சொத்துக்களை ஜப்திசெய்வது போன்ற நடவ டிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். இங்கு விளம்பரம் கொடுத்தி ருக்கிறீர்கள், பெரிய விவசாயிகள் இந்த நாட்டிலே உள்ள சிறிய விவசாயிகளுடைய கடனை விட மிக அதிகமான கடன் வைத்தி ருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். புள்ளி விவரங் களுடன் மாண்புமிகு சித்தன் அவர்கள் தெளிவாக கூறிவிட்ட காரணத்தால் நான் அதை திரும்பவும்சொல்வது தேவையில்லை. என்று கருதுகிறேன். தமிழகத்திலே சிறு விவசாயி பெரிய விவசாயி என்பதிலே ஒரு நியாயமான வரையரை வேண்டும். மதுரை மாவட டம் முகவை மாவட்டத்திலே உண்மையிலேயே மிக பிற்படுத்தப் பட்ட பகுதி என்று தமிழக அரசும் ஒப்புக்கொண்டு அந்தப் பகுதியில் 5 ஏக்கர் 10 சென்ட் வைத்திருப்பவரை பெரிய விவசாயி என்று அறிவித்திருக்கிறோம். அப்படிப்பட்ட நிலையில் அவர்களை ஜப்தி செய்த நிலை குறிப்பாக அவர்களுடைய பண்ட பாத் திரங்கள் முதலியவற்றை எடுக்கிற அளவிற்கு—தமிழகத்தில் பெரிய விவசாயிகள் மீது நடவடிக்கைக் எடுக்க வேண்டு

மென்று சொன்னால், அந்த உத்தரவை வைத்துக்கொண்டு அதிகாரி கள் சிறு விவசாயிகளுக்குச் சொந்தமான பண்ட பாத்திரங்கள் குடிநீர் வைத்துக் கொண்டிருக்கிற பாத்திரங்கள் முதலியவற்றை கூட எடுக்கிற அவல நிலைமை இருக்கின்றது.

[முற்பகல் 10-00]

தமிழக அரசு தமிழகத்திலே நிலவியிருக்கின்ற 11 மாவட்டங் களைக் கல்வி இருக்கின்ற வறட்சியால் வாடுகின்ற விவசாயிகளுக்கு நன்மைகள் செய்கிறோம் என்று சொல்லிவிட்டு— அவர்களுக்கு இந்த ஆண்டு வட்டியைத் தள்ளுபடி செய்யவேண்டும் அல்லது கடனை வசூல் செய்யக் கூடாது என்று நாங்கள் எல்லாம் இந்த மன்றத்திலே கேட்டதன் பேரில் மாண்புமிகு அமைச்சர் அவர் களும் அரசும் சொல்லியிருக்கிறார்கள், ஏழை விவசாயிகளுக்கு வட்டி தள்ளுபடி செய்யப்படும், அதுமட்டுமல்ல, நீண்டகால கடன் கள் குறுகிய காலக் கடன்கள் எல்லாம் ஒத்தி வைக்கப்படும் என்று அறிவித்ததற்குப் பின்னாலே—இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமாக தமிழகத்திலே உள்ள விவசாயப் பெருமக்கள் அத்தனை பேர்களையும் மிகவும் துன்பத்திற்கு உள்ளாக்குகிற அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தனித்தனியாக யார் யார் வீட்டில் எடுத்தார்கள் என்பதை எல்லாம் விவரங்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள் நான் அதை மீண்டும் எடுத்துச் சொல் வதை விட இந்த அரசுக்கு தமிழகத்து மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் இருக்கின்ற காரணத்தினாலே விவசாயத் தொழிலிலே ஈடுபட்டுக்கொண்டு மின்சாரம் கிடைக்காமல் குடி தண்ணீருக்காகக் கூட வாடிக்கொண்டிருக்கின்ற அந்த விவசாயி களை, உற்பத்தியையே அவர்கள் செய்யமுடியாத நிலைமையில் அந்த அளவுக்கு உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்ற நிலையில் உள்ள விவசாயிகளை துன்பத்திற்குள்ளாக்கி அவர் களுக்கு இன்னல்கள் ஏற்படுத்துகின்ற நிலைமை இருந்துகொண் டிருக்கிறது. தொழிலதிபர்கள் மீது அல்லது பெரிய விவசாயிகள் மீது நடவடிக்கை எடுப்பதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் பெரிய விவசாயி என்று சொல்லிக்கொண்டு, 5 அல்லது 10 எக்கர் வைத்திருக்கிறவர்களுடைய வீடுகளுக்குச் சென்று அவர்களிட மிருந்து பண்டபாத்திரங்களை கதவுகளைப் பிடுங்குகின்ற நடவடிக் கைகளை உடனடியாக நிறுத்திவைக்கவேண்டும். கொடுமைக்கு உள்ளாகி இருக்கிற அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டுமென்பது பற்றியும் அரசு நிலவள வங்கி அதிகாரிகளால் விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகிற தொல்லைகளைப் பற்றியும் விரிவாகப் பேசி நிவாரணம் அளிப்பது பற்றியும் விவாதிப்பதற் காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகம் பூராவும் கடுமையான வறட்சி ஏற்பட்டிக்கிறது என்பதை அரசாங்கமே தன்னுடைய அறிவிப்பின் மூலமாக அறிவித்திருக்கிறது. வசூல் செய்யக்கூடிய பணம் தொடர்ந்து பல ஆண்டுகாலமாக சேர்ந்து வந்த கடன் தொகையாகும். அது சம்பந்தமாக விவசாயிகளுக்கு இருக்கிற கஷ்டங்களைப்பற்றி இன்றைக்கு நாடு பூராவும்—தமிழ்நாடு மட்டுமல்ல, நேற்றைக்குக்கூட கர்நாடக மாநிலத்திலே 13 விவசாயிகளைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள், கர்நாடகத்திலே மகாராட்டிரத்திலே உள்ள நிலைமைகளையும் புரிந்து கொள்கின்ற முறையிலே—உள்ள நெருக்கடி நிலைமைகளை எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த ஆட்சியிலே மட்டுமல்ல, கர்நாடகம், மகாராட்டிரம் மற்றும் காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலேயும் அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. முகவை மாவட்டத்திலே திருப்பாலைக்குடியிலே குடிக்கக் கூட தண்ணீர் இல்லாத நிலைமை இருக்கிறது என்ற தகவலை திரு. சிவசாமி அவர்கள் தந்திருக்கிறார்கள். இவ்வளவு கஷ்டங்களும் இருந்து கொண்டிருக்கின்றன. 71 கோடி ரூபாயை இதுவரைக்கும் இல்லாத முறையிலே இந்த அரசாங்கம் செய்ததைப் போல கூட்டுறவுச் சங்கக் கடன்களை அரசாங்க கஜானாவிலிருந்து கட்டுகின்ற ஈடுசெய்கின்ற முறை எந்த அரசாங்கமும் செய்தது கிடையாது, அது பாராட்டத்தக்கது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடித்தட்டிலே உள்ள மக்களுக்கு அவர்கள் தரவேண்டிய கடன்களுக்காக அரசாங்கம் ஈடுசெய்யக் கூடிய நிலைமை பாராட்டக்கூடிய அம்சம் என்று நாங்கள் ஏற்கனவே சொல்லி இருக்கிறோம். மொத்தமாகச் சலுகைகளை அறிவிக்கின்றபோது ஜூன் 30 ஆம் தேதிக்குள்ளாக 5 ஏக்கர் நிலமுள்ளவர்களுக்கு எல்லாம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் 30 தேதிக்குள்ளாக 5 ஏக்கருக்கு மேலே உள்ளவர்களுக்கு அபராத வட்டி மட்டும் தள்ளப்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. உதாரணத்திற்கு சொல்கிறேன், நானே கடன் வாங்கியிருக்கிறேன். 10 ஆண்டுகளாக நான் கட்டிக் கொண்டே வந்திருக்கிறேன். நான் ரூ. 6,132.48 பைசா கட்டியிருக்கிறேன். அதிலே அபராத வட்டி ரூபாய் 927.97 பைசா. வட்டியாக 2,326.33 பைசா உள்ளது. இனியும் 4 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டுமென்று எனக்கு—நான்கு நாட்களுக்கு முன்னாலே ஊருக்குப் போயிருந்தபோது—ஜப்தி நோட்டீஸ் வந்திருக்கிறது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் வட்டி, அபராதவட்டி என்று போட்டு அந்தப் பளுவினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் அதை உணர்ந்துதான் உயர்மட்டக் கமிட்டியொன்று முன்னாள் பேரவைத் தலைவர் முனு ஆதி அவர்கள் தலைமையில் போடப்பட்டுள்ளது. அவர்கள் முழுவதுமாக உட்கார்ந்து பேசி முடிவு செய்வதற்கு முன்னாலே எப்படி மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் ஒன் பிளஸ் ஒன் என்று செய்திருக்கிறோமோ அதே மாதிரி முடிவு செய்து வசூல் செய்வதற்கு

எந்த முறையைக் கையாளலாம் என்று முடிவு அங்கே செய்வதற்கு முன்னாலேயே போலீஸ் படையோடு ஊர்களுக்குள்ளே புகுந்து கதவுகளை எடுப்பது முறையல்ல.

பண்ட பாத்திரங்களைத் தூக்குவது என்ற நிலைமை தமிழகம் பூராவும் இருக்கிறது. இது சம்பந்தமாகத் தந்தி வந்திருக்கிறது. விவசாயிகள் கஷ்டம் உங்கள் ஆட்சியிலே மட்டும் ஏற்பட்டது அல்ல. தொடர்ந்து பத்து பன்னிரண்டு ஆண்டுகளாக உள்ள நிலைமைதான் இது. 1972ஆம் ஆண்டில் போராட்டம் எல்லாம் நடந்து பலபேர் உயிரிழந்திருக்கிறார்கள். எனவே தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் பிரச்னைதான் இது. இதைச் சுமுகமான முறையில் அணுக வேண்டும்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் மிகச் சுமுகமான முறையில் அணுகி 1 பிளஸ் 1 என்ற முறையில் கட்ட வேண்டுமென்று நல்ல முறையில் முடிவு செய்து, பெரும்பகுதி கட்டப்பட்டு விட்டது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் அறிவித்தபடி ஐந்து இலட்சம் ரூபாய் கட்டப்பட வேண்டிய பணத்தில் 4 இலட்சம் ரூபாய்களைக் கட்டிவிட்டார்கள். ஒரு சங்கம்கட்ட வேண்டாமென்றுசொன்னாலும் கூடநாங்களெல்லாம் சொன்னோம் 1 பிளஸ் 1 கட்டிவிட வேண்டுமென்று, அதன்படி கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே, இது விஷயத்தில் விவசாயிகளிடையே அதிருப்தியைக் கிளப்பிவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். வட்டி, அபராத வட்டி என்று அதிகமாக இருக்கிறது. நான் ஐயாயிரம் ரூபாய் வாங்கியிருக்கிறேன்; ஆனால் அதற்கு வட்டி மிகவும் மோசமான முறையில் போட்டிருக்கிறார்கள். நஞ்சையும் 5 ஏக்கர், புஞ்சையும் 5 ஏக்கர் என்று சொன்னால் அது எவ்வாறு பொருந்தும்? பலயிடங்களில் 5 ஏக்கர் புஞ்சை உள்ள இடங்களில் பெரும்பகுதி பிரயோசனம் இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே, 5 ஸ்டாண்டர்ட் ஏக்கர் நஞ்சை, 5 ஸ்டாண்டர்ட் ஏக்கர் புஞ்சை என்று சொல்லி இரண்டும் ஒன்றுதான் என்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்பொழுது கமிட்டி ஒன்றைப் போட்டிருக்கிறோம். அந்தக் கமிட்டி ஒரு சிட்டிங் அமர்ந்து, இரண்டு மூன்று நாட்கள் கூடி எப்படியெப்படி செய்யலாம் என்பதைப்பற்றி முடிவு செய்ய வேண்டும். அதுவரையில் ஜப்தி போன்றவைகளை நிறுத்தி வைக்க வேண்டும். இதில் ஆளுங்கட்சி, மற்றக் கட்சிகள் என்று பார்க்க வேண்டாம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடத்தும் தமிழ்நாட்டில் மட்டும் இவ்வாறு நடக்கவில்லை; காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்துகின்ற மாநிலங்களிலும் இத்தகைய சூழ்நிலை இருக்கிறது. விவசாய சங்கத்தின் பெருந்தலைவர் அவர்கள் இந்திராகாந்தி அம்மையாரைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார்; அவர்கள் ஒன்றும் செய்ய முடியாது போ என்று சொன்னதாக வெளியிலே வந்து சொல்லியிருக்கிறார்கள்.

இந்த அரசாங்கம் அனுதாபத்தோடு பார்த்து 71 கோடி ரூபாய் அளவிற்குக் கூட்டுறவில் கொடுத்திருக்கிறது. இன்னும் கொஞ்சம் அனுதாபத்தோடு கவனித்து, வட்டி, அபராத வட்டி, அநியாய வட்டியாக இருப்பதால் மொத்தமாக பத்தாயிரம், இருபதாயிரம், முப்பதாயிரம் ரூபாய் என்று கட்ட வேண்டியிருப்பதால் கடன்களை வாங்கியவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவரே கூட என்னிடத்தில் சொன்னார்; நான் அவருடைய பெயரைச் சொல்வதற்கு விரும்பவில்லை. 80,000 ரூபாய் செலவு செய்து கிணறு வெட்டியும் அது இடிந்து போயிருக்கிறது. ஆனால் அந்தத் தொகை பூராவையும் கொடுக்க வேண்டுமென்று சொல்லி ஜப்தியாகக் கூடிய நிலைமையிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும். ஜப்தி செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும். அதிலும் தமிழ்நாட்டில் வறட்சி காரணமாக நிலைமை மோசமாக இருக்கிறது. உயர் மட்டக் குழுவைப் போட்டிருக்கிறார்கள் ; அதில் விவசாயச் சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைப் போட்டிருக்கிறீர்கள்; அவர்கள் முதல் சிட்டிங்கில் அமர்ந்து எப்படியெப்படிச் செய்யலாம் என்பதையெல்லாம் ஆராய்ந்து முறையாகச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உயர் மட்டக் குழுவைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் மூன்று தடவை சொல்லி விட்டார்கள். அவர்கள் விரைவில் முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இது சம்பந்தமாக சம்பிரதாயமாக ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று எப்பொழுதும் சொல்வது மாதிரி சொல்லாமல், எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களின் கருத்துக்களையும் சொல்வதற்கான வாய்ப்பளிக்க வேண்டும். ஆகவே, ஒரு மணி நேரமாவது இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இந்தக் கடன்களை எப்படி வசூல் செய்யலாம் என்பதைப்பற்றி ஆளும் கட்சியின் கருத்துக்களையும் கேட்கலாம். ஏனென்றால் ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொடுக்க முடியாது. எனவே அவர்கள் தங்கள் கருத்துக்களையும் சொல்வதற்கான சந்தர்ப்பத்தை அளிக்கின்ற வகையில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் சில விஷயங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் கூறிய கருத்துக்களோடு நான் உடன்படுகிறேன். இரண்டு விஷயங்களை மட்டும் நான் சுட்டிக் காட்டி இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒத்திவைப்புத் தீர்மானம்

1981 ஏப்ரல் 9] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

ஏற்கனவே தமிழகம் பூராவும் வறட்சி என்று நாமே ஒத்துக் கொண்டு மத்திய அரசாங்கத்தினுடைய உதவியைக் கேட்கின்ற இந்த நேரத்தில் எப்படிப் பழைய பாக்கிகளைக் கட்டுவதற்கான வாய்ப்பிருக்கும் என்பதைப்பற்றி நாம் விரிவாக விவாதிக்க வேண்டியிருக்கிறது.

மாஜி இராணுவ வீரர் ஒருவர் ஐந்து ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார் அந்த நிலத்திற்கு நிலவள வங்கியிலிருந்து கடன் வாங்கியிருக்கிறார். அப்படி அந்தக் கடனை வழங்கும் பொழுது நிலவள வங்கியினர் வந்து சோதித்துப் பார்த்துத்தான், இந்த இடத்தில் கிணறு வெட்டலாம் என்று குறிப்பிட்டுக் காட்டி, கடனைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்திலே கிணறு வெட்டியபொழுது தண்ணீர் வரவில்லை. அதற்குப்பிறகு இன்னொரு 40 அடி போடு என்று அவர்களே சொன்னார்கள் அந்த அடிப்படையில் இரண்டாவது கடன் கொடுக்கப்பட்டது. இரண்டாவது முறை வெட்டிய பொழுதும் தண்ணீர் வரவில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் அவருக்கு நோட்டீஸ் வந்திருக்கிறது. இடத்தை வேண்டுமானால் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னாலும்கூட, இது மட்டும் போதாது, உங்கள் வீட்டிலிருக்கும் பண்ட பாத்திரங்களையும் எடுப்போம் என்று சொல்லும் நிலைமை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் இந்த நிகழ்ச்சி பிற்பட்ட நிலமாக இருக்கின்ற, வறட்சிப் பிரதேசமாக இருக்கின்ற கடயம் வட்டாரத்திலே நடந்திருக்கிறது.

(முற்பகல் 10-10)

அதே போல் புஞ்சைப் பிரதேசமாக இருக்கக்கூடிய இடங்களிலும் ஏற்பட்டிருக்கிறது ஆகவே, அப்படிப்பட்ட சிறிய விவசாயிகளும் கூட ஜப்தி நடவடிக்கைகளுக்கு ஆளாக்கப்பட்டு பயமுறுத்தப்படுகிற நிலைமைகள் இருப்பதன் காரணமாக, ஏற்கனவே அப்படிப்பட்ட கடன்களை எல்லகள் என்ன செய்யலாம் என்பதைப் பரிசீலனை செய்ய முன்னாள் சட்டமன்றப் பேரவைத் தலைவர் தலைமையில், விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் எல்லாம் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய முடிவுகள் வந்த பிறகு, மேற் நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்யலாம் என்ற நிலையிலே, இந்தக் கடன்களை எல்லாம் தற்காலிகமாக ஒத்தி வைக்க வேண்டிய நிலைமைகள் இருப்பதன் காரணமாக, இந்த அவையின் இந்த அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாக, வழக்கம்போல் இல்லாமல், அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இந்தத் தீர்மானத்தை, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழ்நாடு முழுவதும் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில், கூட்டுறவுக் கடனுக்காக, நில வரிக்காக, விவசாயிகளிடத்திலே கடுமையான முறையிலே நடவடிக்கை எடுத்து ஜப்தி செய்வது குறித்து நான் என்னுடைய கருத்தை இந்த நேரத்திலே தெரிவித்து கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் தமிழகத்தினுடைய விவசாயிகள் நிலையை அழகாக எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டம், அவர்கள் தாங்க முடியாத கஷ்ட நிலையிலே இருக்கிறார்கள். என்பதையெல்லாம் ஆரம்பத்திலே சொல்லி கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் கடுமையான முறையில் சிறு விவசாயிகளிடம் கூட ஜப்தி செய்கிறார்கள். விவசாயிகள் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்கள். ஆனால், விவசாயிகள் கிட்டத்தட்ட 4 ஆண்டு காலமாக இந்த ஆட்சியிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வறட்சியால் புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 1977-ஆவது ஆண்டிலேயிருந்து விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு ஏற்பட்ட சேதம் கொஞ்சமான சேதம் அல்ல. 1977-ஆவது ஆண்டிலே விவசாயிகளுக்குப் பயிர்ச்சேதம் மட்டும் கிட்டத்தட்ட ரூபாய் 41.81 கோடி. பயிர்கள் இழப்பு, கால்நடைகள் இழப்பு, இப்படிப்பட்ட சேதங்கள் எல்லாம் சேர்ந்து தனியாருக்கும் எல்லோருக்குமாக ரூபாய் 15.72 கோடி நட்டம் ஏற்பட்டு, விவசாயிகள் அதிலிலிருந்து தாங்க முடியாத தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையாகும். இப்படி 4 ஆண்டு காலமாகத் தவித்துக் கொண்டிருக்கிற விவசாயிகள் செலுத்த வேண்டிய பாக்கிக்காக, இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற நேரத்தில், விவசாயிகள் தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், அவர்கள் வைத்திருக்கிற சொத்துக்களை ஜப்தி செய்வது ஏலம் போடுவது என்பது நியாயம் அல்ல. விவசாயிகள் கொடுக்க வேண்டிய கடனுக்காக ஒரு வார காலமாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கிறார்கள். அவர்கள் வைத்திருக்கிற தானியங்களை ஜப்தி செய்கிறார்கள். அவர்கள் வைத்திருக்கிற ஆடுமாடுகளைக் கூட ஜப்தி செய்கிறார்கள். இது நியாயமானதுதானா என்பதைத் தமிழக அரசு எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயிகள் கடனை ரத்து செய்வோம் என்று அறிவித்த பிறகு, நம்முடைய முதல்வர் அவர்கள் கூடச் சொன்னார்கள், விவசாயிகள் வாங்கிய ரூபாய் 240 கோடிக் கடனைத் தள்ளுபடி செய்ய எண்ணியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதைக் கூட நம்முடைய கூட்டுறவுத் துறை வருகின்ற ஆண்டுகளில் ஏற்படுகின்ற இழப்புகளை

ஈடு செய்வதற்காக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 240 கோடி தள்ளுபடி செய்வோம் என்று அறிவித்திருக்கிறார்கள். வருகின்ற ஆண்டுகளிலும் அப்படிப்பட்ட இழப்புகள் ஏற்படும் போது, தள்ளுபடி செய்யப்படும் என்று நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற அந்த இழப்பை ஈடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சித்தன் அவர்கள் சொன்னார்களே, கும்பகோணம் மத்திய வங்கி எல்லையில், பாபனாசம் தாலுகாவில் அதுவும், நம்முடைய மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்களே, அந்த வலங்கைமான் தொகுதியில், இரண்டு தினங்களுக்கு முன்னாலே கடுமையான முறையிலே சிறு விவசாயிகளிடத்திலே கூட ஜப்தி செய்திருக்கிறார்கள். அவர்களது ஆடுமாடுகளைக் கூட ஜப்தி செய்திருக்கிறார்கள். அவர்கள் சாப்பாட்டிற்கு வைத்திருந்த உணவு தானியங்களைக் கூட எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அங்கு செல்லம்மாள் என்பவர், 3 ஏக்கர் 13 செண்ட் அவர்கள் மட்டும் வைத்திருக்கிற சிறு விவசாயி. அவருக்கு அரசின் சார்பிலே தள்ளுபடி செய்யப்பட்ட உதவி கூட வழங்கப்பட்டிருக்கிறது. அவருக்கு ரூபாய் 1,900 கூட அரசின் சார்பிலே தள்ளுபடி செய்து கொடுத்திருக்கிறார்கள்.

அப்படித் தள்ளுபடி செய்யத் தகுதியாக இருந்த அந்த சிறு விவசாயிகள் நிலத்தில் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னால் ஜப்தி செய்து அவர்கள் வீட்டில் இருந்த 73 மூட்டை நெல்லை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். தெற்குப் பட்டம், பெருங்காடு, போன்ற கிராமங்களில் கிட்டத்தட்ட 200-க்கும் மேற்பட்ட, ரெவின்யு அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய 200-க்கும் மேற்பட்டவர்கள் சென்று, அங்கே இருந்த பெண்களை தரக்குறைவாகத் திட்டி இருக்கிறார்கள். விவசாயிகளைத் திட்டி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை தமிழகத்திலே மீண்டும் நடக்கலாமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே பேசியவர்கள் கடலூர், சிதம்பரம் பகுதியிலே இன்னும் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். இதுபோன்ற நிலைமைகளை தடுத்துநிறுத்த வேண்டும் மின்சார பாக்கி, நிலவரி, கூட்டுறவு பாக்கி போன்றவைகள் எல்லாம் வசூலிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும். குறிப்பாக தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக சென்று ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் தடுத்து நிறுத்த வேண்டும். விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படுகின்ற காரியங்களை எல்லாம் அமைச்சர் அவர்கள் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1980 ஆம் ஆண்டு மார்ச்சிலே இருந்து வட்டித் தொகையை செலுத்த வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கிறார்கள். அசலே தள்ளுபடி செய்யப்பட்டு

விட்டது, ஆனால் வட்டித் தொகையை ஏன் கட்ட வேண்டும் என்று நான் கேட்க விரும்புறேன். இவைகளை எல்லாம் விசாரிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளிடமிருந்து தவணைகள் தவறிய நிலுவைக் கடனை வசூல் செய்வதில் பதட்ட நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பது பற்றி, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய பல கருத்துக்களுக்கு நான் என்னுடைய பதிலைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்கள் பேசுகின்றபோது, 4 ஆண்டு காலமாக இந்த ஆட்சியில் விவசாயிகள் பலவித பாதிப்புக்கு உட்பட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் நலன் பேணப்படவில்லை என்று பொருள்பட கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்களுக்கும் இந்த அவைக்கும் 1977 ஆம் ஆண்டிலிருந்து இதுகாறும் கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்தின் வளர்ச்சி குறித்தும், விவசாயிகள் நலன் குறித்தும் என்னென்ன நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பது இந்த அவைக்குக் கூட தெரியும். குறிப்பாக 1977 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட உயர் மட்டக் குழுவினுடைய பரிந்துரைக்கேற்ப வட்டி சலுகையாக அப்போது உடனடியாக 5 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டு, அதைத் தொடர்ந்து 5 ஏக்கருக்கும் குறைவாக சொந்தத்திலே அல்லது குத்தகையிலோ பயிர் செய்யும் சிறு விவசாயிகளுக்கு 'கன்வர்ட்டட் லோன்' எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று உத்தர விட்டு அதன் மூலமாக 50 கோடி ரூபாய், அதை அடுத்து 1975-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து 1980-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் வரையில், திரு. இராசமாணிக்கம் அவர்கள் சார்ந்திருக்கிற தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பாதிப்பை ரத்து செய்ய வேண்டும் என்ற நோக்கோடு, அதன் மூலமாக ஒரு 23 கோடி ரூபாய்; அதுமட்டுமல்லாமல் தற்போது கூட விவசாயிகள் 1981-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாளுக்குள் கடனைத் திருப்பி தந்து விடுவார்களானால், சிறு விவசாயிகளுக்கு வட்டியும் அபராதமும் இல்லாமல் பெரு விவசாயிகளுக்கு அபராத வட்டி இல்லாமல், சுமார் 40 கோடி ரூபாய் அளவுக்கு சலுகைகள் அளிக்கப்படும் என்று கூட அறிவித்து இப்படிப் பல்வேறு சலுகைகளை விவசாயிகளுக்கு இந்த அரசு அறிவித்திருக்கிறது.

[முற்பகல் 10–20]

அது மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் சொன்னதுபோல, பல மைய வங்கிகள், நிலவள வங்கிகள் எல்லாம் விவசாயக் கடன் தரக்கூடிய தகுதியினை ரிசர்வ் பாங்க் வரையறைக்குட்பட்டு இழந்து விட்ட காரணத்தாலே, விவசாயி

கள் தொடர்ந்து பாதிப்பான நிலையில் இருந்து விடக்கூடாது என்ற காரணத்தாலே, இந்த அரசு மத்திய வங்கிகளுக்கு 42 கோடி ரூபாய், நிலவள வங்கிகளுக்கு 33.50 கோடி ரூபாய்—ஆக மொத்தமாக 75.50 கோடி ரூபாய் அளவிற்கு கடன் உதவியாக அந்த இரண்டு வித வங்கிகளுக்கும் தந்து, நம்முடைய பாரதத் திலேயே எங்கும் இல்லாத அளவிற்கு தமிழகத்திலே உள்ள அந்த விவசாயிகளுக்கு கடன் தரும் தகுதியைக் கூட இழந்து விடக் கூடாது என்பதற்காக இந்த வசதியை அரசு செய்து இருக்கிறது. ஒட்டு மொத்தமாக பல்வேறு துறைகளில் 1977லிருந்து இதுகாறும் தமிழகத்தில் விவசாயிகளுடைய நன்மையைக் கருதி எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, எந்த மாநிலத் திலும் செய்யாத அளவிற்கு 193.80 கோடி ரூபாய் சலுகையை இந்த அரசு செய்து இருக்கிறது. இத்தனை சலுகைகளைச் செய்த பிறகும் நிலுவையில் உள்ள கடன் அளவு மிகவும் அதிகமாக இருக்கிற காரணத்தாலே, மைய அரசு இது குறித்து பல கட்டளை களை அவ்வப்போது இட்டு வருவதால் நடவடிக்கை எடுப்பது தவிர்க்க முடியாததாக இருக்கிறது என்பதை இந்த அவை அறிய வேண்டும் என்பதற்காக நான் சொல்லிக் கொள்கிறேன். 444 கோடி ரூபாய் தமிழகத்திலே தற்போது நிலுவையில் உள்ள விவ சாயக் கடன்கள், அவர்களிடத்தில் இருந்து திருப்பி வசூலிக்க வேண்டிய அளவில் உள்ள கடன்கள். அதிலே தவணை தவறிய கடன்களாக, பல ஆண்டு காலம் கட்ட வேண்டிய கடனைக் கட்டாமல் நிலுவையாக இருக்கின்ற கடன் தொகை ரூபாய் 297 கோடியாகும். 444 கோடி ரூபாய் அவுட்ஸ்டான்டிங் ஆகவும், 297 கோடி ரூபாய் நிலுவையில் உள்ள ஓவர்-ட்யூஸ் ஆகவும் இருக்கிறது.

இதிலே கூட 5 ஏக்கர் நிலத்திற்குக் கீழே வைத்து இருப்பவர் களுக்கு — அதாவது சிறு விவசாயிகள் என்கிற அடிப்படையில்— அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கை எடுக்கவும் உத்தர விடவில்லை. 5 ஏக்கரில் இருந்து 10 ஏக்கர் வரை நிலம் வைத்து இருக்கும் நடுத்தர விவசாயிகள் தரவேண்டிய 99 கோடி ரூபாய் கடன் வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிடவில்லை. ஆனால் 10 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்து இருப்பவர்கள் 10 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்து /இருப்பதோடு மட்டுமல்லா மல், பல விதமான உப தொழில்களில் ஈடுபட்டு இருப்பவர்கள் குறிப்பாக அரிசி ஆலை, எண்ணெய் ஆலை, திரையரங்கம், பஸ், லாரி, காண்ட்ராக்டுகள் தொழிற்சாலைகள் போன்றவற்றை வைத்திருக்கிறவர்கள் இடத்தில் இருந்து தான் அவர்கள் தரவேண்டிய விவசாயக் கடன் பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிட்டு இருக்கிறது.

அதற்கு என்ன காரணம் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டு இருக்கிறேன். பழைய கடன் களைத் திருப்பிச் செலுத்தாத காரணத்தாலே புதிய கடன் ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளுக்கு உட்பட்டு வழங்க முடியாத

ஒரு துரதிருஷ்டமான சூழ்நிலை தற்போது தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்லாமல், புதிய கடன்கள் நாம் வழங்காமல் இருக்கிறபோது சிறு விவசாயிகளுக்கு மற்ற கடன் வாங்க வசதி இல்லாத சூழ்நிலையில், உணவு உற்பத்தியும் குறையக்கூடிய சூழ்நிலையும் தமிழகத்தில் தற்போது இருக்கிறது. அது மட்டுமல்லாமல், நீண்டகாலக் கடன்கள் பொதுவாக உற்பத்தியைப் பெருக்கும் பணிகளுக்கு வழங்கப்படுவது இல்லை. இக்கடன்களை இதற்கு முன்னால் எப்போதும் ஒத்தி வைத்தோ அல்லது ரத்து செய்ததோ கிடையாது. ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையில் நீண்டகாலக் கடன்களைப் பெற்றவர்களும் கடனைத்திருப்பிச் செலுத்தாத சூழல், வசதி படைத்தவர்களும் கடனைத் திருப்பிச் செலுத்தாத சூழல் ஏற்பட்டு இருக்கிறது.

இதை விட மிக முக்கியமான ஒன்று—சென்ற ஆண்டு உலக வங்கி, மத்திய அரசோடும், விவசாய மறுநிதிக் கழகத்தோடும் மாநில அரசோடும் பேச்சு வார்த்தை நடத்தியபோது தமிழகத்திற்கு மீண்டும் கடன் உதவி ஏ.ஆர்.டி.சி. மூலமாக உலக வங்கி தரவேண்டுமானால், கொடுத்த கடனை திருப்பி நீங்கள் வசூலிக்கவில்லை என்றால், தமிழகத்திற்கு மீண்டும் கடன் தரமாட்டோம் என்று உலக வங்கி குறிப்பிட்ட ஒரு நிலையில், அதிலும் குறிப்பாக பாரதத்திலேயே எந்தமாநிலத்திலும் இல்லாத நிலையில் முதன்முதலாக தமிழகம் ''பிளாக் லிஸ்ட்'' ஆகும் துரதிருஷ்டவசமான நிலை கூட ஏற்படும் என்று உலக வங்கி சார்பில் ஏ.ஆர்.டி.சி. பிரதிநிதிகள் தமிழக அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அடுத்த மாதம் இது குறித்து மீண்டும் ஒரு முடிவு எடுக்க இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நாம் இத்தகைய ஒரு நடவடிக்கையை எடுக்கவேண்டி வந்தது. வசதி படைத்த விவசாயிகள் அவர்கள் வாங்கிய கடனைத் திருப்பித்தர தகுதி இருந்தும் கூட, வறட்சியால் பாதிக்கப்படாத நிலையில் இருந்தும் கூட அவர்களும் இந்தக் கடனைத் திருப்பித் தரவில்லை என்ற சூழ்நிலையில் தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. ரிசர்வ் வங்கிக்கு, ஏ.ஆர்.டி.சி.க்கு தரவேண்டிய கடனைத் திருப்பித் தர முடியாத நிலை ஏற்பட்டு, மத்திய அரசு, உலக வங்கி, ஏ.ஆர்.டி.சி. ரிசர்வ் வங்கி ஆகியவை இடுகின்ற உத்தரவை மீறி நடக்கின்ற காரணத்திற்காக தமிழகம் இத்தகைய கடன்களைப் பெற தகுதி அற்ற ஒன்று என்று பிளாக் லிஸ்ட் செய்யப்படுமானால், தமிழகத்தின் ஒட்டுமொத்தமான கிராம வளர்ச்சிக்கு நாம் குந்தகம் செய்தவர்களாக ஆகிவிடுவோம் என்ற காரணத்திற்காக முதல் கட்டமாக வசதி படைத்தவர்கள், பெரும் விவசாயிகள், திருப்பிக் கட்டத் தகுதி உள்ளவர்கள் ஆகியோரிடமிருந்து வசூல் செய்ய இந்த நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

மத்திய அரசு கூட மாநில அரசு ஏற்கெனவே தள்ளுபடி செய்துள்ளதைக் கொடுப்பதற்கு உதவி செய்ய மாட்டோம் என்று தெளிவாகச் சொல்லி விட்டார்கள். விவசாயிகள் கடனை ரத்து

செய்கின்ற கொள்கையைப் பொறுத்தவரையில் இது மாநில அரசுக்கு உட்பட்டதல்ல; பாரத அளவில் இது ஒரு பெரிய பிரச்னையாக உருவாகும்; ஒவ்வொரு மாநிலத்திலும் இத்தகைய பிரச்சனை இருந்தால், கொடுத்த கடனைத் திருப்பித் தர முடியாது என்ற நிலை இருந்தால் பாரதத்தின் பொருளாதார நிலை ஸ்தம்பித்துவிடும் என்ற கொள்கையின் அடிப்படையில் மைய அரசு ஆணித்தரமாக உதவிசெய்ய மறுத்து வருகிறது. நம்முடைய மாநிலத்தினுடைய இந்த சிக்கல் மற்ற மாநிலங்களுக்கும் பரவக்கூடாது; கொடுத்த கடனை கண்டிப்பாக வசூல் செய்தாக வேண்டும் என்று மத்திய அரசு மாநில அரசுக்குத் தெரிவித்துள்ளது.

அது மட்டுமல்ல. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு அங்காடிகளில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்கு சம்பளம் தரமுடியாத நிலை இருக்கிறது. 864 சங்கங்களில் பணியாற்றுகின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு அந்தச் சங்கங்களின் மூலம் கடன் பெற்றிருக்கிற டிராக்டர் வைத்திருக்கிற விவசாயிகள், அரிசி ஆலை வைத்திருக்கிற விவசாயிகள் சினிமா தியேட்டர் வைத்திருக்கிற விவசாயிகள், இன்னும் வசதி படைத்தவர்கள் எல்லாம் கடனை கட்டவில்லை என்பதால் சுமார் ஓராண்டு காலமாக சம்பளம் வழங்க முடியவில்லை.

அது மட்டுமல்லாமல் மத்திய அரசிலிருந்து ஏ.ஆர்.டி.சி. மூலம் உலக வங்கி கடன் பெறுவதை ரிசர்வ் வங்கி நிறுத்தி வைத்திருக்கிறது. காரணம் கொடுத்த கடன் திரும்பப் பெறப்படவில்லை என்பதுதான். கடனைத் திருப்பிச் செலுத்தினால்தான் ஏ.ஆர்.டி.சி. மூலம் மேலும் கடன் பெற முடியும்,. ஆகவேதான் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் சிறு விவசாயிகளிடம் இருந்து கடனை வசூல் செய்வதற்காக ஜப்தி நடவடிக்கை எடுக்கச் சொல்ல வில்லை. சிறு விவசாயிகளிடம் கடனை வசூல் செய்ய ஜப்தி நடவடிக்கை கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறோம். நடுத்தர விவசாயிகள், 5 ஏக்கர் முதல் 10 ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்கள் மீதும் ஜப்தி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறோம் 10 ஏக்கருக்கு மேற்பட்டவர்களிடம், வசதி படைத்தவர்களிடம் தான் ஜப்தி நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறோம். அதிலும் வறட்சிப் பகுதி என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளிடம் ஜப்தி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று அரசு ஏற்கெனவே அறிவித்திருக்கிறது ஆகவே, தமிழ்நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாக கிராமப்புற முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு ஏ.ஆர்.டி.சி. போடுகின்ற நிபந்தனைகளின் காரணமாக மேலும் கடன் உதவி பெறுவதற்காக வசதி படைத்தவர்ளிடம், பெரிய விவசாயிகளிடம் கடனை வசூல் செய்ய இத்தகைய நடவடிக்கை தேவை என்று கூறி இதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்டத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையில் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. அறிவிப்பு.

வானொலியில் பேரவை நடவடிக்கை தவறாக அறிவிக்கப்பெற்றது—தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு 4—3—1981 அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வானொலியில் சட்டமன்ற நிகழ்ச்சிகளை விமரிசனம் செய்வது குறித்து ஒரு பிரச்சனையை எழுப்பினர்கள். 'சட்டமன்றத்தில் இன்று' என்ற தலைப்பில் ஒவ்வொரு நாளும் சட்ட மன்ற நடவடிக்கைகள் குறித்து வானொலியில் ஒலி பரப்பப்படுகிறது. வானொலி நிலயைத்தின் நிருபர் அல்லாது பத்திரிகை நிருபர்களை ஒவ்வொரு நாளுக்கு ஒவ்வொருவராக இவ்வித விமரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது. இப்படி இன்றி வானொலி நிலையமே தன் நிருபர்களைக் கொண்டு இந்த நிகழ்ச்சிகளைத் தயாரித்தால் கட்சி விருப்பு வெறுப்பின்றி அந்நிகழ்ச்சிகள் அமையும் என்றும், இது குறித்துப் பேரவைத் தலைவர் அவர்கள் வானொலி நிலையத்தாருடன் தொடர்பு கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

ஏற்கெனவே இதே போன்று ஒரு பிரச்சனை வந்த போது 9—11—1979 அன்று வானொலி நிலையத்தாருக்கு இது குறித்து எழுதப்பட்டது. எனவே பிரச்சனை மீண்டும் எழுப்பப் பட்டபோது வானொலி நிலையத்தாரிடமிருந்து ஒரு தகவல் வரப் பெற்றுள்ளது. அதன் முக்கிய பகுதிகளைப் பேரவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

[முற்பகல் 10-30]

A reference was made on this matter to the News Services Division of All India Radio, New Delhi. He has categorically clarified that the present arrangements to get the reviews scripted by newspapar Agencies' Correspondents should continue. The relevant portions of the guidelines issued by the Director of News Services as reproduced below will make the position clear.

பேரவைத் தலைவர்

1981 ஏப்ரல் 9]

"....the purpose of both Parliament and Assembly reviews, is not only to present to the listeners an objective and balanced account of the House, and experienced journalists working for various newspapers and agencies are drafted to script these reviews. The guidelines given to the script-writers are that they should give a commentative review and p eseut a synoptic listing of the Memoers. However, they have been asked to notice the contribution made by as many Members as possible without making the commentaries dull or monotonous catalogue of cames. Besides, this they have also been asked to avoid devoting disproportionate space to minor incidents or to dramatise them. Apart from these guidelines, the script writers are booked by rotation. The final scripts is also equired to be vetted by the i e AIR Parliament Assembly Reporting team. All these procedures are aimed at ensuing unbiassed reviews: the particular pattern which he have dopted for Parlimentary as well as Assembly reviews cannot be changed nor can we have different arrangements for different States, like staffers for some regions and journalists for others.

எனவே, அனைத்திந்திய அளவில் கையாளப்படும் ஒரு முறையாக இது இருப்பதாக தெரிகிறது. இது குறித்து அரசு அளவில் உயர் மட்டத்தில் மைய அரசுடன் தொடர்பு கொண்டு வழி வகுப்பது முறையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) கோவை மத்திய கூட்டுறவு வங்கி கிளைகளில் அடமானம் வைக்கப்பெற்ற நகைகள் களவு

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகளில் அடமானம் வைக்கப் பெற்ற நகைகள் களவாடப்பட்டது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்-:

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(திரு. சி. பொன்னையன்)

அறிக்கை

கோயமுத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியின் சென்னிமலை, நம்பியூர், கோட்டூர் மற்றும் பவானி கிளைகளில் கீழே குறிப்பிடப் பட்டுள்ள அடைமானம் வைக்கப்பட்ட நகைகள் களவாடப்பட்ட தாக மேற்படி வங்கியில் பணியாற்றும் கிளை முகவர் (Branch Agent) மற்றும் காசாளர் (Cashier) ஆகிய இருவரும் புகார் தெரிவித்தனர்.

கிளையின் பெயர்.	களவாடப்பட்ட அடகு நகைகளின் விபரம்.		
	நகை அடகு வைத்த நாள்.	எடை (கிராம்)	மதிப்பு (ரூபாய்)
(அ) சென்னிமலை	29-9-1979	78,400	5,500
(ஆ) நம்பியூர் ..	24-10-1977	69,300	4,800
(இ) கோட்டூர் ..	2-1-1978	67,500	4,500
(ஈ) பவானி	20-3-1978	75,600	5,000

மேற்குறிப்பிட்ட அடகு நகைகள் களவாடல்களை விசாரித்த கோயம்முத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் சென்னிமலை, நம்பியூர் மற்றும் கோட்டூர் ஆகிய கிளைகளின் அடகு நகைகள் ஏதும் களவாடப்படவில்லை என்று தெரிவித் துள்ளார். ஆனால் பவானி கிளையில்மட்டும் ரூ. 5,000 மதிப்புள்ள இரட்டை வட செயின் ஒன்று களவாடப்பட்டது, வங்கியின் கவனத்துக்கு வந்துள்ளது என்றும் உடனடியாக இதன் மீது கோபி காவல்துறை உதவி கண்காணிப்பாளரிடம் புகார் செய்யப்பட்ட தென்றும்மேற்படி நகை களவாடல் தொடர்பாக காவல் துறை யினர் சென்னிமலை, நம்பியூர் மற்றும் கோட்டூர் கிளை முகவர் களிடம் விசாரித்ததற்குப் பின்னர் இதனைக் கண்டுபிடிக்க சாத்தி யக்கூறுகள் இல்லை என்று தெரிவித்துவிட்டனர். எனவே, நகை களவு போனதற்கு மேற்படி கிளையின் முகவரும், காசாளரும் கவனக் குறைவாக பணியாற்றியது காரணம் என்று விசாரணை அலுவலர் தெரிவித்ததின் பேரில் இவர்கள் இருவர்மீதும் வங்கி யினர் குற்றச்சாட்டுகள் சுமத்தி நடவடிக்கை எடுத்து வருகின்ற னர். மேற்படி கிளை முகவரும், காசாளரும் களவு போன நகைக்கு உரிமை யாளருக்கு நகைக்குறிய மதிப்புத் தொகையை அளித்து தீர்த்து விட்டனர். எனவே கவனக் குறைவு காரணமாக நகை களாடப்பட்டதற்கு பொறுப்பானவர்கள் மீது கோயமுத்தூர் மத்திய வங்கியினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற குறிப்பின் படி சென்னிமலை, நம்பியூர், கோட்டூர், மற்றும் பவானி ஆகிய இடங்களில் நகைகள் களவாடப்பட்டிருப்பதாக வங்கியில் பணி யாற்றும் கிளை முகவர் மற்றும் காசாளர் ஆகிய இருவரும் புகார் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்தக் கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் சென்னிமலை, நம்பியூர் கோட்டூர் ஆகிய இடங் களில் நகைகள் களவாடப்படவில்லை என்றும், பவானியில் மட்டும் சுமார் 5,000 ரூபாய் மதிப்புள்ள இரட்டை வடச் செயின் மட்டும் களவாடப்பட்டிருப்பதாக குறிப்பு கொடுத்திருக் கிறார். மேலும் காவல்துறையினர் சென்னிமலை, நம்பியூர், கோட்டூர் போன்ற இடங்களில் நடந்த திருட்டு பற்றி விசாரித்த தற்குப் பிறகு இதைக் கண்டுபிடிக்க முடியாது என்றும் அதற்கான சாத்தியக்கூறு இல்லை என்றும் சொல்கிறார்கள். ஆகவே சம் பந்தப்பட்ட அதிகாரியும், காவல் துறையினரும் முன்னுக்குப் பின் முரணாகப் பேசி குற்றவாளியை தப்ப வைக்கின்ற முயற்சி யில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு உயர்மட்ட குழு அமைத்து மறுவிசாரணை நடத்து வதற்கு உத்தரவிடுவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, விசாரணையின்போது சென்னிமலை, நம்பியூர், கோட்டூர், ஆகிய பகுதிகளில் நகைகள் களவாடப்படவில்லை என்றும் ஆனால் பவானியிலே இருக்கின்ற கிளையில் மட்டும் ஒரு செயின் காணாமல் போய்விட்டது என்றும் தெரியவந்தது. இருந்தபோதி லும் நான்கு கிளைகளிலும் தவறு நடந்திருப்பதாக அங்குள்ள கிளை முகவரும் காசாளரும் புகார் மனுவைத் தந்திருப்பதன் காரணத்தால் ஆனால் தற்போது அதற்கான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாத நிலைமை இருப்பதால் மாண்புமிகு உறுப் பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் கூறியதுபோலவே இதனை சி. ஐ. டி. பிரிவுக்கு அனுப்பி புலன் விசாரணை செய்து உண்மைக் குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டுபிடிக்கவும் அந்த விசாரணை முடியும் வரை அங்குள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்ற பகுதிக்கு மாற்றப்படவேண்டும் என்றும் அரசு உத்திரவிட்டிருக் கின்றது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, கோவை மத்திய கூட்டுறவு வங்கியில் கையாடல் செய்தவர்களைக் கண்டு பிடிக்க முடியாத அளவில் கையாடல் செய்திருக்கிறார்கள். சச்சா ஜூடா என்ற இந்திப்படத்திலும் இப்படிப்பட்ட ஒரு காட்சி வருகின்றது. அதிலேயும் திருடியவர்களைக் கண்டுபிடிக்காமலே போய்விடக் கூடிய நிலைமை ஏற்படுகின்றது. அந்த சினி மாவைப் பார்த்துவிட்டுத்தான் இங்கேயும் களவாடி இருக்கிறார் கள்.

[திரு. இரா. தாமரைக்கனி]

அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேறு இடத்திற்கு ட்ரான்ஸ்ஃபர் செய்வது பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். அப்படி வேறு இடத்திற்கு மாற்றினாலும் கூட விசாரணைக்கு இவர்கள் இடைஞ்சலாக இருப்பதால் அவர்களை சஸ்பென்ட் செய்துவிட்டு நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? மேற்கொண்டு அந்த வங்கியின் கிளைகளில் நகைகளை ஈடு செய்வதற்கே மக்கள் பயப்படுகிறார்கள். அந்த பயத்தைப் போக்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கோ ஏதோ ஒரு இடத்தில் ஒரு தவறு நடந்திருப்பதன் காரணத்தால் கூட்டுறவு வங்கிகளே இப்படித் தான் இருக்கும் என்று மக்கள் மத்தியில் கருத்து ஏற்பட்டுவிடவும் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் தவறு செய்தவர்களைக் கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலையில் சந்தேகப்படுபவர்களைப் பணி நீக்கம் செய்துவிடக் கூட இதனை சி. ஐ. டி. பிரிவுக்கு அனுப்பலாம் என்ற கருத்தினை அரசு ஏற்கிறது.

(ஆ) கோவை சேரன் போக்குவரத்து ஊழியர்களுக்கும், சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கும் மோதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "23—3—1981 அன்று கோயம்புத்தூரில் சேரன் போக்குவரத்து ஊழியர்களுக்கும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நடந்த மோதல் குறித்து திருவாளர்கள் எம். ஆறுமுகம், இரா. கருப்பையா, தி. கா. நல்லப்பன், மு. அம்பிகாபதி, கே. எம். தங்கமணி, கு. ரமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, "23—3—1981 அன்று கோயம்புத்தூரில் சேரன் போக்குவரத்து ஊழியர்களுக்கும், சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நடந்த மோதல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

1981 ஏப்ரல் 9

[திரு. சு. முத்துசாமி]

அறிக்கை

1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22 ஆம் நாள்சேரன் போக்கு வரத்துக் கழகப் பேருந்து எண் டி.எம்.என். 3885 (தடம் எண் 5) இரவு சுமார் 9-15 மணியளவில் சிவானந்தா காலனி வழியாக செல்லும்போது ஒப்பனக்கார தெருவிற்கு அருகாமையிலுள்ள பைசன் பனியன் கடை நிறுத்தத்தில் நின்றது. அப்போது, பேருந்தில் ஏறுவதற்கு முயற்சி செய்த ஒரு பெண்மணியை நடத்துனர் திரு எம்.ஆர். பாலன் முதலில் வாய்மொழியினாலும் பின்பு செய்கையினாலும் தடுத்துள்ளார். இதன் காரணமாக நடத்துனருக்கும் பெண்மணிக்கும் வாக்கு வாதம் நடந்தது. அப்போது அந்த பெண்மணிக்கு சகோதரன் என்று சொல்லப்படுகின்ற ஒரு நபருக்கும் நடத்துனருக்கும் வாக்குவாதம் முற்றி பின்பு கைகலப்பில் முடிந்தது. இதனை அடுத்து ஓட்டுநர் திரு பஷீர் அகமது பேருந்திலிருந்து இறங்கி சண்டையில் ஈடுபட்டார். மேலும் தடம் எண் 59-ல் செல்லும் ஓட்டுநர் திரு ரங்கநாதனும் இச்சண்டையில் கலந்து கொண்டார். அதே சமயம், எதிரி தரப்பினரின் நண்பர்களான சில சுமை தூக்கும் தொழிலாளர்கள் சேர்ந்துகொண்டு, திரு ரங்கநாதனை கடுமையாக அடித்தனர். அச்சமயம் தடம் எண் 4சி-ல் பேருந்தை இயக்கிய ஓட்டுநர் திரு ஆர். சுப்பிரமணியனும் இந்த அமளியில் கலந்துகொண்டார். சிறிது நேரத்தில் சுமை தூக்கும் தொழிளார்கள் ஓட்டுநர் திரு ரங்கநாதனை பிறரால் தெரிந்து கொள்ள இயலாத இடத்துக்குக் கொண்டு சென்றனர். இந்த செய்தி அறிமுகமில்லாத நபரால் தொலைபேசி மூலம் தெரியப் பெற்ற சேரன் போக்கு வரத்துக்கழக மேற்பார்வையாளர் உடனடியாக தலைமை அலுவலகத்துக்கு இது பற்றி தெரிவித்துவிட்டு, சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்தார்.

2 இதற்குள் ஓட்டுநர் திரு. ஆர். சுப்பிரமணியன், நகரத்தின் பல வேறு கிளைகளுக்குச் சென்று, மேற்படி சம்பவம் பற்றி சக போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்குத் தெரிவித்தார். பின்பு அவர் நகரப் பணி 3-க்கு சென்று டி.எம். என். 3589 மற்றும் டி.எம்.என். 3512 பேருந்துகளின் பணியாளர்களை பணிமனைக் குள்ளே செல்லாமல் பேருந்துகளுடன் கலவரம் நடந்த இடத் துக்கு புறப்படும்படி கோரினார்.

மூன்று கிளை மேலாளர்களும், மற்றும் பாதுகாப்பு அலுவலர், துணை போக்குவரத்து மேலாளர், துணை மேலாளர் (நிர்வாகம்), பொது நல அலுவலர் ஆகியோரும் கலவரம் நடந்த இடத்துக்கு விரைந்து சென்று பணியாளர்களை சமதானப்படுத்தி நிலைமையை கட்டுப் படுத்தினார்கள். அது சமயம், காவல்துறை

[திரு. சு. முத்துசாமி]

உதவி கண்காணிப்பாளரும் அங்கு வந்தார். சட்ட விரோதமாக கூடிய செயலுக்காகவும் சுமை தூக்கும் தொழிலாளர்களின் கை வண்டிகளுக்கும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்த மாவட்ட தொழிலாளர்களின் சங்கத் திற்கும் சேதம் விளைவித்ததற்காகவும் 12 தொழிலாளர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

3. கைது செய்யப்பட்ட தொழிலாளர்களை விடுதலை செய் தால்தான் அந்த இடத்தைவிட்டு செல்வோமென்று சேரன் போக்குவரத்துக்கழக தொழிலாளர்கள் நிபந்தனை விதித்தார்கள். கைது செய்யப்பட்ட தொழிலாளர்களை விடுதலை செய்வதற்கு முன் பின்பற்றப்பட வேண்டியுள்ள சட்ட வகை முறைகளைப் பற்றி தொழிலாளர்களிடம் விளக்கப்பட்டது. இத்தருணத்தில் சி.ஐ.டி.யூ. (C. I. T. U.) வைச் சேர்ந்த திரு. எம். நஞ்சப் பன், சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து பிற கிளைகளைச் சார்ந்த தொழிற் சங்கத்தலைவர்கள் வந்து பேச்சு வார்த்தை நடத்தும் வரை வேலை நிறுத்தம் செய்யும்படி தொழிலாளர் களைக் கேட்டுக் கொண்டார். ஆனால் மற்ற தொழிற்சங்கத் தலைவர்கள், சேரன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநரை சந்தித்து தாங்கள் வேலை நிறுத்தத்திற்கு உடன்படவில்லை என்றும், தங்கள் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வேலைக்கு வருவார்கள் என்றும், கூறினார்கள். பின்னர் மறுநாள் காலை 4 மணியளவில் உதகமண்டலம் செல்லும் பேருந்து புறப்பட்டுச் சென்றது. காலை 4—30 மணியளவில் மேலும் மூன்று பேருந்து கள் புறப்பட்டுச் சென்றன. அத்தருணத்தில் சி.ஐ.டி.யூவைச் சேர்ந்த திரு. சாமி என்பவரது குறுக்கீட்டால் மேற்கொண்டு பேருந்துகள் வெளி வருவது தடுக்கப்பட்டது. தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. வைச் சேர்ந்த தொழிலாளர்கள் பேருந்துகளை ஓட்ட முன் வந்தாலும் சி.ஐ.டி. யூவைச் சேர்ந்தவர்களால் அவர்கள் தடுக்கப்பட்டார்கள்.

4. பேருந்துகளை ஓட்டுவதற்கு தொழிலாளர் சங்கத் தலை வர்கள் கீழே கண்ட கோரிக்கைகளை முன் வைத்தனர் :—

(1) பேருந்துகளை ஓட்டுவதற்கு தகுந்த பாதுகாப்பு அளிக் கப்பட வேண்டும்.

(2) தொழிலாளர்களுக்கு வருகை குறிக்கப்பட்டு ஊதியம் அளிக்கப்பட வேண்டும்.

(3) கைது செய்யப்பட்டவர்கள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும்.

ஆனால் நிர்வாகம் கீழ்க்கண்டவாறு அறிவித்தது :—

(1) கூடுமான வரை தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(2) தொழிற்சங்கத் தலைவர்களால் வேலை நிறுத்தம் என அறிவிக்கப்பட்டதால், வருகைப் பதிவு, ஊதியம் ஆகியவற்றிற்கு இடமில்லை. தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்காக ஊதியம் பிடித்தல் செய்யப்படும்.

(3) கைது செய்யப்பட்டவர்களை விடுத்லை செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கும்படி காவல்துறையினர் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

5. தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிளாளர்களிடையே பேசியதின் விளைவாக, பிற்பகல் 2-30 மணியளவில் நகரக்கிளை-3 தவிர மற்ற கிளைகளிருந்து பேருந்துகள் இயக்கப்பட்டன. பேருந்துகள் தடங்களின்றி ஓடிக்கொண்டிருந்தபோது, மாலை சுமார் 4-30 மணியளவில் சேரன் போக்குவரத்துக் ழக ஓட்டுநர் நடராசன் என்பவர் அபாயகரமான முறையில் தாக்கப்பட்டதகவும் நடத்துனரின் பணப்பை, அடையாளச்சீட்டு, உரிமம் ஆகியவை பறிக்கப் பட்டுவிட்டதாகவும் தகவல் வந்தது. உடனே, நகரக் கிளை 3லிருந்து புறப்படவிருந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டன. தாக்கப்பட்ட ஓட்டுனரின் பேருந்தின் கண்ணாடிகளும் உடைக்கப்பட்டிருந்தன. இதர பணிமனைகளில் இருந்து மாலை 7-30 மணி வரை பேருந்துகள் இயக்கப்பட்டன. ஆயினும், நகரத்தில் ஏற்பட்டிருந்த பதட்ட நிலை காரணமாக பேருந்துகளை நிறுத்திவிடுவது என முடிவு செய்யப்பட்டது.

6. அன்று இரவு வன்முறை சம்பவங்களும், சேரன் போக்குவரத்துக் கழகத்தின் சொத்துக்கள் மீது தாக்குதல்களும் நடைபெற இருக்கின்றன என்ற அநாமதேயத் தகவலைத் தொடர்ந்து, கழக நிர்வாக இயக்குநர் மண்டலக் காவல்துறை அதிகாரியுடன் (Deputy Inspector General of Police) கலந்து ஆலோசித்து தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தார். நகரில் நிலவிய பதட்ட நிலை காரணமாகவும், தொழிலாளர்கள் வேலைக்கு வராததாலும் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் அன்று காலை 8 மணியளவில்தான் பேருந்துகள் மீண்டும் இயக்கப்பட்டன.

7. காலை 11—30 மணியளவில் வழித்தடம் எண். 69- ஓடிக்கொண்டிருந்த பேருந்தும் (எண். டி.எம்.என். 3182) அதன் ஓட்டுனர் திரு. மாணிக்கம் என்பவரும் தாக்கப்பட்டதாகவும் நடத்துநர் திரு. குமரேசன் கடத்தப்பட்டதாகவும் தகவல் வந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு பல்வேறு கிளைகளிலிருந்தும், கழகத் தொழிலாளர்கள் வந்து சேரத்தொடங்கினர். தனக்கு ஏற்படவிருந்த ஆபத்தையும் பொருட்படுத்தாமல் நிலைமையைச் சீர் செய்ய நகரக் கிளை-1-ன் கிளை மேலாளர் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

கீழ்க்கண்ட காரணங்களுக்காக அனைத்துப் பேருந்துகளையும் பணிமனைகளுக்குக் கொண்டு செல்வதென நிர்வாகம் முடிவு செய்தது :—

(1) பணியில் இருந்த ஓட்டுனர் ஒருவர் கூலியாட்கள் அடித்துக் கொல்லப்பட்டதாக ஒரு பலத்த வதந்தி பரவியது.

(2) கூலியாட்கள் வேலைக்கு வராமல் திரண்டு வருவதாகத் தகவல் கிடைத்தது.

(3) கழகத் தொழிலாளர்கள் கூலியாட்களால் மீண்டும் தாக்கப்படமாட்டார்கள் என்பது உறுதியில்லாதிருந்தது. இது போலவே கழகத் தொழிலாளர்கள்—கூலியாட்கள் மோதல் நின்று விட்டது என்பதும் உறுதியற்ற நிலையிலிருந்தது.

(4) நிலைமை கட்டுக்கு அடங்காமல் போனதால் ஆங்காங்கே இயங்கிக் கொண்டிருந்த 250 பேருந்துகளுக்குப் பாதுகாப்பு இல்லை.

(5) நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னரே தீர்வு காண்பதற்கான வழிமுறைகளை ஆராய இயலும்.

(6) கழகச் சொத்துக்களுக்கு பலத்த சேதம் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தன.

8. பிற்பகல் 1—30 மணியளவில் எல்லாப் பேருந்துகளும் திரும்பப் பெறப்பட்டு அனைத்து ஊழியர்களும் பணிமனைக்குள்ளேயே தங்கியிருக்கும்படி அறிவுறுத்தப்பட்டார்கள்.

9. கோயம்புத்தூர் கோட்டாட்சியரால் கூட்டப்பட்டு சேரன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் கலந்துகொண்ட பேச்சு வார்த்தைகளில் கூலியாட்கள் தங்களுடைய கை வண்டிகள் சேதமடைந்ததற்கு ரூ. 50,000 இழப்பீடு கோரினர். சேரன் போக்குவரத்துக் கழகச் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதால், இழப்பீடு தொகை கோரிக்கைக்கு, சேரன் போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் சம்மதிக்கவில்லை. சுமை தூக்கும் தொழிலாளர்களின் நிவாரணத் தொகை கோரிக்கையை அரசு பரிசீலனைக்கு அனுப்பலாம் என கோட்டாட்சியர் கருத்துத் தெரிவித்தார். மீண்டும் எந்தவிதமான அசம்பாவிதம் ஏற்படாது காவல்துறையினரும் போதுமான அளவில் சாலைகளில் ரோந்து வந்தனர்.

10. பின்னர் சி.ஐ.டி.யூவைச் சார்ந்த பணியாளர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகள் திருப்தியளிக்கவில்லையென தெரிவித்தனர். ஆனால் பேருந்துகளை உடனடியாக இயக்காவிடின், வேலை நிறுத்தமென கருதப்படுமெனவும், பேருந்துகளை இயக்குவதற்குத்

தடையாக இருப்பவர்கள் காவல்துறையினரால் கைது செய்யப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. உடனே பேருந்துகள் இயங்கத் தொடங்கின. 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் வழக்கம் போல் பேருந்துகள் இயங்கின.

11. மேற்கண்ட இரு தினங்களில் சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த 36 தொழிலாளர்கள் கைதாகியுள்ளனர். அவர்களில் சி.ஐ.டியூ. தொழிற்சங்கத்தைச் சேர்ந்த 30 பேர் பல்வேறு குற்றங்களுக்காக கைதாகி விடுதலை செய்யப்பட்டனர். 6 பேருந்துகளின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு பலத்த சேதமடைந்துள்ளன. காவல்துறையினர் டி.எம்.என். 3219 எண்ணுடைய பேருந்தைக் கைப்பற்றி 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் கூடுதல் குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்றத்துக்கு அனுப்பியுள்ளனர். இச் சம்பவத்தால் சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்பட்ட சேதத்தின் மொத்த மதிப்பு ரூபாய் 3.75 இலட்சம் என மதிப்பிடப்படுகிறது. இச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் மீது சேரன்போக்குவரத்துக் கழகம் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வைத்திருக்கக் கூடிய அந்த அறிக்கையில், முற்றிலும் உண்மைக்கு புறம்பான தகவல்கள் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 23ஆம் தேதி நடைபெற்ற சம்பவமாக இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருப்பதற்கும், நடந்த சம்பவத்திற்கும் தொடர்பே இல்லை.

கோவையில் இருக்கக் கூடிய சி.டி.சி. நிர்வாகம் அதன் பஸ்களில், பெண்களும் ஆண்களும் ஏற வேண்டுமானால், பெண்கள் முன் வழியாகவும், ஆண்கள் பின் வழியாகவும் தான் ஏற வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்தச் சம்பவம் நடைபெற்ற தினத்தில் இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதுபோல் அல்லாமல், பெண்களும் ஆண்களும் முன் பகுதி வழியாகவே ஏறிய காரணத்தால்தான், ஆண்கள் பின் பகுதி வழியாகத்தான் வர வேண்டும் என்று சொல்லியும் கூட, முன் பகுதி வழியாக ஏறியதினால்தான், இந்த தகராறே ஏற்பட்டது. ஆனால் இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருப்பது போல் ஏற்படவில்லை. இப்படிப்பட்ட சம்பவங்கள் பல இடங்களிலும் அடிக்கடி நடக்கிற காரணத்தினாலும், கனாசி ஊழியர்களுக்கும், சேரன் போக்குவரத்து பஸ் தொழிலாளர்களுக்கும் அடிக்கடி இப்படிப்பட்ட மோதல்கள் நடைபெறுகின்ற காரணத்தாலும், அதைத் தடுப்பதற்கு, ஒரு சுமுகமான முடிவு எடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் இதற்கு ஒரு வழி காண வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த அறிக்கையில் முழுமையாக சி.ஐ.டி.யு. சங்கத்தின்மீது பழி சுமத்துவதாகவே காரணங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அது தவறு.

உண்மையில் சம்பவம் நடைபெற்ற நேரத்தில் போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரிலேயே துப்பாக்கிப் பிரயோகம் நடக்கும் போல் இருந்த சூழ்நிலையைக் கூட தவிர்த்து, நல்ல முறையில், அந்த மாதிரி சம்பவம் நடைபெறாமல் குறுக்கிட்டு தடுத்தவர், இந்த அறிக்கையில் குறிப்பிடப் பெற்றிருக்கும் சி.ஐ.டி.யூ. சங்க தலைவராக இருக்கக் கூடிய நஞ்சப்பன் அவர்கள். அவர் தலையிட்டுத்தான் அப்படிப்பட்ட துர்ப்பாக்கிய சம்பவம் நடைபெறாமல் தடுத்திருக்கிறார். ஆனால் இந்த அறிக்கையில் அவர் மீது பழி போடக் கூடிய முறையிலே—சி.ஐ.டி.யூ. சங்கத்தின் மீது பழி போடக் கூடிய முறையிலே இருக்கிறது. இன்னும் இந்த அறிக்கையிலே என்ன சொல்லியிருக்கிறது என்றால் ''சிறிது நேரத்தில் சுமைதூக்கும் தொழிலாளர்கள், ஓட்டுநர் திரு. ரங்கநாதனை பிறரால் தெரிந்துக் கொள்ள இயலாத இடத்திற்குக் கொண்டு சென்றனர்''. என்றிருக்கிறது. யார் அப்படி தூக்கிச் சென்றது? தூக்கிச் சென்று எந்த இடத்தில் வைத்திருக்கிறார்கள். அவர்கள்மீது போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டது?

அரசு தரப்பில் கிட்டத் தட்ட 3 லட்சத்திற்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக சொல்லப்பட்டது? அப்படிப்பட்ட நஷ்டத்திற்கு யார் பொறுப்பாளி என்று அரசு கருதுகிறது, சுமை தூக்கும் தொழிலாளர்களா? அல்லது வேறு யார் மீதாவதா? அப்படி என்றால் அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த அறிக்கையே முழுக்க முழுக்க தவறான அறிக்கை என்று சொல்லி விட்டார்கள். இருந்தாலும் கூட அதைத் தொடர்ந்து சில கேள்விகளை கேட்டிருக்கிறார்கள். இங்கே ஒரு விவர அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கைதான் நடந்த முடிவு மாக நடைமுறையில் எடுத்துக் கொள்ளப்படும், அதன்படிதான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பது பொருள் அல்ல.

பிரச்னைகள் நடைபெற்ற உடனேயே உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுக்கின்றனர். அதனை சம்பந்தப் பட்ட இடங்களுக்கு அனுப்பி விவரங்களை கேட்கிறோம். அவர்கள் பதில் அனுப்பும்போது, அன்றைய தினம் அங்கே இருக்கக் கூடிய சூழ்நிலையின் அடிப்படையில், அன்றைய தினம் அவர்கள் விசாரணை செய்த முடிவுகள் அடிப்படையில் விவரங்களை அனுப்புகிறார்கள்.

இன்னும் விசாரிக்காத சிலரை பின்னால் விசாரிக்கிறபோது அதிகமான விவரங்கள், இப்போதைய நிலைமைக்கு மாறாகக் கூட விவரங்கள் கிடைக்கக் கூடும். ஆகவே இந்த அறிக்கைதான்

முடிவான அறிக்கை என்பது அல்ல. அன்றைய தினம் நடைபெற்ற சம்பவத்தைப்பற்றி உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் முன் பகுதியில் ஏறுவதா? பின் பகுதியில் ஏறுவதா என்கிற பிரச்னை முக்கியமானது அல்ல. பொறுப்பான இடத்திலே இருப்பவர்கள் பதவி நேரத்தில், எப்படி பொதுமக்களிடத்திலே அதை எடுத்துச் சொல்ல வேண்டுமோ, அப்படி எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்கள் கொஞ்சம் பொறுமையாக நடந்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம், அப்படி பெண்கள் முன் பக்கத்திலும், ஆண்கள் பின் பக்கத்திலும் ஏற வேண்டும் என்ற சட்டம் இருக்குமேயானால், அதை செயல்படுத்தித்தான் ஆக வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் பல கேள்விகளை கேட்டிருக்கிறார்கள். சி.ஐ.டி.யூ. சங்கத் தலைவர் நஞ்சப்பன்மீது மீது வேண்டுமென்றே பழி சுமத்தப்பட்டிருக்கிறது. அது தவறு என்று கூறினார்கள். எந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்மீதும் வேண்டுமென்றே பழி சுமத்துவதாகவோ அல்லது எந்த தனி நபர் மீதும் வேண்டுமென்றே பழி சுமத்துவதாகவோ, இந்த அறிக்கையில் எதுவும் இல்லை. சம்பவம் நடைபெற்ற சமயத்தில் அவர் வந்தார். பிற கிளைகளைச் சார்ந்த தொழிற் சங்கத் தலைவர்கள் வந்து பேச்சு வார்த்தை நடத்தும்வரை வேலை நிறுத்தம் செய்யும்படி தொழிலாளர்களை கேட்டுக் கொண்டார் என்றுதான் அறிக்கையில் சொல்ல பட்டிருக்கிறதே தவிர, வேறு அல்ல. அதை அப்படியே ஏற்றுக் கொண்டு விட்டதாக எண்ணத் தேவையில்லை. முழுமையாக விசாரிக்காத வரையில் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. விசாரிப்பதற்கு அவகாசம் நிறைய இருக்கிறது. விசாரணையை விரைவில் துவக்கயிருக்கிறார்கள். காவல் துறையிடமிருந்து முழுமையாக தகவல்கள் இன்னும் வரவில்லை. அதுபோல் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாகவும் விசாரணை நடத்தி இருக்கிறோம். யார் யார் தவறு செய்திருக்கிறார்கள் என்பதை—விசாரணை அறிக்கைகள் வெளி வந்தால், தெளிவாக புரிந்து கொள்ள முடியும்.

[முற்பகல் 10.40]

*திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டு, இப்படிப்பட்ட ஒரு அறிக்கையை இந்த அவைக்கு முன்னால் வைத்திருப்பதைக் கண்டு நான் வருந்துவதைத் தவிர வேறு வழியில்லை. அமைச்சர் அவர்களுடைய கையெழுத்து அதிலே போடப்பட்டிருப்பது தான் எனக்கிருக்கிற வருத்தம். இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால்,—அமைச்சர் அவர்கள் வருத்தப்படக் கூடாது—இது உண்மைக்கு நேர்மாறாக தயாரிக்கப்பட்டிருக்கிறது.

அதை நிருபிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். உண்மைக்கு நேர்மாறாக, பல விஷயங்கள் திருத்தி கூறப்பட்டு, சி.ஐ.டி.யூ. சங்கத்திற்கு மாசு கற்பிக்கின்ற உண்மைக்கு மாறான குற்றம் செய்தவர்கள் தப்பித்துக் கொண்டு, நல்லவர்களாக வேஷம் போட்டுக் கொண்டு இருப்பவர்களால் தயாரிக்கப்பட்டு, இந்த அறிக்கை உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையைத் தயாரித்தவர்கள் யார் என்பதை கவனிக்க வேண்டியது, கண்டு பிடிக்க வேண்டியது அவசியம் என்று கூறுகிறேன். இதிலே சொல்லப்பட்டிருக்கும் விஷயத்தில், இரண்டாவது பக்கத்திலே, இந்த அறிக்கையைப் பார்க்கலாம்—4 வார்த்தைகள் அடிக்கப்பட்டு விட்டது. அந்த வார்த்தைகள் ஏன் அடிக்கப்பட்டிருக்கிறது. பிறரால் தெரிந்து கொள்ள முடியாத இடத்திற்கு அந்த பஸ் ஓட்டுநரைத் தூக்கிக் கொண்டு போயிருக்கிறார்கள் என்பது அந்த வார்த்தைகள், அப்படி தூக்கிப் போனது யார், அப்படிப்பட்ட கொள்ளைக்காரர்கள், ரௌடிகள், தொழிற் சங்கங்களுக்கிடையே கலகத்தை உண்டு பண்ண, திட்டம் போட்டுச் செய்திருக்கிறார்கள். அந்த வார்த்தைகள் அடிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தெரிந்தும்கூட, இப்படிப்பட்ட நடவடிக்கைகள் நடந்திருக்கிறது. மூன்றே முக்கால் லட்சம் ரூபாய் அளவிற்கு பேருந்துகளை உடைத்திருக்கிறார்கள். உடைத்தவர்கள் யார்? இந்த தகராறு செய்திருக்கும்படியான, பாரம் தூக்கும் தொழிலாளர்கள் அனைவரையும் நான் குறை சொல்லவில்லை—சில சமூக விரோதிகள், காலாடிகள், மோசமான பேர்வழிகள் பங்கெடுத்திருக்கிறார்கள். ஆனால், அப்பேர்ப்பட்டவர்கள் இதில் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். அப்பேர்ப்பட்ட முறையிலே பேருந்துகளுக்கும், சேரன் போக்குவரத்துக்கும் நஷ்டத்தை விளைவித்திருக்கிறார்கள் சி.ஐ.டி.யு. என்றைக்கும் இப்படிப்பட்ட அக்கிரமங்களை ஏற்றுக் கொள்ளவில்லை; எதிர்த்திருக்கிறது. அந்த முறையில், இரவில் வீட்டிலே தூங்கிக் கொண்டிருந்த நஞ்சப்பன் என்ற சி.ஐ.டி.யூ. யூனியன் காரியதரிசியை போலீஸ்ஸ்டேஷனுக்கு கூட்டிக் கொண்டு வந்து, காட்டி, அதற்குப் பிறகு அவர் போலீஸ் அதிகாரிகளிடத்தில் இந்த 10, 12 தொழிலாளர்களை விடுங்கள், சமாதானப்படுத்துங்கள் என்று சொல்லியும் கேட்காமல் இருந்திருக்கிறார்கள். அதைப் போலீஸ் அதிகாரிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. மற்ற சங்கங்களைச் சேர்ந்தவர்களும் அதே இடத்திற்கு வந்ததற்குப் பிறகுதான் முடிவு செய்யலாம் என்று சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். அதேபோல் மற்ற சங்கத் தலைவர்கள் வந்த பின் சமாதானம் கூறி தொழிலாளிகளை கலைந்து போகச் செய்தார். நஞ்சப்பன் இல்லாவிடில் அங்கு துப்பாக்கி சூடு நடந்திருக்கும். அண்ணா தி.மு.க., தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் வேலை செய்யத் தயார் என்றும், சி.ஐ.டி.யூ. தயாரில்லை என்றும் சங்கங்களுக்குள்ளே சண்டை மூட்டுகின்ற மோசமான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். இத்தகைய அநியாயங்களை எல்லாம், பூராவையும்

அமைச்சர் அவர்கள் தெரிந்திருக்க முடியாது. அவர்கள் இங்கே இருக்கிறார்கள். நானும் இங்கே இருந்தேன். ஆனால், ன்நா கோவை சென்று இந்த விஷயங்களை யெல்லாம் தெரிந்து வந்திருக்கிறேன். ஆகவே, இந்த விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக நாம் நடந்து கொள்ள வேண்டும். ஏற்கனவே இந்தச்சேரன் ஸ்தாபனத்திலிருந்து ஒரு தொழிலாளிமீது பெட்ரோல் ஊற்றி, எரித்திருக்கிறார்கள்முன்பு..........

* மாண்புமிகு பேரவைத் தலைவர்: உணர்ச்சி வசப்படாதீர்கள். கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கு. ரமணி: இந்த அறிக்கையிலே உள்ளதைப் பற்றி இரண்டொரு விளக்கங்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் உண்மையை அறியாமல், இப்படிப் பட்ட ஒரு அறிக்கையிலெ கையெழுத்து போட்டது தான், எனக்கிருக்கின்ற வருத்தம் எல்லாம். இப்படி அறிக்கையைத் தயாரிக்கின்ற மற்ற அமைச்சர்களுக்கு இது எதிர் காலத்தில் கண் திறப்பாக இருக்க வேண்டும் என்பது என் கருத்து. ஆகவே, இந்த நேரத்திலே உண்மையை வெளியே கொண்டு வர, சி.ஐ.டி.யூ. சங்கம், மற்றச் சங்கங்கள் இருக்கின்றன. அவைகள் உண்மையை நிரூபிக்கத் தயாராக இருக்கின்றன. இதிலே போலீஸ் விசாரணையை ஏற்றுக் கொள்ள நான் தயார் இல்லை, இந்தத் தொழிலிலெ சம்பந்தப்பட்ட சங்கங்கள், கலெக்டர், மற்ற அதிகாரிகள், எம்.டீ. ஆகியோர்களை கூப்பிட்டு, அவர்களோடு கலந்து பேசி முடிவு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். என்று நான் சென்னையிலிருந்து டெலிபோனில் கூறினேன். போலீஸ் அதிகாரிகள் அதற்கு இணங்க முன் வரவில்லை. இந்த நிலையில் அங்கே 36 மோட்டார் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதிலே 30 பேர்கள் சி.ஐ.டி.யூ.வை சார்ந்தவர்கள் என்று குறிப்பிட்டுள்ளன. 6 பேர்கள்பற்றிஅதிலே குறிப்பிட வில்லை. இப்படி இதிலே இன்னும் பல பிரச்னைகள் இருக்கின்றன. அவைகளிலே உண்மைகளைக் கண்டு பிடிக்க, கலகங்களைத் தடுக்க, பேருந்துகள் அழிக்கப்படுவதை நிறுத்த, தொழிலாளர்கள்மீது களங்கம் கற்பிக்கப்பட்டதைக் துடைக்க ஒரு விசாரணையை அமைச்சர் அவர்கள் நடத்துவதற்கு பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டும், அத்தகைய விசாரணை நல்லது என்பதையும் அதில் சி.ஐ.டி.யூ. உண்மைகளை நிரூபிக்கத் தயார் என்றும்நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இங்கே யார் மீதும் குறை சொல்ல வேண்டுமென்றோ, குற்றம் சுமத்த வேண்டுமென்றோ அந்த நோக்கத்தோடு நானும் கையெழுத் திடவில்லை; இங்கே அறிக்கை கொடுக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே அறிக்கை வந்திருக்கிற விவரம் எல்லாம்,

கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்தவுடனே அவர்களுக்கு அன்றைய தினம் என்னென்ன தகவல் கிடைத்ததோ அதைத்தொகுத்து அனுப்பியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, 3.75 இலட்சம் ரூபாய் நஷ்டம் என்று சொன்னார்கள். பேருந்தை உடைத்ததால் மட்டு மல்ல; பேருந்து அன்றைய தினம் இயங்காமல் இருந்தது, உடைக்கப்பட்டது எல்லாம் சேர்த்து போக்குவரத்து கழகத் திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 50 ஆயிரம் மதிப் புள்ள கைவண்டித் தொழிலாளர்களுடைய வண்டிகள் அங்கே உடைக்கப்பட்டிருக்கின்றன. எனவே எங்களுக்கு இருக்கிற பிரச் சினை எல்லாம் இரண்டு பக்கமும் தொழிலாளர் களுடைய வாழ்க்கை இதில் பாதிக்கக்கூடிய அளவிற்கு சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதை கவனித்து தான் நீங்கள் சொல்லியதற்கேற்ப யார்மீதாவது பழியை போட்டு விட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பவதற்காக அல்ல. அங்கே இருப்பவர்கள் இரண்டு சாராரும் தொழிலாளர்கள்; எந்த கட்சியைச் சேர்ந்தவர்களும் இருப்பார்கள்; இரண்டு பக்கமும் பாதகம் இல்லாமல், உண்மை நிலையை அறிந்து தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப் போம் என்பதிலே கருத்துவேறுபாடு இல்லை. ஆனால் அங்கே யாராவது பழி சொல்லி ஒரு சங்கத்தை மட்டும் விலக்கி வைத்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு நிச்சயமாக இல்லை. நான் ஏற்கனவே சொல்லியபடி அவர்கள் நஞ்சப்பன் அவர்கள் இதில் கலந்து கொண்டார்களா? என்ன சொன்னார் என்பதைப் பற்றி நேரடியாக விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதிலே தயக்கம் இல்லை. அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு உங்களுக்கு நிச்சயமாக தவறு இல்லாத வகையில், யார் தவறு செய்திருந்தாலும் அவர்மீது நடவடிக்கை எடு பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அப்படிப்பட்ட நட வடிக்கை எடுப்பதால் தான் எதிர்காலத்தில் இனிமேல் இப்படிப் பட்ட சூழ்நிலைகள் வராமல் இருக்கும். தொழிலாளர்கள் சரி யாக நடந்து கொள்ளவேண்டும் என்ற பயமும், உணர்வும் வரும் என்பதை மறந்து விடக்கூடாது.

6. அரசினர் சட்டமுன்வடிவு.

வன (திருத்த) சட்ட முன்வடிவு, 981.

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்: தலைவர் அவர் களே, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வன (திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. வரவு, செலவுத் திட்டம் 1981–82—வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 1— நில வரித் துறை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்

''நில வரித் துறை பற்றி 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 6,16,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''

திரு. செ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள நஞ்சை நிலங்களுக்குள்ள நிலவரியை ரத்து செய்ய வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 1 நில வரித்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,16,57,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

திரு. என். எஸ். வி. சித்தன் :

"Sir, to discuss need to abolish all taxes on lands in this State I move That the allotment of Rs. 6,16,57,000 under Demand No. 1 Land Revenue be reduced by Rs. 1000".

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, சிறிய விவசாயிகளின் நிலத்தீர்வை ரத்துச் செய்யப்படாமல் இருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,16,57,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

திரு. பெ. உத்திராபதி : தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் என்று அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டவர்களுக்கு நிலவரியை ரத்து செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 1-நிலவரித்துறைஎன்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,16,57,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

(ஆ) கோரிக்கை எண். 41-இயற்கையின் சீற்றங்கள் குறித்து துயர்தணிப்பு வரவு-செலவுத் திட்டம் 1981-82.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகின்றேன்

மானியக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,13,000-க் மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

திரு. கு. பாலன் : தலைவர் அவர்களே, இன்னும் பல கிராமங்களில் இயற்கை சீற்றங்களிலிருக்கிற மக்களைக் காப்பாற்ற சரியான நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு இராமநாதபுரத்திற்கும், குறிப்பாக கங்கை கொண்டான் காளையார்கோவில் ஒன்றியத்திற்கும் அதிகமான அளவில் குடிநீருக்கும் பாசன வசதிகளுக்கும் செய்து தரவேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

(இ) கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 21,46,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

(ஆ) கோரிக்கை எண் 41– இயற்கையின் சீற்றங்கள் குறித்து துயர்தணிப்பு

வரவு—செலவுத் திட்டம், 1981-82

[முற்பகல் 10–50]

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 21,46,14,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

திரு. எஸ். இராசாராமன் : தலைவர் அவர்களே,

to discuss the need to set up a Compensation and Assignment Commission with a statutory status and unconnected with the Government I move "That the allotment of Rs. 21,46,14,000 under Demand No. 46 Compensation and Assignments be reduced by Rs. 100.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,46,14,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. தி.கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, பேருந்து லாரி, கார் முதலியவற்றில் அடிபட்டு இறக்கும் நபர்களுக்கு தற்போது கொடுக்கப்படும் தொகையை இரட்டிப்பாகக் கொடுப்பது பற்றி விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,46,14,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் வைக்கப் படுகின்றன. அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்புகிறார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகள்மீது அரசினுடைய கொள்கைக் குறிப்புகள் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது அவைகளையெல்லாம் நான் இங்கே படித்ததாக குறிப்புகளிலே ஏற்றிக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

135-ம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

(ஆ) கோரிக்கை எண் 41- இயற்கையின் சீற்றங்கள் குறித்து துயர்தணிப்பு

திரு. மு.ப. முனுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே இந்த நிதிநிலை அறிக்கையை அளிக்கிறபோது மாண்புமிகு, நிதியமைச்சர் அவர்கள் செல்வ வளம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இயற்கையின் சீற்றத்தால் தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கிற நட்டத்தைப் பார்க்கிறபோது நாம் உற்பத்தி செய்கிற பொருள் அதிகமாக விளைந்தாலும் விவசாயிகளுக்கு லாபத்தைக் கொடுத்திருக்கிறதா என்றால் இல்லை. விவசாயிகளுக்கு என்ன என்ன நன்மைகளைச் செய்திருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டே வருகிறார்கள். இன்றைக்கு ஏரிகளிலே தண்ணீர் இல்லை நீர்த்தேக்கங்களிலே தண்ணீர் இல்லை, குளங்களிலே தண்ணீர் இல்லை, இன்னும் சொல்லப்போனால் பொதுமக்களுக்குக் குடிக்கக்கூட தண்ணீர் இல்லை. இந்த நிலைமைகளை எல்லாம் பார்க்கிறபோது பொதுமக்களுக்கு குடிப்பதற்காக குடிநீர் கொடுப்பதற்காக கிணறுகளை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பொதுமக்களின் சௌகரியத்தைப் பார்க்கிறபோது வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள மக்களைப் பார்க்கிறபோது பொருளாதாரத்தில் முன்னேறி இருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். அந்த அடிப்படையிலே இங்கே வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொல்லி இருப்பதைப் பார்க்கிறபோது விவசாயிகளுக்கு நிலத் தீர்வை தள்ளுபடிசெய்யப்படவேண்டும். விவசாயிகளுக்கு தண்ணீர் தீர்வையை தள்ளுபடி செய்யவேண்டும். அப்படி ஏதாவது செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. இயற்கையின் சீற்றத்தாலே பாதிக்கப்பட்டிருக்கிறபோது அரசும் சீற்றமாக நடந்து கொள்ளாமல் இருக்க வேண்டும். அப்படிப் பார்க்கிறபோது பொதுமக்களின் நிலையை உயர்த்தியிருக்க வேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையிலே பார்க்கிறபோது பொதுமக்கள் நிலை உயரவில்லை என்பதைத்தான் பார்க்க முடிகிறது. பாலக்கோடு வட்டத்திலே தண்ணீர் பிரச்சினையைப் பார்க்கிறபோது வட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் எல்லாம் விவசாயிகள் ஒரு நாள் இரண்டு நாள் தண்ணீர் பாய்ச்சினாலும்கூட அதற்காக தண்ணீர் தீர்வை கட்டியே ஆகவேண்டுமென்று சொல்கிறார்கள், கட்டாயப்படுத்துகிறார்கள். அங்கே அந்த நிலத்திலே ஏதாவது விளைச்சல் ஏற்பட்டு இருக்கிறதா என்பதைக் கேட்டுப் பாருங்கள் தெரியும். விவசாயிகளுக்கு உணவு கிடைக்கவில்லை. விவசாயக் கூலியாக இருக்கின்ற மக்களுக்கும் உணவு கிடைக்கவில்லை வறட்சி நிலைமை தமிழகம் முழுவதும் இருக்கிறது. ஒரு சில கிராமங்களை மட்டும் பார்வையிட்டுவிட்டு பார்வையிட்ட பகுதிதான் வறட்சிப் பகுதி என்று அறிவித்திருக்கிறார்கள் தர்மபுரி மாவட்டத்திலே வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அமைச்சரோ அல்லது முதலமைச்சரோ சென்றுபார்வை செய்த இடங்களைத்தான் அறிவித்திருக்கிறார்கள் இன்றைக்கு தமிழ் நாட்டிலே அரை மாநிலம் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்பதை அரசே ஒத்துக் கொண்டிருக்கிறது. அப்படி பார்க்கிறபோது தர்மபுரிமாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டம், இப்போது அது வறட்சியிலேயும் இன்னும் பின்தங்கியதாக இருக்கிறது.

இப்படிப்பட்ட பின்தங்கிய மாவட்டத்தைப் பார்க்கும் பொழுது பூரணமாக எல்லா விலக்குகளையும் அளிக்க வேண்டும்.

கடன் வசூலிப்பதைப் பூரணமாக நீக்க வேண்டும். நிலத்தில் விளைந்திருந்தால்தானே விவசாயிகளால் திருப்பிக் கட்ட முடியும் விளையவில்லை என்றால் என்ன செய்ய முடியும்? போட்ட வித்தே இல்லை. அப்படிப்பட்ட நிலைமை இருக்கும்பொழுது கடனை ரத்து செய்ய வேண்டுமென்பதில் எவ்வளவு முழுமையாக நியாயம் இருக்கிறது என்பதை இந்த அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த வறட்சியின் காரணமாக அடுத்த ஆண்டு வரையில் அந்த விவசாயிகளுக்கு எந்தவிதமான இலாபமும் கிடைக்காது. எனவே, அப்படிப்பட்ட விவசாயிகளின் நலனை இந்த அரசு முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட அடிப்படையிலே செய்தால்தான் நாம் இந்த விவசாயிகளினுடைய நலனைக் காப்பாற்ற முன்வந்தவர்களாக இருப்போம்.

மாண்புமிகு பேரவை மற்றுத்தலைவர் தலைமை

தற்காலிகப் பட்டா என்று ஒரு சிலயிடங்களில் வழங்கப்பட்டிருக்கிறது. குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டதற்காகத் தற்காலிகப் பட்டா என்று வழங்கப்பட்டிருக்கிறது. கோட்டாட்சித் தலைவர் அதைக் கூட ரத்து செய்திருக்கிறார். வழங்கப்பட்ட நிலப்பட்டா தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. விழுப்புரம் தாலூக்காவைச் சேர்ந்த கப்பியாம்புலியூர் என்ற இடத்தில் உள்ள அரிசனக் காலனியில் உள்ள நான்கு பேர்களின் அதாவது கோவிந்தசாமி, ஏகாம்பரம், மலையன், கண்ணன் என்ற நான்கு பேர்களின் பட்டா அது.

திரு. ம. கண்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற அப்படிப்பட்ட ஊரே விழுப்புரம் தாலூக்காவில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ப. முனுசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நான் நிரூபித்துக் காட்டுகிறேன். போலித்தனம் செய்வது சரியல்ல: இவ்வாறு குறுக்கிடுவது சரியல்ல. நிரூபித்துக் காட்டுகின்ற பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். கப்பியாம்புலியூர் என்ற இடம் இருப்பதை நான் ஊர்ஜிதப்படுத்துகிறேன்.

இப்படித் தற்காலிகப் பட்டா என்று ஏன் வழங்க வேண்டும்? அவர்கள் தேசிய நலனை ஏற்று, குடும்பக் கட்டுப்பாட்டைச் செய்து கொள்ளும் பொழுது இது கூடவா தகுதியிழக்கின்ற அளவிற்குச் செய்ய வேண்டும்? இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கக்கூடாது. தற்காலிகத் தலைவரவர்கள் பார்க்க வேண்டுமென்றால் என்னுடைய கையிலே வைத்திருக்கின்ற அந்தப் பட்டாவைக் காட்டுகிறேன்; அதைக் கொடுக்கவும் தயாராக இருக்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட இயற்கைச் சீற்றத்தைப் பார்க்கும் பொழுது ஏதோ 50 சதவீதம், 25 சதவீதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் வியாபாரிகளுக்கு ஏற்படுத்

தப்பட்டது மாதிரி 50 சதவீதம், 20 சதவீதம் என்று விவசாயிகளுக்குக் கிடையாது. விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டால் அது பூரண இழப்பாக இருக்கிறதே தவிர பாதி அளவு, முக்கால் அளவு எனறு இருப்பதில்லை.

சர்க்கரை ஆலையைப் பொறுத்த வரையில் கரும்பு கிடைக்க வேண்டுமென்பதால் கரும்பை மட்டும் காப்பாற்றிக் கொடுத்து இருக்கிறார்கள். அதைப் பார்க்கும் பொழுது முன்னேற்றம் அடைந்து விட்டார்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்த வாய்ப்பை நல்கியிருக்கிறார்கள். அதுவுமல்லாமல் சர்க்கரை ஆலைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கும். அப்படிப்பட்ட நிலைமைகளைப் பார்க்கும் பொழுது விவசாயிகளுக்குப் பூரண கடன்களையும் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதில் சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்று பார்ப்பது சரியாகாது. அவரவர்களுக்குத் தகுந்த மாதிரி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியும். பெரிய விவசாயிகள், விவசாய வருமான வரி செலுத்தக் கூடியவர்கள் பணத்தைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டு பெரிய விவசாயிகளிடம் கடன்களை வசூல் செய்வதும், சிறிய விவசாயிகளுக்கு ரத்து செய்வதும் சரியல்ல என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் எந்த விவசாயிக்கும் இந்த ஆண்டு எந்தவிதமான இலாபமும் கிடைக்கவில்லை. அப்படி அவர்களுக்கு இலாபம் கிடைத்திருக்குமேயானால் நாம் இதை எடுத்துச் சொல்லக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்காது.

[முற்பகல் 11-00]

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாலை 7-30 மணிக்கு செங்கத்தைத் தாண்டி, தர்மபுரி மாவட்டத்தை 9-30 மணிக்குத் தாண்டியிருக்கிறார்கள். அவர்கள் எந்த அளவு வறட்சியைப் பார்த்திருக்கிறார்கள் என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சரை நான் ஏதோ எக்களிப்பு செய்வதாக எடுத்துக் கொள்ளக் கூடாது சட்டமன்றம். நான் காலையிலேயிருந்து காத்துக் கொண்டிருந்தேன். நமது முதலமைச்சர் வருவார், நமது பகுதியிலே இருக்கிற இயற்கைச் சீற்றத்தினுடைய நஷ்டத்தை எடுத்துச் சொல்லலாம் என்று. ஆனால் கிடைக்கவில்லை. இந்த நிலைமை ஏன் என்று எண்ணிப் பார்க்கும் போது, நாங்கள் எதிர்க் கட்சிக்காரர்கள் என்று நினைத்துக் கொண்டாரோ என்றுதான் எனக்குச் சந்தேகம். அந்த அடிப்படையிலே அவர்கள் நடந்து கொண்டார்கள். அப்படிப்பட்ட நிலையை நீக்க வேண்டுமென்றால், தர்மபுரி மாவட்டத்தை நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர், அவருடைய வாயா

திரு. மு. ப. முனுசாமி

லேயே முழுமையான வறட்சி மாவட்டம் என்று அறிவித்து, அந்த மாவட்டத்திற்குத் தேவையான, முழுமையான அளவு ஏதோ ரூ. 3,13,000 கேட்டிருக்கிறார் ஒதுக்க வேண்டும். இயற்கைச் சீற்றத்தினுடைய கணக்கைச் சரியான முறையிலே எடுத்துக் கொண்டு, இந்தத் தர்மபுரி மாவட்டம் மட்டுமல்லாமல், தமிழ் நாட்டிலே ஏற்பட்டிருக்கிற இழப்புகளுக்கு நம்மால் முடிந்தது இந்தத் தொகைகள் என்றாலும் கூட, நம்முடைய பேரவையினுடைய அனுமதியோடு மத்திய சர்க்காரை நாடி, பல கோடிகள் பெற்று, இந்த இயற்கைச் சீற்றத்தினுடைய நஷ்டத்தைச் சீர் கட்ட வேண்டுமென்றுகேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகுபேரவை மாற்று தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். வருவாய்த் துறை மூலமாக, கிராமப்புற நிர்வாகத்தைச் சீர் அமைக்கின்ற வகையிலே, நிர்வாகத்தின் அடிமட்டத்திலே இருக்கிற கிராம நிர்வாகத்தைச் சீரமைக்கின்ற வகையிலே, முழுநேர ஊழியர்களை நியமிக்கின்ற பணியினை, அதே போல், தனித் தண்ணீர்த் தீர்வை, தனித் தஞ்சைத் தீர்வை, இவைகளை ரத்து செய்கின்ற வகையிலே,செய்திருக்கின்ற அறிவிப்புகளைப்பாராட்டி பினாமி நிலங்களை ஒழிப்பதற்காக, இதே மன்றத்திலே இயற்றப் பட்ட சட்டம் பற்றி மானியக் கோரிக்கையிலே தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த பினாமி நிலங்களை ஒழித்து, கிராமப்புறத்திலேயிருக்கிற ஏழை, எளிய மக்களுக்கு வழங்க வேண்டுமென்றகொள்கையை இந்த மன்றத்திலே அனைத்துத் தரப்பிலேயும் பாராட்டியதோடு அல்லாமல், இந்தியத்துணைக் கண்டத்திலேயிருக்கிற அத்தனை அரசியல் கட்சிகளும் அதை விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தார்கள். கிராம புறத்தை மாற்றியமைக்கின்ற கிராமத் முன்னேற்றத்தினுடைய ஜீவகீதமே நில உச்ச வரம்பு சட்டத்தை அமுல் நடத்துவதிலே இருக்கிறதுஎன்று நேரு அவர்கள் குறிப்பிட்டார்கள். நில உச்ச வரம்பு சட்டங்களை நாம் சரியாக அமுல் படுத்தவில்லை. அவைகளை அமுல்படுத்த நாம் தவறினோம் என்றால் மக்கள் சட்டத்தைத் தங்கள் கையிலே எடுத்துக் கொள்வார்கள் என்று 1976 ஆம் ஆண்டு உலக வர்த்தக மகா நாட்டிலே, இன்றைய பிரதமர் இந்திதகாந்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏன் இதே மன்றத்திலேஇன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் கூடக்குறிப்பிட்கள் 1961 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டச் சட்டம் நல்ல விளம்பரத்திற்குப் பிறகு கொண்டு வரப்பட்டச் சட்டம் அதனாலே, நிலக் குபேரர்கள் அந்தச் சட்டத்தை வளைத்து விட்டார்கள். சட்டத்தை வளைத்து விட்டு, தாங்கள் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டார்கள். அந்நிலையிலே இருக்கும்போது, மிகச் சிறப்பான வகையிலே, 1958 ஆம் ஆண்டிலிருந்து, 1960 ஆம் ஆண்டு வரையிலே பிரமியாக்க

வேடசாந்தூர் திரு. வீ. பி. பாலசுப்பிரமணியன்

பட்டிருக்கிற நிலங்களை வெளிக் கொணர்ந்து, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற அத்தனை பெருந் தலைவர்களும் பாராட்டுகின்ற வகையிலே, கிராமத்திலேயிருக்கிற நிலமற்ற ஏழைகளுக்கு, அந்த நிலங்கள் விநியோகிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையைச் சட்டமாக்குகின்ற வகையிலே சட்டம் கொண்டு வந்திருப்பதிலேகூட, மிகச் சிறப்பான அம்சமாக மக்கள் கமிட்டி என்று சட்டபூர்வமாக அமைக்க வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அது சர்வரோக நிவாரணியாக, தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழி வகுக்கின்ற வகையிலே போடப்படுகின்ற சட்டத்திலே, அந்தச் சட்டத்தை அமுல் நடத்த மக்கள் கமிட்டி அமைக்கப்படும் என்று உள்ளது. அந்த மக்கள் கமிட்டி சட்டபூர்வமான உரிமைகள் பெற்றிருக்கும் என்ற வகையிலே, இயற்றப்பட்டுள்ள பினாமி நிலம் ஒழிப்புச் சட்டம், இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டுள்ளது. அதிலே சர்வோதய ஊழியர்கள் இருப்பார்கள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இருப்பார்கள். சமூக நல ஊழியர்கள் இருப்பார்கள், அரசு அதிகாரிகள் இருப்பார்கள்; அவர்கள் எல்லாம் அந்த நிலங்கள் எப்படிப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், அந்த நிலங்கள் பினாமியாக எப்படி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டறியும் பொறுப்பு வாய்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்ற வகையிலே, அந்தப் பொறுப்பு, மக்கள் குழுவிடம் ஒப்படைக்கின்ற வகையிலே ஒரு சர்வ ரோக நிவாரணியாக, தவறுகள் நடவாத வண்ணம், அந்தச் சட்டம் அமுல் நடத்தப்பட வேண்டுமென்ற தூய்மையான நோக்கத்திலே, அந்தச் சட்டம் இந்த மன்றத்திலே நிறைவேற்றப் பட்டும் கூட, இன்னும் அதற்கான ஒப்புதல் கொடுக்கப்பட வில்லையென்று இந்த மானியக் கோரிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருப்பது உண்மையிலே வருத்தத்திற்குரியது. மாமன்றம் மத்திய அரசு, ஜனாதிபதி அவர்கள், அதற்கு ஒப்புதல் அளிப்பதற்கு வற்புறுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குத்தகை பாக்கி தள்ளுபடி செய்கின்ற சட்டம் பற்றி மானியக் கோரிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். 1977 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டம் மட்டுமல்லாமல் ஒரு குறிப்பிட்ட காலத்திலே, 1973 ஆரம்பத்திலே சட்டம் இயற்றி, 1973ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9 ஆம் தேதிக்குள் குத்தகைப்பாக்கியை ஓராண்டு கட்டினால் ரத்து செய்யப் படும் என்று அப்பொழுது இயற்றப்பட்டதனால், அன்றைய காலகட்டத்திலே குத்தகை விவசாயிகள் உண்மை யிலேயே பலன் அடையவில்லை. ஏழை, எளிய குத்தகை விவசாயிகளுக்கு, சுமார் ரூ. 2 கோடி அளவுக்குத்தான் குத்தகை பாக்கி தள்ளுபடி செய்யப்பட்டது, அன்றைய காலகட்டத்திலே. ஆனால், இப்பொழுது, 1973 ஆம் அண்டிலிருந்து, 1978 ஆம் ஆண்டு வரையிலேயிருக்கின்ற அந்தப் பாடுபடுகின்ற குத்தகை விவசாயிகள் பெற்றிருக்கின்ற குத்தகை பாக்கியில் ஐந்தில் ஒரு பகுதியைத்தான் 3 தவணைகளாக, 1982 ஜூன் வரையில் கட்டலாம்

என்கின்ற சட்டம், இந்த மன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிற வகையிலே ஏறத்தாழ ரூ.30 கோடி அளவிலே குத்தகை விவசாயிகள் நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கியை தள்ளுபடி செய்கின்ற வகையிலே ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

குத்தகை விவசாயிகளுக்குச் சலுகை அளிக்கின்ற வகையிலே இருக்கின்ற அந்தச் சட்டத்தை நான் பாராட்டுகிறேன். அதே போல 1969 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட குத்தகையாளர் பதிவுச் சட்டம் சம்பந்தமாக தஞ்சை, திருநெல்வேலி மாவட்டங்களுக்குத் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அவர்கள் பதிவு செய்கின்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மானியக் கோரிக்கை விளக்கக் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் ஒரு சில வார்த்தைகளைச் சொல் விரும்புகிறேன். 1969 ஆம் ஆண்டு குத்தகை உரிமையாளர்கள் பதிவதற்காகப் பிறப்பிக்கப்பட்ட சட்டத்திலே கொடுக்கப்பட்டிருந்த கால அவகாசம், குத்தகைதாரர்கள் பதியவேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்பட்ட அவகாசம் குறைவாக இருந்தது. ஆகவே அந்தக் கால அவகாசத்தை மீண்டும் ஒரு முறை நீட்டித்து அதிகாரிகளை ஆங்காங்கே அனுப்பி குத்தகைக்குப் போட்டுக் கொண்டிருப்பவர்கள் யார் என்பதைக் கண்டறியவேண்டும். பினாமி நிலங்களைக் கண்டுபிடிக்க மக்கள் கமிட்டி அமைத்து இந்தியத் துணைக்கண்டத்திலே சட்டம் போடுகின்றவர்களுக்கே வழி காட்டுகின்ற வகையிலே அவர்கள்தான் முடிவு செய்வார்கள் என்று சொன்னதைப் போல உண்மையிலேயே குத்தகை அனுபவிக்கின்றவர்கள் யார்எந்த அளவுக்குநிலத்தை அனுபவிக்கிறார்கள் என்கின்ற மக்கள் குழுவினை இந்த குத்தகை உரிமையாளர்கள் சட்டத்தை குத்தகையாளர்களாகப் பதிவு செய்வதற்கான சட்டத்தை, அப்படிப்பட்ட ஒரு நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்று 1969 ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வரப்பட்டு காலக்கட்டங்களில் குத்தகையை பதியவேண்டும் என்று தாசில்தார்களிடம் கொடுக்கப்பட்ட மனுக்கள் கூட இன்னும் பைசல் செய்யப்படாமல் இருக்கின்ற காரணத்தை ஒட்டி, மேலும் இந்தக் குத்தகை உரிமையை நிர்ணயிக்கின்ற, அதைப்பற்றி விசாரிக்கின்ற அதிகாரத்தை, வசூலிக்கின்ற அதிகாரத்தை தாசில்தார்களிடம் இருந்து சிவில் நீதிமன்றங்களுக்கு மாற்றுவதை அரசு பரிசீலிக்கவேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், 100 கோடி கடன் பெற்றிருந்தால், அந்தக் கடன் கொடுத்தது உண்மைதானா அந்தக் கடனை எப்படி வசூல் செய்வது என்பதைப் பற்றிக் கூடி முடிவு செய்வது குறைந்த பட்சம் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கேடருக்கு குறையாமல் விசாரிக்கவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. அதேபோல 20 ரூபாய்க்கு மேற்பட்ட வீட்டு வாடகைப் பிரச்சினையை விசாரிக்கவேண்டும் என்றால் குறைந்த பட்சம் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கேடருக்கு குறையாத ஒரு சிவில் துறை அதிகாரி விசாரிக்கவேண்டும் என்று இருக்கிறது. இது குறித்து பல்வேறு

[வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்]

பட்ட உயர்நீதி மன்றங்களிலே கூட சுட்டிகாட்டப்பட்டிருக்கிறது. ஆகவே அரசு இவைகளைப் பரிசீலித்து சிவில் நீதி மன்றங்களிலே இவைகளை விசாரிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால், குத்தகை பதிவிலே, குத்தகை உரிமையை அனுபவிப்பதகற்காக, அந்தப் புனிதமான நோக்கத்திற்காக, 1969 ஆம் ஆண்டு சட்டத்திலே சொல்லி இருந்தாலும், அந்தப் பதிவு சில நேரங்களிலே தவறான நோக்கத்திற்குக் கூட பயன்படுத்தப்படுகின்றது. ஏனென்றால் சில சிவில் வழக்குகளில் இதிலே கிடைக்கின்ற உரிமைகளை முறையிட்டு அடைவதற்குக் கூட குத்தகையை உருவாக்கிவிடுகிறார்கள். அதேபோல மார்ட்கேஜ், யுசுபிரக்சுவஸ் மார்ட்கேஜ், ஈட்டுக்கு 5 ஆயிரம் கடன் வங்கிக் கொண்டு, ஒருவன் ஈட்டுக்கு வைத்திருக்கிறான் என்றால் அந்த 5 ஆயிரம் கடனைக் கட்டிவிட்டு அந்த நிலத்தை அனுபவிக்க முடியாத நிலை. 5,000 ரூபாய் கடனைக் கட்ட அந்த ஏழை தயாராகிவிட்டால் அந்த ஈடு அந்த மார்ட்கேஜ் எழுதி வாங்கியவர், இன்னொருவருக்கு, மூன்றாமவருக்கு குத்த தகை எழுதி வைத்துவிட்டால் கூட, இந்தச் சட்டத்தின்படி அவர் அந்த நிலத்தை 200 ரூபாய் குத்தகை என்றால் கூட, அந்தக் குத்தகை சரியாக கட்டுகின்ற காலம் வரையில் அவர் அனுபவிக்க முடியும் என்று இருக்கிறது.

அதேபோல சில விதிவிலக்குகளை இந்தச் சட்டத்திலே கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு விதவை தன் குழந்தை சிறு பையனாக இருக்கும்போது அந்த நிலத்தைக் குத்தகைக்கு விடுகிறாள். அந்தப் பையன் மேஜராகி, 20 வயதைக் கடந்த பிறகுகூட அந்த நிலத்தைத் தன் குடும்பத்துக்காக அந்தப் பையன் எடுக்கவேண்டும் என்றால் அதற்கு 1969 ஆம் ஆண்டு சட்டத்திலே வழி இல்லை. அதேபோல விதவைகள், தானே விவசாயம் செய்ய முன்வருகிறவர்கள், அப்படிப்பட்டவர்கள் குத்தகைக்கு விட்டு இருந்தால் கூட, அநத நிலத்தைத் திரும்பப் பெற்று விவசாயம் செய்யக்கூடிய நிலைமை உருவாக்கப்பட திருத்தங்கள் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

வருவாய்த் துறையைப் பொறுத்தமட்டில், தமிழகத்தில் சுமார் 12 லட்சம், தூசி புளியமரங்கள் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள்; தனிப்பட்டவர்கள் அனுபவித்துக் கொண்டு வருகின்றார்கள். 1970 ஆம் ஆண்டுக்கு முன்பு மிகவும் வசதி வாய்ந்தவர்கள், அந்த ஊரிலே முக்கியமானவர்கள், அரசுக்குச் சொந்தமான மரங்களைப் பட்டா போட்டு, பட்டா என்று கூடச் சொல்ல முடியாது, அந்தப் பலனை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். மிகப் பெரிய பணக்காரர்கள், நிலப்பிரபுக்கள் ஆங்காங்கு இருக்கின்ற அதிகாரிகளை வைத்துக் கொண்டு

[வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்]

அவர்கள் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் இந்த மரங்களுக்காக இந்த அரசுக்கு மரம் ஒன்றுக்கு 3 ரூபாய் கொடுக்கிறார்கள். நான் இந்த அரசிடம் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தயவு செய்து அந்த உரிமைகளை ரத்து செய்து, ஒன்று அவைகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கலாம் அல்லது ஒரு மரத்துக்கு 3 ரூபாய் கட்டிவிட்டு, மரம் ஒன்றுக்கு 500 அல்லது 1,000 ரூபாய் அளவில் பலன் அனுபவித்துக் கொண்டு வருகின்றவர்களைத் தடுத்து நிறுத்திவிட்டு, ஆங்காங்குள்ள அரிசன மக்கள் குடும்பங்களுக்கு அதை வழங்கலாம்.

ஒரு அரிசனக் குடும்பத்துக்கு ஒரு மரம் என்றால் அந்த குடும்பத்துக்கு 500 ரூபாய் வருமானம் வர வாய்ப்பு இருக்கிறது. 12 லட்சம் குடும்பங்களுக்கு குறைந்த பட்சம் ஆண்டு வருமானம் 1,000 ரூபாய் அளவுக்கு வர வாய்ப்பிருக்கிறது. தமிழகத்திலே இருக்கின்ற சில குறிப்பிட்டவர்கள், உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால்கூட ஒரு இடத்திலே 5,000 புளிய மரங்களை ஒருவர் அனுபவித்து வருகிறார்; கிட்டத்தட்ட 10 லட்சம் ரூபாய் அவர் சம்பாதித்தும், அரசுக்குக் கட்டுகின்ற பணம் மர வரி, 15,000 தான். அதையும் சரியாகக் கட்டுவதில்லை. இப்படித் தமிழகம் எங்கும் ஆங்காங்குள்ள கிராமங்களில் உள்ள 2 (சி) உரிமையை ரத்து செய்து விட்டு, ஊராட்சி ஒன்றியங்களில் வருமானத்தைப் பெருக்குகின்ற வகையில் இதைச் செய்தால் கிட்டத்தட்ட 15 அல்லது 20 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் வரும். அல்லது அப்படிப்பட்ட உரிமையை அரிசனக் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு அளித்தால் அந்தக் குடும்பங்கள் வாழ வழி வகுத்ததாக இருக்கும்; நமக்கும் பெருமை வரும். ஆகவே இதைக் குறித்து சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[முற்பகல் 11-10]

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நிலவரி, இயற்கையின் சீற்றம் ஆகிய இரண்டு தலைப்புகளின் கீழ் நடைபெறுகின்ற இந்த விவாதத்தில், இயற்கையின் சீற்றத்தாலும், நிலவரி வசூலினாலும் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்டு வந்துள்ள உறுப்பினர் என்கிற வகையில் இதில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலம் முழுவதும் இருந்து கிடைக்கும் மொத்த நிலவரி வசூல் $5\frac{1}{2}$ கோடியாகும். அதிலே ஏறத்தாழ $1\frac{1}{2}$ கோடி ரூபாய் தண்ணீர்த் தீர்வை என்கிற வகையில் வசூலிக்கப்படுகிறது. ஆகவே. நில வரி $3\frac{1}{2}$ கோடி ரூபாய் அளவிற்குத்தான் இருக்கிறது.

[திரு. உ. சுப்பிரமணியன்]

ஆயினும், இந்த 5 கோடி ரூபாயை வசூலிப்பதற்கு ஆகும் மொத்தச் செலவு 5 கோடி ரூபாய்க்கு மேல் ஆகிறது என்பது நீங்கள் அளித்துள்ள கணக்குகளில் இருந்து தெரிகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், மிகக் குறைந்த வருமானமாக இருந்த நேரத்தில், இது நிறைந்த வருமானமாகத் தெரிந்து இருக்கலாம். வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகக் கொண்டு வந்தார்கள், இந்தியா சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் ஆன பின்பும் இதை வைத்துக்கொண்டு இருப்பது அத்தியாவசியமான ஒன்றா என்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டியது மிக மிக அவசியம்.

1937-ம் ஆண்டில் முதன் முதலாக ராஜாஜி அவர்கள் பாபுலர் மினிஸ்டரி அமைத்தபோது காம்போசிட் ஸ்டேட் என்கிற வகையில் இருந்த சென்னை மாநிலத்தின் மொத்த வருமானம் 20 கோடி ரூபாய். அப்போது வேண்டுமானால் இந்த 5 கோடி ரூபாய் மொத்த வருமானத்தில் கால்பங்கு என்கிற அடிப்படையில் பெருந்தொகையாக இருக்கலாம். இன்றைக்கு 1000 கோடி அளவிற்கு வரவு-செலவுத் திட்டம் அளிக்கும் தமிழக அரசுக்கு இந்த 5 கோடி ரூபாய் என்பது 200-ல் ஒரு பங்குதான். இது மிகவும் அற்பமாக உள்ள தொகை. இதனை அறவே தள்ளுபடி செய்யவேண்டும். அப்படிச் செய்வதால் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் எந்தவிதமான பாதிப்பும் இருக்காது. அதே நேரத்தில் கோடிக்கணக்கான விவசாயிகள் தமிழக அரசுக்கும், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒரே இரவில் கிராம அதிகாரிகளைச் சுற்றி வளைத்துப் பிடித்து, அவர்கள் பதவியை ரத்து செய்து இருக்கிறார்கள். அதைப் பல பத்திரிக்கைகள் அதிர் அடி, கிராம அதிகாரி களுக்கு நண்டுபிடி, கிடிக்கிப் பிடி. ஒரே இரவில் வீட்டுக்குப் போகச் சொன்னார் நம்முடைய மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் என்றெல்லாம் போட்டார்கள். ஆகவே, அப்படிப்பட்ட வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இதையும் ரத்து செய்ய முன் வந்தால் கோடானு கோடி விவசாயப் பெருமக்கள் தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வார்கள். ஆகவே, இத்தகைய காரியத்தைச் செய்து அந்தக் கோடானு கோடி விவசாயி களின் நன்றிக்குப் பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் இதன் காரணமாக அரசுக்கும் வருவாய் குறையப் போவது இல்லை. விவசாயிகளிடத்திலும் நல்லபெயர் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதில் 5 கோடி வருமானம் வருகிறது என்று காரணம் காட்டலாம். இந்த 5 கோடி வருமானம் முழுமையாக விளைச்சல் ஏற்படாத நேரங்களில் மழை இன்மையால் பயிர்கள் விளையாத நேரங்களில் வஜா செய்யப்படுவதால் வசூல் செய்யப்பெறாமல் இருப்பதும் உண்டு.

[திரு. உ. சுப்பிரமணியன்]

மேலும், இவ்வளவு குறைந்த வருமானம் வரும் ஒரு இனத்திற்காக, அதை வசூல் செய்வதற்கு அதைவிட அதிகமான அளவு தொகை செலவழிக்க வேண்டியிருக்கிறது. மொத்தத்தில் பார்த்தால் இதில் இருந்து கிடைக்கும் வருமானம் அரசைத் திணற அடிக்கும் வகையில் இல்லை என்பதை நான் மறுபடியும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதிலே ஒரு ஆட்சேபணையை எழுப்பலாம். ரெவின்யூ இலாகா நிலவரி மட்டும்தானா வசூல் செய்கிறது? பல்வேறு வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறது என்று சொல்லலாம். அதற்காகத் தனி இலாகா ஏற்படுத்தி 27,90,00,000 ரூபாய் மொத்தச் செலவு ஏற்படுகிறது. ஆகவே, அந்த வேலைகளைச் செய்வதற்கு வேறு இலாக்காக்களை வைத்துக் கொள்ளலாம். ரெவின்யூ போர்டு என்று ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இருந்த அமைப்பையே நிர்வாக வசதிக்காக ரத்து செய்திருக்கிறீர்கள். ஆகவே, இதிலும் நல்ல அம்சம் இருந்தால் ஏன் செய்யக்கூடாது என்று கேட்கிறேன்.

அப்படியானால் செஸ், சர்சார்ஜ் போன்றவைகளை வசூல் செய்யமுடியுமா என்ற கேள்வி எழக் கூடும். இப்போது பஞ்சாயத்து யூனியன்கள் எந்தவிதமான வருவாயும் இல்லாமல் வேலையும் இல்லாமல் இருக்கின்றன. ஆசிரியர்களுக்குச் சம்பளம் போடும் வேலையைத்தான் அவர்கள் பார்த்து வருகிறார்கள். அவர்களைக் கொண்டே இந்த செஸ், தண்ணீர்த் தீர்வை போன்றவைகளை வசூல் செய்ய ஒரு மாற்று ஏற்பாடு செய்வதால் அரசுக்கு நஷ்டம் இல்லை; வேலையும் தடையில்லாமல் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படிச் செய்தால் நிலவுடைமைக்கு தஸ்தாவேஜ் முறை வைக்க முடியுமா என்று சொல்லலாம். அதில் ஒன்றும் சிரமம் இருக்காது. இப்போது இருப்பதுபோலவே வைத்துக் கொள்ளலாம். இப்போது நிலப் பட்டா கொடுத்திருக்கிறோம். அதிலும் சிக்கல் இருக்கிறது. அந்தக் காலத்தில் ஜமீன்தார் நிலத்தில் கூட்டுப் பட்டா இருந்து வந்ததைப்போல இப்போதும் இரண்டு, மூன்று பேர்களுக்குச் சேர்த்துப் பட்டா கொடுப்பதால், தனித்துச் செய்யாததால், ஒருவர் அந்த உரிமையைக்கொண்டு கடன் வாங்க, வேறு பலன் பெற வாய்ப்பு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, பட்டா வழங்கும்போது தனியாக ஒருவருக்கு, அவருக்குள்ள உடைமை, வரைபடங்களைக் கொடுத்து இந்தச் சிக்கலைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆண்டுதோறும் வறட்சிக்கு இலக்காகின்ற எங்கள் மாவட்டத்திலே இந்த தடவையும் இயற்கையின் சீற்றம் காரணமாக ஏற்பட்டிருக்கிற வறட்சி கடுமையாக இருக்கிறது என்பதை ஏற்கெனவே பல தடவைகள் இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறோம். அதன் காரணமாக மாண்புமிகு முதலமைச்சர்

[திரு. உ. சுப்பிரமணியன்]

அவர்களும், ரெவின்யூ அதிகாரிகளும் வந்து பார்த்தார்கள், மிக்க மகிழ்ச்சி. ஆனாலும் இன்னும் கொஞ்சம் ஆற அமர, சௌகரிய மாக எல்லாப் பகுதிகளையும் வந்து பார்த்திருந்தால் முழுமையாக அறிந்திருக்கமுடியும்.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் சிவகங்கை தாலுக்கா வுக்கு முதலமைச்சரும் வரவில்லை ; இப்போது மத்திய அரசி லிருந்து வந்த 'சென்ட்ரல் டீமும்' வரவில்லை. இந்த வறட்சி நிலையைப் பார்க்கும்போது கூடியவரையில் விரிவான அளவில் பார்த்தால்தான் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற உண்மை யான கஷ்டங்களை அவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

இப்போது அங்கே ஏற்பட்டிருக்கிற வறட்சியின் கடுமையை, கொடுமையை கடந்த நவம்பர் மாதத்திலே மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கலெக்டரிடம் சொல்லி, அதை அரசாங் கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லி யிருந்தோம். இருந்தாலும் அங்கே நிவாரண வேலைகள் தாமத மாக எடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறியும்போது வருத்தப் படாமல் இருக்க முடியவில்லை.

ஆறுவது நிதிக் கமிஷன் வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங் களால் ஏற்படும் விளைவுகளுக்கு நிவாரணம் அளிக்க 50 இலட்சம் ரூபாய் கண்டிப்பாக ஒதுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. 7-வது நிதிக் கமிஷன் கூட 8 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கி வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஏனென்றால் இடர்ப் பாடுகள் திடீரென்று ஏற்படும்போது உடனடியாக நிவாரணம் கொடுத்தால்தான் மக்களுக்கு நல்லமுறையில் சேவை செய்ய முடியும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், எங்கள் பகுதி யில் மழை பெய்து 6 மாதங்களுக்கு மேலாகியிருப்பதால், இப் போது கொடுக்கின்ற நிவாரணத்தின் மூலம் பல கண்மாய்களை வெட்ட முடியவில்லை. அதற்குக் காரணம், ஈரம் இல்லை, அதோடு தரை கடினமாக இருக்கிறது. நிதி ஒதுக்கீடு செய்வதை உடனடியாக, உரிய காலத்தில் செய்தால் முழுப் பலனும் கண் டிப்பாக மக்களுக்குக் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இனியும் காலதாமதம் ஏற்படாமல் உடனடியாக விரைவாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11—20]

நமது மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற கஷ்டத்தை எடுத்துச் சொல்லும்போது முதலிலே சாப்பாட்டுக்கு அரிசி கிடைக்கவில்லை என்ற நிலைமையைச் சொல்ல வேண்டி இருக்கின்றது. அரிசி தற்போது கூட்டுறவு சொசைட்டியின் மூலமாக வழங்க ஏற்பாடு

[திரு. உ. சுப்பிரமணியன்]

செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் பல்வேறு கஷ்டங்களை நாங்கள் இதுசம்பந்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். கூட்டுறவு அமைப்பில் பல சட்ட சிக்கல்கள் இருப்பதால் அவர்களால் உடனுக்குடன் அரிசி எடுத்து வினியோகம் செய்ய முடியாத காரணத்தால் மக்கள் பெரிதும் அவதிப்படுகிறார்கள். அரைகுறையாக விளைந்தால்கூட யாராவது ஒருவர் கொண்டுவந்து கொடுப்பார்கள். ஆனால் யாருக்குமே அந்தப் பகுதியில் விளையாத காரணத்தால் யாரும் கடனாகவோ அல்லது மற்ற வகைகளிலோ கொடுப்பதற்கு வரமுடியாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே மாற்று ஏற்பாட்டை அரசாங்கம் நிச்சயமாகச் செய்யவேண்டும். வாரவாரம் அவர்களுக்கு அரிசி கிடைக்கக்கூடிய அளவில் ஏற்பாடு செய்ய வேண்டும். ஏற்கெனவே நபர் ஒன்றுக்கு இரண்டு கிலோதான் கொடுக்கப்படுகின்றது. அதுவும் சரியாகக் கொடுக்கப்படவில்லை. குறைந்தது 4 கிலோவாவது கொடுக்கப்பட வேண்டும். இது குறித்து மாவட்ட வளர்ச்சி மன்றத்தில்கூடச் சொல்லி இருக்கிறோம். அதையும் அரசு கவனித்து உடனடியாக நிவாரண நடவடிக்கைகளை எடுத்து அன்றாடம் சாப்பாட்டுக்கு அரிசி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால் கூட்டுறவு சொசைட்டிகளிலே பல்வேறு காரணங்களைச் சொல்லித் தட்டிக் கழிக்கிறார்கள். ஆகவே, கட்டாயமாக அரிசி கிடைக்கும்படியான ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டும். சில இடங்களிலே சொசைட்டியில் தலைவர்கள் தர மறுக்கிறார்கள் என்று சொல்லப்படுகின்றது. அப்படி எல்லாம் மறுக்கின்ற நிலையிலே ஒரு கூட்டுறவு அமைப்பு இருக்குமேயானால் அந்தக் கூட்டுறவு அமைப்பையே நீக்கிவிட்டால் கூட எந்தவிதமான நஷ்டமும் மக்களுக்கும் இல்லை, அரசுக்கும் இல்லை. ஆகவே இதையெல்லாம் உடனடியாகக் கவனித்து நிவாரண வேலைகளைத் துரிதமாக எடுக்க வேண்டும்.

குடிநீருக்காக ஆழ்குழாய் கிணறுகள் அமைத்தல், தூர்ந்துபோன கிணறுகளை ஆழப்படுத்துதல் போன்ற வேலைகள் எல்லாம் நடைபெறுகின்றன. இந்த நேரத்தில் நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே 19 கிராமங்களை வறட்சிக்கு இலக்கான பகுதி அல்ல என்று ஒதுக்கி வைத்துவிட்டார்கள். அங்கு ஏதோ சிறிது விளைந்திருக்கின்றது, அதுவும் ஒரு சில கிராமங்களில்தான்; அதிலும் ஒரு சிலருக்கு மட்டும்தான். விளைந்திருக்கின்ற சூழ்நிலையில் நிவாரணப் பணியின் மூலமாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய வசதி வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்ற வகையில் நிலைமை ஏற்படக்கூடாது. ஆகவே வரி வஜா என்ற வகையிலே விதிவிலக்கு அளிக்கப்பட்டாலும் அவர்களுக்கு அந்தப் பலன் கிடைக்கவில்லை என்றாலும், நிரந்தரமாக அவர்களுக்குப் பாசன வசதி கூட செய்து கொடுக்க மறுக்கக்கூடாது. ஆகவே மறுபரிசீலனை செய்து அந்த 19 கிராமங்களையும் நிவாரண வேலைகளுக்கு மட்டுமாவது எடுத்துக் கொண்டு நிவாரண வேலைகளைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. உ. சுப்பிரமணியன்]

அடுத்து கிணறுகளைப் பொறுத்தவரையில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. குழாய்க் கிணறுகளில் கை பம்ப் வைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டினைப் பலமுறை சொல்லி இருக்கிறோம். அந்தக் குறை இன்னும் பல இடங்களில் நிவர்த்தி செய்யப்படவில்லை. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களிடம்கூட நான் ஏற்கெனவே ஒரு லிஸ்ட் கொடுத்திருக்கிறேன். இப்போதும் கூடச் சொல்கிறேன். எங்களுடைய ஒன்றியத்திலே சுமார் 10 மேல்நிலைத் தொட்டிகளும், தரை மட்டத் தொட்டிகளும் ரிப்பேராகிக் கிடக்கின்றன. பொது மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கிடைக்கும் நிலையில் இல்லை. இன்னும் சொல்ல வேண்டும் என்றால் ஒரு கிராமத்திலே பம்ப் செட்டையே காணோம் என்ற நிலையில் அது எங்கே சென்றது என்பதே தெரியவில்லை என்று சொல்கிறார்கள். இந்த நிலை ஏன் ஏற்படுகின்றது என்றால் மக்களின் அன்றாடத் தேவைக்கு அந்த பம்ப் செட் இயங்காத நிலையில் இருந்ததுதான் காரணம். அது பயன்பட்டுக்கொண்டிருந்தால் எப்போது போயிற்று, யாரால் போயிற்று என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். பல ஆண்டுகளாகவே அது உபயோகமற்ற நிலையில்இருந்ததன் காரணத்தால் தான் ஒரு முழு பம்ப் செட் களவு போனதைக் கூடக் கண்டு பிடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே குடிநீர்ப் பிரச்சினை உயிர்ப் பிரச்சினை. இது மக்களுக்கு மட்டுமல்ல, கால் நடைகளுக்கும் தேவை. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஊருணிகள் நிறைய இருக்கின்றன. அங்கே மக்கள்தான் தண்ணீர் குடிப்பதற்கு வசதி இருக்கின்றதே தவிர, கால்நடைகள் குடிப்பதற்கு அவற்றிலே என்ன செய்ய முடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த வாரத்தில் கலெக்டர் அவர்கள் மட்டத்திலே நடந்த கூட்டத்திலே திருவாடானை தாலுக்காவில் கிணறுகள் சரியான அளவில் இல்லை என்ற குற்றச்சாட்டை நீண்ட நெடுங்காலமாக சொல்லிக் கொண்டு வருகிறோம். ஆனால் அங்குள்ள அதிகாரிகள் பல ஆண்டுகளுக்கு முன்னால் கொடுக்கப்பட்ட கிரவுண்ட் வாட்டர் பற்றிய ரிப்போர்ட்டையே இப்போதும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கடல் ஓரத்தில் இத்தனை மைல் தூரத்தில் நல்ல தண்ணீர் கிடைக்காது என்ற 40 வருஷத்திற்கு முந்தைய, வெள்ளைக்காரன் காலத்திலே உள்ள ரிப்போர்ட்டையே இப்போதும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே பல இடங்களிலே ஆர்டிசான் ஊற்று தானாகவே ஏற்பட்டு அப்படி 14 இடங்களிலே குடி தண்ணீருக்கு வசதி செய்யப்பட்டிருப்பதோடு அது பாசனத்திற்கும் பயன்படக் கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது. ஆனால், அதிகாரிகள் பல வருடங்களுக்கு முன்பு சொல்லப்பட்ட கருத்தையே இப்போதும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மை கிடைக்காமல் போய் விடக்கூடாது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. உ. சுப்பிரமணியன்]

உங்களுக்கெல்லாம் தெரியும். திருச்செந்தூரிலே கடல் ஓரத்தில் நாழிக் கிணறு என்ற இடம் இருக்கிறது. கடல் ஓரத்தில் அலை வரும் இடத்தில் இருக்கிறது. அதில் அருமையான குடிதண்ணீர் இருக்கிறது. அதேபோல, இராமேஸ்வரம் கோவிலுக்கு அருகில்—அங்கே தீர்த்தம் நீராடச் செல்பவர்களுக்கு தெரியும்—அதிலே கடைசியாக நீராட வேண்டிய தீர்த்தம, கடலோரத்தில் அலை வரும் இடத்தில் கடலை ஒட்டியிருக்கிறது— அந்த தீர்த்தத்தின் தண்ணீர் வெகு அருமையாக இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட இடங்களே சாட்சியாக இருக்கும்போது, இன்னும் பழைய காலத்தில் சொல்லப்பட்ட டெக்னிகல் ரிப்போர்ட்டையே சொல்லிக் கொண்டு, ஒதுக்கப்பட்ட பகுதி நிரந்தரமாக ஒதுக்கப்பட்ட பகுதியாகவே இருக்க வேண்டும் என்று நினைப்பது தவறு. ஆகவே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களையும் எங்கள் தொகுதிக்கு வந்து, நிலைமையை அறிந்துக் கொண்டு அதிகமாக குடிதண்ணீர் கிடைக்கும் வகையில் வசதி வாய்ப்புகளை செய்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் ஊர் கண்மாய்களைப்பற்றிப் பல முறை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். தமிழ்நாட்டிலேயே அதிகப் படியான கண்மாய்கள் இருக்கக்கூடிய மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம் தான். இந்த மாவட்டத்திலே ஆண்டுக்கு 18-லிருந்து 20-இன்ச் வரைதான் மழை கிடைக்கிறது. ஆகவே, அந்த மழைத் தண்ணீரைத் தேக்கி வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் அந்தக் கண்மாய்கள் அங்கே பயன்படுத்தப்படு கின்றன. அந்தக் கண்மாய்களில் பல கண்மாய்கள் ஜமீன்தார்கள் காலத்திலிருந்தே சீர்செய்யப்படாதவையாக இருந்தன.

சுதந்திரம் வந்ததற்குப் பிறகு, ஜமீன்தார்கள் ஒழிப்புக்குப் பிறகு பல கண்மாய்கள் சீர் செய்யப்பட்டன என்றாலும் எந்த இனத்தின்கீழும் வராத சிலரமான கண்மாய்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் நீண்ட நெடுநாட்களாக மராமத்துச் செய்யப் படாமலேயே இருக்கின்றன. அவைகளை எல்லாம் இப்போது ஏற்று இந்தத் திட்டத்தின்கீழ் சீர் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே நான் சொன்னதைப் போல இந்தக் கண்மாய்களின் கரைகளைப் பலப்படுத்துகின்ற வேலைகளைத்தான் இப்போது செய்து வருகிறார்கள். அதை விடுத்து, அவற்றின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்த, ஆழப் படுத்த, கொள் அளவை அதிகரிக்கத்தான் ஏற்பாடுகள் செய்யப் பெற வேண்டும். அதற்காக கிரட்ஜ்கள் என்று சொல்லப்படும் பெரிய பெரிய இயந்திரங்களைக் கொண்டு வந்தாவது அந்தக் கண்மாய்களை ஆழப்படுத்தினால், மாவட்டத்தில் உள்ள தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க ஓரளவிற்கு வாய்ப்பு ஏற்படும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. உ. சுப்பிரமணியன்]

சென்ற கூட்டத்தில்கூட மாண்புமிகு உறுப்பினர்—சடலாடித் தொகுதி உறுப்பினர்—திரு. சத்தியமூர்த்தி அவர்கள், தம்முடைய தொகுதியில் உள்ள கண்மாய்களுக்கு இந்த மாதிரி செய்து ஆழப்படுத்த வேண்டும் என்று கேட்டபோது, அங்கே உள்ள என்ஜினியர்களும், மற்ற அதிகாரிகளும் ஏதோ தாவா சொல்லித் தட்டிக் கழிக்கிறார்களே தவிர பயன் ஏற்படவில்லை என்று சொன்னார்கள். அப்படி அவர்கள், அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்த பாடத்தை விட்டு ஒரு அங்குலம் கூட நகர மாட்டேன் என்று இன்னும் அந்தப் பழைய சூழ்நிலையிலேயே நின்றுக் கொண்டு பிடிவாதம் பிடிக்கிறார்கள். இப்படி அவர்கள் இருந்தால், பொதுமக்களின் கதி என்னவாகும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, ஆண்டுதோறும் வறட்சி வரக் கூடிய பகுதிகளுக்காவது, அந்தப் பழைய சட்டத் திட்டங்களையே பார்த்துக் கொண்டிராமல், டைனமிக் என்று சொல்லக் கூடிய அளவில், வெகு வேகமாகக் காரியங்களைச் செய்ய வேண்டும், தயங்கக் கூடாது என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர்.டி.எல்.ஏ. துறையில் 21—1—1981 ஆம் தேதியன்று ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். துளைக் கிணறுகள் தோண்டுதல், குடிநீர்க் குழாய்களை அமைத்தல், இன்னும் இது போன்ற சில பணிகளுக்காக 20 லட்சம், என்று ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் இந்த வேலைகள் துவக்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் இன்றைக்குச் சில நாட்களுக்கு முன்னால் தான் இந்தப் பணிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. நான் நினைக்கிறேன், அங்கே உள்ள—அதாவது வறட்சிப் பிரதேசங்களில் உள்ள கடுமையான, மோசமான சூழ்நிலையை இங்கே சென்னையில் உள்ளவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ என்றுதான் நினைக்கிறேன். ஏனென்றால் அதேபோலவே 12-3-1981 ஆம் தேதி நாளிட்ட சுற்றறிக்கையில் கூட, இணைப்புச் சாலைகள் அமைத்தல், பெரிய பாசனம், சிறிய பாசனம் மேம்படுத்துதல் போன்ற சில தலைப்புகளில் ஒவ்வொன்றிலும், 20 லட்சம், 30 லட்சம், 50 லட்சம் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் வேலைகள் இன்னும் துவங்கப்படவே இல்லை.

சரியான காலத்தில் அந்த வேலைகள் செய்யப்படாததின் காரணமாகத்தான், மக்களுக்கு அதன் முழுப் பயனும் கிடைக்கவில்லை என்று சொல்ல வேண்டும். எனவே செய்கிற காரியங்களை அந்தந்த நேரத்தில், உரிய காலத்தில் செய்தால் தான், நாம் செலவு செய்கிற பைசாக்கள் மக்களுடைய நன்மைக்காகச் சேரும் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. உ. சுப்பிரமணியன்]

ஏற்கெனவே அப்படிப்பட்ட வறட்சிப் பிரதேசங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் சென்றிருக்கிறார்கள். மற்ற அமைச்சர்கள் சென்றிருக்கிறார்கள். ரெவின்யூ அதிகாரிகளும், உயர்தர மற்றைய அதிகாரிகளும் சென்றிருக்கிறார்கள். சென்டிரலில் இருந்தும் சென்டிரல் டீம் என்ற பெயரில் சில முக்கிய அதிகாரிகளும் மற்றவர்களும் வந்தார்கள், பார்த்தார்கள், சென்றார்கள். ஜுலியர் சீசரைப்பற்றி ஒரு பழமொழி சொல்வார்கள் *Veni, Vidi, Vici,* என்று சொல்வார்கள். சென்றார்—பார்த்தார்—வென்றார் என்று சொல்வதைப் போல, செயல்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் இன்னும் வெல்லவில்லை. வெற்றி பெற வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. நீங்கள் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள், பொது மக்களுக்குப் பயன்பெறும் வகையில் வெற்றி பெற வேண்டும்—அதுதான் என்னுடைய கோரிக்கை. மீண்டும் அமைச்சர் பெருமக்கள் தங்களுக்கு ஓய்வு கிடைக்கும் காலத்தில் எங்களுடைய தொகுதிகளுக்கு வந்து பார்க்க வேண்டும். வறட்சிப் பணிகள் நடைபெறும் இடங்களுக்கு வந்து பார்க்க வேண்டும். இதுவரையில் நடந்த வேலைகளையும், அதனுடைய தன்மைகளையும் பார்க்க வேண்டும் என்று வலியுறுத்தி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஒன்றைச் சொன்னால், நீங்கள் வருத்தப்பட மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். அமைச்சர் பெருமக்களும், உயர்தர அதிகாரிகளும் வருகிற நேரத்தில் ரோட்டை ஒட்டியிருக்கிற இடத்தில், வேலைகள் நடைபெற வேண்டும் என்று சொல்லி, கண் துடைப்பாகச் சில இடங்களில் வேலைகள் நடைபெறுகின்றன. அப்படி இல்லாமல் உண்மையிலேயே பொதுமக்கள் பயன் பெறத் தக்க வகையில் அந்த நிவாரணப் பணிகள் நடைபெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

[முற்பகல் 11-30]

திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1981–82ஆம் ஆண்டிற்கான வருவாய்த் துறை மானிய கோரிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து, எனது கருத்துக்களை இங்கே கூற ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, புரட்சித் தலைவர் அரசு வருவாய்த் துறையிலே பல்வேறு நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, வருவாய் வாரியத்தை நீக்கியது, கிராமப்புற பகுதிநேர அதிகாரிகளை நீக்கியது, மற்றும் வறட்சிப் பணி ஆகியவைகள் ஆகும். குறிப்பாக, இந்தத் திட்டங்களிலே பகுதி நேர அதிகாரிகளை நீக்கியதைப் பற்றி நான் ஒரு சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். பொதுவாக, நீதிமன்றங்களிலே கூட நீதிபதிகள் வழக்கமாகக் கூறுவதுண்டு. கிராமங்களிலே முன்சீப்புகள், கிராம அதிகாரிகள் இல்லையென்றால் பல வழக்குகள் குறைந்துவிடும் என்று நகைச்சுவையாகக் கூட

[திரு. மே. அ. இராசகுமார்]

கூறுவார்கள். அந்த முறையிலே அவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட பதவிகளைச் சரியான முறையிலே பயன்படுத்தாமல், பகுதி நேர ஊழியர்கள் என்ற முறையிலே அந்தப் பதவியை பல்வேறு வகையிலும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கினார்கள். ஆகவே, குறிப்பாக, இந்தப் பதவிகளை ஒழித்ததைக் கிராம பகுதியிலே உள்ள மக்கள் பெருமகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு, ஆங்காங்கே கோவில்களிலே பொங்கல் வைத்து, கடா வெட்டி இதுபோன்ற விழாக்கள் எடுத்து, தங்கள் மகிழ்ச்சியை இந்த அரசுக்குத் தெரிவித்துள்ளார்கள்.

இது மாதிரி இந்த அரசு பல்வேறு திட்டங்களை, குறிப்பாக சென்ற காலங்களில் வெள்ளம் ஏற்பட்டபோது, எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளைப் பெரும்பாலும் பாராட்டினார்கள். இதுபோன்ற இந்த வறட்சி நிலைகுறித்து இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சிகளை மக்கள் இன்றைக்குப் பெரும்பாலும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே இந்த மானியக் கோரிக்கையின்மீது என் தொகுதியைப் பற்றிய சில கருத்துக்களை எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாகும். அங்கே குடிதண்ணீருக்கு கூட வசதியில்லாமல் மக்கள் 2, 3 மைல்கள் தூரத்திற்குச் சென்று குடிதண்ணீர் கொண்டு வருகின்ற மிகவும் கஷ்டமான சூழ்நிலை இருக்கிறது. மற்றும், அந்தத் தொகுதியிலே ராணி மங்கம்மாள் காலத்திலே போடப்பட்ட ரோடுகள், இன்றைக்கும் செப்பனிடப்படாமல் இருந்து வருகின்றன. குறிப்பாக, அந்த ரோடானது மதுரைக்கும் திருச்சிக்கும் செல்லக்கூடிய சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் இருக்கக் கூடியது. இந்த ரஸ்தாவைப் பற்றி பலமுறை தெரிவித்தும்கூட, அதிகாரிகள் இன்னும் அதுபற்றி பாராமல் இருப்பது வருந்தத்தக்க நிகழ்ச்சியாகும். குறிப்பாக, மருங்காபுரி பகுதியிலே எந்தவிதமான தொழில் வளர்ச்சியும் இல்லாமல், விவசாயத்தையே நம்பிக் கொண்டிருக்கிற பொதுமக்கள் நிறைய பேர்கள் இருக்கின்ற சூழ்நிலையில், அங்கே ஒரு பஞ்சுத் தொழிற்சாலையை ஏற்படுத்தி பல்வேறு மக்களுக்கு வேலை வாய்ப்பளித்தால், அந்த மக்கள் இந்த அரசை மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, மணப்பாறை பகுதியானது மிகவும் வறட்சியான பகுதியாகும். அந்தப் பகுதியிலே விவசாய மக்கள் பெரிதும் சாலை வசதியில்லாமல், மற்றும் மாணவர்களும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்குள்ள மாணவர்கள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமானால், 20 மைல் தூரத்திலுள்ள திருச்சிக்குத்தான் செல்ல வேண்டும். மணப்பாறையைச் சுற்றியுள்ள 30 மைல்களுக்கு எந்தவிதமான கல்லூரியும் கிடையாது

[திரு. மே. அ. இராசகுமார்]

எனவே, மணப்பாறையை மையமாகக் கொண்டு ஒரு தொழிற் கல்லூரியையும், கலைக்கல்லூரியையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இதிலே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் அளிக்கப்பெற்ற மானியக் கோரிக்கை மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்ற கழக அரசு நிர்வாகத்தைச் சீர் படுத்துவதற்காக ரெவின்யூ போர்டைக் கலைத்ததை, கிராம அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றிருக்கிறது. நிர்வாகக் குறைகளை நீக்குவதற்கு, நிர்வாகத்தைச் சீர் அமைப்பதற்கு உடனடியாக அமல் நடத்தி கிராமங்களிலுள்ள ஏழை மக்கள், சர்டிபிகேட் வாங்குவது போன்ற இன்னும் பல காரியங்கள் தேங்கி இருக்கிறது. இவற்றை சீரமைக்கக் கூடிய முறையில் கிராம அதிகாரிகளை விரைவாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் வருவாய் வட்டங்கள் எல்லாம் இன்றைக்குப் பெரிய அளவிற்கு அதிகமான கிராமங்களைக் கொண்டுள்ளதாக இருக்கின்றன. வருவாய் ஆய்வாளர்கள் பல கிராமங்களுக்கும் செல்ல முடியாத நிலைமை இருந்து வருகிறது. வருவாய் கிராமங்களைச் சீரமைத்துக் குறைந்தபட்சம் 15 வட்டங்களுக்கு மேல் போகாமல் சிறு சிறு பிர்க்காக்களாகப் பிரித்து அமைத்து சீர் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல வட்டாட்சி நிர்வாகத்தை எடுத்துக் கொண்டால் அரசாங்கத்தினுடைய அனைத்து வேலைகளும் வட்ட ஆட்சியாளர்களிடம் வருகின்றன. அங்கே நிர்வாகத்தில் மிகப் பெரிய சிரமங்கள் இருக்கின்றன. அதிகமான ஊழியர்களை வட்டாட்சி அலுவலகங்களில் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல மாவட்ட வருவாய் அதிகாரிகள், கலெக்டர்கள் ஒவ்வொரு வட்டத்துக்கும் வந்து ரெவின்யூ வேலைகள் சரியாக நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணித்து, ஏழை, எளிய மக்களுக்குப் பயன் கிடைக்கச்செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இன்றையதினம் துணை வட்டங்களை எல்லாம் முழு வட்டங்களாக ஆக்குவதற்கு நடவடிக்கை அரசு குறிப்பிலே இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலே 4 வட்டங்களை முழு வட்டங்களாக உயர்த்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

[திரு. எம். செல்லமுத்து]

இன்றையதினம் சிறு விவசாயிகள் வரியின் தொல்லையினால், இயற்கையின் தொல்லையினால் கஷ்டப்படுகிறார்கள். எனவே 5 ஏக்கர் புஞ்சை, 3 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்கு நிலவரி ரத்து செய்ய வேண்டும். அரசாங்கம் பல நிவாரணங்களை அளிக்கக்கூடிய சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. குத்தகை நிவாரண சட்டத்தை அமுல்படுத்துகிறபோது குத்தகை விவசாயிகள், தங்களுக்கு பாக்கி இல்லை என்று நிரூபிக்க வேண்டியிருக்கிற அளவிற்கு கோர்ட்டுகளுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. நிரூபிக்க வேண்டிய பொறுப்பை நிலச்சுவான்தார்களுக்கும், பொறுப்புக் கழகங்களுக்கும் விட்டு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

75 வாரம் சட்டம் கொண்டு வரப்பட்டது. 75 வாரச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றிருக்கிறது. ஆனால் 75 வாரம், கடன் நிவாரணச் சட்டமும் கிடைக்காத அளவிற்கு இன்றைக்குக் குத்தகை பாக்கி என்ற பெயராலே 1388—89 என்ற அடிப்படையிலே குத்தகைக் கழகங்களும், மிராசுதாரர்களும் குத்தகை விவசாயிகளுடைய பாக்கிக்காக கோர்ட்டுகளுக்குச் செல்கிறார்கள். திருவாரூர் கோர்ட்டிலே மாத்திரம் 5 ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 3,750 வழக்குகள் தீர்ப்பளிக்கப்பட்டு, 300 பேர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அந்த 3,700 பேர்களும் தங்களுடைய குத்தகைப் பாக்கியைக் கட்டுவதற்கு தங்களுடைய நிலங்களைப் பாதுகாப்பதற்கு அவர்கள் பட்டிருக்கின்ற சிரமங்களை எண்ணிப் பார்க்கிறபோது வேதனையாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிவாரணச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டாலும் எடுக்கக்கூடிய நடவடிக்கையின் காரணமாக அந்த நிவாரணங்கள் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இல்லை. எனவே அந்தச் சட்டங்களைச் சரியாக அமல்படுத்துவதற்கான முறையில் நடவடிக்கைகளை அமைக்க வேண்டும். 1388, 89, 90 ஆகிய பசலிகளைப் பொறுத்தவரையில் இப்போது வரக்கூடிய பசலிக்குக்கூட அவர்கள் கோர்ட்டிற்குச் செல்வார்கள். அப்போது நில வெளியேற்றம் நடைபெறும். எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்கள் நிலத்தை விட்டு வெளியேற்ற கோர்ட்டுகள் உத்திரவிடக்கூடாது என்று அரசாங்கம் உடனடியாக உத்திரவிட வேண்டும்.

குத்தகைப்பதிவு பற்றி ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் இங்கே குறிப்பிடும்பொழுது சிவில் கோர்ட்டிற்கு கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். இன்றுள்ள நிலைமையே இருந்தால் போதும். தாசில்தார் அலுவலகத்திலே அதைச் செய்வதற்கு போதுமான ஊழியர்கள் இல்லை. தாசில்தாருக்கு ஏராளமான வேலைகள் இருக்கின்றன. இந்த வழக்குகளிலே வருகின்ற மனுக்களைப் பரிசீலனை செய்து முடிப்பதற்கு அவர்களுக்குச் சிரமமாக இருக்கிறது. ஆகவே குத்தகை செய்கிற விவசாயிகள் மனுக்

[திரு. எம். செல்லமுத்து]

களைக் கொடுக்கிறபோது அதை உடனடியாகப் பரிசீலனை செய்து முடிவெடுக்கக் கூடிய முறையிலே கூடுதல் தாசில்தார்களை நியமிக்கவேண்டும். யார் குத்தகை செய்கிறார்கள் என்பதை ஸ்தலத்திற்கே சென்று விசாரித்து அவர்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். 75 வாரத்திற்குக் கொண்டுவரப்பட்ட சட்டத்தைப் பொருத்தும் கோர்ட்டிற்குச் செல்லாமல் தடைசெய்யக் கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்கள் கோர்ட்டிற்குச் சென்று தடை வாங்குவதை நிறுத்தக்கூடிய முறையிலே நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும்.

குத்தகை என்ற பெயரால் கோயில், மட தர்ம ஸ்தாபனங்களின் நிலங்களை 99 ஆண்டுக் குத்தகைக்கு பெரிய நிலப்பிரபுக்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அந்தப் பெரிய நிலபிரபுக்கள் அந்த நிலங்களை எல்லாம் சிறு விவசாயிகளுக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட 99 ஆண்டுக்கால குத்தகைகளை எல்லாம் ரத்துசெய்து அந்த நிலங்களிலே யார் நேரடியாகப்பாடுபடுகிறார்களோ அவர்களுக்கே அந்த நிலங்களைக் கொடுக்க வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்திலே கையேறுவாரம் என்ற நிலைமை இருக்கிறது. அந்த விவசாயிகளுடைய பிரச்சினைகளைக் கவனித்து அதற்காகச் சட்டத்தைக்கொண்டு வந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆறுதேசம் என்ற கிராமத்திலே மஞ்சிலி என்ற மடத்திற்கு 2 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அந்த மிராசுதார்கள் வரி அதிகமாக வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு மானியங்கள் கொடுக்கப்பட்டும்கூட இப்போது அங்கே உள்ள விவசாயிகளிடம் அவர்கள் வரி அதிகமாக வசூலிக்க கடுமையாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பரிசீலித்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தச் சட்டம் சம்பந்தமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசால் நில உச்ச வரம்புச் சட்டத்திலே ஏற்பட்டிருக்கின்ற பினாமி மோசடிகளை நிவர்த்தி செய்யக் கூடிய முறையிலே சட்டம் கொண்டு வந்து இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்திற்கு ஜனாதிபதி அங்கீகாரம் அளிக்க மறுத்து வருகிறார்கள். உடனடியாக ஜனாதிபதியை அந்தச் சட்டத்தில் கையெழுத்திடச் செய்து அதை அமல்நடத்தவேண்டும் என்று அனைத்துக் கட்சிகளும் சென்று அவர்களிடம் வலியுறுத்தி கையெழுத்து வாங்கி அந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போன்று நிலச் சீர்த்திருத்தச் சட்டத்திலே ஓட்டைகள் இருக்கின்றன. இந்த அரசே அந்த ஓட்டைகளை அடைத்து விதிவிலக்குகளை எல்லாம் ரத்து

[திரு. எம். செல்லமுத்து]

செய்து ஏழை எளிய கிராமப்புற விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் கொடுக்கக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். 1961 ஆம் ஆண்டிலே வந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பயன்படுத்தி இன்றைக்குப் பல கேஸ்கள் கோர்ட்டிலே இருக்கின்றன. 1962-லிருந்து என்னுடைய கிராமத்திலேகூட ஒரு கேஸ்—50 ஏக்கர் நிலம் சம்பந்தப்பட்டது சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறது. அதனால் 1962-லிருந்து மிராசுதார் அந்த நிலத்தை அவரே அனுபவித்துக்கொண்டு வருகிற நிலைமைதான் இருக்கிறது. அதைத் தடை செய்வதற்கு கோர்ட்டில் உள்ள வழக்குகளை உடனடியாக முடிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமல் நடத்துகிறபோது இன்றைக்கு நிலத்தையே விலைபேசக்கூடிய அளவுக்கு ஊழல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மிராசுதார்கள் நிலத்தைக் கொடுத்தால்கூட அவற்றை விநியோகிப்பதில் பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. மாயூரம் A.O. அதிகாரத்திற்கு உள்ளிட்ட சித்தாடி என்ற கிராமத்தில் மிராசுதார்கள் நிலத்தைக் கொடுத்தும்கூட, இரண்டாண்டு காலமாக விசாரணை எல்லாம் செய்து முடித்தும், இப்பொழுதும் அந்த நிலம் தரிசாகக் கிடக்கிறது. அதைப் பிரித்துக் கொடுப்பதற்குக்கூட இன்றைக்குத் தயாராக இல்லை. கோர்ட்டுகளிலே இருப்பதைத் துரிதப்படுத்தி, நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் முறைகேடு இல்லாமல் கறாராக அமல் நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் கூலிச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தை அமல் நடத்துவதற்கு மிராசுதார்கள் தயாராக இல்லை. அதை அமல் நடத்தும் அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் நிலச்சுவான்தார்களுக்கு உடந்தையாக இருக்கிறார்களே தவிர, அதை அமல் செய்வதற்கு முன்வருவதில்லை. அதை முறையாக அமல் நடத்தும் வகையிலே அரசாங்கம் அதிகாரிகளை நியமித்து அந்தச் சட்டத்தைத் தீவிரமாக அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

*திரு. த. மார்imுத்து : மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைவரவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையில் நல்ல பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை அறிந்து மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கும், அவர்களுடைய எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்துச் செயலாற்றுகின்ற வருவாய்த் துறை அமைச்சரவர்களுக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னர் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்காலிகப் பட்டா வழங்கப் பட்டிருப்பதைப்பற்றிச் சொன்னார்கள். தற்காலிகப் பட்டா வழங்கப்படுவது என்பது நடைமுறையிலே உள்ள ஒரு

[திரு. த. மாரிமுத்து]

பழக்கம்தான். நிலங்கள் சர்க்கார் நிலங்களாக இருக்கின்ற பொழுது தீர்வை விதிக்கப்பட்டு, நஞ்சைத் தரிசாகவோ அல்லது புஞ்சைத் தரிசாகவோ இருந்தால் உடனடியாகப் பட்டா வழங்கி விட முடியும். ஆனால், அவ்வாறு இல்லாமல் இருக்கும் நேரங் களில் தீர்வை விதிப்பது போன்ற நடைமுறைக் காரியங்கள் செய்யப்பட வேண்டியிருந்தால் தற்காலிகமாக பட்டா வழங்கப் படுகின்ற காரியம் தவறான காரியம் அல்ல என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

கிராமக் கர்ணங்களின் பதவி ஒழிக்கப்பட்டதை இந்த நாட்டு மக்கள் ஒட்டுமொத்தமாக வரவேற்ற காரணத்தினால், வரவேற்ற காட்சியைக் கண்ட காரணத்தினால் அந்தப் பதவி ஒழிக்கப்பட வேண்டிய பதவி, அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டிய வர்கள் என்பது நன்கு விளங்கும். சிற்றரசர்களாக விளங்கிய கிராமக் கர்ண அதிகாரிகளின் கொடுமைகளை அகற்றி மக்களுக்கு மறுவாழ்வு அளித்துள்ளதும், வருவாய்த்துறையின் முக்கிய பிரிவு களாகிய பிர்க்காக்களைச் சீர்திருத்தம் செய்ய முற்பட்டுள்ளதும், குடிசைவாசிகளுடைய முன்னேற்றங்களுக்கு அளித்துள்ள சலுகை களும், நிலங்களுடைய விளைச்சலின் மதிப்பிற்கேற்ப வரிகளை முறைப்படுத்தி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்து உள்ளதையும், ஏழைகளுக்கு நிலம், மனைக்கட்டு வழங்கும் முறை யும், வேளாண்குடி தொழிலாள மக்களுக்கு உழைப்புக்கேற்ற வகையில் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள முறைகளும் எண்ணி யெண்ணிப் பெருமைப்படக் கூடிய செயல்களாகும். உழவர் பெருங்குடி மக்களுக்கு வரைபடங்களோடு கூடிய பட்டா புத் தகங்கள் என்னுடைய தொகுதியிலே பல கிராமங்களில் வழங் கப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் நில அளவுத் துறையை முடுக்கிவிட்டுப் பல ரிக்கார்டுகளைத் தயார் செய்து பட்டா புத்தகங்களை வழங்கும் நிலை ஏற்பட்டு இருக்கிறது.

இப்படி, நிர்வாக அமைப்பு, கடன் நிவாரணம், வருவாய் ஆய்வருக்குக் குடியிருப்பு, நில அளவைப் பதிவேடுகள் துறையில் பணிகளை முறைப்படுத்தி நாளது வரையிலான பதிவுகளுடன் உழவர்களுக்கு அவர்களுடைய நிலங்களைப்பற்றிய வரைபடங் களடங்கிய பட்டா புத்தகங்கள் வழங்கும் முறைகள் போன்ற பல நல்ல திட்டங்கள் உள்ளடங்கிய இந்த மானியக் கோரிக்கை யில் மக்களுக்குப் பயன்படக்கூடிய உருப்படியான திட்டங்களை வகுத்துக் கொடுத்துச் செயல்படும் வணக்கத்திற்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான் இந்தியாவிலேயே For the people, By the people, of the people என்ற ஆப்பிரகாம் லிங்கனுடைய கூற்றுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்ற அரசு என்பதால், இம்மாமன்றம் பெருமிதம் கொள்ளலாம், பெருமைப் படலாம், பாராட்டலாம். மக்களுக்காக, மக்களால், மக்களுடைய **அரசு என்பதால்** நான் பாராட்டுகிறேன், பெருமைப்படுகிறேன்.

[திரு. த. மாரிமுத்து]

சென்ற மாதம் என்னுடைய தொகுதிக்கு மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் நேரிலே வந்து வறட்சி நிவாரணப் பணிகளை நேரிலே பார்வையிட்டு அரசு இயந்திரங்களை முடுக்கி விட்டு, வாடிய மக்களுக்கு நேரிலே ஆறுதல் சொன்ன அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் தன்னிறைவுத் திட்டத்தை வறட்சி நிவாரணமாகத் தொடர்ந்து நீடிக்க ஆவன செய்ய வேண்டுமாறும் பணிவான வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–50)

இயற்கைத் துயர் தடுப்புப்பணிகள் நடைபெறுகிற காரணத்தால் தொகுதியிலுள்ள சில குறைகளைப் போக்கி, நிரந்தரமாகப் பலன் தரும திட்டங்களை நிறைவேற்றக் கோருவது பொருத்தம் என்பதாலே தொகுதியிலே உள்ள சில குறைகளைக் கூற விரும்புகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டமே ஒட்டுமொத்தமாக மிக வறட்சியான பகுதியாகும். மழை பெய்கிற காலங்களில் கூட தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருப்பது உண்டு. சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகளாகியும் கூட குடிநீர்ப் பிரச்னையைக் கூடத் தீர்த்து வைக்க முடியாத நிலைமையில்தான் கடந்த ஆண்டுகளில் அரசுகள் செயலாற்றி வந்தன. இப்பொழுது, அக்குறையைப் போக்குகின்ற வகையில் சிறப்பான திட்டங்களை நிறைவேற்றுவதோடு, தன்னிறைவுத் திட்டத்தையும் நிறைவேற்றுகிற புரட்சித் தலைவர் அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் ஆற்றுப் படுகையிலே அமைந்துள்ள கலிமங்கலம், முல்லையூர், கிளிக்குடி போன்ற ஊர்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், பேராம்பூர் கிராமத்தில் கோரையாறு குறுக்கே சிறு அணைக்கட்டும், 50 ஆண்டுகளுக்கு மேலாக மராமத்து செய்யப்படாத பேராம்பூர் பெரிய குளத்தை ஆழப்படுத்தும்படியும், பேராம்பூர் கிராமத்தில் குழந்தைகள் காப்பகம், கால்நடை கிளை மருத்துவமனை, ஆதி திராவிடர் குடியிருப்புக் காலனியும், இலுப்பூர் நகரைத் தாலுகா தலைமையகமாகக் கொண்டு புது தாலுகா அமைப்பதை விரைவுபடுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஆவூரில் அரசு மருத்துவமனை, அரசினர் மாணவர் விடுதி, மாத்தூர் டு இலுப்பூர் சாலையை தார்ச் சாலையாக மாற்றி சிங்கத்தாகுறிச்சியில் பாலம் அமைத்தல், கீரனூர் அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்தி, கண், காது, மூக்கு, தொண்டைப் பிரிவும் எக்ஸரே பிரிவும் அமைத்தல், கிள்ளுக்கோட்டைக்கு அரசு மருத்துவ மனை, அரசு மாணவர் விடுதி, ஆவூர் மாத்தூர், கொடும்பாளூர், காவேரி நகரில் காவல் நிலையங்கள், களமாவூர் டு விராலிமலை சாலையில் பேராம்பூர் அருகே 12 ஆண்டுகளாக பழுதடைந்து ஆபத்தான நிலையிலுள்ள பாலத்தை மாற்றி அமைத்தல், பேராம்பூர்

[திரு. த. மாரிமுத்து]

பஞ்சாயத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்ட இரும்பு கண்டுபிடிப்பைத் தொடர்ந்து நடத்தி, சிறு தொழிற்சாலைகளாக அமைத்தல், பேரம்பூர் குடித்தெருவில் அமைந்துள்ள கைப்பம்பை விசைப்பம்பாக மாற்றுதல், புதுக்கோட்டை மாவட்டத்தில் காட்டாறுகளின் குறுக்கே நீர்த்தேக்க அணைக்கட்டுகள் கட்ட தீர்மானித்துள்ளதைத் துரிதப்படுத்தும்படியும், குளத்தூர் தொகுதியில் ஏழை மக்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக பட்டாக்களுக்கு நிரந்தரப் பட்டா வழங்க, குளத்தூர் தொகுதியில் திட்டமிடப்பட்ட தீப்பெட்டி தொழிற்சாலைகளை விரைந்து செயல்படுத்த, கீரனூரில் நகரப் பேருந்து டெப்போ அமைத்து, கீரனூர் டு மாத்தூர் ரவுண்டானா, திருவெறும்பூர், கீரனூர் டு விராலிமலை, கீரனூர் டு கிள்ளுகோட்டை, கீரனூர் டு இலுப்பூர், கீரனூர் டு ஆதனக்கோட்டைக்கு புதிய வழித்தடங்கள், கனமாவூர், கருவேப்பிலாங்கேட், திருவப்பூர், நமனசமுத்திரம் ஆகிய இடங்களில் இரயில் பாதைகளின் குறுக்கே மேம்பாலம் அமைக்க, புதுக்கோட்டையிலிருந்து அன்னாவாசல், இலுப்பூர், விராலிமலை வழியாக மணப்பாறைக்கு இணைப்பு ரயில் பாதை அமைக்க வேண்டுமென்று கேட்டு, விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ள என் தொகுதி மக்களுக்கு மாற்றுத் திட்டமாகப் பரவலாக குடிசைத் தொழில்களை அமைத்துக் கொடுத்து நல்வாழ்வு அமைத்துத் தரும்படி வேண்டி, இந்த வருவாய்த் துறை மானியக் கோரிக்கையினை வரவேற்று, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 1-ன் கீழ், நிலவரித் துறைக்கு ரூ. 6,16,57,000-மும் கோரிக்கை எண் 41, இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்பதன் கீழ் ரூ 3,13,000-மும், கோரிக்கை எண் 46, இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்பதன்கீழ் ரூ. 21,46,14,000-மும் ஒதுக்க வேண்டுமென்ற இந்த மானியக் கோரிக்கைகளின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். இயற்கைச் சீற்றம் என்ற தலைப்பில் வந்துள்ளதைட் பொறுத்தவரை பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை மட்டுமல்லாமல், நாடு முழுவதும் இயற்கையின் சீற்றம் தொடர்ந்து இருக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. இந்த நிகழ்ச்சிக்கு விரைவாக மட்டுமல்லாமல், முடிவான ஒரு தீர்வை அரசு காணவேண்டும். இயற்கையின் சீற்றம் ஏற்படுகிறபொழுது ஒரு பகுதியில் புயலும் மறு பகுதியில் வெள்ளமும் ஏற்படுகிறது. இன்னொரு பகுதியில் தீ விபத்தும் ஏற்படுகிறது. இப்படி வருகிற காலங்களில், அரசு ஆண்டுதோறும் அதை ஒரு பிரச்னையாக ஆக்குவதைக் காட்டிலும், நிரந்தரமான தீர்வு காண, பள்ளப் பகுதியிலே வசிக்கிற மக்களை, உயரமான பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாட்டைக் கண்டிப்பாகச் செய்தாக வேண்டும். அதனால் வெள்ளம் வரும்போது, பள்ளப் பகுதியிலே ஏற்படும்

[திரு. என். ஏ. பூங்காவனம்]

நஷ்டத்தைத் தவிர்க்க முடியும். புயலால் பாதிக்கப்படுகிற மக்களுக்கு அவர்கள் நிரந்தரமாக தங்குவதற்கான ஒரு நல்ல இடத்தை, பாதுகாப்பான இடத்தை ஏற்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையையும் உருவாக்க வேண்டும். அதற்கான ஒரு நிரந்தரத் தீர்வும் வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி சம்பந்தமாக இங்கே பல்வேறு நண்பர்களும் பேசியிருக்கிறார்கள். ஆனால், வறட்சி குறித்து, பல அமைச்சர்கள் முதலமைச்சர் உட்பட நேரில் சென்று பல்வேறு பகுதிகளை அவர்கள் பார்த்த பிறகும், அந்தப் பகுதிகளில் என்ன, என்ன வேலைகள் நடத்திருக்கின்றன என்பதுசம்பந்தமான தெளிவான விவரம் இல்லை. ஆனால், வேலை நடக்கிறதா என்று கேள்வி கேட்கிறபொழுது, இல்லையென்ற ஒரு சுலபமான பதில் வருகிறது என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும், முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் வருகைதந்த பிறகும், அந்தப்பகுதியில் வேலைகள் தொடர்ந்து நடைபெறவில்லை என்பதையும் அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த அந்த சம்பந்தப்பட்ட குடிநீர் வினியோக அதிகாரிகள் முறையாகவும், சீராகவும், நியாயமான முறையிலும் செயல் படாதது மட்டுமல்ல, எங்கெல்லாம் குடிநீருக்கு அதிகமான பிரச்னைகள் இருக்கின்றனவோ, அப்பகுதிகளுக்குச் சென்று பார்வையிடுவதற்குப் பதிலாக, அலுவலகங்களிலேயிருந்து கொண்டு ஆணைகள் பிறப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவை நடைமுறைக்கு வரவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு விஷயத்தையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் ஒரு கிராமத்திற்கு வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டு குடிநீர் மிகவும் அவசியமாகத் தேவை என்று சொல்லக்கூடிய கிராமத்திற்குச் சென்றபோது அந்த கிராமத்திலே இருந்து வயது முதிர்ந்த ஒருவர் ஒரு கேள்வியை கேட்டார். இதற்கு முன்னால் பல அதிகாரிகள் வந்தார்கள். கிணறுகளைப் பார்த்து விட்டுச் சென்றார்கள். கடைசியாக நம்முடைய தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வந்து இருக்கிறார். இந்தக் கிராமத்தில் இருக்கிற கிணறுகள் எல்லாம் திருடு போய்விட்டனவா என்று பார்ப்பதற்காக வந்து இருக்கிறார் என்று சொன்னார். அதைக் கேள்விப்பட்டவுடன் நான் அதிகாரிகளைப் பார்த்து நடவடிக்கை எடுங்கள் என்று வற்புறுத்துவதற்காகத்தான் நான் இங்கே வந்து பார்த்துக் கொண்டு இருக்கிறேன் என்று சொன்னபோது, இல்லை இல்லை தொடர்ந்து அதிகாரிகள் வருகிறார்கள். அதற்குப் பின்னால் நீங்களும் வருகிறீர்கள், இந்தக் கிணறுகள் திருடு போய்விட்டனவா இல்லையா என்றுதான் பார்க்க வருகிறீர்கள் என்று அவர்கள் வருத்தத்தோடு சொல்லக்கூடிய நிலைமை கிராமப் பகுதிகளில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. என் ஏ. பூங்காவனம்]

அடுத்தபடியாக, ரெவின்யூ சம்பந்தப்பட்டவரை பென்ஷன் கொடுக்கும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதிகாரிகள் பென்ஷன் கொடுக்கிற நிலையில் வருகிறபோது 3 விதமான தகராறுகள் வந்து இருக்கின்றன. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு தாலுக்கா என்று சொன்னால் 55கிலோ மீட்டர் நீளமுள்ளது. அங்கே அந்த வேலையைச் செய்கிறா கள். பென்ஷன் வேண்டும் என்று வரக்கூடியவர்களுக்கு எல் ாம் வயதுவரம்பு வைத்து இருக்கிறார்கள். தாய்மார்களுக்கு, விதவைகளுக்கு வைத்திருக்கிறார்கள். ஆனால் விதவைகள் சிறு வயதினராக இருந்தாலும்கூட அவர்களுக்கு பென்ஷன் கொடுக்கவேண்டும். பெண்களைப் பொறுத்தவரையில் வயது வரம்பு வைக்கக்கூடாது.

இரண்டாவது பென்ஷன் வாங்குவதற்கு அநாதையாக இருக்க வேண்டும் என்று நிலை இருக்கின்றது. அது தமிழகத்துக்கு நல்லதல்ல. அப்படிச் சொல்வது சரியல்ல என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். 60 வயதான அனைவருக்கும் எந்தவிதமான நிர்ப்பந்தமும் இல்லாமல் பென்ஷன் கொடுக்க வேண்டும் என்றும் அதற்கான ஆணை பிறப்பிக்கவேண்டும் என்றும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பென்ஷன் என்று நாம் அறிவித்தோம். ஆனால் அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அடுத்த மாநிலமான கேரள மாநிலத்தில் 60 வயதான உடனே அவர்களுக்குப் பிள்ளை இருக்கிறதா, சொத்து இருக்கிறதா என்ற பிரச்சினை இல்லாமல், அவர்களுக்கு ரூ. 50 அனுப்பப்படுகிறது.

அடுத்தபடியாக, வறட்சியின் காரணமாக தண்ணீர் வரி, நில வரி, அபிவிருத்தி வரி ஆகிய அனைத்து வரிகளும் ரத்து செய்யப்பட வேண்டும். அதிகம் நிலமுள்ளதா, குறைவாக நிலமுள்ளதா என்ற பிரச்சினைக்கு வறட்சி நேரத்திலே இடமில்லை. வறட்சி வருகிறபொழுது மாநிலம் முழுவதும் பாதிக்கப்படுகிறது. எல்லாப்பகுதி மக்களுக்கும் எல்லா நிலத்திற்கும் இந்த வரி ரத்து செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தண்ணீர் சம்பந்தமாக பல கிராமங்களிலே குடிநீர் கிடைப்பது துர்லாபமாகவே இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே கே.வி. குப்பம் என்ற பகுதியில் கல்யாண பெரிய குப்பம் என்ற ஒரு ஏரி உடைந்து 3 ஆண்டுகளாகிறது. அந்த ஏரியைப் புதுப்பித்தால், 40 கிராமங்களுக்குக் குடிநீர் கிடைக்கும். இது சம்பந்தமாக பல முறையீடுகள் கொடுத்தும் இன்னும் வேலை நடை பெறவில்லை. குடிநீர் சம்பந்தப்பட்ட பல வேலைகள் நடைபெறுவதே இல்லை. தண்ணீரில்லா கோடை காலங்களில் மராமத்து வேலைகள் செய்து தண்ணீர் வருகிற பொழுது தேக்கி வைக்கவேண்டும். இதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். ஏ. பூங்காவனம்]

தீயினல் பாதிக்கப்படுகிற வீடுகளிலுள்ளோருக்கு ரூ. 200 கொடுக்கப்படுகிறது. அந்த ரூ. 200 பழைய காலத்தில் நிர்ண யிக்கப்பட்டது. இப்போது மூங்கில் விலை, ஓலை விலை, தொழிலாளர்களுடைய கூலி, இவைகளைக் கணக்கிட்டால், தற்போது விலை வெகுவாக உயர்ந்திருக்கிற காரணத்தால், அந்த ரூ. 200 ஐக் குறைந்த பட்சம் ரூ. 300 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாதிக் கப்பட்ட ஏழைகள், அரிசனங்கள் வீடுகட்ட கடன் கொடுக்கிறார்கள். அந்தக் கடனை உடனடியாகவும், தேவைப் பட்ட நேரத்திலும் கொடுப்பதற்கு அதிகாரிகளாலும் அலு வலர்களாலும் இயலாத சூழ்நிலை உள்ளது. அதைத் தவிர்த்து உடனடியாக அந்தப் பணத்தைக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12-00.]

ஏற்கனவே கம்பு, கேழ்வரகு, சோளம் போன்ற எல்லா தானியப் பயிர்களும் பாதிக்கப்பட்டிருப்பதால் வறட்சிப் பகுதி என்று அறிவிப்பது மட்டுமல்ல; அப்படிப்பட்டப் பகுதிகளை பஞ்சப் பிரதேசம் என்று அறிவித்து அந்தப் பகுதிகளுக்கு வேண் டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அப்படியானால் தான் அந்தப் பகுதி மக்கள் வெளி மாநிலங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சி நிவாரணத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநில அரசு நியாயமாக, நேர்மையாக அனைத்துக் கட்சிகளை யும் சேர்ந்தவர்களைக் கொண்ட கமிட்டி போட வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருந்தும் தென் ஆற்காடு மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற கட்சிகள் விடுபட்டிருக்கின்றன. அரியலூர் தாலுகாவில் எங்கள் கட்சி விடப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கிற அதிகாரிகள் இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கிற கமிட்டிகள் முறையாக வும், ஒழுங்காகவும் செயல்பட ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)..

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1981–82 ஆம் ஆண்டு வருவாய்த் துறை, நிலவரி, இயற்கையின் சீற்றங்கள் துயர் தணிப்பு குறித்த மானியக் கோரிக்கைகளின்கீழ் பேசுகின்ற வாய்ப்பைத் தந்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருவாய் வாரியத்தை நீக்கியது இவ்வரசு கொண்டுவந்த நிர் வாகச் சீர்திருத்தங்களில் ஒன்றாகும். பகுதி நேர கிராம அதிகா ரிகள் ஏழை எளிய மக்களுக்குக் கொடுத்து வந்த தொல்லைகள்

[திரு. ஏ. தங்கராசு]

கணக்கில் அடங்காதவை. ஏழை எளிய பாட்டாளி, தொழிலாளி வர்க்கத்தின் நலன் கருதி பகுதி நேர கிராம அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்தது முற்றிலும் நியாயமானதே. இதனால் இலட்சக்கணக்கான கிராம மக்கள் இன்றைய தினம் புரட்சித் தலைவரை பூஜிக்கிறார்கள், பாராட்டுகிறார்கள், போற்றுகிறார்கள்.

சில கிராம அதிகாரிகள் பெரிய நிலச்சுவான்தார்களாக இருந்தார்கள். அவர்கள் விவசாயிகளைத் தூண்டிவிட்டு, வரிகளைக் கட்ட வேண்டாம் என்று தடுத்தார்கள். வரிகளை ஒழுங்காகக் கட்டி வந்த விவசாயிகளைப் பணம் கட்ட வேண்டியதில்லை என்றும், எல்லாப் பணமும் தள்ளுபடி ஆகும் என்றும் சொன்னார்கள். அப்படிப்பட்ட ஜமீன்தார்களை நீக்கியது இந்தப் புரட்சித்தலைவர் அரசு.

முழு நேர கிராம அதிகாரிகளை நியமிக்க தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கிராமங்களில் சுமார் 12,000 கிராம நிர்வாக அதிகாரிகளின் பதவிகளை ஏற்படுத்த முன்வந்திருப்பது படித்த இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க உகந்த ஒரு நல்ல செயலாகும்.

தீ விபத்தால் முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு நிவாரணத் தொகையைத் 100லிருந்து 200ஆக உயர்த்தியது பாராட்டுக்கு உரியதே.

பாதிக்கப்பட்ட வீடுகளைக் கட்ட ரூ. 2000 வரை வட்டி இல்லாத கடன் கொடுக்க இந்த அரசு முன்வந்திருப்பது, ஏழை எளிய குடிசைவாழ் மக்கள்மேல் இந்த அரசு கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது என்பதை அறிந்து புரட்சித் தலைவர் அரசைப் பாராட்டுகிறேன்.

புயல் நேரத்தில் மக்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக சுமார் 82 புகலிடங்கள் கட்ட இந்த அரசு முன் வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

தமிழகத்திலே வறட்சி ஏற்பட்டுள்ளதை நாம் அறிவோம். ஆனால் மக்களை மீட்கப் போர்கால நடவடிக்கைபோல புரட்சித் தலைவர் பணியாற்றுகிறுர். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது வறட்சிப் பணிகள் சரிவர நடைபெற வில்லை என்ற குறை இருந்தது. ஆனால் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி மிகவும் சிறப்பாக வறட்சி நிவாரணப் பணிகளை செய்துகொண்டு இருக்கிறது என்று மத்திய அமைச்சர் ஆர்.வி. சுவாமிநாதன் நேரடியாக வந்து பார்த்து, பாராட்டிச் சென்றிருக்கிறார். அதுவே, புரட்சித் தலைவர் அரசுக்குக் கிடைத்த பாராட்டாகும்.

[திரு. ஏ. தங்கராசு]

குடிதண்ணீர் கிடைப்பது அரிதாக உள்ள பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்கு முன்னுரிமை அளித்து அதற்கான புரட்சித் தலைவர் அரசு மாவட்ட வாரியாக கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் ஆழ்துளை கிணறுகளை அமைக்கவும் சுமார் 680 லட்சம் ரூபாய் குடிநீர் வழங்குவதற்காக ஒதுக்கி இருப்பதையும் பாராட்டுகிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குட்டைகள் நீர் ஊற்றுகள், குளங்கள், ஊரணிகள் தூர் வாருதல் மற்றும் புதிய சாலைகள் அமைத்தல், அணைக்கட்டுகளை வலுப்படுத்துதல் போன்றவைகளைச் செய்ய சுமார் பல கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கிய புரட்சித் தலைவரின் இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

பருவமழை இல்லாத காரணத்தால் விளைச்சல் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 1390-ம் பசலி ஆண்டிற்கு நிலவரியை ரத்து செய்த புரட்சித் தலைவரின் இந்த அரசை நான் பாரட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறட்சி நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தவும், தீவிரமாகக் கண்காணிக்கவும் மக்களுக்கு நல்ல முறையில் பயனுள்ள வேலைகளாக நடைபெறவும் துணை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தகுதியில் ஒரு அதிகாரியை நியமித்ததோடு அல்லாமல் பொது மக்களின் பிரதி நிதிகளுக்கும், மாவட்ட வாரியாகவும், வட்ட வாரியாகவும், குழுக்களை அமைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் வாய்ப்பு தந்து வறட்சி நிவாரணப் பணிகளின் வேலைகளைக் கண்காணிக்கவும் செம்மைப்படுத்தவும், சரிப்படுத்தவும் வழி வகை செய்தமையால் புரட்சித் தலைவரின் இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

முதற் கட்டமாக குடிநீர் வழங்குவதற்காக 2,000 துளை கிணறுகளும், அதற்கடுத்தபடியாக 5,000-லிருந்து 6,000 துளை கிணறுகள் ஆகியவற்றை 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் இறுதிக்குள் செய்து முடிக்க இருக்கும் இந்த நல்ல திட்டத்தை நான் பாராட்டுகின்றேன்.

பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்ட இந்த நேரத்திலும் உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க பொது விநியோக முறையைப் பலப்படுத்தி கிராமப் புறங்களில் உள்ள கூட்டுறவு அங்காடி, அமுதம் அங்காடி மூலமாகவும் ஏழை எளிய பாட்டாளி மக்களின் கடுமையான உணவுப் பற்றாக் குறையைப் போக்க அரிசி, கோதுமை போன்றவற்றை வழங்க வேண்டும் என்றும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

ரூபாய் 200-ம் 250 ரூபாய்க்கும் குறைவான வருமானம் உள்ள நிலமற்ற ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கு 3 ஏக்கர் புன்செய் நிலம் 1½ ஏக்கர் நன்செய் நிலங்கள் வழங்குவதற்கும்,

[திரு. ஏ. தங்கராசு]

நலிந்த குடும்பங்களுக்கு மனைப்பட்டா வழங்குவதற்கும் ஏழை எளிய விவசாயிகளுக்குக் கூலியாக நாள் ஒன்றுக்கு 7 ரூபாய் 80 காசு என்றும், 6 ரூபாய் 60 காசு என்றும் சிறுவர்களுக்கு 4 ரூபாய் 40 காசு என்றும் வழங்கி இருப்பதே இந்தச் சர்க்காருக்கு ஒரு சாதனை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தென்னாற்காடு மாவட்டத்திலே இந்த ஆண்டு பருவமழை தவறியதன் விளைவாக ஏற்பட்ட குடிதண்ணீர் பஞ்சத்தைப் போக்க வேலைகளை விரைவு படுத்த வேண்டும். தென் ஆற்காடு மாவட்டத்தில் ஏற்பட்ட குடிநீர் பஞ்சத்தைப் போக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தென் ஆற்காடு மாவட்டத்தில் குடிநீர் வடிகால் வாரியத்திடம் போதுமான பவர் டிரில்லர் இல்லை. ஆகவே தேவையான பவர் டிரில்லர்களை நெய்வேலி நிறுவனத்திடமிருந்து பெற்று சுற்றி இருக்கின்ற குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி, கம்மாபுரம் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் உள்ள கிராமங்களுக்கு நிரந்தரமாக குடிதண்ணீர் கிடைக்க துளை கிணறுகளைப் போட மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வறட்சி நிவாரணப் பணியின்கீழ் ஏழை எளிய பாட்டாளி வர்க்கங்களுக்காகப் போர்க்கால நடவடிக்கைபோல் செய்து தரும்படி கேட்டுக் கொண்டு இந்த வருவாய்த்துறை மானியக் கோரிக்கையினை வரவேற்று பாராட்டி என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பினாமி நில ஒழிப்புச் சட்டத்தினை அதாவது பலர் நாய்களின் பெயரிலும், பூனைகளின் பெயரிலும் நிலங்களை எழுதி வைத்து பினாமியாக நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை வாங்கி ஏழை மக்களுக்கு வினியோகம் செய்து கொடுக்கக் கூடிய அளவில் கொண்டுவரப்பட்ட பினாமி ஒழிப்புச் சட்டத்திற்கு விரைவிலே ஜனாதிபதியின் ஆணையைப் பெற்று நிறைவேற்ற வேண்டும். அப்படி நிறைவேற்றினால் பல ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான ஏழை மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவிலே அது அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உபரி நிலங்களை ஏற்கனவே உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டதால் பலர் நல்ல நிலங்களைக் கொடுத்தார்கள். பலர் விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்களைக் கொடுத்துள்ளார்கள். ஆகவே அந்த நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் அவைகளைப் பயன்படுத்துவதற்காக மத்திய அரசும் மாநில அரசும் ஒரு ஆயிரம் ரூபாய் என்று மானியமாகக் கொடுத்திருக்கின்றது.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

[பிற்பகல் 12-10].

அந்த ஆயிரம் ரூபாயை 2 ஆயிரம் ரூபாயாக ஆக்கினால் நல்லது. ஏனென்றால் ஒரு ஏக்கர் நிலத்தில் உள்ள மேடு பள்ளங்களைச் செப்பனிட வேண்டுமென்றால் ஆயிரம் ரூபாய் போதவில்லை. ஆகையினால் அதை 2,000 ரூபாயாக ஆக்கி, அதை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்று நடத்தினால் இன்னும் கொஞ்சம் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

அடுத்து தண்ணீர் தீர்வையை எடுத்துக் கொண்டால், மதுரை ஜில்லாவிலே, நிலக்கோட்டைத் தாலுக்காவிலே, திருமங்கலம் கால்வாய் என ஒரு கால்வாய் இருக்கிறது. அது காங்கிரஸ் மகாசபை ஆட்சிக் காலத்திலே வெட்டப்பட்டது. அந்தக் கால்வாயை ஒட்டி எஸ். மேட்டுப்பட்டி என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரை ஒட்டி மட்டும் லைனிங் போடப்படவில்லை. அப்படி லைனிங் போடப்படாமல் இரண்டு பக்கமும் வரக்கூடிய பெர்க்குலேஷன் வாட்டரை வைத்து அங்கே இருக்கும் விவசாயிகள் அங்கே விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு 20 மடங்கு தண்டத் தீர்வை போடப்பட்டிருக்கிறது. அதை அகற்றி, அவர்களுக்குப் பாசன வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நிலக்கோட்டைப் பகுதியிலே மாமூல்கோடைகள் இருக்கின்றன. அதிலே விவசாயிகள் இரு போகம் விவசாயம் செய்கிறார்கள். தண்ணீர் தீர்வையும் கட்டுகிறார்கள். அந்த மாமூல் கோடையை ரிஜிஸ்தர் கோடையாக ஆக்காமல் இருக்கிற காரணத்தால், அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, தயவு செய்து பாசன வசதி செய்து கொடுக்கிற நேரத்தில் அந்த நிலங்களையும் ரிஜிஸ்தர் கோடையாக மாற்றிக் கொடுத்து, அந்த விவசாயிகளுக்கு நல்ல பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது தனிச்சியம், அய்யங்கோட்டை, சித்தாலங்குடி, புதூர் போன்ற கிராம விவசாயிகள் பயன்படும் வகையில் மாமூல் கோடையை ரிஜிஸ்டர் கோடையாக மாற்ற வேண்டுகிறேன்.

பொதுவாக இங்கே தீர்வையைப் பற்றி அனைத்து அங்கத்தினர்களும் எடுத்துச் சொன்னார்கள். நிலவரியை அறவே எடுத்து விட வேண்டும் என்றுப் சொன்னார்கள். நான் அதை ஒத்துக் கொண்டாலும் கூட, அந்த வரிகளில் தரம் தீர்வையை மாத்திரம் வைத்துக் கொண்டு, வாட்டர் செஸ், லோகல் செஸ் போன்றவைகளை ரத்து செய்து விடலாம். 5 ரூபாய் தரம் தீர்வை என்று சொன்னால் 15 ரூபாய் செஸ் வரி வருகிறது. ஆகவே, அந்த செஸ் வரிகளை நீக்கிவட்டு தரம் தீர்வையை மட்டும் வசூல் செய்தால்தான் நல்லது.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

ஏனென்றால் வவசாயக் கடன் பெறவேண்டும் என்று விவசாயிகள் பேங்குக்குச் சென்றால், வரி கட்டிய ரசீதுகள் எங்கே என்று கேட்கிறார்கள். ஆகையினால் தரம் தீர்வையை மாத்திரம் வைத்துககொண்டு பாக்கி இருக்கக்கூடிய செஸ்களை எல்லாம் ரத்து செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

அதேபோல நிர்வாகத்தைப் பொறுத்த மட்டில், நான் சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலே கூடச் சொன்னேன். என்.ஜி.ஓக் கள் 5 லட்சம் பேர் இருக்கிறார்கள். இப்போது யூனியன் பள்ளி ஆசிரியர்களையெல்லாம் அரசாங்க அலுவலர்களாக மாற்றி விட்டதால், கிட்டத்தட்ட 10 லட்சம் என்.ஜி.ஓக்கள் இருக்கிறார் கள். அவர்கள் இறந்தால், அவர்களுடைய குடும்பத்திற்கு 10,000 ரூபாய் கொடுக்கக்கூடிய ஒரு திட்டம் இப்போது இருக்கிறது. அவர்கள் ரிடையர் ஆகிப்போகும் போது வாழ வழியில்லாமல், கஷ்டப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, ஒரு என்.ஜி.ஓ. இடத்திலே 5ரூபாய் மட்டும் மாதம்பிடித்தம் செய்வோமேயானால், கிட்டத்தட்ட 10 லட்சம் பேர்கள் இருப்பதினால் 6 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு அரசாங்கத் திற்கு வரும். அதிலே ஒரு ஆயிரம் பேர் ஒரு ஆண்டிற்கு ரிடையர் ஆனால் கூட, அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத் தாலும் கூட, பாக்கி 5 கோடி ரூபாய் அரசாங்கத்திற்குச் சொந்தமாகும். எனவே, அரசாங்க ஊழியர்கள் ரிடையரா னால் 10,000 கொடுக்கலாம் என்ற திட்டத்தை அமுல் நடத்த வேண்டும் என்றும் அப்படிச் செய்தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல ரெவின்யூ இலாகாவிலே நிறைய உத்தியோகஸ்தர் கள் இருக்கிறார்கள். அதிலே 18 சதவீதம் இட ஒதுக்கீடு அரிசனங்களுக்கு செய்யப்பெறவேண்டும் என்று இருப்பது செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. ஆகவே நம்முடைய அமைச்சர் அவர்கள் அதையெல்லாம் பார்க்க வேண்டும். 18 சதவீதம் ரிசர்வேஷன் பில் அப் செய்திருக்கிறதா என்பதை பார்த்து, அதை செய்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதன் பிறகு வறட்சியை எடுத்துக் கொண்டால், பருவ மழை தவறிவிட்டதன் காரணமாக வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அப் படி வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, பல நல்ல காரியங்களை அரசு செய்து கொண்டிருக்கின்றது. இங்கே யெல்லாம் அதிலே நிறைய குறைபாடுகளைச் சொன்னார்கள். இருந்தாலும் கூட அதிகாரிகள் அந்தந்த அமைச்சர்கள் போட்ட உத்தரவை ஏற்று, இரவு பகலாக அந்த வறட்சிப் பணியில் தீவிர மாக பணியாற்றி வருகிறார்கள் என்பதை மிக பெருமையோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன். அப்படிச் செய்ததின் காரண மாகத்தான் இன்று குடி தண்ணீர் பிரச்சினை ஓரளவிற்கு தீர்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

இந்த வறட்சிப் பணிகளை பொறுத்த அளவிலே, மதுரை ஜில்லாவைப் பற்றி பலமுறை சொல்லியிருக்கிறேன். மதுரை ஜில்லாவிலே பெரியார் பாசன வசதியை தவிர, பாக்கி உள்ள அனைத்தையும் வறட்சி பகுதியாக ஏற்றுக்கொண்டு, வறட்சிப் பகுதிகளில் என்னென்ன பணிகள் செய்யப்படுகிறதோ அவை அனைத்தையும் அந்தப் பகுதிகளில் செய்ய வேண்டும் என்று பல முறை கேட்டிருக்கிறேன். இப்போதும் உங்களை பணிவோடும் அன்போடும் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் கொடுக்கும் திட்டம் 200 ரூபாய்க்கு குறைவாக மாத வருமானம் உள்ளவர்களுக்கு இருக்கக் கூடிய உபரி நிலங்களை கொடுக்கலாம் என்ற நல்ல திட்டத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக அவரை நான் பாராட்டுகிறேன். அந்த அடிப்படையில், ஆங்கிலேயர்கள் காலத்திலிருந்தே, பஞ்சமதரிசுகள் என்ற பெயரில் சில நிலங்கள் ஒதுக்கப்பட்டு, அரிசனங்களுக்கு வழங்கப்பட்டு, அவர்கள் அதில் விவசாயம் செய்து வந்தார்கள். இப்போது அந்த நிலங்கள் அவர்கள் கைவசம் இல்லை. காலத்தின் கோலம் என்னவோ தெரியவில்லை. அதிலே அரிசனங்கள் அல்லாத மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்துக் கொண்டு, அரிசனங்களை அங்கே இருக்க விடாமல் செய்யக் கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. அவை எல்லாம் பார்த்து, அவர்களுக்கு தக்க வழி வகை செய்து கொடுக்க வேண்டுமென நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி, இந்த சிப்காட்டின் மூலமாக இந்த பின் தங்கிய பகுதிகளுக்கு ஏதாவது தொழில் துறையை ஏற்படுத்தவேண்டுமென்ற அடிப்படையிலே செய்து கொண்டு வருகிறார்கள். அந்த இலாகா எங்கெங்கு வசதியிருக்கிறதோ, ஆங்காங்கே ஏற்படுத்த சிபாரிசு செய்கிறது. அப்படி என்னுடைய தொகுதியிலே இரண்டு இடங்களிலே வந்திருக்கிறது. தயவு செய்து அதை சாங்ஷன் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பாதிக்கப்பட்டவர்களுக்கு அதாவது தீப்பிடிப்பு, வெள்ளத்தால பாதிப்பு, வெடி விபத்தால் பாதிப்பு என்று வருகின்றபோது, இந்த அரசாங்கம் எந்த அளவுக்கு செய்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, என்னுடைய நிலக்கோட்டைத் தொகுதியிலே, வத்தலக்குண்டு வெடி விபத்திலே பாதிக்கப்பட்டு இறந்தவர்களுக்கு ரூ. 5,000 என்றும், காயம் பட்டவர்களுக்கு ரூ. 3,000 என்றும் நம்முடைய அமைச்சர் அவர்களும், இந்த மாநில அரசும் கொடுத்தது. இதுவரைக்கும் எந்த அரசாங்கமும் செய்து கொடுக்காத ஒரு நிலைமையை உருவாக்கிக் கொடுத்ததற்காக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலும் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், கார் விபத்து, தீயினால் விபத்து ஏற்பட்டவர்களுக்கு, அதிலே இறந்தவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். அது சாலச் சிறந்தது தான். இருந்தாலும் அதை 2,000 ரூபாயாகக் கொடுக்கவேண்டும். அதே போன்று, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் (மணியடிக்கப்பட்டது) அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. குப்புசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையிலே, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அதிதிராவிட மக்களுக்கும், அடுத்து அதற்குக் கீழே உள்ள கீழ்த்தரப்பட்ட மக்களுக்கும் ஏக்கர்கள் பட்டா செய்து கொடுத்து, அதை அவர்கள் 1 வருஷங்களுக்கு வேறு ஒருவருக்கும் விற்று விடவோ, அதை வாங்கவோ உரிமையில்லாத முறையில் கொண்டு வந்திருப்பதற்கு இந்த அரசுக்கு மக்களின் சார்பில் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதோடு, அப்படி கொடுக்கப்படுகின்ற நிலங்கள் அந்த மக்களிடமே முழுமையாக இருக்கின்றதா, இல்லையா என்று கேட்டால், அதை மற்ற வசதி படைத்தவர்கள் பயன்படுத்திக் கொண்டு, அந்த நிலங்களை அந்தக் காலக்கெடு முடிந்த பிறகு, அதை அவர்கள் பெயரிலே எழுதி வாங்கிக் கொள்ளுகின்ற நிலைமையிருப்பதை நாம் பார்க்கின்றோம். இதிலே அரசு அதிகாரிகள் கவனம் செலுத்தி, இந்த மாதிரி போகக்கூடிய நிலங்களை கூடுமானவரை இந்த நபர்களுக்கோ அல்லது அந்தந்த மக்களுக்கோ திருப்பி வாங்கிக் கொடுக்க முன்வர வேண்டுமென்று ஒரு நிபந்தனையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த அரசு அதிகாரிகளுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், குறிப்பிடக்கூடிய வகையிலே செய்யாறு வட்டம் ஆக்கூரில் ஒரு குறிப்பிட்ட அரிசன நபர் மீது பட்டா செய்யப்பட்டு, 10 வருஷத்திற்கு இடையிலேயே, அதற்கு முன்பாகவே அதை வேறு மேல்ஜாதிக்காரர்கள், வசதிபடைத்தவர்கள் அந்த நிலத்தை இன்று வைத்திருக்கிறார்கள் என்ற புகாரை அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பாக எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல. பொதுவாக, வசதி படைத்தவர்கள், அனைத்துப் பெரியவர்களும், பொதுவாக அரசு நிலங்களைக்கூட கைப்பற்றிக்கொண்டு, அந்த நிலங்களை பட்டா போட்டுக்கொண்டு, மார்க்கெட் கட்டுவதற்கு அல்லது பொது விவசாயக் கிடங்கு கட்டுவதற்கு, அல்லது பொதுவான காரியங்களுக்கு அதைத் திருப்பித் தராமல், அவர்கள் ஆக்கிரமித்திருப்பதை, அரசு நடவடிக்கை எடுத்து, அதைத் தடுத்து, அவர்களிடமிருந்து தயவுதாட்சண்யமின்றி உடனே அந்த நிலங்களை எடுத்து, பொது நிர்வாகத்திற்கு பயன்படுத்திக்கொள்ளத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோன்று, ஒருசில வசதி படைத்தவர்கள், பஞ்சாயத்து புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டு, அந்த நிலங்

களின் வழியாக செல்லக்கூடிய பொதுப் பாதை, போக்குவரத்து போன்றவற்றைக்கூட தடுத்து நிறுத்தி வைக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுகுறித்து அந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் கூட, கோர்ட்டுக்குச் சென்று, வாதாடி, கோர்ட்டு அதற்கான உத்தரவிட்டும், அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அதை ரத்து செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தும்கூட, அது இன்னும் ரத்து செய்யப்படாமல் ஓராண்டு காலமாக இழுத்துப் பறித்துக்கொண்டு அதை வைத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலைமையை என்னுடைய தொகுதியிலே பார்த்துக் கொண்டிருப்பது மிகவும் வேதனையைத் தருகின்றது என்பதை நான் இந்த மன்றத்திலே வைக்கிறேன்.

அதுமட்டுமல்ல, பட்டா பெறத் தகுதியற்றவர்கள் கூட பட்டா பெற்று, அந்தப் பட்டாவைக் கொடுக்கக்கூடாது என்று சம்பந்தப்பட்ட ஊராட்சியிலே சொல்லியும்கூட, பட்டா பெற்ற அந்த நபர்கள் இன்று ஆட்சி மாற்றத்தினால், இந்த பட்டா அளித்தமை தவறு என்று தெரிந்தும், மாவட்ட ஆட்சித் தலைவரால் உததரவிடப்பட்டும், இன்னும் அங்கே நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கின்றது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்பேர்ப்பட்ட பொது வேலைகளுக்காக தேவையான நிலங்களை கூட இந்த தனி நபர்கள் இன்னும் வைத்துக் கொண்டிருப்பதை, இந்த அரசு ஏன் எடுக்காமல் தாமதம் செய்கிறது என்பதற்கு, அரசு அதிகாரிகள்தான் காரணம் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20.)

அரசு அதிகாரிகளினால் நிபந்தனை பிறப்பித்த பிறகும் கூட அந்த குறிப்பிட்ட நபர்களிடமிருந்து அந்த நிலங்கள் பறிமுதல் செய்யப்படவில்லை; பட்டாக்கள் ரத்துச் செய்யப்படவல்லை என்றால் அந்த நிலைமையை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் சட்டங்கள் பிறப்பித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு நாம் அக்கறை காட்டுகிறோம் என்றால் அது நடைமுறையில் ஏழை, எளிய மக்களுக்கு நல்ல நோக்கோடு சென்று அடைய வேண்டும் என்பதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். அது மட்டுமல்ல கிராம சிப்பந்திகள ஓய்வு பெறும் வயது 60 வயது என்று நிர்ணயித்து இருக்கிறார்கள். அந்த சிப்பந்திகளின் 60 வயது முடிந்த பிறகு வாழ்வதற்கு வழிவகை இல்லாமல் இருக்கிற இந்த நிலையிலே, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு ப. நீர்த்தராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கை மீது பேசுகிற வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வருவாய்த் துறையை பொறுத்த வரையில்

முதன்மையாக வருவது விவசாயம் என்று எடுத்துக் கொள்ளலாம். அப்படி வருகிற நேரத்திலே வறட்சி தலைவரித்து ஆடுகின்ற இந்த நேரத்திலே விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த சூழ்நிலையில் நிலவரியை முழுமையாக தள்ளுபடி செய்யவேண்டுமென்று என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடன் வசூலலும் எந்த அரசியல் கட்சிகளுக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. இருந்தாலும் இந்த ஆண்டு வறட்சி என்ற காரணத்தினால் ஆலோசனை செய்து சலுகைகளை அறிவிப்பதிலே அரசாங்கத்திற்கு எந்த ஆட்சேபனையும் இருக்காது என்று கருதுகிறேன். வறட்சியை காணுகின்ற நேரத்திலே பல குழுக்கள் வந்து, பல அதிகாரிகள் வந்து பார்த்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களும், மத்திய கமிட்டியும் வந்து வறட்சியைக் கண்டார்கள். இருப்பினும் செயல்படுத்துகின்ற அந்த வேலைகளை துரிதப் படுத்த வேண்டும். நடைமுறையில் வறட்சி வேலைகளை காண வருகின்ற அதிகாரிகள் மக்கள் பிரதிநிதிகளுக்கு, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு தெரிவிப்பது இல்லை. இது பெரும் குறையாக இருக்கிறது. அவர்கள் அங்குள்ள பிரச்சினைகளை தெளிவாக எடுத்துச்சொல்ல உதவியாக இருக்கும்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வறட்சி என்றால் தர்மபுரி என்று சொல்லலாம். தர்மபுரியை வறட்சிப் பகுதியாக தெரிவியுங்கள் என்று கேட்கிற அதே நேரத்தில், அப்படி அறிவிப்பதோடு மட்டுமல்லாமல், மற்ற மாவட்டங்களை விட அதிகமாக நிதியுதவி அளித்து அந்தப் பகுதி மக்களுக்கு வாழ்க்கையில் உயர்வை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய மாவட்டம் முழுமையாக விவசாயத்தை நம்பியிருக்கிறது என்பதால், விவசாயம் பாதிக்கப்பட்டதால் மக்கள் அண்டை மாநிலங்களில் கூலி வேலை செய்ய செல்கிறார்கள் என்பதை பார்க்கிறோம்.

சாதாரண விவசாயிகளை எடுத்துக் கொண்டால் கடன் கட்டக் கூடாது; வழக்கறிஞர்கள் மூலமாகவோ மற்ற சூசகமான வழிகளிலோ செல்வது கிடையாது. சில விவசாயிகள் மில் அதிபர்களாக, பஸ் ஓனர்களாக, சினிமா தியேட்டர் அதிபர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களை ஏன் விவசாயிகளாக நாம் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

இந்த நேரத்தில் தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களை விட சிறப்பு முக்கியத்துவம் அளித்து வறட்சியைப் போக்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் பேச்சினை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டுகளுக்கான வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த

மைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சென்ற ஆண்டு வருவாய் வாரியத்தையும் கிராம அதிகாரிகளையும் நீக்கி, 1947 ஆம் ஆண்டு நாம் சுதந்திரம் அடைந்திருந்தாலும், சிறிய விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் உண்மையான சுதந்திரத்தை அடையச் செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கும் பாராட்டைத் தெரிவிதது்க் கொள்கிறேன்.

வருவாய்த்துறை வாரியத்தை நீக்கியதன் வாயிலாக மக்களுடைய சிரமங்களை நீக்கி அவர்கள் வாழ்விலே ஒரு நல்ல முடிவை ஏற்படுத்தியதற்காக நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வருவாய் வாரியத்தின் காரணமாக எவ்வளவு சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகிற வகையிலே நான் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அந்த வருவாய் வாரியம் நீக்கப்படுகிற கடைசி நாளிலே ஒரு உத்தரவு வருகிறது. என்னுடைய தாலுகாவைச் சேர்ந்த ஒரு சிறு விவசாயி வீட்டு மனை தனக்கு சொந்தமானது என்று சொல்லுகிறபோது ஒரு பெரிய மிராசுதார் அது தன்னுடைய இடம் என்று போராடுகிறார். அநத சிறு விவசாயி அப்பீலுக்குப் போய் ரெவன்யூ டிவஷனல் ஆபீசர் வரையிலே அவருக்குதான் அந்த இடம் என்று நன்மையான முடிவு ஏற்படுகிறது. ஆனால் ரெவன்யூ போர்டுக்கு போகிறபோது அந்த பெரிய மிராசுதாரரின் ஆண்டு வருமானம் 6 ஆயிரம் ரூபாய்தான் என்று குறிப்பிட்டு அந்த பட்டா நிலத்தை அந்த சிறிய விவசாயிடமிருந்து பறித்து பெரிய மிராசுதாரருக்குக் கொடுத்திருக்கிறார்கள். உண்மையிலேயே அந்த பெரிய மிராசுதாரருடைய ஆண்டு வருமானம் 6 ஆயிரம் அல்ல, அவருக்கு பல கட்டடங்கள் 5 லட்சம் ரூபாய் மதிப்பிற்கு இருக்கின்றன. அது மட்டுமல்ல அவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக என்று துப்பாக்கி லைசென்ஸும் வைத்திருக்கிறார். ஆனால் அவருடைய ஆண்டு வருமானம் 6 ஆயிரம் தான் என்று சொல்லி அந்த சிறிய விவசாயினுடைய உரிமையைப் பறிப்பதற்கு வருவாய் வாரியம் உதவி செய்திருக்கிறது என்ற நிலைமைதான் இருந்தது. இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமைகள் போக்கப்பட்டிருக்கின்றன. டெபுடி ஜமீன்தார்கள் என்று சொல்லப்படுகிற கிராம அதிகாரிகளுடைய தில்லுமுல்லுகளைப்பற்றி நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே பேசியிருக்கிறேன். அவர்களுடைய கொட்டத்தை அடக்கி கிராம மக்களுக்கு எல்லாம் உண்மையான சுதந்திரத்தைக் கொடுக்கிற முறையிலே கிராம அதிகாரிகளை நீக்கிவிட்டு அந்த இடங்களிலே நிரந்தரமான புதிய அதிகாரிகளை நியமிக்க இந்த அரசு முன்வந்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, பினாமி நில ஒழிப்புச் சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டது. 1971 ஆம் ஆண்டிலே கொண்டுவரப் பட்ட அந்தச் சட்டத்திலே பல பல தவறுகள் இருக்கின்றன என்று பேசப்பட்டாலும் அந்தச் சட்டத்தின் பலனை சரியான முறையிலே அடையவேண்டுமென்றால் அந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்ற முறையிலே திருத்தம் கொண்டுவந்து இங்கே நிறைவேற்றப்பட்டது. ஆனால் மத்திய அரசு அதற்கு அனுமதி இதுவரையில் அளிக்கவில்லை. மத்திய அரசின் அனுமதியைப் பெற்று சாதாரண மக்கள் அந்தப் பலனைப் பெறுவதற்கான வழிவகைகளை அரசு உடனடியாக செய்ய வேண்டும்.

தீ விபத்துக்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்முடைய அரசு நல்ல பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது. தீ விபத்துக்கள் ஏற்பட்டபிறகு நாம் கொடுப்பதைவிட தீ விபத் துக்களைத் தடுப்பதற்காகவும் தீ விபத்துக்கள் ஏற்பட்டு விட்டால் உடனடியாக பயர் என்ஜினை கொண்டுவரக் கூடிய வசதிகளைச் செய்வதற்கும், தீயணைப்பு நிலையங்களை ஆங் காங்கே ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கவேண்டும். மதுராந்தகம் தொகுதியிலே பல ஆண்டுக் காலமாக மக்களுடைய கோரிக்கையாக இருந்துவருகின்ற அதை ஏற்றுக்கொண்டு தீயணைப்பு நிலையம் துவங்க இருப்பதற்காக நான் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் அதே நேரத்திலே ஒரு சில கருத்துக்களையும் இந்தநேரத்திலே சொல்ல விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் பல மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் அவரை நேரடியாகச் சந்தித்துக் குறைகளைச் சொல்லக்கூடிய நிலைமை இல்லை. அந்த நிலைமையைப் போக்கவேண்டுமென்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒவ்வொரு வட்டார அலுவ லகத்திலேயும் மாதத்திற்கு ஒருமுறை குறைந்த பட்சம் 2 மாதத் திற்கு ஒரு முறையாவது அமர்ந்து அந்த மக்களுடைய குறை களை கேட்டறிந்து அவைகளை நீக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பனை வெல்லத் திற்கு இருமுனைவரி போடப்பட்டிருக்கிறது அதனால் வியா பாரிகள் அதிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சிக்கிறார்கள். அத னால் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. அந்த நிலைமை போக வேண்டுமென்றால் வெல்லம் உற்பத்தியாகின்ற இடத்திலேயே அதற்கு ஒரு முனை வரியாகவசூலித்தால் அரசுக்குக் கிடைக்கின்ற வருமானம் அதிகமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12.30]

பித்தளைப் பாத்திரங்களுக்கு இருமுனை வரி இருக்கிறது. ஆனால் பெரிய வசதி படைத்தவர்கள் பயன்படுத்துகின்ற ஸ்டீல் பாத்திரங்களுக்கு ஒருமுனை வரிதான் இருக்கிறது. எனவே, இந்தப் பாகுபாடுகளை அகற்றிப் பித்தளைப் பாத்திரங்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி விதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு சில பகுதிகள் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மதுராந்தகம் தாலுக்காவில் இரண்டு பிர்க்காக்களை மட்டும் வறட்சிப் பகுதிகளாக அறிவித்திருக்கிறார்கள். இந்த இரண்டு பிர்க்காக்களுக்கிடையே பல கிராமங்கள், இருக்கின்றன. எனவே, இந்த இரண்டு பிர்க்காக்களில் உள்ள வறட்சி நிலைமை மற்ற இடங்களில் இல்லை என்றால் அந்தப்பகுதி மக்கள் சிரமப் படுவார்கள். இங்கு பெய்த மழைதான் அவர்களுக்கும் பெய்திருக்கிறது. இந்தப் பகுதி மக்களுக்கு என்னென்ன அசௌகரியங்கள் இருக்கின்றனவோ அதே நிலைமைதான் அவர்களுக்கும் இருக்கிறது. இதை உணர்ந்து அந்தத் தாலுக்கா முழுவதையும் வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வருவாய்த் துறை மானியத்தை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. துரைமுருகன் : மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்துறை அமைச்சரவர்களால் இம்மாமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை இந்த அவையிலே வைக்க விரும்புகிறேன். ஒரு அரசினுடைய பல்வேறு இலாக்காக்களிலே இந்த வருவாய் இலாக்காதான் இருதயம் போன்று இயங்க வேண்டிய ஒன்றாகும். ஆனால் இன்றைக்கு அந்த இலாக்கா இருதயம் போன்று இருந்து, உடலிலே, வருகின்ற இரத்தத்தைச் சுத்தப் படுத்தி மீண்டும் உடலின் பல பாகங்களுக்கும் அனுப்ப வேண்டிய பொறுப்பு இருதயத்திற்கு உண்டு. அதைப் போல வசூலிக்க வேண்டிய கடன்களையெல்லாம் வசூலிப்பது, செய்ய வேண்டிய செலவுகளைச் செய்ய மீண்டும் அங்கிருந்து புறப்பட்டுப் போகின்ற அளவில் செயல்பட வேண்டிய இந்த இலாக்கா இன்றைய தினம் ஸ்தம்பித்துப் போய், முடங்கிய நிலையில், சீரழிந்த நிலையில் இருந்து கொண்டிருக்கின்றது என்பதை முதற்கண் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

இந்த இலாக்காவின் முக்கிய நோக்கமே நில வரிகளை விதிப்பது, நில வரிகளை வசூலிப்பது, வேளாண்மை வருமானத்தின் மீது வரி விதிப்பது, நிலப்புற வரி விதிப்பது போன்ற பல்வேறு வரிகளை விதித்து அரசுக்குச் சேர வேண்டிய கடன்களை வசூல் செய்திருக்க வேண்டும். இதுதான் அவர்களுடைய நாடி நரம்

பாக இருக்கக்கூடிய வேலை. ஆனால் அந்த வேலைகளை இந்த இலாக்கா செய்திருக்கிறதா என்றால் அதைச்செய்ய வேண்டிய முறையில் செய்யவில்லை ; இந்த ஆண்டில் செய்யத் தவறியிருக்கிறது. இந்த இலாக்கா ஒட்டு மொத்தமாகத் தன்னுடைய பணியிலிருந்து சீர்குலைந்து போயிருக்கிறது என்பதை நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். இதைச் சொல்வதால் மாண்புமிகு அமைச்சரவர்கள் என்மீது கோபித்துக் கொள்ளக்கூடாது. என் மீது மட்டும் ஏன் குற்றஞ்சாட்டுகிறீர்கள், என்னுடைய இலாக்கா மட்டும்தான் கெட்டுப் போய் இருக்கிறதா, வேறு எந்த இலாக்காதான் வாழ்கிறது, இதை மட்டும் பிரித்துச் சொல்கிறீர்களே என்று அவர்கள் கேட்கக் கூடும். ஒட்டு மொத்தமாகவே கூட நான் சொல்லலாம், எல்லா இலாக்காக்களையும் பற்றியும் கூட நான் சொல்லலாம். இருந்தாலும் இருதயம் பட்டுப் போய் விடக்கூடாதே என்பதற்காகத்தான் பட்டுக் கோட்டைக்காரரிடம் இதை ஞாபகப்படுத்தியிருக்கிறேன் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்தக் காரியத்தையும் இந்த இலாக்கா செய்யவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டுவேன். நில வரி விதிப்பது, நிலத் தீர்வைகள் விதிப்பது, எந்தெந்த நிலங்களுக்கு எவ்வளவு தீர்வை போடுவது, மானாவாரி சாகுபடி செய்தால் எவ்வளவு விதிப்பது, புஞ்சைக்கு எவ்வளவு விதிப்பது, நஞ்சைக்கு எவ்வளவு விதிப்பது, ஏரி நீர்ப் பாசனத்திற்கு எவ்வளவு, ஆற்றுப் பாசன நிலங்களுக்கு எவ்வளவு, கிணற்றுப் பாசன நிலங்களுக்கு எவ்வளவு விதிப்பது, வாழைக்கு எவ்வளவு, கரும்புக்கு எவ்வளவு, சோளத்திற்கு எவ்வளவு, தரிசு நிலத்திற்கு எவ்வளவு என்று விதிப்பது, சாவியாகிவிட்ட நிலத்திற்கு எவ்வளவு விதிக்க வேண்டும். எந்த வரிகளை விதிப்பது, யாருக்கு விதிப்பது அந்தந்த நிலங்களைச் சர்வே செய்து பார்த்து எத்தனை ஏக்கர் இருக்கிறது, எத்தனை செண்ட் இருக்கிறது என்று பார்த்து, என்ன பயிரிடப்பட்டிருக்கிறது என்று கணக்குப் போட்டுப் பார்த்து வரி விதிக்கின்ற கணக்குப் பிள்ளை இன்றைக்கு ஊரிலே இல்லை ; வசூல் செய்ய வேண்டிய மணியக்காரர் இன்றைக்கு ஊரிலே இல்லை. அவர்கள் வீட்டிற்குப் போய் ஐந்து மாதங்களுக்கு மேல் ஆகிறது. ஜனவரி 1 ஆம் தேதிக்குப் பிறகு மணியக்காரர்கள் வசூல் செய்ய வேண்டிய அந்த வரிகளை வசூல் செய்ய முடியாத அளவிற்கு நிர்வாகம் ஸ்தம்பித்துப் போயிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னிடத்திலே நிலம் இருக்கிறது ; நான்தான் பட்டாதாரர் என்றால் நான்தான் பட்டாதாரர் என்பதற்குள்ள உரிமை என்ன ? அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டும். ஆனால் அந்த கிஸ்தியை வசூல் செய்வதற்குச் சர்க்காரிலே ஆட்கள் இல்லை. இன்றைக்கு அந்த வேலையை யார் பார்த்துக்கொள்கிறார்கள் ? கிராமப் பகுதிகளிலே என்ன மாற்று ஏற்பாட்டை

செய்திருக்கிறார்கள்? மாற்று ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். என்ன ஏற்பாடு என்றால், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் கவனித்துக் கொள்வார்கள் என்று சொல்கிறீர்கள். ஊரிலே உள்ள நாட்டியக்காரி யாருக்கு என்று ஆடுவாள்? பல்வேறு ரெவின்யூ வில்லேஜ்கள் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் சேர்த்து ஒரே ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரைப் போட்டிருக்கிறார்கள்.

அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர் காய்கிற வெயிலிலே அங்கே இருக்கிற சாவடியை விட்டு வெளியே போவது கிடையாது, அதற்குப் பிறகு நிலத்திலே என்ன பயிர் என்பதை யார் நிர்ணயிப்பது இந்த நேரம் கணக்குப்பிள்ளையாக இருந்தால் எல்லாவற்றையும் குறித்து ரூ. 18·25 காசு என்று ஒரு கிஸ்தியைச் சொல்லி, இன்னாள், இன்ன இடத்திலே வசூல் செய் என்று மணியக்காரரிடத்திலே கொடுத்திருப்பார். மணியக்காரர் தண்டலிலே உட்கார்ந்திருப்பார். ஆனால், அதற்கு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? கேட்டால், சர்வே அசிஸ்டென்ட்ஸை நாங்கள் அவருக்குக் கூடப் போட்டிருக்கிறோம் என்பீர்கள். சர்வே அசிஸ்டென்ட்ஸ் கிராமங்களைத் தேடிப் போய், எந்த எந்தப் பட்டா, யார் யாருக்கு, ஜாய்ன்ட் பட்டா யாருக்கு இருக்கிறது. யார், யாருக்கு ஜாரிப்பத்திரம் எழுதப்பட்டது? யார் எவ்வளவு பணம் கட்டுகிறார்கள் என்ற விவரம் தெரியாமலே, ஊருக்குவந்து மணியை விற்கிற குருவிக்காரனைப் போல், சுற்றுகிற நிலைமை உருவாகியிருக்கிறதே தவிர, எந்தவிதமான வேலையும் நடைபெறவில்லை. எனவே, இந்த வருவாய்த் துறையினுடைய முக்கிய குறிக்கோள் நிலவரி வசூல் செய்வது. அந்த வரியை வசூல் செய்ய முடியாது ஸ்தம்பித்துப் போயிருக்கிற காரணத்தால், அந்த இலாகா "டோட்டலி டெட்"—செத்துப் போன இலாகா என்பதை நான் மிக்க பணிவன்போடு இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கிராமங்கள் தான் இந்த வருவாய் இலாகாவினுடைய அடித்தளமாக விளங்குகிற நிர்வாகம் என்று நீங்களே குறிப்பிட்டிருக்கிறீர்கள். இன்றைக்கு அந்த நிர்வாகம் என்ன ஆகியிருக்கிறதென்றால், கிராமீயமே ஸ்தம்பித்துப் போயிருக்கிறது.

கிராமங்களிலே எந்த வேலையும் நடப்பதில்லை. கிராம மக்களுடைய கோரிக்கையை யார் இன்றைக்குச் சொல்வார்கள்? கணக்குப் பிள்ளை, மணியக்காரர் சொல்வார், பஞ்சாயத்து பிரசிடென்ட் சொல்வார். இரண்டு பேருமே கிடையாது. எனவே, ஊரிலே கிணற்றிலே தண்ணீர் இல்லை, மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்வதற்கு இன்றைக்கு ஆளில்லை, வறட்சி இருக்கிறது என்று சொல்வதற்கு ஆளில்லை. குடிநீர் கிணற்றை ஆழப்படுத்த வேண்டுமென்று சொல்வதற்கு மக்களுடைய பிரதிநிதிகள் யாரும், அந்த ஒவ்வொரு கிராமப் பிரதிநிதிகள் யாரும் கிடையாது. இந்த நிலையிலே நிர்வாகம் 5 மாத காலமாக ஸ்தம்பித்துப் போயிருக்கிறது. நீங்கள்

[திரு. துரைமுருகன்]

கேட்டால் சொல்கிறீர்கள், நாங்கள் இப்பொழுதுதானே முழு நேர ஊழியர்களுக்காக, சர்வீஸ் கமிஷன் மூலமாக ஆள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று. நீங்கள் ஆள் எடுத்து அதற்குப் பிறகு வேறு, வேறு வேலைகள் நடந்து, பிறகு அவருக்கு போஸ்டிங் போட்டு, அதற்குப் பிறகு ஊரைத் தேடிப் போய், அதற்கு மேல் அடங்கல் சிட்டாவைப் பார்த்து, அதற்குப் பிறகு கிராமங்களைச் சுற்றிப் பார்த்து, புறம்போக்கு நிலம் எது, பட்டா நிலம் எது, எந்த எந்த மரம் எங்கே யிருக்கிறது என்று கண்டு பிடித்து, எல்லாம் முடிவதற்குள்ளாக விடிந்து போய்விடும். அடுத்த ஆண்டு மறுபடியும் வசூல் செய்ய வேண்டிய நிலைமை வரும். ஓராண்டுக் காலம் நிலவரியை வசூல் செய்ய முடியாத நிலைமைக்கு நிர்வாகம் சீர்குலைந்திருப்பது நியாயந்தானா என்பதை நீங்கள் ஒருகணம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு அவர்களே, சொல்லியிருக்கிறார்கள், தமிழ்நாட்டிலே 1,097 பிர்காக்கள் இருக்கின்றன. ஆனால், வில்லேஜ் ஆபீசர்கள் எவ்வளவு? நீங்களே கணக்குக் கொடுத்திருக்கிறீர்கள், 12,000 பேர்கள் என்று. இந்த 12,000 பேர்களுக்கு அந்த 1,000 பேர்கள் எப்படிப் போதும். அவர்கள் வேலைகளைச் சரிவர செய்வார்கள் என்று நீங்கள் எப்படி எதிர்பார்க்கிறீர்கள்? கிராமத்திலே செத்தவன்—பிறந்தவன் கணக்கு எழுதக் கூட ஆள் கிடைக்காத நிலைமை உருவாகியிருக்கிறது. இந்த நாட்டிலே ஒரு சர்க்கார் இயங்குகிறதா என்பதை மக்கள் கேட்க மாட்டார்களா? உங்களுக்கே மனசாட்சி இருக்க வேண்டாமா? கிராமத்திலே குழந்தை பிறந்தால் சொல்வதற்கு, செத்துப் போனால் சொல்வதற்கு, தூக்குப் போட்டுக் கொண்டால் சொல்வதற்குக் கூட ஆளில்லாமல் நாதியற்றுப் போய், நாடோடி மக்களைப் போல், கற்கால மக்களைப் போல், கிராமச் சூழ்நிலை உருவாகியிருப்பதை, இந்தச் சர்க்கார் தெரிந்திருக்கிறதா? உங்களுக்கு எங்கே இதற்கெல்லாம் நேரம்? உங்களுக்கு விழாக் கொண்டாடுவது, விழா எடுப்பது, பிறகு அதையெல்லாம் பத்திரிகையிலே போட்டுக் கொள்வது, இதற்கெல்லாம் நேரம் இருக்கிறதே தவிர, நாட்டைப் பற்றி சிந்திக்க நேரம் உண்டா? வறட்சி ஏன் ஏற்பட்டது? உங்களுடைய அஜாக்கிரதைப் போக்கினால்தானே வறட்சி ஏற்பட்டது. வறட்சி எப்பொழுது தெரியும்? நவம்பர் மாதமே தெரியும். தென் மேற்குப் பருவ காற்று பொய்த்துப் போய்விட்டது. வடகிழக்குப் பருவக் காற்று பொய்த்துப் போய் விட்டது. தென் மேற்குப் பருவக் காற்று பொய்த்து அப்பொழுதே, வேர்க்கடலை தீய்ந்து போய் விட்டது. சம்பா நாற்று உலர்ந்து போய்விட்டது. நடவடிக்கை எடுங்கள் என்று சர்க்காருக்கு, அன்றைக்குச் சட்ட மன்ற உறுப்பினர்கள் எல்லாம் கடிதம் எழுதினோம். இங்கே உட்கார்ந்திருக்கிற அருமை நண்பர் கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

திரு. திருவேங்கடம் அவர்கள் முதலமைச்சருக்கே கடிதம் எழுதினார். ஆனால், யாரிடத்திலிருந்தும் பதில் வரவில்லை. முதலமைச்சர் மட்டும் பதில் எழுதினார். தக்க நடவடிக்கை நான் எடுக்கிறேன், தக்க இலாகாவிற்கு நான் அனுப்பி வைக்கிறேன் என்று. முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து ரிப்ளை வந்தது. ஆனால், எப்பொழுது, செப்டம்பரில், செப் டம்பர் போயிற்று. அக்டோபரும் போயிற்று, நவம்பர் மாதம் என்ன நடந்தது ? ஆனந்த விகடன் விழாவிலே—சென்னையிலே—கலந்து கொள்ள வேண்டிய முதல் அமைச்சர் கலந்துகொள்ளவில்லை. அப்பொழுது நம்முடைய அற நிலையத்துறை அமைச்சரிடம் முதலமைச்சர் எங்கே என்று கேட் டால், அவர் வறட்சியைப் பார்க்க வட ஆற்காடு போயிருக்கி றார்கள் என்றார்கள். அலுவலர்கள் எல்லோரும் அப்பொழுது தீபாவளிக்கு ஊருக்குப் போயிருந்தார்கள். ஆனால், உடனே தந்தி அடித்து, முதல்வர் வருகிறார், உடனே முந்திக்கொண்டு ஓடி வாருங்கள் என்று எல்லா ஆபீசர்களையும் கொண்டு வந்து நிறுத்தி, காவேரிப்பாக்கம் ஏரியிலே காத்துக் கிடந்தார்களே தவிர, முதல் அமைச்சர் அவர்கள் வரவில்லை. அப்பொழுது உங்களுக்கு வறட்சிப் புரியவில்லையா ? ஆக, நவம்பர் போயிற்று, அதற்குப் பிறகு டிசம்பர் போயிற்று. ஜனவரி வந்தது. அதற்குப் பிறகு இங்கே 72 உறுப்பினர்கள் குறிப்பிட்ட இந்தப் பஞ்ச நிவாரணம் பற்றி இதே அவையிலே பேசினார்கள். அப்பொழுதும் புரியவில்லை. பிறகு, வட இந்தியாவிலிருந்து, மத்திய அமைச்சர் சுக்ளா வந்து, இந்தச் சர்க்கார் எவ்விதமான தாக்கீதும் எங்களுக்கு அனுப்பவில்லையென்று சொன்னதற்குப் பிறகு, முதலமைச்சர் இங்கிருந்து புறப்பட்டுப் போகிறார். போய் இறங்குகிற இடம், முதலிலே என்னுடைய தொகுதியான இரா ணிப்பேட்டை, நான் கேட்கிறேன், ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் இந்த முதலமைச்ச ருடைய வருகையைப் பற்றி அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப் பினருக்கு தெரிவித்திருக்க வேண்டாமா ? போய் இராணிப்பேட் பேட்டையில் இறங்குகிறார். என்னுடைய தொகுதியிலே என்ன மிச்சம் ? வள்ளிமலை ஏரியாவிலே, அவரோடு வந்த கார் ஒன்று மோதி ஒரு பையனுடைய கால் ஒடிந்ததைத் தவிர, இதுவரையிலே ஏதாவது என்னுடைய தொகுதிக்குக் கிடைத்திருக் கிறதா ? சுற்றியிருக்கிற பஞ்சாயத்து யூனியன்களையெல்லாம் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்திருக்கிறீர்கள்.

[பிற்பகல் 12·40]

நான் உங்களைக் கேள்வி கேட்கிறேன் என்ற ஒரே காரணத் திற்காக என்னுடைய வாலாஜா ஒன்றியத்தை மட்டும் தன்னிறை வுத் திட்டத்தில் கழித்து விட்டீர்கள். பிறகு என்ன நிலைமை நேராக ஏரிக்கரையிலே இருந்து கேட்கிறார், எத்தனை அடி ஆழத்தில் தண்ணீர் கிடைக்கும் என்று. எதற்காக இந்தக் கிணறு ? டிரிங்கிங் பர்ப்பசுக்கா, இரிகேஷன் பர்பசுக்கா ? டிரிங்கிங் பர்ப்பசுக்கு என்று சொன்னால் கிராமத்தில் இருக்கின்றவர்கள்

எல்லாம் 10 மைல் நடந்து வந்து காவேரிப்பாக்கம் ஏரியில் இருந்து தண்ணீர் எடுத்து குடிப்பார்களா? அல்லது ஒரே ஒரு கிணறு வெட்டி காவேரிப்பாக்கம் ஏரியிலே நீங்கள் பாசன வசதி செய்து கொடுக்கப்போகிறீர்களா? என்ன நிலைமை இருக்கின்றது? எத்தனை அடி ஆழத்திலே தண்ணீர் வந்தால் என்ன? அங்கே என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? உங்களுக்குத் தெரியாதா துரைமுருகன். 115 இலட்சம் ரூபாய் குடிநீர் வடிகால் வாரியத்துக்கு நாங்கள் ஒதுக்கி இருக்கிறோம். கிராமம் தோறும் கை பம்பு போடுகிறோம் என்று சொல்லுவீர்கள். நீங்கள் கைபம்பு போடுவதற்காக ஒதுக்கியிருக்கிறீர்கள். என்றைக்கு? செப்டம்பரிலே ஆரம்பித்து மார்ச்சு மாதத்திற்கு வந்திருக்கிறீர்கள். இந்த 6 மாத காலம் இந்த அரசாங்கம் தூங்கியதன் விளைவாகத்தான் இன்றைக்கு நான் முன்னாலே சொன்னதைப் போல தமிழ்நாட்டு தாய்மார்கள், இராஜஸ்தான் பாலைவனத்திலே நடப்பதைப்போல 6, 7 குடங்களைத் தலையிலே வைத்துக்கொண்டு தண்ணீருக்கு அலைகின்ற காட்சி தமிழ்நாட்டு வீதிகளிலே நடந்துகொண்டிருக்கின்றது. வயல் ஓரத்திலே வரப்பு ஓரத்திலே நடந்து கொண்டிருக்கின்றது. ஆனால், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. குடிநீர் வடிகால் வாரியம் என்று ஒன்று இருக்கின்றது. உங்கள் சர்க்காருக்கு ஒட்டுமொத்தமாக அவப்பெயர் சேர்த்துக் கொடுப்பதற்கு இன்றைக்கு இருக்கிற பிரிவு இந்தக் குடிநீர் வடிகால் வாரியம்தான். அங்கே போய் கேட்டால் சொல்லுகிறார்கள். "நாங்கள் என்ன சார் செய்வது, ரிக் இல்லை துளைக்கிணறு போடுவதற்கு, என்கிறார்கள். அமைச்சரைக் கேட்டால் உத்திரபிரதேசத்துக்குக் கடிதம் எழுதி இருக்கிறேன் என்கிறார். நிலக்கரி கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் நம்முடைய மின்சாரத்துறை அமைச்சர் பறந்துபோகிறார் ஹைதராபாத்துக்கு. நேரடியாகக் கடிதம் எழுதினால் கிடைக்காது என்று அவர் பறக்கிறாரா? பாராட்டுகிறேன். ஆனால் அதே உணர்வு ஏன் நமது ரெவின்யூ அமைச்சருக்கு எழவில்லை. அவர் உத்திரப்பிரதேசத்துக்குப் போயிருக்கக் கூடாதா? போய் அங்கே இருந்து கேட்கக் கூடாதா? நீங்கள் கடிதம் எழுதி இருந்தால் 6 மாத காலம் இப்போதே செத்துப்போய்விட்டது. இன்னொரு 6 மாத காலத்திற்குள்ளாக மக்கள் எல்லாம் குடிதண்ணீர் கிடைக்காமல் செத்துப் போனார்கள் என்ற அவப்பெயரை நீங்கள் தேடிக்கொள்ளப் போகிறீர்களா? எங்கே குடிநீர் வாரியம்? கீழ பம்பை போட்டுவிடுகிறீர்கள். ஹாண்டு பம்ப் உண்டா என்றால் கிடையாது. இன்றைக்கு அதுதான் நிலைமை.

எவ்வளவு வேகமாக வறட்சி நிவாரணம் நடைபெறுகிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்லுகிறேன். கலக்டரிடத்திலே அதிகாரத்தைக் கொடுத்து புயல் வேகத்திலே செயல்படு என்று சொல்லி இருக்கிறார்கள். மக்கள் குழு என்று எம்.எல்.ஏ.கள் எம்.பி.க்கள் போன்றவர்களைப் போட்டிருக்கிறார்கள். அந்த மக்கள் குழுவிற்கு வாருங்கள் என்று கலெக்டர் போனமாதம்

27 ஆம் தேதி எங்களுக்குக் கடிதம் அனுப்பினார்கள். நாங்கள் போவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் திடீரென்று ஒரு கடிதம் அனுப்புகிறார். 27 ஆம் தேதி அல்ல. 28 ஆம். தேதி வாருங்கள் என்று. நான் அப்போது கூட சொன்னேன் இவர் இப்படித்தான் தினம் தினம் சொல்லுகிறார் எப்படிப் போவது என்று. பாவம் ஓடினார் பாபு ஜனார்த்தனம். போய்ப் பார்த்தால் இன்றைக்கு ஸ்டாக் இல்லை (அவுஸ்புல் என்று சினிமா கொட்டகையிலே எழுதுவதைப்போல) என்று எழுதி வைத்திருந் தார்கள். மக்கள் குழுக் கூட்டம் இல்லை என்று ஒரு போர்டு அங்கே எழுதிவைக்கப்பட்டு இருந்தது. பாபு ஜனார்த்தனம் திரும்பிப் போனார் அந்தக் கூட்டம் 28 ஆம் தேதி கூடவில்லை. அடுத்து எங்களுக்கு ஒரு கடிதம் வருகிறது. 5 ஆம் தேதி இந்த மாதம் ஞாயிற்றுக்கிழமையாகப் பார்த்து வாருங்கள் என்று. 5 ஆம் தேதி போனார்கள். யாராவது பதில் சொல்வதற்கு ஆள் இருந் தார்களா அன்றைக்கு. நேற்று ஒரு கடிதம் வருகிறது. 12 ஆம் தேதி வாருங்கள் என்று. வறட்சி பற்றி ஒரு மாவட்டத்திலே அதுவும் சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் கள் கொண்ட மக்கள் குழுவிடம் பேசுவதற்கு ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் 27 ஆம் தேதி வா 28 ஆம் தேதி வா அடுத்த மாதம் 5 ஆம் தேதி வா அடுத்த மாதம் 12 ஆம் தேதி வா என்கிறார்; ஈட்டிக் காரனுக்குக்கூட இந்த பதில் கிடைக்காது. சனீஸ்வரன் விநாயகரைப் பிடிக்கப் போனபோது கூட நாளைக்கு வா என்றுதான் எழுதினான். ஆனால் நீங்கள் தேதி கொடுத்து வளர்த்துக்கொண்டு போகிறீர்களே இதுதான் இந்த மக்கள் பிரதிநிதிகளைச் சந்திக்கின்ற அவர்களை மதிக்கின்ற அழகா? எங்கே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நேரம் கிடைக்கின்றது. கோவில் என்றும் குளம் என்றும் * * * *

ஆனால் சொல்கிறார்கள். கலக்டர்களுக்கு கடிதம் எழுது கிறார்கள். ஆனால் பெரிய அதிகாரிகள் மத்தியிலே டிபரன்ஸ் ஆப் ஒப்பினியன் இருக்கிறது. கார்த்திகை தீபம் போல உயர்ந்து இருப்பவர்கள் ஒரு குரூப். இந்த அரசாங்கத்திற்கு செல்லமாக இருப்பவர்கள் இன்னொரு குரூப் என்று பிரிந்து இருக்கிறார்களாம்.

*(அவர் எழுதினால் இவர் வேண்டாம் என்பதும்), இவர் எழுதினால் இவர் வேண்டாம் என்பதும் போன்ற நிலையிலே நாடு நடந்து கொண்டு இருக்கின்றது. வறட்சிப் பணி நடவடிக்கைகள் எதுவும் நடக்கவில்லை. ஆனால் கித் தாய்ப்பு பேசுகிறார்கள். நாங்கள் துரித நடவடிக்கை எடுக் கிறோம் என்று. என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். வறட்சி உள்ளது இல்லையா நிலைமை மோசமா இல்லையா? ஏன் அறிவியுங்களேன்? வடார்க்காடு மாவட்டம் தர்மபுரி மாவட்டம் ஆகிய மாவட்டங்கள் பஞ்சப் பிரதேசம் என்று. அறிவிக்க தயங்குவானேன். அப்படி அறிவித்து நடவடிக்கை எடுத்து இருக்கிறார்களா என்றால் அதுவும் கிடையாது. எனவே பொத்தாம் பொதுவிலே ஓடுகிறது இந்த சர்க்கார். வெள்ளைக்

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

காரன் இருந்தபோது இந்த நாட்டிலே எந்த மந்திரி இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த அரசாங்க நிர்வாக இயந்திரம் ஓடு வதைப்போல ஒரு அட்மினிஸ்டிரேஷன் வைத்திருந்தான். அது தர்மத்திற்குத்தான் ஓடுகிறதே தவிர உங்களுடைய சாதுர்யத் திலே இந்த சர்க்கார் நடக்கிறது என்றா கருதுகிறீர்கள்? இடை யாது. அதைப் பற்றி நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுவது வறட்சி நிவாரணப் பணியிலே இந்த சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கட மைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போன்று இங்கே இன்னொன்றையும் குறிப்பிட்டிருக் கிறார்கள். இங்கே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே பார்த்தேன். தொழிற்சாலைகளுக்கு குறிப்பாக பெல் நிறு வனத்திற்கு நிலம் எடுத்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதி இராணிப்பேட்டையில் வடகால் நரசிங்கபுரம் புளியந்தாங்கல் சீக்கராஜபுரம் மோட்டூர் வாலாஜாபேட்டை முகுந்தராயபுரம் கிருஷ்ணாபுரம் பெரியந்தாங்கள் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நிலங்களை எடுக்கிறார்கள். கிட்டத்தட்ட 10,000 பேர்கள் வாழ்கிற அந்தப் பகுதியிலிருந்து நிலத்தை ஆர்ஜிதம் செய்கிறார் கள். இன்றைக்கு அந்த குடும்பங்கள் வீட்டையும் இழந்து நிலத் தையும் இழந்து நடுத்தெருவில நிற்கிறார்கள். 5 ஏக்கர் 2 ஏக்கர் 3 ஏக்கர் நிலத்திலே பம்ப்பு செட் வைத்து பயிர்செய்த நிலத்தையும் இழந்துவிட்டார்கள். எல்லாவற்றையும் இழந்து இன்றைக்கு அனாதைகளாக பங்களாதேஷ் அகதிகளைப் போல அவர்கள் வெளியிலே துரத்தப்படுகிறார்கள். இது நியாயம் தானா?

இங்கே இருக்கிற மிருககாட்சிசாலையை மாற்ற வேண்டும் என்ற போது கூட—இரயில்வே இலாகாவுக்கு அந்த இடத்தைக் கேட்டார்கள்—வண்டலூரிலே அதற்கு மாற்று இடம் கொடுத்து அங்கே மாற்றப்பட இருக்கிறது; மிருகங்களுக்கு புகலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் என் தொகுதியிலே இருக் கிற அந்த மக்களுக்கு ஒரு புகலிடம் இல்லை. வீடும் இல்லாமல் நிலமும் இல்லாமல் அனாதைகளாகத் திரிவார்கள்.

இங்கே இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இன் றைக்கு எடுக்கிற நிலத்திற்கு என்ன விலை என்றால் அன்றைக்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் ஒன்றைச் சொன்னார். நஞ்சை நிலத்திற்கு சென்டுக்கு 60 ரூபாய் புஞ்சை நிலத்திற்கு சென் டுக்கு 50 ரூபாய் என்று சொன்னார்கள். இப்படி ஒரு சென்டுக்கு 50 ரூபாய் 60 ரூபாய் என்று கொடுத்தால் உங்களுக்கு கொஞ்சம் கூட மனசாட்சி வேண்டாமா? பக்கத்திலே இருக்கிற நிலத் திற்கு 1977-இல் 12 சென்டுக்கு 3,600 ரூபாய். அதை விற்றவர் பட்டு, வாங்கியவர் பெருமாள். 1976-இல் 60 சென்டு 12,000

ரூபாய். விற்றவர் நாராயணசாமி வாங்கியவர் பார்னஸ். 1978-ல் 80 சென்டு நிலம் 8,000 ரூபாய் விற்றவர் வரதராஜன் வாங்கியவர் பெரியசாமி.

இருபத்து எட்டு சென்டு நிலம் 1978-லே 3,000 ரூபாய் விற்றவர் கோபால் கவுண்டர் வாங்கியவர் பெரியசாமி கவுண்டர். 35 சென்டு நிலம், 1978-லே 6,000 ரூபாய், விற்றவர் சந்திரன் கவுண்டர், வாங்கியவர் பெரியசாமி கவுண்டர். நான் கேட்கிறேன். மார்க்கெட் வால்யூ உங்களுக்குக் கொஞ்சமாவது தெரிய வேண்டாமா? சென்டு நிலத்திற்கு 50 ரூபாயும், 60 ரூபாயும் கொடுப்பது நியாயம் தானா?

அங்கே, பக்கத்திலே எம். பி. டி ஷெரீபுக்கு இந்த தமிழக சர்க்கார் ஒருமுறை நிலத்தை ஏலம் போட்டது. கிட்டத்தட்ட 1,300 ஏக்கர் இனாம் நிலத்தை 9,000 ரூபாய்க்கு சர்க்கார் ஏலம் விட்டது. ஏலம் எடுத்தவர் எம். பி. டி. ஷெரீப். அந்த நிலம் இருக்கிறது. அதை எடுக்கக்கூடாதா அவர் பஸ் முதலாளி, பணக்காரர், இத்தியாதி கொண்டவர். அதை விட்டு விட்டு, வறுமையிலே வாடிக்கொண்டிருக்கிற சிறு விவசாயிகள் நிலத்தை எடுக்கிறீர்களே?

விவசாயிகளிலே கூட சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பிரித்துவிட்டீர்கள். இன்றைக்கு பெரிய விவசாயிகள் இந்த சர்க்காருக்கு கட்ட வேண்டிய பணம் 72 கோடி என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். அதாவது சராசரி தலைக்கு 800 ரூபாய். அப்படியானால் என்ன அர்த்தம்? 9 இலட்சம் பெரிய விவசாயிகள் இருக்கிறார்கள். எப்படி இந்த புள்ளி விவரம் கிடைத்ததோ தெரியவில்லை. ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுகிறதா? பாக்கி வசூல் செய்ய விளம்பரம் மட்டும் 1,000 ரூபாய், 1,500 ரூபாய். இது அந்த விவசாயிகளுக்குக் கிடைத்தால் பரவாயில்லை. 9 இலட்சம் பெரிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்றால் 10 ஏக்கருக்கு மேற்பட்டவர். அப்படிப்பார்த்தால், நிலம் எங்கே இருக்கிறது? நிலத்தையே காணோமே' எங்கே போய் தேடுவது?

என்னுடைய தொகுதியிலே, இராணிப்பேட்டையில் குறைந்த விலைக்கு அந்த மக்களுடைய நிலத்தை பெல் கம்பெனிக்காக சர்க்கார் எடுக்கிறது. குறைந்த விலைக்கு எடுக்கிற காரணத்தால், வறுமையில் வாடுகின்ற விவசாயிகளுடைய நிலத்தை எடுக்கிற காரணத்தால், அந்தப் பகுதி மக்களிடத்திலே ஒரு பதட்ட நிலை உருவாகியிருக்கிறது.

இன்னொன்றையும் இந்த சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏற்கெனவே நெய்வேலி இரண்டாவது நிலக்கரி சுரங்கத்திற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு நஷ்டஈடு தருவதற்கான நடைமுறைகளை வகுக்க எம்.பி.க்களைக் கொண்ட குழு ஒன்று அமையும்

[திரு. துரைமுருகன்]

என்று நம்முடைய எரிசக்தி அமைச்சர் கனிகான் சவுத்திரி அவர்கள் அறிவித்தார்கள். அதைப்போல இந்த பெல் கம்பெனிக்கு ஆர்ஜிதம் செய்யக்கூடிய நிலத்திற்கு நஷ்டஈடு கொடுப்பதற்கான வழிமுறைகள் என்ன என்பதை முடிவு செய்ய அரசு எம்.எல்.ஏ.க்களைக் கொண்ட குழு அமைத்து, அந்த இடங்களைப் பார்வையிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த பெல் கம்பெனியைப் பொறுத்தவரையில் யார், யாருடைய நிலங்களை எடுக்கிறார்களோ, அந்த வீட்டுப் பிள்ளைகளுக்கு இந்தக் கம்பெனியில் முதலில் வேலை கொடுக்க வேண்டும். ஆனால் இப்போது 2, 3 பேர்கள் மட்டும் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் அந்தத் தொகுதியைச் சார்ந்தவர்கள் கூட அல்ல. லோக்கல் பீப்பிளுக்கு அங்கே இடம் கிடையாது. எல்லாம் இம்போர்ட்டாகிக் கொண்டிருக்கிறது. இது நியாயம்தானா? அந்தப் பகுதி மக்களுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கவேண்டும். நிலம் ஆர்ஜிதம் செய்ததால், வீடு, நிலங்களை இழந்தவர்களுக்கு முதல் உரிமை, அந்த தொகுதி மக்களுக்கு இரண்டாவது உரிமை, அந்த மாவட்டத்து மக்களுக்கு மூன்றாவது உரிமை; அதன் பிறகுதான் மற்றவர்களுக்கு என்ற முறையில் ஒரு நடைமுறையை வகுத்துக்கொண்டு ஆட்களை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில் பெல் கம்பெனியை அரசாங்கம் அணுகி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுகிறேன்.

இன்றைக்கு இந்த சர்க்காரின் நிர்வாகம் ஆமை வேகத்தில் நடக்கிறது. அமைச்சருக்குத் தெரியும். என்னுடைய தொகுதியில் நௌலாக் என்ற ஒரு பகுதி இருக்கிறது. புளியங்கன்றுகளை நிறையக் கொண்டபகுதி அது. அதிலே ப்ரீ ஹோல்டு லாண்ட்டாக இருப்பதை ரெவின்யூ வில்லேஜாக மாற்ற வேண்டுமென்று நீண்ட நெடுங்காலமாக வெள்ளைக்காரர் காலத்திலிருந்து கோடாகி, அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக வந்து, அதை ரெவின்யூ வில்லேஜாக மாற்றுவதற்கு நாங்கள் கொண்டுவந்த பில் அன்றைக்கு ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தால் நின்றுவிட்டது. இன்றைக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள்' அதை ரெவின்யூ வில்லேஜாக மாற்றுவதற்கு ஆணை பிறப்பித்து, அளக்கிறார்கள், அளக்கிறார்கள், அளந்து கொண்டே இருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-50]

என்றைக்குத்தான் அந்த அளவு முடியுமோ தெரியவில்லை. அது எங்கு போய் நிற்குமோ என்பதும் எனக்குத் தெரியவில்லை. அதேபோல் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அறநிலயத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு

பில் கொடுத்திருக்கிறார். காட்டிலாக்காவுக்குச் சொந்தமான நிலங்கள் பற்றியது அது. இங்கே நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பல்வேறு கிராமங்களில் காடே கிடையாது. ஆனால் பெயர் காட்டு இலாக்கா. அந்த நிலங்களிலே எல்லாம் வீடு கட்டி குடியும் குடித்தனமும் ஆகி பம்செட் போட்டு காலம் காலமாக தலைமுறை தலைமுறையாக பயிர் செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்கள் பற்றிய பில்லைப் பார்த்ததும் நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். அங்கிருக்கின்ற வீடு மற்றவைகளை எல்லாம் உடனடியாக இடித்துத்தள்ளுங்கள் என்று பில் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதெல்லாம் நியாயம்தானா? இனி மேல் அங்கே காடு வளர்ந்து செம்மரமும் வளரப்போவதில்லை, தேக்கு மரமும் வளரபோவதில்லை. ஆகவே அந்த இடங்களில் இருக்கின்ற பாரஸ்ட் லேண்டை எல்லாம் ரெவின்யூ லேண்டாக மாற்றி அங்கே இருப்பவர்களுக்கு பட்டா செய்து தருவதற்கு வழிவகைகள் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். அடுத்து ஒரே ஒரு பிரச்சினை பட்டா கொடுக்கின்ற விவகாரம் பற்றிக் கூட சொன்னார்கள். அதாவது முன்னாலே கொடுக்கப்பட்ட பட்டாக்கள் எல்லாம் சரியாகக் கொடுக்கப்படவில்லை. எனவே அதை எல்லாம் புதுப்பித்து, கொடுக்கப்பட்டதை எல்லாம் ரத்து செய்கிறோம் என்று சொன்னார்கள். முன்னால் கொடுத்தவர்களும் இதே ரெவின்யூ அதிகாரிகள்தான். இன்றைக்கு நீங்கள் கொடுக்க சொன்னாலும் அவர்கள் தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக்காலத்திலேயும் பட்டா கொடுப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயும் பட்டா கொடுக்கப்பட்டது. உங்களுடைய ஆட்சியிலேயும் பட்டாசெய்து கொடுக்கிறீர்கள். ஆகவே எந்த ஆட்சி இருந்தாலும் அதிலே ஏதாவது ஓரிரு தவறுகள் இல்லாமல் இருக்காது. அதற்காக எல்லாவற்றையுமே எடுத்துவிட்டு என்று சொன்னால் அதிகாரிகள் என்ன நினைக்கிறார்கள் தெரியுமா? ஏதாவது தி.மு.க. காரன் தப்பித்தவறி வாங்கி இருந்தால் அந்த நிலத்தை ரத்து செய்ய வேண்டும் எனபதிலும் உங்களிடத்திலே அதன்மூலம் சபாஷ் வாங்க வேண்டும் என்பதிலும் அவர்கள் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். நீங்கள் என்ன காருள்ளளவும், கடல் நீருள்ளளவும் இந்தா விபஷனா இலங்காபுரி என்பது போன்று இந்தா விபீஷனா என்று உங்களுக்குத் தமிழ்நாடு என்று தரப்பட்டிருக்கின்றதா? ஆகவே நாளைக்கு இன்னொரு ஆட்சி வரலாம். அப்போது நீங்கள் கொடுத்த இந்தப் பட்டாக்களை எல்லாம் ரத்து செய் என்று சொன்னால் இது ஒரு தொடர் ஓட்டமாக வருமே தவிர அரசியல் நாகரீகமாக இருக்காது. எனவே இந்த நிலமையை மாற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1–4–1980 முதல் 31–3–1981 வரையில் தரிசு, சாகுபடி நிலங்கள், ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் பரப்பையும், பட்டாக்கள் நிலங்கள் எண்ணையும் காட்டும் விவர அறிக்கை என்று ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறீர்கள். இதிலே பார்த்தால் வட ஆற்காடு மாவட்டத்திலே ஒருவருக்கும் கிடையாது. ஆதி திராவிடருக்கும் கிடையாது, பழங்குடியினருக்கும் கிடையாது, ஏனையோருக்கும் கிடையாது. ஒப்படை செய்யப்பட்ட மொத்த பரப்பும் கிடையாது. வட ஆற்காடு மாவட்ட டிட்டோ, டிட்டோ என்று இருக்கிறது. ஒன்றுமே கிடையாது. ஏன் வட ஆற்காடு மாவட்டம் மட்டும் என்ன? அங்கே யாருக்குமே கொடுக்கப்படவில்லை. நீங்களும் கொடுக்கவில்லை. அங்கே இருக்கின்ற கலெக்டரும் கொடுக்கவில்லை. அதிகாரிகள் தூங்குகிறார்களா? அல்லது வட ஆற்காடு மாவட்டம் மட்டும் இந்த ஆட்சியிலிருந்து இரண்டாம்தர குடிமக்களாக மாற்றப்பட்டிருக்கின்றதா? ஒரு கண்ணிலே வெண்ணையும் இன்னொரு கண்ணிலே சுண்ணாம்பும் வைக்கிற கொடுமையை வட ஆற்காடு மாவட்ட மக்களின் மீது பொழிகிறீர்கள். ஏன் எங்கள் மாவட்டத்திலே ஒருவனுக்குக் கூட அந்த நிலப்பட்டா கொடுக்கப்படவில்லை.

கடைசியாக நான் ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன் வேறு எங்கே பழுதுபட்டாலும் சீர்படுத்தி விடலாம். பெரு விரலிலே வியாதி வந்தால் கூட, அதிலே அடிப்பட்டால்கூட ஆப்பரேஷன் செய்து விடலாம், ஆனால் இந்த சர்க்காருக்கு வருவாய்த்துறை என்பது இருதயம் போன்றது. ஆகவே உங்கள் நிர்வாகத்திலே இருதயமே கெட்டுவிட்டது, ரத்த ஓட்டம் நிற்கப் போகிறது, அது விரைவிலேயோ, இன்றோ, நாளையோ, எப்போதோ என்பதை எடுத்துக் கூறி விடை பெறுகிறேன், நன்றி வணக்கம்.

திரு. ஏ. கி. சண்முகம் :- மாற்றுத் தலைவர் அவர்களே மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் பேசும்போது.

* * * * *

என்று பேசினார். பத்திரிகைகளிலே அது பிரசுரமானால் வட, ஆற்காடு மாவட்டத்திலே.......(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: * * *

என்று பேசினார்கள். அதைப் பாருங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் அப்படிச் சொல்லி இருந்தால், அதுவும் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளும் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இங்கே அவை முன் கொண்டு வந்த மானியக்கோரிக்கைகளின் மீது, அரசுக்குப் பணம் ஒதுக்கவேண்டும் என்று கேட்கின்ற அந்தக் கோரிக்கையின் மீது, மாண்புமிகு உறுப்பினர்களின் எண்ணங்களை பெறுவதற்கான வகையில் நடைபெற்ற இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பல்வேறு உறுப்பினர்கள் கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களை எல்லாம் அவர்களுக்கே உரிய நடைகளிலும் அவர்களுடைய அரிய வார்த்தைகளாலும், அதிலே சில பேர் தங்களுடைய கற்பனையில் தோன்றிய எண்ணங்களையும் இங்கே எடுத்து வைத்தார்கள்.

வருவாய்த் துறையைப் பொறுத்தவரையிலும், இன்றைக்கு எப்படி நடைபெறுகிறது என்பதையும், கடந்த காலத்தில் எப்படி நடைபெற்றது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் எண்ணிப்பார்த்தால் தான் தெரியும். பின்னாலே திரும்பிப் பார்க்காமல், முன்னாலே போகவேண்டும் என்பது தேவைதான். இருப்பினும், பின்னாலே திரும்பிப் பார்த்தாலே அங்கே இருக்கும் தவறுகள் தெரிந்து இருக்கும். ஆனால் அப்படிச் செய்தால் மனதுக்குச் சங்கடம் ஏற்படுமே என்ற காரணத்தினால் இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பிப் பார்க்காமலேயே, முன்னாலேயே பார்த்துக்கொண்டு பேசினார்கள். அப்படி முன்னாலே நடப்பதை மட்டும் வைத்துப் பேசினாலும் சிலருக்குத் தெரியும், பின்னாலே என்ன நடந்தது என்று. சிலருக்கு பின்னாலே என்ன நடந்தது என்று தெரியாமல் இருக்கலாம். ஆனால் கற்பனையாக முன்னாலே என்ன நடந்தது என்று பேசக்கூடிய ஆற்றல் உள்ளவர்கள் திறமையாகப் பேசுகிற ஆற்றல் உள்ளவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இங்கே பலர் இருப்பது உங்களுக்குத் தெரியும்.

இங்கே பேசுகிறபோது பலவற்றைச் சொன்னார்கள். கிராம அதிகாரிகளைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது, அதற்கான சட்டத்தை இங்கே கொண்டு வந்து நிறைவேற்றுகிறபோது, அந்த கிராம அதிகாரிகள் இன்றைக்கு இல்லாததால் எந்த வேலையும் அங்கே நடைபெறவில்லை என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் எதுவும் இல்லை என்பதற்கு நான் பலவற்றைச் சொல்ல முடியும். பிறப்பு, இறப்பு பதிவேடு, வரிவசூல், ஜாதிச் சான்றிதழ் வழங்குதல், வருமான சான்றிதழ் வழங்குதல் போன்றவைகள் முறையாகக் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அதற்கு எடுத்துக்காட்டாக முதியோர் உதவித தொகை கொடுக்கிறபோது—பொங்கல் விழாவின்போது முதியோர் உதவித் தொகை கொடுக்கிறபோது—அதை பெறுகின்றவர்களுக்குஆணாக இருந்தால் வேஷ்டியும்பெண்ணாகஇருந்தால் சேலையும் அரிசியும் கொடுக்கப்பட்டது. அவைகள் எல்லாம்

ஒழுங்காக இன்றைக்கு வரையிலும் கொடுக்கப்பட்டு வருகிறது என்று சொல்கிற போது நிர்வாகம் எவ்வளவு திறமைமாக நடைபெற்று வருகிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இன்றைக்கு இந்த கிராம அதிகாரிகளைப் பொருத்த வரையிலும், கொண்டு வந்த சட்டம் மக்களுக்கு மிகவும் தேவையானது என்று இந்த அரசு கருதுகிறது. இந்த அரசைப் பொருத்த வரையிலும், நான் வருவாய்த்துறை அமைச்சராக இருந்து கொண்டு நிறை வேற்றி இருக்கிற 52-53 சட்ட முன் வடிவுகளில், ஏறத்தாழ 2—3 சட்டங்கள் மக்களுக்கு மிகவும் முக்கியமான சட்டங்களாக இருக்கின்றன. அந்தச் சட்டங்கள் எல்லாம் எந்த வகையில் முக்கியம் வாய்ந்தவை என்பதை தமிழக முதல்வர் அவர்கள் உணர்ந்து அதைக்கொண்டு வந்து நிறைவேற்றவேண்டும் என்று சொன்னார்கள். அவர்களுடைய ஆசையெல்லாம் இந்த நாட்டு மக்களுக்குத் தேவைப்படுகிற சட்டங்கள் கொண்டுவரவேண்டும் அது நம் கடமையாகும். அந்த எண்ணப்படிதான், நில உச்சவரம்புச் என்ற என்னம்தரன் சட்டத்திலே உள்ள குறைபாடுகளை நீக்கவும் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதாவது தகுதிஅற்ற முறையில் நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளதை மாற்றுவதற்கு அந்தச் சட்டம்கொண்டு வரப்பட்டது. இரண்டாவது இந்த கிராம அதிகாரிகளை மாற்றி விட்டு நிரந்தர கிராம அதிகாரிகளைப் போடுவது என்பது முக்கிய மான சட்டமாகும்.

[பிற்பகல் 1.00]

வருவாய் வாரியம் என்பது எப்பொழுதோ ஆங்கில ஏகாதிபத்திய காலத்திலே கொண்டுவரப்பட்டது. தற்போதைய நடைமுறைக்கு ஏற்றது அல்ல, எனவே அதை மாற்ற வேண்டும், நீக்க வேண்டும் என்ற எண்ணத்திலே சட்டத்தை கொண்டு வந்தோம். இது போன்ற சட்டத்தை கொண்டு வந்து, அதுவரை யாரையும் யாராலும் செய்ய முடியாததை புரட்சித் தலைவர் அவர்கள் செய்தார்கள்.

இங்கே இருப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த நேரத்தில், இங்கே பலபேர் பேசி னார்கள். அருமை சகோதரர் துரைமுருகன் அவர்கள் பேசும் போது 'இந்த ராம பாணத்தை இதுவரையில் எத்தனையோ பேர்கள் போட்டு பார்த்தார்கள். நடக்கவில்லை. நீங்களும் அதே ராம பாணத்தைக் கொண்டு வருகிறீர்களே' என்று கேட்டார்கள். அப்போது நான் அவருக்கு பதில் அளிக்கையில் சொன்னேன். "அந்த ராம பாணத்தை அப்போது முன்னாலே போட்டவர்கள் எல்லாம் குறி தவறிப் போட்டார்கள். காரணம் ராம பாணத்தை போட்டவர்கள் ராமர் இல்லை. ஆனால் இப்போது அதை போடுகிறவர் ராமர் தான். அதனால் குறி தவறாது" என்று அன்றைக்குச் சொன்னேன், (மேசையைத் தட்டும் ஒலி)

அன்றைக்கு நான் அப்படி குறி தவறாது என்று நம்பிக்கை யோடு தெரிவித்ததைப்போல, வருவாய் வாரியம் கலைத்த தற்கு பிறகு, வைத்த குறி தவறாத காரணத்தால் தான் அத னால் மக்களுக்கு எந்தவித குறைபாடும் ஏற்படவில்லை. செய் கின்ற காரியங்கள் மக்களுக்கு நிறைவேற்றுகின்ற காரியங்கள் குறைவாக இல்லை, நிறைவாக இருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிக் கலைத்ததினால் குறைவு ஏற்படா மல், நிறைவாக காரியங்கள் நடந்துக் கொண்டிருக்கிறது என்ப தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் கிராம அதிகாரிகளை நீக்கிவிட்டதினாலே, கிராமங்களில் காரியங்கள் நடக்கவில்லை என்று இங்கே— இந்த மன்றத்திலே எல்லோரும் சொல்லவில்லை. பேசிய 12 பேர்களில் 11 பேர் சொல்லவில்லை, ஒரே ஒருவர் தான் சொன் னார். அந்த ஒருவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த துரைமுருகன் அவர்கள்.

பொதுவாக நிர்வாகத்திலே குறைகளே இருக்காது என்று சொல்ல முடியாது. குறைகள் இருக்கும். குறைகளை எடுத்து வைத்து திருத்துவதற்காகத்தான் எதிர்க்கட்சிகள் இருக்கின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சிகள் இல்லாத நாடு மூக்கணாங்கயிறு இல்லாத மாடு என்றும், எதிர்க் கட்சிகள் இல்லாத நாடு, பிரேக் இல்லாத கார் என்றும் சொன் னார்கள். மூக்கணாங்கயிறு என்றுதான் சொன்னார்களே தவிர, மூக்கணாங்கயிறுக்குப் பதிலாக, அங்கே ரம்பத்தைப் போட்டு அறுக்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்ல வில்லை. பிரேக் வேண்டும் என்று சொல்கிறபோது, பிரேக்கைப் பிடிக்க வேண்டிய நேரத்தில், காலை வைத்து பிரேக் பிடிக்க வேண்டுமே தவிர, காலை பிரேக்கிலேயே அப்படியே வைத்துக் கொண்டு, பிரேக் பிடித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் எதிர்க்கட்சியிலே இருப்ப வர்கள் எந்த எண்ணத்திலே, அவர்களுடைய குறைகளைச் சொல்கிறபோது சொன்னாலும் கூட, நாட்டினுடைய காரியங் களை, பார்த்து நல்லபடியாகச் செய்ய வேண்டும், என்ற அடிப்படையில்தான், அதற்காகத்தான் அவர்கள் சொல்லு கிறார்கள் என்றே, இந்த அரசு எடுத்துக் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அருமை சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் உ. சுப்பிர மணியன் அவர்கள் பேசுகிறபோது நிலவரி என்றால், வரி வசூல் செய்வது மட்டும் தான் என்று சொன்னார்கள். நான் உங்களுக்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமேயானால், இந்த வருவாய்த் துறையில் எவ்வளவோ சீர்திருத்தங்களை இந்த அரசு செய்திருக்கிறது. உங்களுக்கு நன்றாகத் தெரியும், வரு வாய்த்துறைகளில் எவ்வளவு வேலைகள் இருக்கின்றன என்று.

Duty of the Revenue Inspector என்று சொன்னால், Duty of the Tahsildar என்றால் எவ்வளவு வேலைகள் இருக்கின்றன என்று உங்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஒரு Firka Revenue Inspector என்றால் அவருக்கு 37 வேலைகள் இருக்கின்றன. டெபுட்டி தாசில்தார் என்றால் அவருக்கு 20 வேலைகளுக்கு மேல் இருக்கின்றன. தாசில்தார் என்றால் 57 வேலைகளுக்கு மேல் அவருக்கு இருக்கின்றன. அதே போல District Revenue Officer என்றால், 60 வேலைகளுக்கு மேல் இருக்கின்றன. அவ்வளவு வேலைகளையும் நான் இங்கே படிக்க வேண்டுமானால் நேரம் நிறையப் பிடிக்கும். படிக்கவில்லை என்று சொன்னால், எங்களுக்கெல்லாம் எப்படித் தெரியும் என்று நீங்கள் கேட்பீர்கள். அதற்காகத்தான் உங்களை பின்னாலே பார்க்க வேண்டாம் முன்னாலே பாருங்கள் என்று சொல்கிறேன்.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, ஒவ்வொரு அலுவலகத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும், யார் யாருக்கு என்னென்ன வேலை என்பதையெல்லாம் அச்சடித்து ஒட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். சாதாரண நிலையில் உள்ள மக்கள், தாசில்தார் இடத்திலே கொண்டு போக வேண்டிய சிறிய வேலைகளை, ஒன்றும் தெரியாததின் காரணமாக, கலெக்டரிடத்திலே கொண்டு செல்கிறார்கள். அந்த நிலை போக்கப்பட வேண்டும். இவைகளை யெல்லாம் மாற்றப்பட வேண்டும் என்பதினால்தான், இவ்வாறு யார் யாருக்கு என்னென்ன அலுவல்கள் என்று அச்சடித்து அந்தந்த அவலகங்களிலேயே ஒட்டச் சொல்லியிருக்கிறோம். இப்படிப்பட்ட நிர்வாக சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல், இன்றைக்கு தாலுக்கா ஆபீசானாலும் சரி, ஆர்.டி.ஓ. ஆபீஸானாலும் சரி, கலெக்டர் ஆபீசானாலும் சரி, மக்கள் வந்தால், வரவேற்று அமரச் செய்து, அவர்கள் கொடுக்கிற மனுக்களை வாங்கி அதற்கென்று இருக்கிற பதிவேடுகளில் பதிவு செய்து, அந்தப் பதிவேடுகளில் அதற்கு பதில் அனுப்புகிற தேதியினையும், எந்தக் காரியங்களுக்காக அனுப்பப்படுகிறது என்பதையும் பதிவு செய்து அந்த அலுவலகங்களில் வைக்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல. அந்தப் பதிவேட்டை மேலதிகாரிகள் பார்க்கிறபோது அதிலே கையெழுத்து போடவேண்டும், செக் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல் இன்னொன்றையும் சொல்கிறேன். அந்த அளவிற்கு மேல் பிர்க்கா இன்ஸ்பெக்டர்கள் என்றிருக்கிறார்கள். மேலே இருந்து பார்க்காமல், கீழே இருந்து பார்க்க வேண்டும். கோபுரத்திலே இருந்து பார்க்கவில்லை; குடிசையிலே இருந்து பார்க்கிறோம்.

குடிசையிலே இருந்து பார்த்ததற்குப் பிறகுதான், கோபுரத்திற்கு மேலே செல்ல வேண்டும். அந்த அளவிலேதான், கிராமத்திற்கு அடுத்தது பிர்க்கா. இன்றைக்கு உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால், எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால், ஏற்பட்டது இந்த ரெவின்யூ பிர்க்காக்கள். 200, 300 ஆண்டுகளுக்கு முன்னே இப்படி 700 ரெவின்யூ பிர்க்காக்கள் ஏற்பட்டன. ஒரு பிர்க்காவிலே 50 கிராமங்கள் இருக்கும்; ஒவ்வொன்றில் 10, 15 கிராமங்கள் இருக்கும். அதையும் சரி செய்ய வேண்டுமென்பதற்காகத்தான், இந்த 700 பிர்க்காக்களை இப்போது 1,010 பிர்க்காக்களாக்கி, இன்றைக்கு அது சரி செய்யப்பட்டு, சராசரி 20 கிராமங்கள் ஆக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. நான் முதலிலேயே சொன்னேன், இந்த பிர்க்கா இன்ஸ்பெக்டர்களுக்கு 37 வேலைகள் இருக்கின்றன என்று. ஆனால், இது யாருக்குத் தெரியும்? கிராம மக்களுக்குத் தெரியாது. இப்போது அவர்களுக்கு அலுவலகம் கட்டப்பட்டு வருகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாடு விடுதலையடைந்து 32 ஆண்டுகள் ஆகின்றன. இதற்கு முன்னால் எந்த அரசும் இந்த பிர்க்கா இன்ஸ்பெக்டர்களுக்கு இதைச் செய்யவில்லை. நான் சார்ந்த, சாராத அரசு அல்லது எந்த அரசாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு கிராமத்திலே என்ன வேலைகள் இகின்றன, அதற்காக அலுவலகம் வேண்டுமென்று யாரும் இத்தகைய முயற்சியில் ஈடுபடவில்லை. ஆகவேதான், இந்த அரசு கீழே இருந்து பார்த்து, அவர்கள் ரெகார்டுகளையெல்லாம் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக, இன்றைக்கு அலுவலகம் கட்டப்பட்டு வருகின்றது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்குள் எல்லா அலுவலகங்களும் கட்டி முடிக்க வேண்டுமென்று இன்றைக்குச் சொல்லி, அதற்கு வேண்டிய அலுவலகங்கள் எல்லாம் கட்டிக்கொண்டு வருகிறார்கள் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, ஒரு பூனை குறுக்கே பாய்ந்தது. என்ன சகுனம் என்று தெரியவில்லை; ஆனால் எனக்கு அதிலே நம்பிக்கை இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, பூனையினுடைய சகுனத்தை நம்புகிறவர்கள் இந்த அவையிலே மிக மிகக் குறைவு என்று நான் சொல்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்த அரசு என்ன செய்தது என்பது உங்களுக்குத் தெரியும். அறுவடை நடவும்போதுபோராட்டம் நடந்து சிறைச்சாலைக்கு ஆயிரக்கணக்காணபேர்கள் குறிப்பாக கீழத் தஞ்சையில் இதற்கு முன்னால்

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS

சென்றார்கள். நான் உங்களைக் கேட்கிறேன் — இந்த அரசு வந்ததற்குப் பிறகு அப்படி சிறைச்சாலைக்குச் சென்ற விவசாயத் தொழிலாளர்கள், அதுவும் கீழத் தஞ்சையில் மிகமிகக் குறைவு. ஒன்றிரண்டு இருக்கக்கூடும். ஆனால், மிகமிகக் குறைவு என்பதை நான் தைரியமாகச் சொல்வேன். இதிலே, நீங்கள் எவ்வளவு வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, எவ்வளவு வேண்டுமென்று சொல்லப்பட்டதோ, அந்த அளவுக்கு கொடுக்கப்பட்டது என்பது உங்களுக்கு நன்கு தெரியும். இந்த விவசாயத் தொழிலாளர்களை இப்படி இந்த அரசு மிகத் தீவிரமாக கவனித்தது. அது மட்டுமல்ல. கீழத் தஞ்சையில் குறைந்த பட்ச கூலி என்றிருந்ததை, இந்த அரசு தமிழ்நாடு பூராவும் கொண்டு வந்தது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி இந்த அரசு விவசாயத் தொழிலாளர்கள் பிரச்னையில் இதையெல்லாம் செய்தது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. உமாநாத் : விவசாயத் தொழிலாளர்கள் விஷயத்திலே குறைந்தபட்ச கூலி நிர்ணயித்தது என்பது உண்மை; அதை நான் பாராட்டுகிறேன். அந்தக் கூலியைக் கேட்டவுடனேயே, அந்த என்டயர் ஓர்க்கர்ஸ் ஐ எக்ஸ்பெல் பண்ணுகிறார்கள். குறைந்தபட்ச கூலி என்று வருகிறபோது, அவர்களுக்கு போலீஸ் புரடக்ஷன் கொடுக்கப்படுகிறது என்று ரெவின்யூ அபிஷியல்ஸ் சொன்னாலும், அதை லேண்ட் லார்டுகள் கேட்பதில்லை. இதற்கு போலீசுக்கு ஏதாவது இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்திருக்கிறீர்களா, அந்த சூழ்நிலையில் எப்படி நடக்க வேண்டும் என்று ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஒரு தாய் ஒரு குழந்தையைப் பெற்று, அதைச் சீராட்டி, பாராட்டி, பால் கொடுத்து, சீவி முடித்து, அதற்குப் பட்டாடை அணிவிக்க வேண்டுமென்று தாய் எண்ணுவாள். அதைப்போல், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த அரசு, அதிலே திறம்பட நடத்தும்; ஆங்காங்கே தவறு இல்லை என்று சொல்லவில்லை. தவறு நடைபெறுகிறது என்று சொன்னால், இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். குறைந்த பட்ச கூலியைக் கொடுக்க வேண்டும் என்பதிலே இந்த அரசு உறுதியாக இருக்கும், அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 1-10]

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நல்ல எண்ணத்தோடு கொண்டு வந்தார்கள் என்பதில் ஆட்சேபணை இல்லை. கிடைக்கும் என்பதில் நம்பிக்கை குறைவும் இல்லை. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு 26 வேலைகள்;

தாசில்தாருக்கு 56 வேலைகள்; டெபுட்டி தாசில்தாருக்கு 20 வேலைகள் என்று; அதைத்தான் ஓராண்டு காலமாக நாங்கள் சொல்லி வருகிறோம், இதை அமல் படுத்துவதற்கு தனி அதிகாரிகளைப் போடவேண்டுமென்று; அதுவரையில் இந்த சட்டத்தினை கொண்டு வந்த பயனை விவசாயத் தொழிலாளர் கள் அனுபவிக்க முடியாது என்ற அவல நிலை இருக்கிறது. முதலாளிகள் போலீசை உபயோகப்படுத்திக் கொண்டு சட்டத்தை நடத்த முடியாமல் செய்வார்களே; இதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னபடி குழந்தை தையை காப்பாற்றுவது தாயினுடைய கடமை; அதைப் போலத்தான் பாம்பு வந்தாலும், பூச்சி வந்தாலும் அதை தாய் அடிப்பதைப் போல, அது அரசிற்கு இருக்கிற கடமை. காவல் துறையினர், வருவாய்த் துறையினருடைய சம்மதமின்றி அதிலே தலையிடுவதற்கு முடியாது. எங்கேயாவது இருந்தாலும், அதில் நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புயல், வெள்ளம் வந்து ஏழை விவ சாயிகள் கஷ்டப்படுகிற பொழுது, இந்த அரசு தக்காவிக் கடனை சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் தள்ளுபடி செய்தது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். எவ்வளவு தள்ளுபடி செய்தது என்றால். 26 கோடியே, 84 இலட்சத்து 8 ஆயிரத்து 638 தள்ளு படி செய்திருக்கிறது. இதனால் நன்மை அடைந்த விவசாயிகள் 17 இலட்சத்து 97 ஆயிரத்து 609 பேர்கள் அதிலே நன்மை அடைந்திருக்கிறார்கள் என்ற செய்தியை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

வறட்சி வந்துவிடுகிறது; அப்போது கஷ்டப்படுகிற விவ சாயிகள் மறுபடியும் நன்றாக விளைந்தாலும் அந்த நஷ்டத்தை ஈடுசெய்ய முடிவதில்லை; அந்த ஆண்டு போட்ட ஈடுகளுக்கு தகுந்தபடி தான் விளைகிறது என்று ஒரு சங்கடத்தைச் சொன்னார்கள். இவற்றை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சி தலைவர் அவர்கள் ஆராய்ந்து பார்த்து ஒன்றை குறிப் பிட்டார்கள். விவசாய வருமான வரியில் ஒரு திருத்தத்தை கொண்டு வரவேண்டுமென்று. அந்த திருத்தத்தை கொண்டுவந்து இங்கே நிறைவேற்றிய பிறகு ஆயிரக்கணக்கான, இலட்சக் கணக்கான விவசாயிகள் இதில் நன்மை அடைந்திருக்கிறார்கள்.

உங்களுக்கு சொல்ல வேண்டுமானால் விவசாய வருமான வரி முதலிலே 10 ஆயிரம் ரூபாய் நிகர வருமானம் வந்தால்; அல்லது 8 ஆயிரம் ரூபாய் வந்தால் அவர்களுக்கு எல்லாம் வரி இருந்தது. அவர்களுக்கு ஒரு போகம் சாகுபடி; நெல் என்று வைத்துக்கொள்ளுங்கள். 10 ஏக்கருக்கு மேலே போட்டால் அதற்கு விவசாய வருமான வரி உண்டு, ஆனால் இந்த அரசு

வந்தபிறகு அதை மாற்றி 20 ஏக்கர் ஒரு போகம் நெல் போட்டிருந்தால், ஒட்டிக்கு ரெட்டியாக அவர்களுக்கு விவசாய வருமான வரி இல்லை என்று இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன் உதாரணமாக உங்களுக்கு சொல்ல வேண்டுமென்றால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் விவசாய வருமான வரி கொடுத்துக்கொண்டிருந்தவர்கள் 1976–77-ல் 93,326 பேர்கள், ஆனால் விவசாய வருமான வரி கட்டுபவர்கள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக்கொண்டே போவார்கள். ஆனால் 1976–77-ல் 93,326 என்பது இந்த சட்டம் கொண்டு வந்த பிறகு 1980–81-ல் விவசாய வருமான வரி கட்டுபவர்கள் 37,458 ஆக குறைந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது விவசாயிகளுக்கு செய்கிற நன்மை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நில அளவு மேம்பாடு திட்டம் இன்றைக்கு பல இடங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பல இடங்களில், பல கிராமங்களில் யாரோ நிலத்தை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். யார் பேரிலோ பட்டா இருக்கும்; கூட்டு பட்டா இருக்கும், தனிப்பட்டா இருக்கும்; கடன் வாங்க முடியாது. தண்ணீர் தீர்வை செலுத்த முடியாது. தண்ணீர் தீர்வை செலுத்தினாலும் பட்டா போட்டிருந்தால், யாராவது வைத்திருப்பார்கள், யார் மீதாவது வரவு செய்வார்கள், ஆகவே இதை எல்லாம் மாற்றி அமைக்க வேண்டும். நிலத்திலே இன்றைக்கு கிராமத்திலே பள்ளிக்கூடம் வந்திருக்கும்; மருத்துவ மனை வந்திருக்கும்; கிராமப் படங்களிலே அவைகள் எல்லாம் இருக்காது, இவைகள் இன்றைக்கு வருவதற்கு நில அளவு மேம்பாடு திட்டங்கள் மூலமாக அரசு ஐந்து ஆண்டுகளில் முடித்துவிட வேண்டுமென்று காரியங்களை செய்து கொண்டிருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு என்ன செய்தது என்றால், நில உச்சவரம்பு சட்டம் 1961-லே; 1960 ஆம் ஆண்டு போட்டு கொண்டுவரப்பட்டது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த நில உச்ச வரம்புச் சட்டத்தில் வெளியே சந்தைவிலை எவ்வளவோ அதே விலை தான் எடுத்துக்கொடுக்கிறவர்களுக்குக் கிடைக்கும். பெரிய மிராசுதார்களிடமிருந்து நிலத்தை எடுக்கிறரர்கள். நிலமற்ற ஏழைகளிடத்திலே கொடுத்தார்கள். கொடுக்கிற போது சந்தைவிலையிலே கொடுத்தார்கள். அதிலே என்ன அவர்களுக்கு லாபம்? மிராசுதார்களுக்கு என்ன நட்டம். இல்லாவிட்டால் அதிக விலைக்கே கொடுத்தார்கள். தொல்லை தீர்ந்தது என்று மிராசுதார்கள் எல்லாம் எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த அரசு வந்த பிறகு 1961 ஆம் ஆண்டு கொண்டுவந்த சட்டத்திற்கும் 1971 ஆம் ஆண்டு கொண்டுவந்த சட்டத்திற்கும் எடுக்கப்பட்ட நிலத்திற்கு எவ்வளவு பணம்

கொடுப்பது என்பதை மாற்றியமைத்தது என்பது உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். முதலிலே நான் அதையெல்லாம் படித்திருக்கிறேன், சில இடங்களிலே, நங்கவரம் போன்ற இடங்களில் ஒரு ஏக்கருக்கு 18 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள் கணக்குகள் என்னிடத்திலே இருக்கின்றன. சீர்காழியிலே ஒரு ஏக்கருக்கு 17 ஆயிரம் கொடுத்தார்கள். இங்கே நான் படித்திருக்கிறேன். அதை இன்றைக்கு இந்த அரசு மாற்றிக் சாதானபுஞ்சைதரிசு யாருக்காவது பயன்படாத நிலமாகஇருந்தால் ஒரு ஏக்கர் 50 விருந்து அது எந்த நிலமானாலும்சரி 3,500-க்கு மேல் இல்லை என்று அதை கொண்டுவந்த அரசு இந்த அரசு தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடிக்கடி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் பேசுவார்கள். மனதாரப் பேசுவார்கள். அது நடக்க வேண்டுமென்று கருதுவார்கள். அவர்கள் கட்சிக்குள்ளே எவ்வளவு எதிர்ப்புகள் இருந்தாலும் துணிந்து நின்று போராடுவார்கள். (குறுக்கீடு) திரு. இளையபெருமாள் ஐடியாலஜியிலே தான் கொள்கையிலே தான் சண்டை போடுவார் என்று சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) குறுக்கே பாயவேண்டாம், நேராகப் பாயுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நீங்கள் உங்கள் கட்சியிலே போராடுகிற மாதிரியா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நேராகப் பாய்ந்தால் அதை நான் எதிர்ப்பேன் என்று சொல்லவில்லை. தாங்கிக் கொள்வேன். ஆனால் குறுக்காகப்பாய்ந்தாலும் தெரியாமல் தாங்கிக்கொள்வேன். ஆகவே குறுக்காகப் பாயாமல் நேராகப் பாயுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். முறையற்ற முறையிலே நில மாற்றங்கள் செய்யப்படுகிறபோது அதைப் பற்றி தமிழக முதல்வர் அவர்கள் பலமுறைகள் அதை சிந்தித்துப் பார்த்தார்கள். இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால் 1955 ஆம் ஆண்டும், அதற்குப் பிறகும் 1960 ஆம் ஆண்டுக்கு முன்பும் செய்யப்பட்ட நிலமாற்றங்கள் தகுதியற்றதாக செய்யவேண்டுமென்று முயன்று பார்த்தோம். அதிலே செய்யமுடியுமா என்பதை எண்ணிப் பார்த்து நினைத்த வரைக்கும் 100-க்கு 100 திறமையாக முழுமையாக நீதி வழங்கமுடியாது என்றாலும் 70 சதவீதம், 60 சதவீதமாவது நன்மைகள் செய்ய வேண்டுமென்று கருதி அந்தச் சட்டத்திலே ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து 1958 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1 ஆம் நாளுக்குப் பிறகும் 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4 ஆம் நாளுக்கு முன்பும் செய்யப்பட்ட நிலமாற்றங்கள் செல்லுபடியாகாது என்பதை இந்த அவைக்கு கொண்டு வந்தோம். நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். நான் வரலாற்றை எல்லாம்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

எடுத்துப் பார்த்தேன். எல்லா மாநிலங்களிலேயும் நிலச் சீர் திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சி எதிர்த்து இருக்கிறது. இங்கேயும் நிலச் சீர்திருத் தம் காங்கிரஸ் ஆட்சியால் கொண்டுவரப்பட்டபோது நான் சார்ந்திருந்த கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் வாக் அவுட் செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவந்தபோது எதிர்த்துப் பேசினார்கள், ஓட்டு அளிக்கவில்லை. நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள் கிறேன், சில தினங்களுக்கு முன்னாலே 1980 ஆம் ஆண்டு தகுதியற்ற நில மாற்றங்களை செல்லுபடியாகாது என்று கொண்டு வந்து நிறைவேற்றுகிறபோது எதிர்க்கட்சி வரிசையிலே அத்தனை பேர்களும் ஏகமனதாக ஆதரித்தார்கள்.

[பிற்பகல் 1-20]

எதிர்க்கட்சிகளாக இருக்கின்ற அத்தனைக் கட்சிகளும் ஏகமனதாக வரவேற்றன என்பதற்குக் காரணம், அதை மீண்டும் சொல்வதற்குக் காரணம், வரவேற்றது உண்மை. ஆனால் இப்படிப்பட்ட நிலைமைகள் பிற மாநிலங்களிலெல்லாம் நடை பெறவில்லை என்பதும் உண்மை. அதே மாதிரி இங்கேயும் இப்படிப்பட்ட நிலைமைகள் இதற்கு முன்னாலே நடக்க வில்லை, நிறைவேறவில்லை என்பதும் உண்மை.

ஆனால் மத்தியப் பேரரசுக்கு 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 30 ஆம் நாள் குடியரசுத் தலைவருடைய கையெழுத்து வேண்டுமென்று கடிதங்கள் எழுதப்பட்டன; சட்டமுன்வடிவு அனுப்பப்பட்டது; எங்களுடைய பிரதிநிதி—டெல்லி பிரதிநிதி அங்கே உள்ளவர்களையெல்லாம் பார்த்து அதைப்பற்றி விரைவு படுத்த முயற்சி எடுத்தார்கள். அதேபோல எங்களுடைய தனி ஆணையாளர்—சிறப்பு ஆணையாளர், அந்த அரசு அதிகாரியும் முயற்சி செய்தார்கள்.

இவ்வாறு இருந்து இருந்து பார்த்துவிட்டு பல தந்திகள் கொடுக்கப்பட்டன; பல கடிதங்கள் எழுதப்பட்டன. கடைசியாகத் தமிழகத்தின் முதல்வர் அவர்களே 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாளன்று, அதை விரைவிலே அனுப்ப வேண்டுமென்று பிரதமர் அவர்களுக்கும் சட்ட அமைச் சரவர்களுக்கும் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அது நல்ல செய்திதான் என் றாலும், அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு வருகின்றபொழுது தான் அந்த நல்ல செய்தி பூரணமான நல்ல செய்தியாக ஆகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பயிரிடும் குத்தகைதாரர் சட்டம், இந்த அரசு கொண்டு வந்த சட்டம், 75-25 அல்லது 25-75 என்பது, 25 என்பது யாருக்கு என்றால் நில உடைமையாளர்களுக்கு ; 75 என்பது குத்தகை தாரர்களுக்கு. அதைக் கொண்டு வந்து நீண்ட காலமாக இருந்த ஒரு வேண்டுகோளை இந்த அரசு தான் கொண்டு வந்து நிறைவேற்றியது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வேன்.

இயற்கையாய் இடர்ப்பாடு ஏற்பட்டு இருப்பவர்களுக்கெல் லாம் குத்தகை பாக்கியைத் தள்ளுபடி செய்து கொடுத்தும், மீதி உள்ளவைகளை மூன்று தவணைகளிலே—அருமைச் சகோதரர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கூட இங்கே பேசினார்கள்—செலுத்த வேண்டுமென்றும் இந்த அரசு கொண்டு வந்தது என்பதையும், அதனால் 30 கோடி ரூபாய் ஏழை விவசாயி களுக்கு இலாபம் என்பதையும் உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வேன்.

இன்னும் எத்தனையோ பல காரியங்களை இந்த அரசு செய்திருக்கிறது என்கின்ற செய்தியை உங்களுக்கு நான் தெரிவித் துக்கொள்கிறேன். இப்படி இந்த அரசு வருவாய்த்துறையைப் பொறுத்த வரையிலும் பல நன்மைகளை இன்றைக்குச் செய் திருக்கிறது.

வருவாய்த் துறையில் என்னென்ன சீர்திருத்தம் செய்தது என்பதை முதலிலே தெரிவித்து இன்றைக்கு எல்லா அலுவலகங் களும் எப்படியெப்படி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை உங் களுக்கு நான் தெரிவித்துக்கொண்டேன். அதைப் போல இன் றைக்கு நான் முதலே சொல்கிறபொழுது வருவாய் இன்ஸ் பெக்டர்களுக்கு ஆபீஸ் கட்டுவதற்காக இந்த அரசு 2 கோடியே 8 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, கட்டிடம் கட்டிக் கொண்டும், கட்டுவதற்கும் இருக்கிறது என்கின்ற செய்தியை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வேன்.

வட்ட அலுவலகங்கள்—தாலுக்கா ஆபீஸ்கள் கட்டுவதற்காக 11 இடங்களில் 1 கோடியே ?8 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாயை இந்த அரசு ஒதுக்கி கட்டிடங்கள் கட்டிக்கொண்டும், கட்டவும் இருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன். 11 ஊர்கள் என்னும் பொழுது, பேராவூரணி, காரைக்குடி, விருதுநகர், எழும்பூர், நுங்கம்பாக்கம்—மெட்ராஸையே மறந்துவிட்டார் கள் இதற்கு முன்பிருந்த அரசுகளெல்லாம், ஒரேயொரு தாலுக்கா ஆபீஸ் எங்கேயுமே இல்லை. ஆனால் இன்றைக்கு எழும்பூர், நுங்கம்பாக்கம் இருக்கிறது.—நத்தம், இராஜபாளையம், கோத்த கிரி, புரசைவாக்கம், பெரம்பூர், திருச்சுழி, பண்ருட்டி, இராசி புரம் என்ற இடங்களிலெல்லாம் தாலுக்கா ஆபீஸ்கள் கட்டப்படுகிறது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல வருவாய்க் கோட்டம்—ஆர்.டி.ஓ. ஆபீஸ் என்று வருகிறபொழுதுகூட, அதற்காக இன்றைக்கு 78 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மேட்டூர், திண்டிவனம், அருப்புக்கோட்டை, தஞ்சாவூர், சங்ககிரி காஞ்சிபுரம், பட்டுக்கோட்டை, சிவகங்கை, திருநெல்வேலி, கூடலூர் முதலிய இடங்களில் கட்டப்பட்டும், கட்டுவதற்கும், நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன் குடியிருப்புகளும் பலருக்கும் கட்டப்பட்டு வருகிறது. அவை களையெல்லாம் சொன்னால் நேரம் அதிகமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் நாகர்கோவிலில் இப்பொழுதுதான் சில மாதங்களுக்கு முன்னாடே கட்டப்பட்டது. புதிதாக ஏற்படுத்தப்பட்ட பெரியார் மாவலட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்ட, ஏறத்தாழ ரூ. 179 இலட்சம் ஒதுக்கி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். திருச்சியிலும், நம்முடைய அருமை சகோதரர் மாவட்டமாகிய வட ஆற்காடு மாவட்டத்திலே வேலூரிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் விரைவிலே கட்டுவதற்காக ஏற்பாடுகள் நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன், இப்படியெல்லாம் சீர்திருத்தம் செய்கிறபொழுது, போன தடவை, 16 துணை தாலுக்காக்களை தாலுக்காக்களாக உயர்த்த அறிவிக்கப்பட்டது. 1980-81-லே. மக்கள் கணக்கெடுப்பு நடந்ததாலே, சென்ற ஆண்டு, ஆக்க முடியவில்லை. இந்த 1981-82-லே, வருவாய்த் துறை துணை வட்டமாக இருப்பவற்றை, வட்டமாக ஆக்குவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள ஊர்கள் வருமாறு: செங்கல்பட்டு மாவட்டத்தில் ஊத்துக்கோட்டை, பள்ளிப்பட்டு, தென் ஆற்காடு மாவட்டத்தில் பாலூர், தஞ்சாவூரில் வலங்கைமான், நீடாமங்கலம், சொடவாசல், பொறையார், புதுக்கோட்டையிலே கந்தர்வகோட்டை. இராமநாதபுரத்திலே இராமேஸ்வரம், மானாமதுரை, இளையாங்குடி, திருநெல்வேலியிலே பாளையங்கோட்டை, சிவகிரி, இராமநாதபுரம், கோயம்புத்தூரிலே வால்பாரை, பெரியார் மாவட்டத்திலே காங்கேயம்—இந்த ஊர்களெல்லாம் வருகிற ஆண்டில், வட்டமாக, தாலுக்காவாக ஆகும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே இன்னொரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். பட்டா பாஸ் புத்தகத்தைப் பற்றி இளையபெருமாள் அவர்கள் பேசினார்கள். பட்டா பாஸ் புத்தகம் இன்றைக்குக் கொடுக்கப்படுகிறது என்றாலுங்கூட, அது லீகல் டாகுமெண்டாக ஆகவில்லை. அதிகாரம் பெற்ற தஸ்தாவேஜாக ஆகவில்லை. இந்த அரசு

அதை அதிகாரம் பெற்ற தஸ்தாவேஜாக ஆக்க இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பட்டா புஸ்தகம் மட்டுமல்ல; ஒருவருக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது என்பதும் அதில் நஞ்சை எவ்வளவு என்பதும், புஞ்சை எவ்வளவு என்பதும், அதிலே எவ்வளவு கிரயம் என்பதும் போடப்படும். பட்டா பாஸ் புத்தகத்தைக் காண்பித்தால், அதைப் பெற்றுக் கொண்டு, அதைப் பார்த்துக் கொண்டு, கடன் கொடுக்க வேண்டும். வங்கிகளிலே கடன் வாங்கக்கூட அதைப் பார்த்து, அந்தச் சொத்து விவரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை லீகல் டாக்குமென்டாக ஆக்குவதற்காக இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. அதைப் பற்றிய ஒரு சட்ட முன்வடிவு இங்கேயே விரைவிலே வருகிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றைச் சொல்கிறேன். இங்கு எல்லோருமே இன்றைக்குக் குத்தகைக்காரர்கள் சரியாகப் பதிவு செய்யப்படவில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு 9 இலட்சம் குத்தகைதாரர்கள் இருப்பார்கள் என்று நாங்கள் எண்ணிப் பார்க்கிறோம். ஆனால், 6 இலட்சமோ, அல்லது 5 இலட்சமோ தான் பதிவு செய்யப்படும் என்று எண்ணுகிறோம். ஆகையால், சரியான குத்தகைதாரர் யார் என்று பதிவு செய்வதற்காக அதிகாரம் பெற்ற மக்கள் குழு போடுவதற்காக, சட்ட முன் வடிவு, இங்கே வருகிறது என்ற செய்தியையும் உங்களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே அமைச்சரிடம் ஒரு விளக்கம் கேட்கிறேன். அரசு கிராம அதிகாரிகளை மாற்றம் செய்தபோது, கீழ்நிலையில், தோட்டிகள் அல்லது தலையாரிகள் என்ற பெயரிலே கிட்டத்தட்ட 54,000 பேரில் தங்களுடைய நிர்வாகத்திலே வருகிறது—5,000 பேர்களை 60 வயதானவர்கள் என்று திடீரென்று வேலையை விட்டு நீக்கிவிட்டார்கள். அவர்களுக்கு எந்தவித ஒத்தாசையும் கொடுக்கப்படவில்லை. வெள்ளைக்காரன் காலத்திலே, ரூ. 3 சம்பளத்திலே சேர்த்து, இப்பொழுது, ரூ. 80, ரூ. 90 சம்பளத்திற்கு வந்து, தங்களுக்கென்று எதையும் மிச்சம் வைத்துக் கொள்ளாமல், நன்றியோடு, ஆயிரக்கணக்கான ரூபாய்களை கஜானாவில் நன்றியோடு வேலை செய்ததற்கு, வேலை வாய்ப்பை இழந்திருக்கிறார்களே, அவர்களுக்கு என்ன உத்தரவாதம் அரசு செய்ய இருக்கிறது என்பது இன்றுவரையிலும் தெரியவில்லை. அமைச்சர் அதற்கு ஆவன செய்வாரா என்று கேட்கிறேன்........

(பிற்பகல் 1–30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் பேரவை நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு அந்தக் காலத்திலே மணியக்காரரே பார்த்து உனக்கு 25 வயது நீ போ, உனக்கு 30 வயது, நீபோ, என்று அவர் ரெக்கார்டு பண்ணுவார். ஆனால் வாஸ்தவத்திலே 50 வயதாக இருந்தாலும் 60 வயது என்று வைத்திருக்கிறார்கள். ஆகவே 10 வயது இருந்தும் சட்டத்தாலே பெற முடியவில்லை. சமாதானத்திலேயும் பெற முடியவில்லை. திடீரென்று வேலை போய் விட்டது. ஆகவே அரசு அவர்களை கருணையோடு கவனித்து ஏதாவது வழி செய்து உபகாரச் சம்பளமோ அல்லது அங்கே இருக்கிற புறம்போக்கு நிலமோ அல்லது அரசாங்கம் அதிகமாக எடுக்கின்ற நிலத்தையோ கொடுக்க வேண்டும். இல்லையானால் 5 ஆயிரம் குடும்பங்கள் நடுத் தெருவிலே அவதிப்படுவதற்கு அமைச்சர் அவர்கள் நியாயம் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி உடனடியாக சொல்ல முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் பற்றி முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கோ அல்லது அமைச்சரவையின் கவனத்திற்கோ கொண்டு போக முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே நிலங்களை எடுப்பதும் கொடுப்பதும் பற்றிச் சொன்னார்கள். ஆனால் சொல்கிறபோது நம்முடைய உறுப்பினர் அன்புச் சகோதரர் துரைமுருகன் அவர்கள் சொல்லுகிறபோது சொன்னார்கள். இன்றைக்கு தி.மு.க. ஆட்சியிலே கொடுக்கப்பட்டவைகளிலே எடுக்கவேண்டும் என்று சொன்ன உடன் அதிகாரிகள் அவைகளை எல்லாம் தி.மு.க. காலத்தில் கொடுத்தவர்களுக்கு எல்லாம் கொடுக்கக்கூடாது என்பதற்காக அதிகாரிகள் உடனே நீக்கிவிடுகிறார்கள் என்று அதிகாரிகளைப் பற்றி தரக்குறைவாக சொன்னார்கள். நான் சொல்லுகிறேன். அதிகாரிகள் சொன்ன உடனே சரிதான் அமைச்சர் சொல்கிறார், எம். எல். ஏ. சொல்லுகிறார் என்று செய்ய மாட்டார்கள் என்கின்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆனால் சிலர் ஏதாவது தவறு செய்யலாம். இருக்கின்ற அதிகாரிகளில் பெரும்பாலானவர்கள் நியாயத்தின் அடிப்படையில் தான் செய்வார்கள் என்று உறுதி அளிக்கிறேன். நான் இப்போது தெரிவித்துக் கொள்கிறேன். எங்கேயாவது தகுதியற்ற முறையில் யாருக்காவது பட்டா கொடுக்கப்பட்டிருந்தால், அதை இப்போது நாம் சும்மா விட்டுவிட்டால், தொடர்ந்து பலர் தகுதியற்ற முறையில் பட்டா வாங்கக்கூடாது என்பதற்காகத்தான், அதைத் தடுத்து நிறுத்துவதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கோ கொலை நடந்து விட்டது. கொலைகாரனைப் பிடித்து ஜெயிலில் போட்டுவிட்டால், செத்தவன் பிழைத்துவிடுவானா? தூக்கிலே போட்டுவிட்டால் செத்தவன் மீண்டும் வருவானா? வரமாட்டான்.

ஆனால் இப்படிப்பட்ட தவறுகள் வரக்கூடாது என்பதற்காகத்தான் முறையற்ற முறையில், தகுதியற்ற முறையில் யாராவது பட்டா வாங்கி இருந்தால், இலவசமாக நிலம் வாங்கி இருந்தால், தகுதி இல்லாமல் வாங்கி இருந்தால் அதை நீக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேறு ஒன்றும் சொன்னார்கள். கிராமத்திலே என்ன நடக்கிறது. பிறப்பு, இறப்பு எல்லாம் நன்றாக நடக்க வில்லை என்றெல்லாம் சொன்னார்கள். அமைச்சர்களுக்கோ அல்லது ஆளும் கட்சியினருக்கோ இதை எல்லாம் பார்க்க எங்கே நேரம் இருக்கின்றது. விழாக்களிலேயும் அவர்கள் கவனத்தை செலுத்து கிறார்கள். தமிழிலே ஒன்று சொல்வார்கள். 'தற்குறிப்பேற்ற அணி'' என்று. மற்றவர்கள் மேல் ஏற்றிச் சொல்வது. அதிலே அவர் மிகவும் வல்லவர் என்பது எனக்குத் தெரியும். தன்னுடைய குறிப்பை மற்றவர்களிடத்திலே ஏற்றிச் சொல்லி இருக்கிறார்கள் என்று தான் சொல்லவேண்டுமே ஒழிய, மற்றவர்களைப் பற்றி எல்லாம் நாங்கள் கவலைப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். முன்பு ஒரு முறை நான் இப்படித்தான் குத்தகைச் சட்டத்தைப் பற்றி பேசுகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்களும் மற்றவர்களும் சொன்னார்கள். 71 யையும் 72 யையும் கவனிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்போது நான் எதையும் சொல்ல முடியாமல் இருந்தபோது, ஒரு குறிப்பை என்னிடத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுப்பினார்கள். 71-ம் 72-ம் கவனிக்கப்படும் என்ற குறிப்பை என்னிடத்திலே அனுப்பினார்கள். அதற்குப் பிறகு சட்டம் வந்தது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதைப்போல இப்போது நான் பேசிக்கொண்டிருக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பு ஒன்றை எழுதி அனுப்பி இருக்கிறார்கள். இப்படி இளையபெருமாள் அவர்கள் சொன்னதற்கு அவர்களுடைய வசதிக்கேற்ப அதை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை நான் அறிவிக்கலாம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் தற்குறிப்பேற்றணியோடு பேசியதோடு விட்டு விடவில்லை. மேலும் சொல்லியிருக்கிறார்கள். பல இடங்களில் விழா நடக்கும். பொது இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடக்கும். எல்லோரும் சென்று பார்ப்பார்கள். எப்படிப் பார்ப்பார்கள் என்றால், கலையை மட்டும் ரசிப்பார்கள். பொது விழாக்கள் நடைபெறுகிறபோது அங்கே நடைபெறுகிற நாட்டியத்தைப் பார்ப்பார்கள். அந்த நாட்டியக்காரி பலபேருக்கு முன்னிலையில் ஆடுவதால் பலரும் பார்த்து அதை ரசிப்பார்கள். அப்படி ரசிக்கிற போது கலையை மட்டும் ரசிப்பார்கள். நாட்டியக்காரி ஒரு

வருக்கு மட்டும் ஆடவேண்டும் என்று சொன்னால் எங்கே ஆடு வார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். பெரிய வசதி படைத் தவர்கள் அந்த நாட்டியக்காரியின் கலையைத் தனியாக ரசிக்க வேண்டும், கலைக்கு அப்பாற்பட்டுப்போய் ரசிக்க வேண்டும் என்று சொன்னால், ஒரு நாளைக்கு ஒருவருக்கு மட்டும்தான் அந்த நாட்டியக்காரி ஆட முடியும். (சிரிப்பு). ஒரு நாட்டியக்காரி ஒரே நாளில் எல்லோர் வீட்டிலும் நாட்டியம் ஆட முடியாது. இப்படி தனியாக ஆடுகிற நாட்டியக்காரியை நான் பார்த்தது இல்லை. கேள்விப்பட்டு இருக்கிறேன். அதைப் போலத்தான் இன்றைக்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் பலருக்கு நாட்டியம் ஆடுபவர்களாக இருக்கிறார்கள். இங்கே நாட்டியக்காரியின் உதாரணத்தைச் சொல்லி, அந்த நாட்டியக்காரி தனியாக ஆடி னால் எப்படியெல்லாம் ஆடுவாள் என்கிற கற்பனை மனதில் ஏற்படுத்திக்கொண்டு, அதை எப்படி ரசிப்பது என்கிற வகையில் கற்பனை எண்ணத்தை ஏற்படுத்தியதற்காக மாண்புமிகு உறுப் பினருக்கு பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை இங்கே 1 மணிக்கு—பசி எடுக்கும் வேளையில்—உற்சாகத்தோடு இருப்பதற்காகச் சொல்லியிருக்கிறார் என்று நினைக்கிறேன். எனக்கு அப்படி பேசுகிற திறமை இல்லை என்றாலும், அதைப் பாராட்டுகின்ற அளவிற்கு தெரிந்து வைத்து இருக்கிறேன் என்பதை மட்டும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சிப்பணி பற்றி சொல்கிறபோது—சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் அது பற்றிப் பேசுகிறபோது—காலம் கடந்து பணிகள் ஆரம்பிக்கப்பட்டன என்று சொன்னார்கள். ஒதுக்கப் பட்ட பணம் போதாது என்று சொன்னார்கள். அப்பொழுதே நான் சொன்னேன். பணத்தைப் பற்றிக் கவலை இல்லை. முத லமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், பணம் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, வேலை நடைபெற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போது இதற்காக 4 கோடியே 96 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னபே. து குறைவு என்று சொன்னார்கள். இன்றைக்கு அது குறித்துநான் தெரிவிக்க விரும்புவது 2,817 இலட்சம்—அதாவது 28.17 கோடி ரூபாய். அது இன்னும் 30, 35 கோடி அளவிற்குப் போகும். அந்த வகையில் இவைகளையெல்லாம் இந்த அரசு செய்து கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வறட்சிப் பணிகள் எல்லாம் இன்றைக்கு எப்படி நடை பெறுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அவைகள் எல் லாம் செய்ய பஞ்சாயத்து ஒன்றியங்கள் மூலமாக கிட்டத்தட்ட 106 இலட்சம் ரூபாய் மண் சாலைகள் அமைக்க 156 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. பழுது பார்க்க 30 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. நீர் சேகரிப்பதற்காக 70 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படி பட்டியல் போய்க்கொண்டே இருக்கிறது. நெடுஞ்சாலைகளுக்கு, நெடுஞ்சா லைகள் சரிசெய்வதற்கு 3 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் எல்லாம் செய்து கொண்டு இருக்கிறோம்.

அது மட்டுமல்ல, உங்களுக்கு இன்னொன்றையும் சொல்வேன். பெரிய ஏரிகளில் மராமத்து செய்வதற்காக இன்றைக்கு பொதுப்பணித் துறை மூலம் 9 கோடி அளவிற்குச் செலவு செய்யப்பட்டு, பணிகள் செய்யப்பட்டுள்ளன. மாட்டுத் தீவனம், வைக்கோல் வாங்குவதற்காக இந்த அரசு 20 இலட்சம் முன் பணம் கொடுத்து இருக்கிறது. மேலும் தேவைப்பட்டால் அதிகம் கொடுக்கப்படும். வறட்சி காரணமாக நெல், கடலை, எள், போன்ற விதைகள் கிடைக்காமல் இருக்கும் என்பதால் அதை வாங்கி வைக்க 32 இலட்சம் முன் பணம் கொடுக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக மட்டும் 1,502 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. குடிநீர் திட்டத்திற்காக 1,315 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்ந்து வரும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பலர் சொன்னார்கள், அங்கே இப்படி வேலை நடக்க வில்லை இங்கே இப்படி வேலை நடக்கவில்லை என்று. நான் உங்களிடத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன், பல சட்ட மன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள் மக்கள் குழு கூட்டம் நடைபெறுவதைப் பற்றி. நான் மாவட்ட ஆட்சித் தலைவர் களிடத்தில் அரசின் சார்பில் தெரிவித்து இருக்கிறேன், சட்டசபை நடக்கிற நேரத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் அந்தக் கூட்டங்களை நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறேன்.

[பிற்பகல் 1-40]

ஆனால், ஒன்றை உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சில இடங்களிலே வறட்சி நிவாரணப் பணிகள் இதற்கு முன்னால் இந்த மாதிரி நடைபெற்றதில்லை. இந்தத் தடவைதான் முதன் முதலாக குழு போடப்பட்டிருக்கிறது. இங்கே யாரும் குழு போட்டதைப் பற்றி குறை சொல்லவில்லை ; அதிலே எனக்கு மகிழ்ச்சி. சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள், பொது மக்களிலே யார் யார் பொது வேலை செய்ய முன் வருகிறார்களோ அவர்கள் ஆகியோரை குழுவிலே போடச்சொல்லியிருக்கிறோம்.

இன்னொன்று. இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களையும் ஒரு இடத்தில் குழுவில் போடவில்லை என்று சொன்னார்கள். அந்த ஊரில் கம்யூனிஸ்ட் கட்சியினர் இருந்திருந்தால் நிச்சயமாகப் போட்டிருப்பார்கள். அப்படி யாராவது இருந்து, போடவில்லை என்றால் பெயர்களை நீங்கள் கொடுங்கள், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி போடச் சொல்கிறோம். குழுவில் போடு வதிலே குறையில்லை ; ஆனால், அவர்கள் வேலை செய்ய வேண்டும்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அதிகாரிகளை நம்பித்தான் இன்றைக்கு 30 கோடி ரூபாயை கொடுத்திருக்கிறோம் என்றாலும் உங்களையும் சேர்த்து நம்பித் தான் கொடுத்திருக்கிறோம். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். எந்த எந்த ஊரில், என்ன, என்ன வேலை நடக்கிறது? எந்த கிராமத்தில் வேலை நடக்கிறது? எந்த துறை வேலை செய்கிறது என்ற தகவல்களை குழு உறுப்பினர்களுக்குக் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, அந்த வேலைகளை கண்காணிக்க வேண்டியது உங்களுடைய பொறுப்பு. நாளை இங்கே வந்து குறை சொல்லக் கூடாது. அங்கே இலஞ்சம், இங்கே இலஞ்சம், அதிலே இவ்வளவு இலாபம், இதிலே இவ்வளவு கமிஷன் என்று நீங்கள் நாளை சொல்லக்கூடாது. அந்த முறையில் அதை கண்காணிக்கிற பரிபூரண பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. நீங்கள் மக்களுக்கு வேலை செய்வீர்கள் என்று நம்பித்தான் உங்களுக்கு ஓட்டு அளித்திருக்கிறார்கள். சட்டமன்றத்தில் வந்து பேசுவதற்காக மட்டும் ஓட்டு அளிக்கவில்லை. ஊரிலே பணிபுரிய வேண்டும், நிர்வாகத்தைக் கண்காணிக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஓட்டு போட்டிருக்கிறார்கள். ஆகையால் மக்கள் குழு இதிலே தீவிரமாகப் பணியாற்ற வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இந்த இடத்திலே இவ்வளவு குறைபால் ஏற்பட்டது, அதிகாரிகள் ஒத்துழைக்கவில்லை என்று தெரிந்தால் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். எப்போது சட்ட மன்றம் கூடும், அப்போது சொல்ல வேண்டும் என்று எண்டுக் கொண்டிருந்தால் காரியம் ஆகாது. குறைகளை மட்டுமே சொல்லக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்காமல் குறைகளை களையக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருக்க வேண்டும். ஆகவே, எங்கெங்கே என்னென்ன தவறு நடக்கிறது, குறை இருக்கிறது என்பதை தொலைபேசி மூலம் சொல்லாமல், நேரடியாகச் சொல்லலாம், எப்படிச் சொன்னாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. 31 ஆம் தேதி மார்ச்சு 1981-ஆம் ஆண்டு அதற்குள் எந்த எந்த இடங்களில் கைப்பம்பு இருக்கிறது, மேல் நிலை தொட்டி இருக்கிறது என்று பார்த்ததை பழுதடைந்தவை எல்லாம் ரிப்பேர் செய்யப்படும். அதிகாரிகளை நம்பி, அவர்களைக் கேட்டு உங்களிடம் சொல்கிறேன். சில இடங்களில், செய்யாமல் இருக்கலாம். எந்த கிராமத்தில், எந்த இடத்தில் இது நடக்கவில்லை என்று நீங்கள் எழுதிக்கொடுத்தால் அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அதைப்போல இன்றைக்கு தமிழகம் பூராவிலும் 30,000 ''ஹாண்ட் பம்பு'' இருந்தாலும் எங்களுக்கு கொடுத்திருக்கிற தகவல்படி 500 தான் ரிப்பேர் என்று கொடுத்திருக்கிறார்கள். அது சரியில்லை என்று நீங்கள் அறிந்தால், என்னிடம் விவரத்தைக் கொடுங்கள், உடனடியாகக் கவனிக்கப்படும்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அதைப்போல மின்விசை பம்பு 10,000-ல் சுமார் 500 தான் வேலை செய்யவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். சில பர்சென்டேஜ் தவறு இருக்கலாம். அதை சரி செய்யத்தான் நாம் இருக்கிறோம். அதைச் செய்வோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல 1,459 பம்பு செட்டுகளை பஞ்சாயத்து யூனியனில் எடுத்து வேலைசெய்ய வேண்டுமென்று சொல்லி இந்த மார்ச் 31- க்குள் 1,200 முடிவுற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு புதிதாகக் குழாய்கள் போடவேண்டும். அப்படிப் புதிதாக குழாய்கள் போடவேண்டும் என்று சொல்கின்றபோது தமிழகத்தினைப் பொறுத்தவரையில் சிறிய கிராமங்கள் 12 ஆயிரம் இருக்கின்றன, ஆக கிராமங்களை எல்லாம் சேர்த்தால் 15,000 அல்லது 16,000 கிராமங்கள் இருக்கக்கூடும். ஆனால் இன்றைக்கு 2,596 இடங்களில் வேலை நடக்கின்றது. அதிலே 31—3—1981-க்குள்ளாக முடிந்தது 1,200 வேலை நடந்து கொண்டிருப்பது 1.356. இது போதுமா என்றால் போதாது. 2,500 போதுமா என்று நீங்கள் கேள்வி கேட்பீர்கள். ஆகவே தேவைக்கேற்றவாறு, இருக்கின்ற நிலைமைக்கேற்றவாறு இன்னும் 9,000 கைப்பம்புக்களை அமைப்பதற்கு அரசு அதிகாரிகள் முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கே பல உறுப்பினர்கள் எங்களுடைய கிராமத்திலே இல்லை, என்றெல்லாம் சொன்னார்கள். நான் சொல்கிறேன். நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பது தமிழ்நாடு முழுவதற்கும்தான். உங்களுடைய ஊருக்காக மட்டும் அல்ல. ஆகவே தமிழ்நாடு முழுவதற்கும் வேண்டும் என்றுதான் கேட்கவேண்டும். ஒருவன் பட்டினியாக இருக்கிறான், ஒருவன் பால் சாப்பிடுகிறான். ஒருவனுக்கு இரண்டு நாட்களுக்கு சாப்பாட்டுக்கு இருக்கின்றது. அதாவது தண்ணீர் அடுத்த மாதம் வரை வரும் என்றால் பின்னாலே எடுத்துக்கொள்ளப்படும். சில ஊர்களுக்கு பாதி தண்ணீர் கிடைக்கின்றது என்றால் அது அதற்கு முந்தி எடுத்துக் கொள்ளப்படும். தண்ணீரே இல்லை பட்டினிச் சாவு என்றால் முதலிலே எடுத்துக் கொள்ளப்படும். ஆக அந்த விதத்தில்தான் இன்றைக்கு 2,500 என்று எடுத்துக் கொண்டிருக்கிறோம். 9,000 வரை எடுத்துக்கொள்வதற்கு இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கிராமங்களில் கிணறுகள் இருக்கின்றன. இன்றைக்கு சுமார் 11,000 கிணறுகளை ஆழப்படுத்தலாம் என்று அரசு அதிகாரிகள் ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதிலே 31 ஆம் தேதி வரை செய்ய முடிந்தது ஆயிரம்தான். இப்போது 2,500-க்கு வேலை நடந்து கொண்டிருக்கின்றது. மேலும்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

7,000 எடுப்பதற்கு அரசு உத்தேசித்துக் கொண்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. உங்களுக்கெல்லாம் தெரியும். சில ஊர்களிலே எவ்வளவு ஆழம் வெட்டினாலும் தண்ணீரே வராது. வெட்டி வெட்டி உள்ளே போகப் போக பூமிதான் இருக்கும், தண்ணீர் இருக்காது. அப்படிப்பட்ட இடங்களுக்கு எல்லாம் இந்த அரசு என்ன செய்துகொண்டிருக்கிறது தெரியுமா' வண்டிமூலமாகக் கொண்டு போகலாம், லாரி மூலமாகக் கொண்டு போகலாம், மனித உழைப்பு மூலமாக்க் கொண்டு போகலாம். அப்படி இன்றைக்கு 414 இடங்களுக்கு தண்ணீர் கொண்டு போகப்படுகின்றது. இதையும் அதிகப்படுத்தப் போகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு கிராமத்தில் 1,000 பேர் இருக்கவேண்டும் அல்லது 500 பேர் இருக்கவேண்டும் அப்போதுதான் ஹேன்ட் பம்ப் போடுவதற்கு 10 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்படும் என்று நீங்கள் எண்ணவேண்டியதில்லை நான் இதைச் சொல்வதற்குக் காரணம் நீங்கள் எல்லாம் மக்கள் குழுவிலே உறுப்பினராக இருக்கிறீர்கள். ஆகவே தேவை என்றால் அங்கே போடுவதற்கு அரசு ஆணையிட்டிருக்கின்றது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்றால் வேடச்சந்தூர் தொகுதியில் குழந்தைப்பட்டி என்ற இடத்திலே உள்ள ஜனத்தொகை 150 பேர்தான்....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நீங்கள் எப்போது சொல்கிறீர்களோ அப்போது முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியில்லை, மணி 1¾ ஆகிறதே எவ்வளவு நேரம் ஆகும் என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இன்னும் 5 நிமிடத்திற்குள் முடித்துவிடுகிறேன்.

அடுத்து 150 பேர்கள் உள்ள ஊருக்கு கைபம்ப் போடப்பட்டிருக்கின்றது. அதேபோன்று 250 பேர் உள்ள அரிசம்பட்டியில் குழாய்க் கிணறு போடப்பட்டிருக்கின்றது. பூதம்பட்டியில் 275 பேர்தான். வட மதுரையிலே ஒரு அரிசனக் காலனியில் 480 பேர்கள்தான். இப்படி ஜனத்தொகை குறைவாக இருந்தாலும் கூட வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. 200 பேர் இருந்தாலும், 300 பேர்கள் இருந்தாலும் அங்கே எல்லாம் இவை அமைக்கப்படுகின்றது என்ற செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

ஆனால் இதற்குத் தேவையான ரிக்ஸ் வேண்டும் என்ற மத்திய பேரரசுக்கு எழுதி இருக்கிறோம். அதற்காக ஏன் விமானம் மூலம் பறந்து செல்லக்கூடாது என்று கேட்டார்கள். விமானம் மூலம் பறந்து செல்லாவிட்டாலும் தொலைபேசி மூலம் பலமுறை பேசப்பட்டு இருக்கின்றது. ஆனால் மத்திய அரசிடத்திலே இருந்து கொடுக்கப்பட்டது இரண்டே இரண்டு தான். ரிக்ஸை விலைக்கு வாங்குவதற்கு நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். டேனிஷ் நிறுவனத்திலிருந்து 4 கிடைத்திருக்கின்றது. இவைகளைப் பயன்படுத்தி வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். நாம் இங்கே வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு 121 ரிக்ஸ் வேலை செய்து கொண்டிருக்கின்றது.

[பிற்பகல் 1–50]

பாறைகள் உடைக்கின்ற கருவிகள் 119 இருக்கின்றன. இவைகள் போதுமா என்றால், நிச்சயமாக போதாது என்று நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொண்டு, போதாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல பொதுப்பணித் துறையிலே 1,336 வேலைகள் எடுக்கவிருக்கிறோம். சிறு பாசனத் திட்டத்தின் கீழ் 2,475 வேலைகள் எடுக்கவிருக்கிறோம். இதுபோல பல துறைகள் மூலமாக பல வேலைகள் எடுக்கயிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக உங்களிடத்திலே சொல்ல விரும்புவது, 1975 ஆம் ஆண்டிலும் இந்த நாட்டில் வறட்சி ஏற்பட்டது உங்களுக்கெல்லாம் தெரியும் என்று நினைக்கிறேன், இப்போது அதை பேசுகிறபோது, அன்றைக்கு நாங்கள் அதை செய்தோமே இதைச் செய்தோமே, நீங்கள் செய்யவில்லையே என்று சொல்கிறார்கள். நானும் அப்போது இந்த நாட்டில்தான் இருந்தேன். இங்கே இருக்கிற அமைச்சர்களும் அப்போது இந்த நாட்டில்தான் இருந்தார்கள். முதலமைச்சர் அவர்களும் இந்த நாட்டில்தான் இருந்தார்கள்.

1975லே என்ன நடந்தது என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும், அப்போது சரியாக நடக்கவில்லை என்று நான் சொல்ல வரவில்லை. அப்போது எப்படி வேலைகள் நடைபெற்றதோ, அதே போலத்தான் இப்போதும் வேலைகள் விரைவாக நடைபெற்று வருகிறது. மக்கள் குழுவும் போடப்பட்டிருக்கிறது. உங்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று சொல்கிறேன். அன்றைக்கு வேலை முடிவடைய 11 மாதம் தேவைப்பட்டது. 11 மாதம் என்றால், 1974-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து 1975-ஆம் ஆண்டு அக்டோபர்

மாதம் வரை 11 மாதம் வேலை நடந்தது. 11 மாதமும் அந்த அரசு செய்த மொத்த செலவு 24.18 கோடி அது அப்போது. ஆனால் இன்றைக்கு இதுவரையிலும் நாம் அனுமதித்தது ஏறக்குறைய 30 கோடி இது 2 மாதங்களுக்கு. இன்னும் அதிகமாக கொடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. அப்போது மத்திய அரசிடத்திலே கேட்டது 55 கோடி. கொடுக்கப்பட்டது 7½ கோடி. அந்த 7½ கோடியையும் 3 தவணைகளில் கொடுத்தார்கள். முதல் தவணையில் 22–2–1975லே 1.3 கோடி மானியமாகவும் கடனாக 2.62 கோடியும் கொடுத்தார்கள். 10–3–1975 லே 0.175 மானியமாக கொடுத்தார்கள். 1.75 கடனாகக் கொடுத்தார்கள். மொத்தமாக மானியமாக கொடுக்கப்பட்டது எவ்வளவு என்றால் 2.25 கோடி. இதை நான் சொல்வதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் இதை நன்கு கவனித்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக.

கொடுக்கப்பட்ட தொகை 7½ கோடி, மானியமாக கொடுத்தது 2.25 கோடி, கடனாகக் கொடுத்தது 5.25 கோடி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் இன்றைக்கு கேட்டிருப்பது 137.88 கோடி. அன்றைக்கு கேட்கப்பட்டது 58 கோடி. ஆனால் இன்றைக்கு 137.88 கோடி கேட்கப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் அன்றைக்கு விளைச்சல் 2 அணா என்றால் முழுவதும் தள்ளுபடி, 4 அணா என்றால் பாதி தள்ளுபடி ஆனால் இன்றைக்கு 6 அணா விளைச்சலுக்கு முழுவதும், தள்ளுபடி செய்திருக்கிறோம். 6 அணா என்றால் 50 சதவீதம் (குறுக்கீடு) மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கேட்பதைப் போலத்தான் அதிகாரிகளும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு சொன்னேன், திருத்திக் கொண்டார்கள். உங்களை என்னால் திருத்த முடியாது. அந்தக் கணக்கு எப்படியென்றால் முழு விளைச்சலுக்கு 12 அணா என்று வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி வைத்துக் கொண்டால் 6 அணா என்பது 50 சதவீதம் வரும். இதை நான் சட்டமன்றத்தில் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

முதலிலே அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 4 அணா என்பதற்கு பாதியும், 2 அணா என்பதற்கு முழுவதுமாக வரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது அது 1974–75-ல்,

இப்போது 50 சதவீதம் அதாவது 50 சதவீத அளவிற்கு குறைவாக விளைந்தால் அவர்களுக்கு முழுவதும் தள்ளுபடி செய்கிறோம். அது மட்டும் அல்ல, 10 ஏக்கர் நிலம்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

ஒருவருக்கு இருந்தால், அதில் 5 ஏக்கர் 50 சதவீதங்களுக்கு கீழேயும், 5 ஏக்கர் 50 சதவீதங்களுக்கு மேலேயும் விளைந் திருந்தால், 5 ஏக்கருக்கு முழுவதையும் தள்ளுபடி செய்கிறோம் அதாவது நிலவரியோ, உள்வரியோ, தண்ணீர் தீர்வையோ, தனித் தண்ணீர் தீர்வையோ, பணப்பயிர் வரியோ எல்லாம் தள்ளுபடி செய்யப்படுகிறது. மீதி இருக்கிறது 5 ஏக்கருக்கு தள்ளுபடி இல்லை ஒத்தி வைக்கப்பெறுகிறது, நிலுவை தள்ளி வைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த கணக்குப்படி தண்ணீர் வாய்தா தள்ளு படி செய்ததால், சுமார் 8 கோடி ரூபாய் அரசுக்கு வரவேண்டிய வருவாய் குறைந்திருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை இன்னும் திறம்பட நடத்து வதற்கு, இன்றைக்கு வருவாய் நிர்வாக ஆணையாளர் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங் களுக்கும், நிர்வாக ஆணையாளர் சென்னை, செங்கற்பட்டு வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களுக்கும், நிலச் சீர்திருத்த ஆணையாளர் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களுக்கும், போக்குவரத்துத் துறை ஆணை யாளர் கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி, சேலம் மாவட்டங் களுக்கும் இப்படி பிரித்து வேலையைக் கொடுத்திருக்கிறோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, வேலைகள் விரைவாக நடைபெற வேண்டுமென்பதற்காக, வேண்டுமென்ற அளவுக்கு இன்றைக்கு அதிகாரிகளை நியமித்திருக்கிறோம். இன்றைக்கு அதிகாரியாக இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டும் போதாது என்று ஒவ்வொரு 10 மாவட்டத்திற்கும் ஒரு ஆர். டி. ஓ. ஒரு தாசில்தார் 2 உதவியாளர்கள், 2 தட்டச்சர்கள், நான்கு அடிப்படை ஊழியர் கள் இன்றைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதே போல் இன்றைக்கு குடிநீர் வாரியத்தில் 407 பேர்கள் புதிதாக நியமிக் கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் அதிகமாக நியமிக்கப்பட இருக்கிறார்கள். அதேபோல் இன்றைக்கு நெடுஞ்சாலை கிராமப் புறப் பகுதி என்ற இலாகாவிலே சீப் என்ஜினியர் முதல் கடைசி ஊழியர் வரைக்கும் 336 பேர்கள் புதிதாக நியமிக்கப்பட்டி ருக்கிறார்கள் இப்படி பல அதிகாரிகள் இன்றைக்கு நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து இப்படி நியமிக்கப்படுவார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, நான் உங்களிடத்திலே கேட்டுக் கொள்வ தெல்லாம் இந்த வறட்சிப் பகுதிகளிலே மக்களுடைய துயரைத் துடைக்க, எதிர்க் கட்சி, அரசு என்று நினைக்காமல், போடப் பட்டுள்ள மக்கள் குழுவிலே உங்களுடைய முழு ஒத்துழைப் பையும் தரவேண்டும். நீங்கள் எந்த அளவுக்கு ஒத்துழைப்புத் தருகிறீர்களோ, அந்த அளவுக்கு திறம்பட காரியங்கள் நடை பெறும். உங்களுடைய ஒத்துழைப்பு நிச்சயமாக இந்த அரசுக்கு

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

வேண்டுமென்பதற்காகத் தான் மக்கள் குழு போடப்பட்டிருக்கிறது. அதிலே திறம்பட வேலை செய்யவேண்டும். எங்காவது குறைபாடு இருந்தால், எங்களிடத்திலே எடுத்துச் சொல்லலாம்; தவறு நடந்தால், அந்தத் தவறை எடுத்துச் சொல்லலாம் இதை முடித்த பிறகு 50 கோடி, 60 கோடி என்றிருந்தாலும், இது பர்பெக்டாக நூற்றுக்கு நூறு நடந்தது என்று சொல்ல வேண்டும். அதற்கு நீங்கள் எல்லாம் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

கோரிக்கை எண் 1.

நிலவரித் துறை,

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், என். எஸ். வி. சித்தன். கே. ஆர். சுந்தரம், பேரா. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—"மானியக் கோரிக்கை எண் 1—நில வரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 6,16,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

திருவாளர்கள் சு. பாலன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. உ. சுப்பிரமணியன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—"மானியக் கோரிக்கை எண் 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 3,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

திருவாளர்கள் சு. பாலன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், தி.கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு. எஸ். இராசாராமன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாத தால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :—''மானியக் கோரிக்கை எண் 46 — இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 21,46,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(பிற்பகல் 2-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றையதினம் மானிய விவாதத்தின் போது மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் பேசு கிறபோது

*** ***

என்று ஒரு பகுதி வந்திருக்கிறது. அங்கே இருக்கிற சூழ்நிலை களை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதை அறி கிறேன். ஆகவே அவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

251. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு ஒட்டல் நிறுவன விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து தொழிலாளர் நல—வேலை வாய்ப்புத் துறையில் 1981 ஆம ஆண்டு பிப்ரவரி திங்கள் 9 ஆம் நாளிடப் பெற்ற 315 ஆம் எண் அரசாணையில் வெளியான

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக் கிணங்க அகற்றப்பட்டது.

அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டத்தின (தமிழ்நாடு சட்டம் 13/1958) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

121. கோரிக்கை எண்கள் 1,41 மற்றும் 46—நில வருவாய் இயற்கைச் சீற்றத் துயர் தணிப்பு, இழப்பீடுகள் மற்றும் ஒதுக்கீடுகள்—ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

122. வருவாய்த் துறையின் 1981-82 ஆம் ஆண்டிற்கான சாதனை அறிக்கை (ஆங்கிலம்).

123. மானியக் கோரிக்கை எண் 28-ன் பிழைதிருத்தம்.

இணைப்பு.

[59-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க.]

கொள்கை விளக்கக் குறிப்பு.

1. முன்னுரை.

மாநிலத்தின் வருவாய் நிர்வாகத்தில் நிலவரி விதிப்பு, நிலவரி வசூல், வேளாண்மை வருமான வரி, நகர்ப்புற நிலவரி, ஏனைய பல்வேறு வரிகள், அரசுக்குச் சேரவேண்டிய கடன்கள் ஆகியவை அடங்கும். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரும் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியும், வருவாய் கோட்ட அளவில் கோட்டாட்சியரும், வட்ட அளவில் தாசில்தாரும், பிர்க்கா அளவில் வருவாய்த்துறை ஆய்வாளரும் இப்பணிக்குப் பொறுப்பேற்கின்றனர். வருவாய்க் கிராமங்கள் இந்த அமைப்பின் அடித்தளமாக விளங்குகின்றன. பல ஆண்டுகளாக, வருவாய் நிர்வாகம் முற்றிலும் வருவாய்ப் பணிகளையே மேற்கொண்டிருந்தது. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், இந்த வருவாய் அமைப்பு கிராம மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பல்வேறு பணிகளை ஆற்றவேண்டியுள்ளது. தொன்று தொட்டு வருகின்ற இம்முறை வெற்றிகரமாக நடைபெறுகிறது. சாதாரண காலங்களில் மட்டுமின்றி, புயல், வெள்ளம், தீ விபத்துக்கள் முதலிய இயற்கைச் சீற்றங்களின்போதும் இம்முறை செவ்வனே நடைபெற்றது. கிராம மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு, பயிரிடுவதற்கு நில ஒப்படை செய்தல், வீட்டு மனைகள் வழங்குதல், பட்டா மாற்றம் செய்தல், பல்வேறு காரியங்களுக்காகச் சான்றிதழ்கள் வழங்குதல் முதலிய முக்கிய பணிகளை வருவாய்த் துறை கவனிக்கிறது. சென்ற நிதியாண்டில் பல்வேறு துறைகளில் எய்திய சாதனைகளும், நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளவிருக்கும் செயல் திட்டங்கள் குறித்த விவரமும் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன,

இணைப்பு—தொடர்ச்சி.

2. நிர்வாகச் சீர்திருத்தங்கள்.

2. வருவாய் வாரியத்தை நீக்கியது இச்சமயம் அரசு கொண்டு வந்த மிக முக்கியமான சீர்திருத்தங்களில் ஒன்றாகும். வருவாய் வாரியம் தமிழ்நாட்டில் 1786 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இவ்வாரியம் தொடங்கப்பட்டதிலிருந்து தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட சில கடமைகளை ஆற்றி வந்துள்ளது. வருவாய் வாரியத்தை நீக்குவதுப்பற்றியும், அதற்குப் பதிலாக, மாற்று அமைப்பைக் கொண்டு வருவது குறித்தும் அரசு நீண்ட காலமாகப் பரிசீலித்து வந்துள்ளது. திரு. டி. ஏ. வர்கீஸ், ஐ.சி.எஸ். (ஓய்வு பெற்றவர்), தலைமையில் இயங்கிய நிர்வாகச் சீர்திருத்தக் குழு, வருவாய் வாரியத்திற்குப் பதிலாக அமைக்கப்படவிருக்கும் மாற்று அமைப்பு குறித்து 1972 ஆம் ஆண்டில் சில பரிந்துரைகளைச் செய்தது. வருவாய் வாரியத்தை நீக்குவது குறித்தும் தன்னிடம் கொடுக்கப்பட்ட நிர்வாகப் பணிகளை செவ்வையாகவும், திறமையாகவும், விரைந்தும் முடிக்கக்கூடிய மாற்று ஏற்பாட்டைக் கொண்டு வருவது குறித்தும் கொடுக்கப்பட்ட செயற்குறிப்பின் பல்வேறு கூறுகளை, அரசு கவனமாகப் பரிசீலித்தது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டு, சட்டமாக்கப்பட்டது. வருவாய் வாரியம் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் நீக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, போக்குவரத்து, வணிக வரிகள், வருவாய் நிர்வாகம், நில நிர்வாகம், நிலச் சீர்திருத்தம், ஆயத் தீர்வை-மதுவிலக்கு ஆகிய ஆறு துறைகளை அரசு அமைத்தது. போக்குவரத்து வணிக வரிகள், வருவாய் நிர்வாகம் நில நிர்வாகம், ஆகிய துறைகளின் தலைவர்களாக, ஆணையாளர்கள் பதவித்தரத்திலுள்ள அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிலச் சீர்திருத்தத் துறையின் தலைவராகத் தனி ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆயத்தீர்வை-மதுவிலக்குத் துறைத் தலைவராக இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த துறைத் தலைவர்கள் அனைவரும் மாநில அளவில் அதிகார வரம்பைப் பெற்றிருப்பர். மேலும், அவர்கள் கட்டுப்பாட்டின் கீழுள்ள துறைகள் சரியாகவும், திறமையுடனும் செயல்படுவதற்குப் பொறுப்பு வகிப்பதுடன் அரசுக்கு நேரடியாகப் பதில் கூறக் கடமைப்பட்டவர்களாவர். நவீன நிர்வாகத் தேவைகளுக்கேற்ப நிர்வாக அமைப்பைக் கொண்டுவரும் நோக்குடன், அரசு இச்சீர்திருத்தத்தை மேற்கொண்டது. அதனால், தாமதங்களை தவிர்க்கலாம். கிராம மக்கள் பயனடையும் வகையில், சிறந்த முடிவுகளை எடுக்க இயலும். இத்துறைத் தலைவர்களிடம் கடமைகளையும், பொறுப்புகளையும் ஒப்படைப்பதற்குத் தேவைப்படும் சட்டப்படிக்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தள அதிகாரிகளுக்கு அதிகாரங்களைப் பிரித்துக் கொடுப்பதற்கான வாய்ப்புகள் குறித்துப் பரிசீலிக்கப்பட்டது. கள அளவில் சில பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், மற்றவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. களப் பணியைத் திறமையாகவும், பலனளிக்கும் வகையிலும் ஆற்றும் நோக்குடன் அதிகாரங்களை மேலும் பிரித்துக் கொடுப்பதற்கான தேவை குறித்து அரசு தொடர்ந்து பரிசீலிக்கும்.

இணைப்பு.

கிராம நிர்வாகம்.

3. தமிழ்நாட்டின் கிராம நிர்வாகம்; கிராமத் தலைவர் கிராமக் கர்ணம், கிராமப் பணியாளர்கள் போன்ற பகுதி நேர கிராம அதிகாரிகளைக் கொண்டது. நில வருவாயையும், அரசுக்குச் சேர வேண்டிய ஏனைய பாக்கிகளையும் வசூலித்தல், கிராமப் பதிவேடுகளை வைத்து வருதல் ஆகியவை தொடர்பான பணிகள் கிராமத் தலைவரிடமும், கிராமக் கர்ணத்திடமும் ஒப்படைக்கப்பட்டன. இவர்கள் பகுதி நேர அதிகாரிகளாக இருந்ததினால் இந்த அமைப்பில் முக்கியமான குறைபாடுகள் இருந்தன இக்குறைபாடுகள் காரணமாக இந்த அமைப்பு, காலப்போக்கில் கிராம நிர்வாகத்தின் தரத்தையும் தன்மையையும் பாதிக்கத் தொடங்கியது. 1973 ஆம் ஆண்டில் நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழு, பகுதி நேர கிராம அதிகாரிகள் கடமையாற்றுவது குறித்துத் தீவிரமாகப் பரிசீலித்தது. பகுதி நேர கிராம அதிகாரிகள் அடங்கிய பழைய முறை நீக்கப்பட்டு, இடம் விட்டு இடம் மாற்றம் செய்யத்தக்க முழு நேர கிராம அதிகாரிகளைத் கொண்ட புதிய அமைப்பு அமைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைத்தது. இப்பிரச்சினை அவ்வப்போது அரசின் பரிசீலனையில் இருந்து வந்துள்ளது. இது சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் அனைத்தையும் ஆய்வு செய்த பின்னர் நிர்வாக அவசியத்தின் அடிப்படையில் பகுதி நேர கிராம அதிகாரிகளை நீக்கிவிட்டு, இடம் விட்டு இடம் மாற்றத்தக்க முழு நேர அரசுப் பணியாளர்களை அமர்த்தும் புதிய முறையைக் கொண்டு வர அரசு முடிவெடுத்தது. இதற்கிணங்க, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பகுதி நேர கிராம அதிகாரிகள் பதவி நீக்க அவசரச் சட்டம் அதிகார முறையில் வெளியிடப்பட்டது. இதன்படி, தமிழ்நாட்டிலுள்ள பகுதி நேர கிராம அதிகாரிகளின் பதவிகள் நீக்கப்பட்டன. தமிழ் நாட்டில் பகுதி நேர கிராம அதிகாரிகளாகப் பணியாற்றியவர்களது பதவி, இந்த அவசரச் சட்டம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து அதாவது 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் நாளிலிருந்து அற்றுப்போகும். பழைய, பகுதி நேர கிராம அதிகாரிகள் இடத்தில் புதிய முழுநேர கிராம நிர்வாக அதிகாரிகள் செயல்படுவர். தேவையான எண்ணிக்கையில் கிராம நிர்வாக அதிகாரிகளின் பதவிகளை ஏற்படுத்த அரசு அதிகாரி ஒருவர் அல்லது இது தொடர்பாக அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரக்குழு அனுமதி அளிப்பதற்கு இந்த அவசரத் சட்டத்தின் 4 (6) ஆம் பிரிவு வகை செய்கிறது. இதற்கிணங்க, தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களில் 11,954 கிராம நிர்வாக அதிகாரிகளின் பதவிகளை ஏற்படுத்த வருவாய்த் துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் நாளிட்ட 2577 ஆம் எண் அரசாணையில் அரசு ஒப்புதல் வழங்கியது. கூடுதல் பதவிகளை ஏற்படுத்துவதற்கான விதிமுறைகளும் நெறிமுறைக் குறிப்புகளும், வருவாய்த் துறையின் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாளிட்ட 2681 ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இணைப்பு.

4. கிராம நிர்வாக அதிகாரிகளின் புதிய பதவிகளுக்கான பணி நிபந்தனைகள் குறித்த விதிகள் வருவாய்த் துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாளிட்ட 2600 ஆம் எண் அரசாணையில் வகுக்கப்பட்டுள்ளன. கிராம நிர்வாக அதிகாரிகள் பதவிகளுக்கு விண்ணப்பதாரர்களைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகத்திடம் ஒப்படைக்க அரசு தீர்மானித்தது. இப்பதவிகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகத்தின் வரம்பிற்குள் கொண்டுவரப்படவேண்டும் என வருவாய்த் துறையின் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12 ஆம் நாளிட்ட 2747 ஆம் எண் அரசாணையில் ஆணை பிறப்பித்தது. இப்பதவிகளுக்கு விண்ணப்ப தாரர்களைத் தெரிந்தெடுக்கும் பணியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு ஈடுபட்டுள்ளது.

5. கிராம நிர்வாக அதிகாரிகள் தேர்வு செய்யப்பட்டு இப்பதவிகளுக்கு நிரந்தரப் பணியளார்கள் நியமிக்கப்படும்வரை, அவர்களின் கடமைகளை ஆற்றுவதற்காக இடைக்கால ஏற்பாடுகளைச் செய்ய இந்த அவசரச் சட்டம் வகை செய்கிறது. இடைக்கால ஏற்பாடாக பிர்க்கா வருவாய் ஆய்வாளர்கள் இந்த அவசரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின்கீழ் இப்பதவிகளின் பொறுப்பு வகிக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. கிராமங்களில், வருவாய் நிர்வாகம் தொடர்பான பல்வேறு பணிகளைக் கவனிக்கும்படி அவர்களுக்கு விரிவான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. வயல்களில் பயிர்ப் பார்வை செய்தல். பல்வேறு கிராமக் கணக்குகளைத் தயாரித்தல், தற்காலிகக் கேட்புத் தொகைக் கணக்கிடுதல் ஆகியவற்றிற்கு வசதி செய்வதற்காக நில அளவைப் பயிற்சி பெற்ற உதவியாளர்களை வருவாய்த் துறையின் பல்வேறு அலுவலகங்களில் நியமித்து இந்த பணிகளை அவர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செய்ய வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவர்களது பணியைக் கவனமாக மேற்பார்வை செய்யும்படி வட்டாச்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், துணை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். சான்றிதழ்கள் வழங்குதல் போன்ற பொதுமக்கள் தேவைகளை நிறைவு செய்யும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கும்படி இவ்வதிகாரிகள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.

6. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக சட்ட முன் வடிவு ஒன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப் பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு பகுதி நேர கிராம அதிகாரிகள் பதவி நீக்க அவசரச் சட்ட (தமிழ் நாடு அவசரச்சட்ட எண் (10/1980)த்தை மாற்றுவதற்காக, சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 1980 ஆம் ஆண்டு தமிழ் நாடு பகுதி நேர கிராம அதிகாரிகள் பதிவி நீக்கச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் எண் 3/1981) இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம்

பதவி அற்றுப் போகும் பகுதி நேர கிராம அதிகாரி, அவர் பதவி வகித்த மொத்தப் பணிக்காலத்தின் ஒவ்வொரு ஆண்டுக்கும் அரை மாத ஊதியத்தை தொகையாகப் பெறுவதற்கும் வகைசெய்கிறது. காலத்திற்கேற்றவாறு, நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செயலுக்குக் கொண்டு வரும் திறமை படைத்ததும், கிராம வளர்ச்சி திட்டத்தில் பங்கு கொள்ள இயல்வதுமான நல்லதொரு கிராம ஆட்சி திட்டத்தின் இன்றியமையாப் பங்காகுமென்று அரசு கருதுகிறது. கிராம நிலையில் செய்யப்படும் இச்சீர்திருத்தம் மக்களுக்குக் கூடிய விரைவில் நல்ல பலனளிக்குமென்பதில் அரசுக்கு ஐயமேதுமில்லை.

மாவட்ட வருவாய் நிர்வாகம் குறித்த தனி நபர் குழு

7. மாவட்ட வருவாய் நிர்வாகம் செயல்படுவதுபற்றி, குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், கோட்ட ஆட்சி அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் செயல்படுவதுபற்றி ஆராய்வதற்காகவும் பொதுமக்கள் நலனைக் கருதி அலுவலகங்களில் பணிகளை விரைவில் முடிவு செய்யும் வகையில் இவ்வலுவலகங்களின் திறனை உயர்த்துவதற்கான முறைகளை ஆராய்வதற்காகவும் தனி நபர் குழுவாக திரு. எஸ். பி. அம்புரோஸ், ஐ. ஏ. எஸ். அவர்களை அரசு 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நியமித்தது. திரு எஸ். பி. அம்புரோஸ், ஐ. ஏ. எஸ். தனது அறிக்கையை 1980ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31 ஆம் நாள் அன்று அனுப்பினார். அவரது அறிக்கையில், வருவாய் நிர்வாகம் குறித்த 184 பரிந்துரைகள் அடங்கியிருந்தன. இப்பரிந்துரைகளில், 75 பரிந்துரைகளைப் பொறுத்த மட்டில் அரசு, ஆணைகள் பிறப்பித்துள்ளது. இதுவரை பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் மாவட்ட அலுவலகங்களில் வழக்கத்திலுள்ள நடைமுறைகள் பற்றினவாகும். நடைமுறைகளை எளிமைப் படுத்தல், பணியை உன்னிப்பாக மேற்பார்வை செய்தல், கோப்புகளைக் கவனிப்பதில் ஏற்படும் தாமதத்தைத்தவிர்த்தல், நில ஒப்படை செய்தல் முதலியன தொடர்பான கோப்புகளை விரைந்து பார்வையிடல், பொதுமக்கள் வேண்டுகோள் சம்பந்தப் பட்ட கோப்புகளைக் கவனித்தல் போன்றவைகளை இது வரை பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணைகள் குறிப்பிடுகின்றன. கோப்புகளை அதிகாரிகள் சிறப்பாகப் பொறுப்பு எடுத்துக் கொண்டு கவனிக்க வேண்டும் என்றும் அப்பொழுதுதான் அந்தந்தக்கோப்புகளுக்குரிய பொறுப்பை நிச்சயிக்க முடியும் என்றும் வலியுறுத்தப் பட்டுள்ளது. எஞ்சியுள்ள பரிந்துரைகள் குறித்து விரைவில் ஆணைகள் பிறப்பிக்க அரசு கருதியுள்ளது.

வருவாய் அதிகார வரம்பு

8. வருவாய்ப் பிர்க்காக்கள் நிர்வாகத்தின் முக்கிய பிரிவுகளாகும். வருவாய் ஆய்வாளர்களின் பொறுப்பை அதிகரிக்கும் வகையில், வருவாய்ப் பிர்க்காக்களின் அதிகார வரம்பை மாற்றியமைக்க அரசு முடிவெடுத்தது. 1979—80 ஆம் ஆண்டில், 250 புதிய பிர்க்காக்களை ஏற்படுத்துவதற்கு அரசு ஆணை பிறப்

பித்தது. 1980–81 ஆம் ஆண்டில் 73 புதிய பிர்க்காக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இம்மாநிலம், தற்போது 1,097 பிர்க்காக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

9. மாநிலத்திலுள்ள துணை வட்டங்களை முழு வளர்ச்சி பெற்ற வட்டங்களாக உயர்த்துவதே மாநில அரசின் ஒரு முக்கியமான திட்டமாகும். 1979–80 ஆம் ஆண்டில் மாநிலத்தின் 13 துணை வட்டங்களின் நிலையை உயர்த்தும் ஆணையை, அரசு பிறப்பித்தது. 1981–82 ஆம் ஆண்டில் ஊத்துக்கோட்டை பள்ளிப்பட்டு, இராமேஸ்வரம், மானாமதுரை, இளையான்குடி, சிவகிரி ஆகிய எஞ்சிய ஆறு தனி அதிகாரம் பெற்ற துணை வட்டங்களும், வானூர், வலங்கைமான், நீடாமங்கலம், குடவாசல், பொறையார், கந்தர்வக்கோட்டை, பாளையம்கோட்டை, இராதாபுரம், வால்பாறை, காங்கேயம் ஆகிய 10 சார்புத் துணை வட்டங்களும் நிலை உயர்த்தப்படும்.

3, இயற்கைச் சீற்றங்கள்.

10. தீ விபத்து.—தீ விபத்து தற்செயலாகவும் ஏற்படலாம், மனிதர்களாலும் ஏற்படலாம். பொதுவாகக் குடிசைகளில் வசிக்கும் ஏழை மக்கள் தான் இதனால் பெரும் துன்பமடைகிறார்கள். அவர்கள் தாங்கள் வசிக்கும் குடிசைகளையும் தங்கள் உடைமைகளையும் இழக்க நேரிடுகிறது. முற்றிலும் சேதமடைந்த குடிசையின் சொந்தக்காரருக்கு ரூ. 100 நிவாரணமும், ஒரு பகுதி சேதமடைந்த குடிசையின் சொந்தக்காரருக்கு ரூ. 50 நிவாரணமும் முன்னர் வழங்கப்பட்டது. சாதாரணமாகக் குடிசையில் வசிக்கும் குடித்தனக்காரருக்கு துணி மணிகள் இழப்பிற்காகக் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 25 வழங்கப்படுகிறது. இது முடிந்த வரையில் துணிகளாகவே வழங்கப்படும். சாதாரணமாக தீ விபத்துக்களில் துன்பம் அடைபவர்கள் அங்கு குடியிருக்கும் குடித்தனக்காரர்களேயாவர். குடிசையை மீண்டும் கட்டுவதற்காக ரூ. 100 மானியம் பெறும் அக்குடிசைச் சொந்தக்காரர்கள், குடித்தனக்காரர்களின் பயனுக்காக, குடிசைகளை மீண்டும் கட்டப் பொதுவாக அக்கறை கொள்வதில்லை.

11. குடிசைகளில் வசிக்கும் குடித்தனக்காரர்களுக்கு ஏற்படும் துன்பங்களை நீக்குவதற்காக அரசு, தீ விபத்துக்களினால் பாதிக்கப்படுபவர்களுக்கு ரொக்க மானியம் வழங்கும் முறையை பின்வருமாறு மாற்றியமைத்துள்ளது :—

(1) குடிசைச் சொந்தக்காரரே அக்குடிசை முழுவதிலும் வசித்து வந்தால் மொத்த ரொக்க மானியம் நேர்விற்கேற்ப ரூ. 100 அல்லது ரூ. 50 அவருக்கு வழங்கப்படும்.

(2) அக்குடிசையில், சொந்தக்காரர் மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடித்தனக்காரர்கள் வசித்து வந்தால் நேர்விற்கேற்ப ரொக்க மானியமான ரூ. 100 அல்லது ரூ. 50 அக்குடிசையில் வசிப்போரிடையே — அதாவது சொந்தக்காரர், குடித்தனக்காரர்கள் ஆகியோரிடையே — சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

(3) அக்குடிசையில் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்ட குடித்தனக்காரர்கள் மட்டும் வசித்து வந்தால் நேர்விற்கேற்ப ரொக்க மானியம் ரூ. 100 அல்லது ரூ. 50 அக்குடிசையில் வசிக்கும் குடித்தனக்காரர்களுக்குச் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

(4) தீ, வெள்ளம், புயல் முதலியவற்றினால் சேதமடைந்த குடிசை ஒவ்வொன்றுக்கும் நிவாரணம் அனுமதிக்கப்படும். ஒரு குடிசைக்குத் தரப்படும் நிவாரணம் ரூ. 100 அல்லது ரூ. 50 மேலே குறிப்பிட்டுள்ளவாறு அக்குடிசையில் வசிப்பவர்களிடையே பிரித்துக் கொடுக்கப்படும்.

தீ விபத்தால் முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கான நிவாரணத் தொகையை குடிசை ஒன்றுக்கு ரூ. 100-லிருந்து ரூ. 200 ஆக 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் நாள் முதல் உயர்த்துமாறும் அரசு ஆணையிட்டுள்ளது.

தகுதி அடிப்படையில் மானியம் பெறுவதற்கான வருவாய் வரையறையை 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் நாள் முதல் மாதம் ஒன்றிற்கு ரூ. 150-லிருந்து ரூ. 200 ஆக உயர்த்தவும் அரசு தீர்மானித்துள்ளது.

12. மேற்சொன்ன ரொக்க மானியத்தைத் தவிர, வெள்ளம், புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் உதவியைப் போலவே, தீ விபத்துக்களினால் பாதிக்கப்படுபவர்களுக்கும் அரசு உதவி அளிக்கிறது. தீ விபத்துக்களினால் பாதிக்கப்படும் ஒவ்வொரு குடும்பமும், இதற்கிணங்க 5 கிலோகிராம் அரிசி ஒரு வேட்டி அல்லது லுங்கி, ஒரு புடவை அடங்கிய துணிகள், 72 மணி நேரத்திற்கும் மேலாக மின்சாரம் தடைப்படக் கூடுவதற்கான சாத்தியமிருந்தால் 1 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவற்றை இலவசமாகப் பெறுவதற்குத் தகுதியுடையதாகும்.

13. தீ விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்கள், சேதமுற்ற குடிசைகளை மீண்டும் கட்டுவதற்காக நில மேம்பாட்டுக் கடன்கள், வேளாண்மைக் கடன்கள் சட்டத்தின்கீழ், ரூ. 2,000 வரை கடன் பெறத் தகுதியுடையவர்களாவர். ஆதி திராவிடர்களைப் பொறுத்தவரை இக்கடன் வட்டியில்லாக்கடனாகும்.

14. யாருடைய வருமானத்தைக் கொண்டு அக்குடும்பம் நடைபெற்று வந்ததோ, அவர் தீ விபத்து ஒன்றில் இறந்துவிட்டிருந்து, அவரது குடும்பம் ஏழ்மை நிலையில் இருந்தால், அவரது சட்டப்படிக்கான வாரிசுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 1,000 வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. சொந்த உடைமைகளை இழப்பவர்களுக்கும் தனிப்பட்ட நேர்வுகளில் தகுதி அடிப்படையில் உதவி வழங்கப்படுகிறது.

15. புயல், வெள்ளம்.—1976-லிருந்து தமிழ்நாட்டில் புயலும் வெள்ளமும் தொடர்ந்து ஏற்பட்டு வந்தது. 1980 ஆம் ஆண்டில் அதிர்ஷ்டவசமாக எவ்விதப் பெருத்த சேதமும், புயல் வெள்ளம் காரணமாக ஏற்படவில்லை. பார்க்கப் போனால், சென்னை மாநகரத்தையும், கோயம்புத்தூர் மாவட்டத்தையும்,

தவிர இம்மாநிலத்திலுள்ள பிற இடங்களில், பொதுவாக, சாதாரண அளவிற்கும் குறைவான மழையே பெய்துள்ளது. இதனால், மாநிலத்தின் பல பகுதிகளில் வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமையைச் சமாளிப்பதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் தனியாக விளக்கப்பட்டுள்ளன.

16. அதே நேரத்தில், எதிர்காலத்தில் வரும் புயல், வெள்ளம் ஆகியவற்றின்போது நிவாரணம், புதுவாழ்வு அளிப்பதற்காக ஆயத்த நடவடிக்கைகள் எடுப்பதில் நாம் பின்னடையவில்லை. புயல் காலங்களில், புயல் உருவாகும் பகுதிகளில் வாழும் மக்களுக்குப் பாதுகாப்பான புகலிடங்களுக்கு வகை செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக, அரசு, இம்மாநிலத்தில் கடற்கரை நெடுகிலும் 82 புகலிடங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்தது. அவற்றில் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு பிரிவிடமிருந்து செலவில் பாதியை ஏற்றுக் கொள்ளும் அடிப்படையில் நிதியுதவி பெற்றுக் கட்டப்பட்ட 25 புகலிடங்களில் 24 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மகாராட்டிர மக்களின் புயல் நிவாரண குழுவின் முழு நிதி உதவியுடன் தென்னார்க்காடு மாவட்டத்தில் 5 புகலிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ''யுனிசெப்'' நிறுவனத்தின் மூலம் செலவில் பாதியை ஏற்கும் அடிப்படையில், கனடா நாட்டு அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நிதியுதவியுடன் 2 புகலிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் ஒன்று செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கோவளத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கடலோரப் பகுதிகளில் 50 புகலிடங்கள் கட்டுவதற்காக ஐரோப்பிய பொருளாதாரச் சமுதாயம் ஒரு கோடி ரூபாயை வழங்கியுள்ளது. இதற்கும் கூடுதலாக ஏற்படும் செலவை மாநில அரசின் நிதி வாயில்களிலிருந்து செய்ய வேண்டும். இந்த ஆண்டு பருவ மழை தொடங்குவதற்கு முன்னதாக இவற்றில் பெரும்பாலானவை கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பிய பொருளாதாரச் சமுதாய அதிகாரிகள் இம்மாநிலத்திற்கு வருகை தந்திருந்தபோது பணிகளின் முன்னேற்றத்தைக் கண்ணுற்று மிகவும் மனநிறைவடைந்தனர். இவ்வித புயல் நிவாரணப் புகலிடங்களை மேலும் பல கட்டுவதற்கு மாநில அரசு மத்திய அரசின் மூலம் ஐரோப்பிய பொருளாதார மன்றத்தை அணுகத் தீர்மானித்துள்ளது.

17. வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம், புளியம்பாளையம் கிராமத்தில் 10 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம், இடர் பாதுகாப்புக் கட்டிடத் தொகுதி அமைப்பதற்காக இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாட்டுப் பிரிவிற்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத் தொகுதியில் கிடங்குகள், அலுவலகக் கட்டிடங்கள், பணியாளர்கள் குடியிருப்புகள் ஆகியவை இருக்கும். இந்த கிடங்குகள், கூடாரங்கள், தார்ப்பாய்கள், சமையல் பாத்திரங்கள், மருந்துகள், உணவுப் பண்டங்கள், துணிகள், கம்பளங்கள் போன்ற நிவாரண சாதனங்களைச்

சேமித்து வைப்பதற்காகக் கட்டப்படுகின்றன. ரூபாய் 14 இலட்சம் வரை செலவாகும் என எதிர்பார்க்கப்படும் இத் திட்டத்தின் முதற்கட்டப் பணி ஏற்கனவே நடந்து கொண்டிருக் கின்றது.

18. உணவு—வேளாண்மைச் சங்கம் ஆலோசகர், கர்னல் ஜி.என். ரிட்சி அவர்களின் சேவையைப் பயன்படுத்தி, இடர்காப்புப் பணிப் பயிற்சி 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29 ஆம் நாளிலிருந்து அக்டோபர் திங்கள் 3 ஆம் நாள் வரை இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தில் நடத்தப்பட்டது. இப்பயிற்சி, 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் நாளன்று வருவாய்த் துறை அமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ் நாட்டின் கடற்கரையோர மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இவ்வரசின் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள், வானிலை ஆராய்ச்சித் துறையின் அதிகாரிகள், பாதுகாப்புத் துறைப் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் பங்கு கொண்டனர். இம்மாதிரி இடர்காப்புப் பணி பயிற்சித் திட்டத்தை மாநில அரசு ஒன்று நடத்துவது இதுவே முதல் தடவையாகும். கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட புயல் குறித்த புள்ளி விவரங்களின் அடிப் படையில் இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தில் உள்ள கணக் கீட்டுப் பொறி வசதிகளைப் பயன்படுத்தி விரிவான புள்ளி விவரங் களைத் தயாரிக்கவும், புயல்—வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர் நேரிடும் காலங்களில் துயர் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆண்டுதோறும் முறையான பயிற்சி திட்ட மொன்றை வகுக்கவும் இத்திட்டம் வகை செய்கிறது. சென்னை யிலுள்ள நகர—நாட்டுப்புற அமைப்புத் திட்ட இயக்குநர் அலு வலகத்தின் ஒத்துழைப்புடன் அவசியமான திட்ட அறிக்கைத் தயாரிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு உணவு—வேளாண்மை நிறுவனம் போன்ற நிறுவனங்கள், இம்மண்டலத்திலுள்ள ஏனைய மாநிலங்கள் ஆகியவற்றின் உடனுழைப்புடன் சென்னை யில் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு இது முன்னோடி யாக இருக்கும்.

4. தமிழ்நாட்டில் வரட்சி நிலை

19. தமிழ்நாட்டில், 1976—77, 1977—78, 1978—79 ஆகிய ஆண்டுகளில் நல்ல மழை பெய்தது. தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக 1980—81 இல் போதுமான அளவு மழை பெய்யவில்லை. வடகிழக்குப் பருவமழை போதுமான அளவு இருக்கும் என்றும், அதனால், இந்தப் பற்றாக் குறையை ஈடுசெய்ய முடியும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், வடகிழக்குப் பருவ மழையும் போதுமான அளவுக்குப் பெய்ய வில்லை. சென்னை, கோயம்புத்தூர் மாவட்டங்கள் நீங்கலாக, ஏனைய மாவட்டங்களில் எப்போதையும்விட வடகிழக்குப் பருவ மழை குறைவான அளவு பெய்தது. குறிப்பாக, வட ஆற்காடு புதுக்கோட்டை, தருமபுரி மாவட்டங்களிலும், திருச்சிராப்பள்ளி இராமநாதபுரம், தென் ஆற்காடு, தஞ்சாவூர், மதுரை, சேலம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளிலும் மழை

குறிப்பிடத் தக்க அளவுக்குக் குறைவாகவே பெய்தது. இதன் விளைவாக பெரும்பாலான பாசன வாயில்களில் நீரின் அளவு மிகக் குறைவாக இருந்தது. வேர்க்கடலை போன்ற புன்செய் பயிர்களை எதிர்பார்த்த அளவிற்குப் பயிரிட மக்களால் இயல வில்லை. இம்மாவட்டங்களில் சில பகுதிகளில், பொதுக் கிணறு களில் குடிநீர் கிடைப்பது அரிதாயிற்று. எனவே, குடிநீர்ப் பற்றாக்குறையை உடனடியாக தீர்க்க வேண்டிய அவசியம் ஏற் பட்டது. அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் உடனடி யாக கலந்தாலோசித்து, அவர்களிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று, அவர்களது வேண்டுகோளின்படி நடவடிக்கை எடுத்தது.

20. குடிநீர் கிடைப்பது அரிதாக உள்ள பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அதற்காக இதுவரை ரூபாய் 680·05 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. அத் தொகை கீழ்க் குறிப்பிட்டுள்ள விவரப்படி நகராட்சிப் பகுதி களிலும், கிராமங்களிலும் இருக்கின்ற கிணறுகளை ஆழப்படுத்து வதற்கும், புதிய துளைக்கிணறுகளை அமைக்கவும் செலவிடப் படும்.

(1)	(ரூபாய் இலட்சத்தில்.) (2)
1 வட ஆற்காடு	1,40.00
2 இராமநாதபுரம்	89·61
3 தர்மபுரி	48·09
4 திருச்சிராப்பள்ளி	60.00
5 தென் ஆற்காடு	40.00
6 தஞ்சாவூர்	45·31
7 புதுக்கோட்டை	77.04
8 சேலம்	60.00
9 மதுரை	45.00
10 செங்கல்பட்டு	30.00
11 பெரியார்	20.00
12 கோயம்புத்தூர்	5.00
13 திருநெல்வேலி	10.00
14 கன்னியாகுமரி	10.00
மொத்தம்	680.05

குடிநீர் வழங்குவதற்காக பணிகள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல்- வடிகால் வாரியம், பொதுப்பணித்துறையின் நிலத்தடி நீர்ப் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல் துறையால் மேற்கொள்ளப்

படுகிறது. பொதுப்பணித் துறை நிலத்தடி நீர்ப் பிரிவு மூலம் பரீட்சார்த்தமாக தோண்டப்பட்ட கிணறுகளை, கைப்பம்புகள் பொருத்திய பின் குடிநீர்ப் பெற பயன்படுத்த அரசு வகை செய்துள்ளது.

21. வேளாண்மை தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப் பளிப்பதற்காக, தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைகளையும், அதன்கீழ் வரும் புதிய வேலைகளையும் முனைந்து செயல்படுத்த அரசு ஆணைகள் பிறப்பித்து உள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாவட்டங் களுக்குக் கூடுதல் அளவில் அரிசி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கால்நடை களுக்காக உள்ள குட்டைகள், நீர் கசியும் குளங்கள், ஊருணி இவைகளில் தூர் வாருதல் மற்றும் புதிய சாலைகள் பழுதுபார்த் தல், சிறு பாசன அணைக்கட்டுகளை வளப்படுத்துதல் போன்ற தொழில் மறுமலர்ச்சிப் பணிகளை கைக்கொள்ளுவதற்காக ரூபாய் 3 கோடி அரசு நிதி அளித்துள்ளது.

22. பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள பயிர் நிலைமை களைக் கருத்திற் கொண்டு, வட ஆற்காடு மாவட்டம், புதுக் கோட்டை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் இராமநாதபுரம் தென் ஆற்காடு மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலும் 1390 ஆம் பசலி ஆண்டிற்குப் பின்வரும் முறையில் நிலவரி முதலியவற்றைத் தள்ளுபடி செய்ய அரசு ஆணையிட்டுள்ளது :—

() விளைச்சலின் மதிப்பு 37 காசும் (50 சதவீதம்) அதற்குக் குறைவாகவும் இருந்தால் நிலவரியும் உள்ளூர் செஸ் வரியும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். நேரடியாக நிலத்திற்குச் சென்று பார்வையிடுவதன் மேல் இத்தள்ளுபடி அனுமதிக்கப்பட வேண்டும்.

(ii) நன்செய் நிலத்தில் விளைச்சலின் மதிப்பு 37 காசும் அதற்குக் குறைவாகவும் இருந்தால் கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல் வரி, தனித் தண்ணீர் மேல் வரி, வணிகப் பயிர் தீர்வை ஆகியவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

(iii) புன்செய் நிலங்களில் விளைச்சலின் மதிப்பு 37 காசும் அதற்குக் குறைவாகவும் இருந்தால் உள்ளூர் செஸ் வரி தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

(iv) 1390 ஆம் பசலி ஆண்டுக்கு உள்ளூர் செஸ் வரி தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற ஆணையிட்டுள்ள இனங்களில் உள்ளூர் செஸ் வரி மீதான மிகுவரி விதிக்கக் கூடாது என்று ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு ஆலோசனை அளிக்கப்பட வேண்டும்.

(v) முந்தைய பசலி ஆண்டில் வழங்கினது போன்ற அதே அடிப்படையில் இந்த ஆண்டுக்கும் உள்ளூர் செஸ் வரி மீதான மிகுவரிக்கு இணை மானியமும் அனுமதிக்கப்பட வேண்டும்.

(vi) ஒரு கிராமத்தில் உழவர் வைத்துள்ள நிலத்தில் பாதிக்குக் குறையாத பரப்பளவுக்கு நிலவரி தள்ளுபடி வழங்கப்பட்டுள்ள இனங்களில், 1390 ஆம் பசலி ஆண்டுக்குரிய நிலவரி, உள்ளூர் செஸ் வரி, அரசுக் கடன் நிலுவைத் தொகைகளை வசூலிப்பது அடுத்த பசலி ஆண்டு 1391-க்கு ஒத்திப் போடப்பட வேண்டும்.

23. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்வதில் முழுப் பொறுப்பேற்று, இதனைச் சார்ந்து பல்வேறு துறைகள் மேற்கொள்ளும் நிவாரணப் பணிகள் விரைவாகவும், செம்மையாகவும் செயல்படுத்த ஒத்துழைப்பார்கள். இதன் பொருட்டு அனைத்து மாவட்ட நிலை அலுவலர்கள் பொறுப்புடன் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு திட்டமிட்ட முறையில் முறையாகப் பணிகளை நிறைவேற்ற மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உறுதுணையாக இருப்பார்கள். மேலும் வறட்சி நிவாரணப் பணிகளின் முன்னேற்றம் குறித்த தகவல்களை அப்போதைக்கப்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளித்து அவருடைய ஆலோசனை தேவைப்படும் இடத்தில் அதனை பெற்று அன்றாடம் இத்திட்டத்தை செயலாக்குவார்கள்.

24. வறட்சி நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ளுவதற்கும், அப்பணிகளைத் தீவிரமாகக் கண்காணிப்பதற்கும் பாதிக்கப்பட்ட பகுதி ஒவ்வொன்றையும் துணை மாவட்ட ஆட்சியர் தகுதிக்குக் குறையாத அலுவலர் ஒருவர் பொறுப்பின்கீழ் கொண்டுவர அரசு கருதியுள்ளது. இந்த அலுவலர், பல்வேறு துறைகள் மற்றும் குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியம் போன்றவற்றின் நிவாரண வேலைகளை மேற்பார்வையிடும் பொறுப்பை வகிப்பார். நிவாரணப் பணிகளை செயல்படுத்தும் துறைகளின் கீழ்நிலை அலுவலர்களுடன் நெருக்கமான தொடர்பு கொள்ளும் அலுவலராக அவர் இருப்பார். நிவாரணப் பணிகளின் பொறுப்பேற்றுக்கொண்ட அலுவலர், குறிப்பிட்ட பகுதியின் நிவாரண பணிகள் பற்றிய முன்னேற்றத்திற்கு முழுப் பொறுப்பு உடையவராவார். நிவாரணப் பணிகள் குறித்த முன்னேற்றத் தகவல்களை அவர் சேகரித்து உயர் மட்ட அலுவலர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் ஆய்வின் போதும் மற்றும் குறுகிய காலத்திற்குள்ளும் அளிக்க தயாராயிருக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முறையாக குறிப்பிட்ட காலத்தில் கூட்டங்களை, இத்தகைய அலுவலர்களுடன் நடத்தி அவர்களின் வறட்சி நிவாரணப் பணிகள் தொடர்பான முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய வேண்டும்.

25. வறட்சி நிவாரணப் பணிகள், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் செம்மையாகவும், விரைவாகவும் நடைபெறும் பொருட்டு, பொதுமக்களின் பிரதிநிதிகளுக்கு தங்கள் மேலான பரிந்துரைகளை வழங்கிட வாய்ப்பினை நல்குதல் விரும்பத் தக்கதென அரசு கருதுகிறது. இதன் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. (1) மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிகளுக்கும் ஒரு வட்டக் குழுவும், (2) மாவட்ட அளவில் ஒரு குழுவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்படுகிறது.

வட்டக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளு மன்ற உறுப்பினர்களும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உட்பட மக்கள் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

மாவட்டக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உறுப் பினர்களாக இருப்பார்கள்.

26. முதலமைச்சர், மற்ற அமைச்சர்களும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று அங்கு நடைபெறும் நிவாரணப் பணி களை ஆய்வு செய்து, நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த அறிவுரைகளை வழங்கி வருகிறார்கள்.

27. இப்பணியை முடிப்பதற்கு பல்வேறு முகமைகளுக்கும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. குடிநீர்க் கிணறுகளுக்கு மின்சக்தி வழங்குவதில் முன்னுரிமை அடிப்படையில் இயங்குமாறு தமிழ்நாடு மின்வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. குடிநீர் வழங்குவதற்காக சுமார் 2,000 துளைக் கிணறுகள் உடனடியாக அமைக்கப்படும். மேலும் 5,000—6,000 துளைக் கிணறுகள் 1981, ஜூலைத் திங்கள் இறுதிக்குள் அமைக்க வேண்டியிருக்கும். இக்காரணத்திற்காக கிடைக்கக்கூடிய அனைத்துத் துளைக் கருவிகளையும் மாநில அரசு சேர்த்து வைத் திருக்கிறது. அவசர நிமித்தம் இந்த அரசு மற்ற மாநிலங் களிலிருந்து 100 துளைக் கருவிகளை இம்மாநிலத்திற்கு அனுப்பு மாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. கடுமையான வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு மாநிலத் திற்கு உதவி புரியும் என்று இந்த அரசு எதிர் பார்க்கிறது.

28. வறட்சி நிவாரணப் பணிகள் பற்றிய கொள்கை பற்றி அரசிற்கு ஆலோசனை வழங்கவும், வறட்சி நிவாரணப் பணி களை நடைமுறைப்படுத்த தேவையான அறிவுரைகள் வழங்கவும், அதன் செயலாக்கத்தை புனராய்வு செய்வதற்கும் அரசு ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்துள்ளது. இவ் உயர் மட்டக் குழுவின் தலைவராக தலைமைச் செயலாளரும் மற்றும்

இணைப்பு.

இரண்டாம் செயலாளர், அரசுச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் குழுவில் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவ் உயர் மட்டக் குழு 2 வாரங்களுக்கு ஒரு முறை கூடி வறட்சி நிவாரணப் பணிகள் பற்றி ஆய்வு செய்யும்.

29. தமிழக சட்டப் பேரவை வறட்சி நிவாரணம் பற்றி மார்ச்சு 3, 4 தேதிகளிலும், சட்டமன்ற மேலவை 5 ஆம் தேதி யிலும் விவாதித்தது. அநேக உறுப்பினர்கள் விவாதத்தில் பங்கு கொண்டு உபயோகமான கருத்துக்களை தெரிவித்தார்கள். அவை அனைத்தும் அரசு கவனத்தில் உள்ளது.

30. வருவாய் அமைச்சர், மத்திய விவசாய அமைச்சர் மற்றும் மத்திய மாநில விவசாய அமைச்சரிடத்திலும் இம்மாநிலத் திலுள்ள வறட்சி நிலைமைப் பற்றி தெரியப்படுத்தியுள்ளார். மேலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்காக 100 துளைக் கருவிகளை குடிநீர் வழங்க இம்மாநிலத்தில் பாதிக் கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்து அனுப்புமாறு மத்திய விவசாய அமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

31. முதலமைச்சர், இம்மாநிலத்தில் வறட்சி நிலையைப் பற்றி பாரதப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்து இதை சமாளிப்பதற்கான நிதி, மற்ற உதவிகளையும் தருமாறு கேட் டுள்ளார்.

32. மாநில அரசு நிலைமையை அவ்வப்போது கவனித்து, தக்க நிவாரண நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பெரும் பாலும் பயிர் விளைச்சல் தவறிவிட்டதால், உணவுப் பொருள்கள் பொது விநியோக முறையைப் பலப்படுத்த அரசு தயாராக வேண்டியுள்ளது. கடுமையான உணவுப் பற்றாக்குறையை கவனத்தில் வைத்துக் கூடுதல் அளவில் அரிசி மற்றும் கோதுமை தானியங்களை இம்மாநிலத்திற்கு அனுப்புமாறு மத்திய அரசைக் கேட்டுள்ளது.

33. பெரும் அளவில் ஏராளமான நிதி உதவியுடன் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவிருப்பதால், எந்த அளவிற்கு நிதி யுதவி அளிக்க வேண்டும் என்று முடிவெடுப்பதற்கு மத்திய அரசின் குழுவை இம்மாநிலத்திற்கு அழைக்க மத்திய அரசை அணுக இவ்வரசு முடிவெடுத்துள்ளது. இதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள கஷ்டமான நிலையைக் கருத்திற்கொண்டு முடிந்த அளவில் மத்திய அரசு உதவி அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இணைப்பு.

5. நிலமற்ற ஏழை மக்கள் பயிரிட நிலம் வழங்குதல்.

34. நேரடியாகப் பயிர்த்தொழிலில் ஈடுபடக் கூடிய நிலமற்ற ஏழை மக்களுக்கு நீண்ட நாள் தரிசாகக்கிடந்த நிலங்கள் இக் கொள்கையின்கீழ் இலவசமாக வழங்கப்படும். 5 பேர் அல்லது அவர்களுக்குக் குறைவாக உள்ள ஒரு குடும்பத் தலைவருக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக வருமானமிருப்பின் அவர் ''ஏழை'' எனக் கருதப்படுகிறார். அவ்வாறே, ஒரு குடும்பத்தில் 5 பேருக்கு அதிகமாக இருப்பின், அவரது மாத வருமானம் ரூ. 250 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் ''ஏழை '' என்று கருதப்படுகிறார்.

35. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில், ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயரளவு பரப்பும் அவர் ஏற்கனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும் சேர்ந்து மொத்தம் 3 ஏக்கர் புன்செய் நிலமாக அல்லது $1\frac{1}{2}$ ஏக்கர் நன்செய் நிலமாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் விலை அதிகமானதால் அங்கு ஒருவருக்கு, உயரளவு ஒரு ஏக்கர் புன்செய் நிலமோ, அரசு தரிசு நன்செய் நிலமாயிருந்தால் $\frac{1}{2}$ ஏக்கர் நன்செய் நிலமோ ஒப்படை செய்யப்படுகிறது.

36. நிலம் ஒப்படை செய்யப்பட்டவர், அவ்வாறு நிலம் ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுக் காலத்திற்குள் அந்த நிலத்தில் பயிர் செய்ய வேண்டும். 10 ஆண்டுக் காலத்துக்குள் அந்நிலத்தை விற்கவோ அன்றி பராதீனம் செய்யவோ கூடாது. ஆனால், பயிரிடுவதற்காக, கடன் வாங்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கலாம். நிலம் ஒப்படை செய்யப்பட்டவரே நிலத்தைப் பயிரிட வேண்டும். அல்லது அவருடைய குடும்ப உறுப்பினரோ, கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளரோதான் அந்த நிலத்தைப் பயிரிட வேண்டும். வேறு எவரும் அந்நிலத்தைப் பயிரிடக் கூடாது.

37. இப்பணியைக் கவனிக்கும் பொருட்டு, ஒவ்வொரு பிரிவிலும், வட்டாட்சியர் ஒருவர், உதவியாளர் நில வருவாய்த் துறை ஆய்வாளர்கள் இருவர், உதவியாளர் ஒருவர், அடிப்படைப் பணியாளர் ஒருவர் ஆகியோர் அடங்கிய 12 பிரிவுகள் தற்போது உள்ளன. 1980 ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்து 1981 ஜனவரி 31 ஆம் நாள் வரையில் தகுதி வாய்ந்த 15,898 பேருக்கு 14,590.71 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

இணைப்பு.

மாவட்ட வாரியாக இதன் விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

விவர அறிக்கை எண் 1.

1—4—80 முதல் 31—1—81 வரையில் தரிசு சாகுபடி நிலங்கள் ஒப்படை செய்யப்பட்ட பரப்பையும், பட்டாக்களின் எண்ணிக்கையையும் காட்டும் விவரம் அறிக்கை.

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.		வழங்கப்பட்ட பட்டாக் களின் எண்ணிக்கை.			ஒப்படை செய்யப்பட்ட மொத்தப் பரப்பு.
		ஆதி திராவிடர்.	பழங் குடியினர்.	ஏனையோர்.	
(1)		(2)	(3)	(4)	(5)
					ஏ. செ.
1	செங்கல்பட்டு	296	..	360	635.62
2	தென்ஆற்காடு	167	..	1,039	1,318.56
3	தஞ்சாவூர்	288	..	197	153.69
4	திருச்சிராப்பள்ளி	502	..	3,161	1,994.17
5	புதுக்கோட்டை	647	..	1,979	1,549.71
6	மதுரை	44	..	675	1,566.60
7	இராமநாதபுரம்	100	..	1,692	1,136.74
8	திருநெல்வேலி	..	..	..	..
9	கன்னியாகுமரி	2	..	383	203.70
10	வட ஆற்காடு	..	..	..	..
11	சேலம்	161	..	2,117	2,807.21
12	தருமபுரி	17	..	2,030	3,203.92
13	பெரியார்	1	..	5	11.08
14	கோயம்புத்தூர்	1	..	21	3.05
15	நீலகிரி	..	..	13	6.66
	மொத்தம் ..	2,226	..	13,672	14,590.71

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

38. தகுதியற்றவர்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்பட்டிருப்பதையோ, நில ஒப்படை செய்வதற்குரிய நிபந்தனைகள் மீறப்பட்டு நிலம் ஒப்படை செய்யப்பட்டிருப்பதையோ ரத்து செய்வதற்கான நடவடிக்கை எடுக்கும் நோக்கத்துடன் மாவட்டங்களில் தகுதியற்றவர்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்பட்டிருப்பதை அரசு மறு ஆய்வு செய்து வருகிறது. இப்பணியை மேற்கொள்வதற்காக 23 தனிப் பணியாளர் பிரிவுகள் உள்ளன. அவை ஒவ்வொரு பிரிவிலும் துணை வட்டாட்சியர் ஒருவர், வருவாய்த் துறை ஆய்வாளர்கள் இருவர், உதவியாளர் ஒருவர், நட்டச்சர் ஒருவர், அடிப்படைப் பணியாளர் ஒருவர் ஆகியோர் உள்ளனர். 1980, டிசம்பர் வரையில் 74,173 நில ஒப்படை இனங்கள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் நில ஒப்படை செய்வதில் முறைகேடுகள் காரணமாக, 4,320 நில ஒப்படைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய நில ஒப்படைகள் குறித்து மேலும் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

	மாவட்டத்தின் பெயர்.	ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப் பட்ட இனங்கள்.	ரத்து செய்யப்பட்ட இனங்கள்.
	(1)	(2)	(3)
1	பெரியார்	1,526	..
2	சேலம்..	13,177	351
3	செங்கற்பட்டு..	8,977	129
4	மதுரை	8,768	98
5	திருச்சிராப்பள்ளி	5,991	97
6	தஞ்சாவூர்	7,211	350
7	இராமநாதபுரம்	6,100	535
8	திருநெல்வேலி	5,654	345
9	புதுக்கோட்டை	7,888	860
10	கோயம்புத்தூர்	3,444	936
11	வடஆர்க்காடு	3,022	52
12	தென் ஆர்க்காடு	1,969	325
13	தருமபுரி	443	242
	மொத்தம் ..	74,173	4,320

39. பட்டுப்பூச்சி வளர்ப்புத் தொழிலை மேம்படுத்தும் பொருட்டு, ஒசூர், ஒசூர் வட்டத்திலுள்ள உத்தனப்பள்ளி தளி பிர்க்காக்கள் இவற்றையடுத்து தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள தேன்கனிக் கோட்டை, கக்கதாசம், அஞ்செட்டி பிர்க்காவிலுள்ள ஐந்து கிராமங்கள், பேரிகை, பசலூர், சோழகிரி ஆகிய ஆறு பிர்க்காக்களில் அனுமதியின்றி பிறரது அனுபோகத்தில் இருந்து வரும் 15,511.74 ஏக்கர் அரசு நிலம் (குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களின் ஒரு பாதியில் முசுக் கட்டை வளர்க்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு) முசுக் கட்டை பயிரிடுவதற்காகக் குத்தகைக்கு விடப்பட்டது. மேலே கூறப்பட்ட திட்டம் எதிர்பார்த்த பலனைத் தராததால் அந்த நிலங்களைக் குத்தகைக்காரர்களிடமிருந்து திரும்பப் பெறும்படி அரசு இப்போது உத்தரவிட்டுள்ளது. தர்காஸ்து விதிகளின்படி நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு இந்த நிலங்கள் ஒப்படை செய்யப்படும். இந்த நிலங்களில் ஏற்கனவே முசுக்கட்டை பயிரிட்டுள்ளவர்கள் வேறு வகையில் இந்த நிலங்களை ஒப்படை பெறத் தகுதியுடையவர்களாயிருப்பின் அவர்களுக்கு இந்த நிலங்களை ஒப்படை செய்வதில் முன்னுரிமை அளிக்கப்படும்.

6. வீட்டு மனை ஒதுக்குதல்.

40. வீட்டு மனைகள் ஒதுக்கும் திட்டமானது, நத்தம் மற்றும் ஏனைய புறம்போக்குகளில் ஆட்சேபணையற்ற ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துவதன் மூலமாகப் பரந்த அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 'ஏழை' என்ற சொற்றொடருக்கான பொருள் விளக்கமும் முன்னுரிமையும் பயிரிடத் தக்க தரிசு நிலங்களுக்கு எவ்வாறு பின்பற்றப்படுகிறதோ அவ்வாறே வீட்டு மனைகள் ஒதுக்குவதற்கும் பின்பற்றப்படும். 1—4—1980 ஆம் நாளிலிருந்து 31—1—1981 வரை 52,850 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட 10,812 வீட்டு மனைகளும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட 489 வீட்டு மனைகளும் இதில் அடங்கும். அதன் விவரம் வருமாறு :—

விவர அறிக்கை எண். 2.

1—4—1980 முதல் 31—1—1981 வரையில் வழங்கப்பட்ட வீட்டு மனைப் பட்டாக்களின் எண்ணிக்கையை காட்டும் விவர அறிக்கை.

தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	ஆதி திராவிடர்.	பழங்குடியினர்.	ஏனையோர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1. சென்னை ..	..	..	..	..
2. செங்கற்பட்டு ..	99	1	2,100	2,200

தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	ஆதி திராவிடர்.	பழங்குடியினர்.	ஏனையோர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
3 தென்ஆர்க்காடு ..	998	..	4,856	5,854
4 தஞ்சாவூர் ..	585	..	1,000	1,585
5 திருச்சிராப்பள்ளி..	893	..	6,466	7,359
6 புதுக்கோட்டை ..	716	..	2,072	2,788
7 மதுரை	2,752	..	9,014	11,766
8 இராமநாதபுரம் ..	20	..	387	407
9 திருநெல்வேலி ..	..	..	..	..
10 கன்னியாகுமரி ..	..	..	135	135
11 வடஆர்க்காடு ..	..	..	138	138
12 சேலம்	16	297	597	910
13 தருமபுரி ..	1,989	135	12,532	14,656
14 பெரியார் ..	2,262	30	1,202	3,494
15 கோயம்புத்தூர் ..	..	..	707	707
16 நீலகிரி.. ..	482	26	343	851
மொத்தம் ..	10,812	489	41,549	52,850

சென்னை நகரத்தின் ஆதி ஆந்திரர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தும் தனித் திட்டத்தின்படி, ஒரு மனைக்கு 3,000 ரூபாயும் 750 சதுர அடிக்கு மேற்பட்ட நிலத்திற்கு இரண்டு மடங்கு விலையும் செலுத்துவதன் பேரில் ஆதி ஆந்திரர் குடும்பங்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகிறது. இத்திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்படுகிறது. 2,170 ஆதி ஆந்திரர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இதில் 1,033 ஆக்கிரமிப்புக்கள் இதுவரை முறைப்படுத்தப்பட்டுள்ளன.

41. அண்மையில் சென்னை மாநகரத்தில் குடிசைப் பகுதி மேம்பாட்டு சட்டத்தின் கீழ் அறிக்கையிடப்படாத பல்வேறு குடிசைப் பகுதிகளிலுள்ள குடிசைகள் ஆக்கிரமிப்பை முறைப் படுத்துவது பற்றிய பிரச்சினையை அரசு பரிசீலித்து, சென்னை மாநகரத்தில் ஆங்காங்கே விரவிக்கிடக்கின்ற, ஆட்சேபணை யற்ற குடிசைப் பகுதிகளைத் தவிர ஏனைய எல்லா குடிசைப் பகுதிகளும், தமிழ்நாடு குடிசைப் பகுதி மேம்பாட்டுச் சட்டத் தின் கீழ் மேம்படுத்து தற்காக, அறிக்கையிடப்பட வேண்டு மென்றும், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களைத் தொகை ஏதுமின்றி குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் கட்டளையிட்டுள்ளது. குடிசை மாற்று வாரியம், இப்பகுதி களில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு, அனுபோக தாரரிடமிருந்து மனை ஒன்றுக்கு ரூ. 7,700-ம் மேம்பாட்டுச் செலவு ஏதேனுமிருந்தால் அதனையும் பெற்றுக் கொண்டு குத் தகை-விற்பனை பத்திரம் எழுதிக்கொடுக்கும் நிலத்தின் விலையை ஐந்து ஆண்டுகளில் தவணை முறையில் வசூலிக்கக் கருதப்படுகி றது. நிலத்தின் பரப்பு 750 ச. அடிக்கு அதிகமாயிருந்தால், உயரளவு ½ மனை என்ற வரையறைக்கு உட்பட்டு, அந்த இடம் எப்படி உள்ளதோ அதே நிலையில் கொடுத்துவிடுவது என்ற அடிப்படையில் நில ஒப்படை செய்யப்படும். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியச் சட்டத்தின் கீழ் மேம்படுத்துவதற்காக அறிக்கை யிடப்படாததும், ஆட்சேபணையற்றதும் ஆங்காங்கே விரவிக் கிடப்பதுமான ஆக்ரமிப்புகளைப் பொறுத்தவரையில், மனை ஒன்றுக்கு ரூ. 7,700 வசூலித்தப்பின் வீட்டு மனை ஒப்படை செய்யப்படும் மனையின் உச்சவரம்பு 750 ச. அடியாக இரு கும்.

பட்டா புத்தகத் திட்டம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

42. எல்லா பட்டாதாரர்களும், தங்கள் வசம் உள்ள நிலங்கள் தொடர்பாக நாளது வரையில் விவரங்களைக் கொண் டுள்ள பட்டா புத்தகம் வைத்திருப்பதை உறுதி செய்யும் வகை யில் பட்டா புத்தகத் திட்டம் கொண்டு வரப்பட்டது. பட்டா புத்தகம் உழவர்கள் கடன் பெற இயலும் வகையில் சிறந்த ஆவணமாக உதவுகிறது.

43. பட்டா புத்தகத் திட்டம் செயல்படுவது தொடர்பாக நிதித் துறையின் மதிப்பீட்டுப் பிரிவு அனுப்பிய மதிப்பீட்டு அறிக் கையையொட்டி, முன்னாள் வருவாய் வாரியத்தின் நிலவரி ஆணை யாளரின் (முக்கிய) தலைமையின் கீழ் மேற்சொன்ன திட்டத்தை மேம்படுத்துவதற்கான விவரங்களைச் சேகரிக்கக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

44. பட்டா புத்தகம் பயனுள்ளதாகவும், செம்மையாகவும் இருக்க வேண்டி குழு அளித்துள்ள முக்கிய பரிந்துரைகளாவன :—
பட்டா புத்தகத் திட்டத்தில் தொடர்பான எல்லா விவரங்களை

யும் பதிவு செய்ய இயலும் வகையில் தற்போதுள்ள பட்டா புத்தகத்தில் விவரங்களைச் சேர்த்தல், வில்லங்கச் சான்றிதழ் முதலியவை இல்லாமல் வேளாண்மைக் காரியங்களுக்குக் கடன் வழங்க நிதி உதவி நிறுவனங்களுக்கு அல்லது கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு இயலும் வகையில், உடைமை உரிமைக்குச் சான்றாக பட்டா புத்தகத்தை சட்டப்படி செல்லுபடியாகக் கூடிய ஓர் ஆவணமாக ஆக்கத் தகுந்த சட்ட நடவடிக்கைகளை எடுத்தல், கடன் வழங்கும்போது பட்டா புத்தகங்களைக் கொடுக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படலாம் எனக் குழு கருத்தை தெரிவித்துள்ளது. வங்கிகளும், நிதியுதவி நிறுவனங்களும், உரிமையாளர் பாரமரித்து வரும் பட்டா புத்தகத்தில், வழங்கிய நிதி உதவி அல்லது குறித்த காலக் கடன்கள் குறித்தும், அவ்வுரிமையாளர் அக்கடனுக்காக நிலத்தை அடமானமாக எழுதிக் கொடுத்திருந்தால் அது பற்றியும் அவசியமான பதிவுகளை எழுதி வைக்கும்.

45. பட்டா புத்தகத்தைச் சட்டப்படி செல்லுபடியாகக் கூடிய ஆவணமாக ஆக்கச் சட்டம் இயற்றுவது பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலிக்கிறது.

8. வளர்ச்சிப் பணிகளுக்கு அரசு நிலங்களை வழங்குதல்.

46. வட ஆர்க்காடு மாவட்டத்தில் சீக்கராசபுரம், நரசிங்கபுரம், முகுந்தராயபுரம், வடகால் ஆகிய கிராமங்களில் கொதிகலன் துணைத் தொழிற்சாலை அமைப்பதற்காக பாரத கனரகத் தொழிற்சாலை நிறுவனத்திற்கு சுமார் 319 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும் 'சிப்காட்' நிறுவனத்திற்கு 75.16 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும் உரிமை மாற்றிக் கொடுக்கக் கருதப் படுகிறது.

47. தருமபுரி மாவட்டத்தில் தொழிற்சாலை ஏற்படுத்த 'சிப்காட்' நிறுவனத்திற்கு சுமார் 205.14 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

48. மீன்பிடி பயிற்சி-செய்முறை விளக்க நிலையம் ஒன்றை ஏற்படுத்த செங்கற்பட்டு மாவட்டம், முத்துக்காடு, கிராமத்தில் சுமார் 90 ஏக்கர் அரசு நிலங்களை மத்திய அரசின் மையக் கடல் மீனள ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கக் கருதப்படுகிறது இதன் மூலம் குறிப்பாகத் தமிழ்நாட்டில் பொதுவாகக் கிழக்குக் கடற்கரை நெடுக உள்ள மாநிலங்களில் மீனவர்களும் மீன் வளர்ப்பவர்களும் பயனடைய இயலும். இந்நிறுவனம் இறால், கடல் நண்டு, மசல், சிப்பி, உண்ணத்தக்க சிப்பி ஆகியவற்றை வளர்க்கும் திட்டத்தையும், மீன் முட்டைகளிலிருந்து குஞ்சு பொரிக்கும் திட்டத்தையும் மேற்கொள்ளும். இது ஆராய்ச்சிப் பயிற்சியாகவும், தொழில் நுட்பத்தை அறிந்து கொள்ளும் தேசியத் திட்டமாகவும் இருக்கும். மையக் கடல்

மீனள ஆராய்ச்சி நிறுவனம், இப்பயிற்சி-செய்முறை விளக்க நிலையத்தை நிறுவுவதற்கு, சுமார் ரூ. 40 இலட்சம் முதல் ரூ. 50 இலட்சம் வரை முதலீடு செய்யக் கருதுகிறது.

49. வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்தும் நிலத்தில் முகப்பையர் கிராமத்தில் (சென்னை, பாடி அருகே) தொடர்ச்சியாக அமைந்துள்ள சுமார் 10 ஏக்கர் நிலத்தை அனைத்திந்திய சுங்க வரிப் பயிற்சிக் கல்லூரி ஏற்படுத்துவதற்காக மத்திய அரசு சுங்க வரித் துறைக்கு ஒதுக்கக் கருதப்படுகிறது.

50. இலட்சக்கணக்கான பயணிகளுக்குப் போதுமான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக சென்ட்ரல் இரயில் நிலையத்தை விரிவுபடுத்த வேண்டிய கட்டாயத்தைக் கருதி ரூ. 2.70 கோடி சலுகை வீதத்தில் கட்டிடங்களுடன் கூடிய 42.03 ஏக்கர் நிலத்தை ஒப்படைப்பது என 1978 செப்டம்பரில் எடுத்த முடிவினையொட்டி, 15—12—1968 முதல் 1—7—1980 வரையிலான பல்வேறு நாட்களில் மூர் அங்காடி தொகுதியிலுள்ள 28.22 ஏக்கர் நிலம் இரயில்வே துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. நிலங்கள், கட்டிடங்கள், வாங்குவதற்கான செலவினைத் தவிர, இத்திட்டத்தில் இரயில்வே சுமார் ரூ. 23 கோடி செலவிடும். இதில், புறநகர் மின்சார இரயில் பாதையை விரிவுபடுத்துவதும், மின்சார ரயில் முடிவிடம் ஒன்றைப் புதிதாக அமைப்பதும் அடங்கும். சென்னை, மாநகராட்சி, கடைக்காரர்களுக்குக் கண்ணப்பர் திடலிலும், சைடன்ஹாம்ஸ் சாலையிலும் மாற்று இடங்களைக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

51. அனைத்திந்திய வானொலி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு மதுரை மாநகரில் 4.15 ஏக்கர் நிலம் வழங்கப் பட்டுள்ளது.

52. வேளாண்மைக் கருவிகளை மதிப்பிடுதல், சோதனை செய்வதற்கான நிலையம் ஒன்றை ரூ. 70 இலட்சம் மூலதனச் செலவில் அமைப்பதற்கு தொகுதியாக அமைந்துள்ள சுமார் 400 ஏக்கர் நிலத்தை மத்திய அரசிடம் கொடுப்பது பற்றிப் பரிசீலித்து வருகிறது. இந்நிலையத்தை நிறுவுவதனால், தெற்கு வட்டாரத்தில் வேளாண்மைக் கருவிகளைப் பயன்படுத்துவதில் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான தேவை அதிகரித்து வருவதும் நிறைவு செய்யப்படும். மேலும், குறிப்பாக வேளாண்மைக் காலங்களிலும், அந்த வட்டாரத்திலுள்ள பயிர்களுக்கு தேவைப்படும் பலவகை இயந்திரக் கருவிகளை மதிப்பிடுவதிலும் சோதனை செய்வதிலும் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். இந்நிலையத்தில் ஆண்டொன்றுக்கு 700 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

9. பொது மக்கள் தொடர்புத் திட்டம்.

53. பொதுமக்கள் தொடர்புத் திட்டமான '' மனுநீதித் திட்டம்'' குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை கிராமங்களுக்கு வருகை தரும் அதிகாரிகள் கிராம மக்களின் பிரச்சினைகளை அவ்விடத்திலேயே தீர்த்து வைக்க வாய்ப்பளிக்கிறது. இத்திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் கிட்டத்தின் கீழ் 1–4–1980 முதல் 31–12–1980 வரை வரப்பெற்ற 21,233 மனுக்களில் 22,839 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டன. அதாவது, 74 சதவீத மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளன.

10. தண்ணீர்க் கட்டண வீதங்கள்.

54. இம்மாநிலத்திலுள்ள நிலங்கள் பொதுவாக நன்செய், புன்செய், என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. மண்வளம், வேளாண்மை விளை பொருட்களின் விலை, அண்மையிலுள்ள பாசன வாயில்கள் ஆகியவற்றைப் பொறுத்து நன்செய் புன்செய் நிலங்களுக்கு வரி விதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. நன்செய் நிலங்களுக்கு விதிக்கப்படும் வரியில் ஒரு பகுதி தண்ணீர்த் தீர்வையாகும். அரசு நீர்ப்பாசன வாயில்களிலிருந்து பாசனம் பெறும் புன்செய் நிலங்களைப் பொறுத்தமட்டில் அந்நிலங்களுக்கு விதிக்கப்பட்ட நிலவரியுடன் தண்ணீர்த் தீர்வையும் கூடுதலாக விதிக்கப்படுகிறது. தண்ணீர்த் தீர்வை தர வீதங்கள் முறையின் கீழ் நிர்ணயித்த ஏற்பாட்டின்படி தண்ணீர்த் தீர்வை விதிக்கப் படுகிறது. இது பாசன வாயில்களின் வகையைப் பொறுத்து வேறுபடுகிறது. பெரிய பாசனத் திட்டங்கள், நடுத்தரப் பாசனத் திட்டங்கள், தனி சிறுபாசனத் திட்டப் பணிகளில் தனித் தண்ணீர்த் தீர்வை வீதங்கள் நடைமுறையில் உள்ளன.

55. தமிழ்நாடு 1963ஆம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை சட்டத்தின் கீழ், கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி முறையே நன்செய் நிலங்கள் இதர நிலங்களின் மேல் விதிக்கப்படுகின்றன. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணர்த் தீர்வை (திருத்தச்) சட்டத்தைத் திருத்திய தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச் சட்டம், 1976 ஜூலை 1 முதல் செயலுக்கு வந்தது. மாநிலத்தில் அரசு பாசன வாயில்களைப் பராமரிப்பதில் ஏற்பட்ட இழப்பைக் குறைக்கும் பொருட்டு சட்டம் இயற்றப்பட்டது. 1977-ல் மேலும் திருத்தப்பட்ட இத்திருத்தங்களின் கீழ், முதல் வகை அல்லது இரண்டாம் வகை பாசன வாயில்களின் மூலம் நிலங்கள் பாசனம் பெறும்போது, நன்செய் வரி விதிப்புக்கு உட்பட்ட நிலங்களுக்குத் தனி நன்செய்த் தீர்வையும், தண்ணீர்த் தீர்வைக்கு

உட்பட்ட நிலங்களுக்குத் தனித் தண்ணீர் மேல்வரியும் செலுத்தத் தக்கதாகும். சட்டமன்றத்தின் இரு அவைகளும் தனி நன்செய்த் தீர்வையையும், தனித் தண்ணீர் மேல்வரியையும் ரத்து செய்வதற்கான சட்டத்தை நிறைவேற்றியுள்ளன. இச்சட்ட முன்வடிவுக்கு, இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவு எதிர் பார்க்கப்படுகிறது. தனி நன்செய்த் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி வகையில் ஏற்கனவே வசூலிக்கப்பட்ட தொகை, உழவர் களிடமிருந்து அரசுக்கு ஏற்கனவே வரவேண்டியுள்ள நிலவரி, ஏனைய தொகைகள் குறித்துச் சரிக்கட்டிக்கொள்ளப்படுவதுடன் எஞ்சிய தொகை வருங்காலத்தில் அரசுக்கு வரவேண்டிய நில வரி அல்லது ஏனைய தொகைகள் பாக்கி ஏதேனுமிருப்பின் அவை குறித்துச் சரிக்கட்டிக்கொள்ள வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது.

56. மாநிலத்திலுள்ள தண்ணீர்த் தீர்வை வீத அமைப்பு முழு வதையும் சீரமைப்பது பற்றி ஆராய அரசு அமைத்த குழு தனது அறிக்கையை அரசிடம் கொடுத்துள்ளது. குழுவின் பரிந்துரை கள் அரசின் பரிசிலனையில் இருக்கின்றன.

11. வணிகப் பயிர் வரி விதிப்பு.

57. மாநிலத்தின் வருவாயை அதிகரிப்பதற்காக 1976ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தமிழ்நாடு 1976ஆம் ஆண்டு வணிகப் பயிர் வரி விதிப்புச் சட்டம் 1—7—1976-லிருந்து செயலுக்கு வந் தது. இச்சட்டத்தின் கீழ்ச் சில வணிகப் பயிர்களுக்குக் கீழ்க் காணும் வீதங்களில் வரி விதிக்கப்பட்டது:—

(அ) திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் ஆகியவற்றிற்கு, ஏக்கருக்கு ஆண்டிற்கு ரூபாய் 20.

(ஆ) புகையிலை, மிளகாய், பாசனம் பெறும் பருத்தி, பாசனம் பெறும் வேர்க்கடலை ஆகியவற்றிற்கு, ஏக்கருக்கு ஆண் டிற்கு ரூபாய் 12.50.

58. மாநிலத்தில் எல்லா இடங்களிலும் பாதகமான பருவ நிலை நிலவியதால், மேற்படி சட்டத்தின் கீழ் 1386 பசலி (1—7—1976 முதல் தொடங்கும் ஆண்டுக்கு) ஆண்டுக்கு வணிகப் பயிர்களுக்குச் செலுத்த வேண்டிய வரியை அரசு தள்ளுபடி செய்துவிட்டது. மேலும், திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் போன்ற வணிகப் பயிர்களின் மேல் விதிக்கப்பட்டிருந்த வரி வீதத்தை ரூபாய் 20-லிருந்து ரூபாய் 15 ஆகக் குறைத்தது. மேலும் புகையிலை, மிளகாய், பாசனம் பெறு பருத்தி, பாசனம் பெறும் வேர்க்கடலை ஆகியவற்றின் மீதான வரி விதிப்பை 1387ஆம் (1977 ஜூலை திங்கள் முதல்) பசலி ஆண்டிலிருந்து கைவிட்டுவிட்டது.

59. வணிகப் பயிர் வரி விதிப்பை எதிர்த்து விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகளின் பேரில் உழவர்களின் பிரச்சினைகளை ஆராய அரசு அமைத்திருந்த உயர்நிலைக் குழுவிற்கு இப்பிரச்சினை அனுப்பப்பட்டது. 1387, 1388, 1389ஆம் பசலி ஆண்டுகளுக்கான வணிகப் பயிர் வரி விதிப்பும் தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வரி விதிப்பை விட்டுவிடும்படி உயர்நிலைக் குழு பரிந்துரைத்தது. அரசு இப்பரிந்துரையை ஏற்றுக்கொண்டு தமிழ்நாடு 1976ஆம் ஆண்டு வணிகப் பயிர் வரி விதிப்புச் சட்டத்தை அது செயலுக்கு வந்த காலத்திலிருந்தே ரத்து செய்யவும் முடிவு செய்தது. இந்த முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் சட்ட முன் வடிவு சட்டமன்றத்தின் கடந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கு இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

12. வேளாண்மை வருமான வரி.

60. வேளாண்மை வருமானம் மீதான வரி அண்மைக் காலத்திலிருந்துதான் விதிக்கப்படுகிறது. வேளாண்மை வருமானம் அல்லாத வருமானத்தின் மீது 1860-லிருந்து வரி விதிக்கப்பட்டபோதிலும், வேளாண்மை வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து முற்றிலும் விலக்களிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் 1955-ம் ஆண்டிலிருந்து வேளாண்மை வருமானத்தின் மீது வரி விதிக்கப்பட்டுள்ளது.

61. ஆரம்பத்தில், சென்னை மலைத்தோட்ட வேளாண்மை வருமான வரிச் சட்டம் 1955-ல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டபோது, காபி, தேயிலை, இரப்பர், ஏலக்காய், சின்கோனா போன்ற மலைத் தோட்டப் பயிர்களுக்கு வரி விதிக்கக் கருதப்பட்டது. 1958ஆம் ஆண்டு திருத்தச் சட்டம், மாநிலம் முழுவதிலும் மலைத் தோட்டம் அல்லாத பயிர்களுக்கும் இச்சட்டத்தை நீட்டித்து 1958-59 வரி விதிப்பு ஆண்டிலிருந்து செயலுக்கு வந்தது. திருத்தச் சட்டம், வரி விலக்கு வரம்பை ரூபாய் 2,000-லிருந்து ரூபாய் 3,600 ஆகவும், இவ்வரம்பு 1968ஆம் ஆண்டில் மேற்கொண்டும் ரூபாய் 4,000 ஆகவும், 1973 ஆம் ஆண்டில் ரூபாய் 5,000 ஆகவும் உயர்த்தியது. 1979 ஆம் ஆண்டு 32 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் வரி விலக்கு வரம்பு ரூபாய் 10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வரி இணக்கத் திட்டத்தின்படி, தற்போதைய வரி விலக்கு வரம்பு 20 ஸ்டாண்டர்டு ஏக்கராகும். 100 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை மலைத் தோட்டப் பயிர்களுக்கு மட்டும் இச்சலுகையை அளிக்கையில், எவ்வித வரம்பும் இல்லாமல் மலைத் தோட்டப் பயிரல்லாத ஏனைய பயிர்களுக்கு வரி இணக்கம் செய்து கொள்ள வசதி அளிக்கப்படுகிறது.

62. 1979 ஆம் ஆண்டு 32 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம், எல்லா வகை நிலங்களையும் '' பயிர் அடிப்படையில் '' ஸ்டாண்டர்டு ஏக்கராக மாற்றப்பட்டுள்ளது. மலைத் தோட்டப் பயிர்களும், மலைத் தோட்டப் பயிர் அல்லாத ஏனைய பயிர்களும், 1979-80 வரிவிதிப்பு ஆண்டிலிருந்து ஸ்டாண்டர்டு ஏக்கராகக் கணக்கிடுவதற்கு 13 துணைத் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்குக் குறையாமல் நிலம் வைத்துள்ளவரும், வரி விதிக்கப்பெற்றவருமான ஒவ்வொருவருக்கும் முந்திய ஆண்டின் (கணக்காண்டு) மொத்த வேளாண்மை வருமானத்தின் மீது ஒவ்வொரு நிதியாண்டுக்கும் வேளாண்மை வரி விதிக்கப்படுகிறது. பரப்பு அடிப்படையில் விதிக்கப்படுகிற வரி வீதமும், இணக்கக் கட்டண வீதமும் அவ்வப்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளன. தற்போதைய வரி வீதம் / இணக்க வரி வீதம் வருமாறு :—

வேளாண்மை வருமான வரி வீதங்கள்.

1. மொத்த வேளாண்மை வருமானத்தில் முதல் ரூபாய் 8,000-க்கு. வரி கிடையாது.
2. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூபாய் 7,000-க்கு. ரூபாய்க்கு 25 காசு.
3. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூபாய் 5,000-க்கு. ரூபாய்க்கு 30 காசு.
4. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூபாய் 5,000-க்கு. ரூபாய்க்கு 35 காசு.
5. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூபாய் 5,000-க்கு. ரூபாய்க்கு 45 காசு.
6. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூபாய் 20,000-க்கு. ரூபாய்க்கு 55 காசு.
7. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூபாய் 50,000-க்கு. ரூபாய்க்கு 60 காசு.
8. மொத்த வேளாண்மை வருமானத்தில் எஞ்சிய தொகைக்கு. ரூபாய்க்கு 65 காசு.

ஆனால், () ரூபாய் 10,000-க்கு மேற்படாத மொத்த வேளாண்மை வருமானத்திற்கு வரி செலுத்த வேண்டியதில்லை.

(1) மொத்த வேளாண்மை வருமானம் ரூபாய் 10,000-க்கு மேற்பட்டு, ஆனால், ரூபாய் 11,100-க்கு மேற்படாத போது, அது குறித்துச் செலுத்தத்தக்க வேளாண்மை வருமான வரியானது மொத்த வேளாண்மை வருமானம் ரூ. 10,000-ஐ விட எவ்வளவு அதிகமாக உள்ளதோ அத்தொகையில் எழுபது சத வீதத்திற்கு மேற்படக்கூடாது.

மேலும், ஒவ்வொரு கம்பெனியையும் பொறுத்தவரையில், மொத்த வேளாண்மை வருமானம் முழுவதற்கும் பேரளவு வீதத்தில் வேளாண்மை வருமான வரி விதிக்கப்பட வேண்டும்.

வரி இணைக்கத் திட்டத்தின் கீழ் வரும் நிலங்களுக்கான வரி வீதங்கள்.

பரப்பு.	ஸ்டாண்டர்டு ஏக்கர் ஒன்றுக்கு வரி வீதம். ரூபாய்.
1. முதல் 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ..	வரி கிடையாது.
2. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ..	15.00
3. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ..	20.00
4. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ..	30.00
5. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ..	40.00
6. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ..	50.00
7. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ..	60.00
8. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ..	70.00
9. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ..	80.00
10. எஞ்சிய ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ..	100.00

ஆனால் ஒவ்வொரு கம்பெனியையும் பொறுத்தவரையில், 65, 65-ஏ பிரிவுகளின் கீழ் அந்தக் கம்பெனி வேளாண்மை வருமான வரி இணக்கம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்ட நிலத்தின் மொத்தப் பரப்பு முழுவதற்குமாக மேற்சொன்ன 65, 65-ஏ பிரிவுகளின் கீழ் செலுத்தத்தக்க ஒரு மொத்தத் தொகை பேரளவு விதத்தில் விதிக்கப்பட வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

63. வேளாண்மை வருமான வரி ஆணையாளர், வேளாண்மை வருமான வரித் துறையின் தலைவராவார். வருவாய் வாரியம் நீக்கப்பட்ட பின்னர், அவர் நிலச்சீர்திருத்த தனி ஆணையாளர்—ஆணையாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளார். 1979-80 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வேளாண்மை வருமான வரித்துறை திருத்தியமைக்கப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட அமைப்பில், தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தைச் செயல்படுத்த வேளாண்மை வருமான வரி உதவி ஆணையாளர்கள் அறுவரும் வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் 28 பேரும் உள்ளனர். உதகமண்டலம் குன்னூர், கூடலூர், பொள்ளாச்சி, நாகர்கோவில் I, II, ஆகிய மலைத் தோட்டப் பகுதிகளில் வட்டாட்சியர் பதவித் தரத்தில் இருந்த 6 வேளாண்மை வருமான வரி அதிகாரி பதவிகள் மாவட்ட துணை ஆட்சித் தலைவர் பதவித் தரத்திற்கு நிலை உயர்த்தப்பட்டன. கோயம்புத்தூர் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இருந்த உதவி ஆணையாளர் அலுவலகங்களின் தலைமையிடங்கள் முறையே உதகமண்டலத்திற்கும் நாகர்கோயிலுக்கும் மாற்றப்பட்டன. நாகர்கோவிலில் மாவட்ட துணை ஆட்சித் தலைவர் பதவித் தரத்தில் இருந்த உதவி ஆணையாளர் பதவி, மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்திற்கு நிலை உயர்த்தப்பட்டது. ஆணையாளர் அலுவலகத்தில் இருந்த புள்ளி விவர ஆய்வாளர் பதவி, புள்ளிவிவர உதவி இயக்குநர் பதவியாக நிலை உயர்த்தப்பட்டு, புள்ளி விவரப் பிரிவு தற்போது அவர் பொறுப்பில் உள்ளது. துறைத் தணிக்கைப் பணியை வலுப்படுத்த ஆணையாளர் அலுவலகத்தில் மேலும் ஒரு தணிக்கைக் குழுவை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உதவி ஆணையாளர்கள், வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் ஆகியோரின் அதிகார வரம்புகளும் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. மலைத் தோட்டப் பகுதிகள் அல்லாத ஏனைய பகுதிகளில் வசூல் பணியை கூடுதல் வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் என்ற வகையில் வட்டாட்சியர்கள் கவனித்து வந்தனர். அப்பணி அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு தற்போது வேளாண்மை வருமான வரி அதிகாரிகளிடம ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேளாண்மை வருமான வரிப் பாக்கிகளை விரைந்து வசூலிப்பதற்காக, வரி வசூல் சட்டத்தின் விதித்துறையின் கீழ் வரி வசூல் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் வேளாண்மை வருமான வரி அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன,

64. வேளாண்மை வருமான வரியின் மூலம் கிடைக்கும் வருவாயில் பெரும்பகுதி, மலைத்தோட்டப் பயிர்களிலிருந்து கிடைக்கிறது. 1977-78 வரி விதிப்பு ஆண்டுக்குப் பின்னர் இந்த நிலை கணிசமாக மாறிவிட்டது. தற்போது, மொத்த வருமானத்தில் 80 சதவீதத்திற்கு மேல், மலைத் தோட்டப் பயிர்களிலிருந்தே கிடைக்கிறது. கேட்புத் தொகை, வசூல்,

நிலுவை ஆகியவை பற்றிய விவரங்கள், 1968–69 ஆம் ஆண்டி லிருந்து கொடுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:—

ஆண்டு.	கேட்புத் தொகை.	வசூல்.	நிலுவை.
	(ரூபாய் இலட்சத்தில்.)		
(1)	(2)	(3)	(4)
1968–69 ..	248.94	194.42	54.52
1969–70 ..	260.65	206.54	54.11
1970–71 ..	250.60	193.83	56.77
1971-72 ..	271.34	215.37	55.97
1972–73 ..	293.00	225.95	67.05
1973–74 ..	270.83	225.37	45.46
1974–75 ..	284.42	217.78	66.64
1975-76 ..	373.05	252.59	120.46
1976-77 ..	362.51	244.50	118.01
1977-78 ..	697.29	524.67	172.62
1978-79 ..	1,341.29	1,042.19	269.10
1979–80 ..	1,003.29	693.23	310.06
1980–81 .. (1981 பிப்ரவரி வரை தற்காலிகமானது)	932.32	565.11	367.21

65. நீண்ட காலமாக வேளாண்மை வருமான வரியின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 1.5 முதல் 2.5 கோடி ரூபாய் வரை கிட்டி வந்தது. 1977–78ஆம் ஆண்டில், இது ரூ. 5.25 கோடியாக உயர்ந்தது. 1978–79ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 2.5 கோடியாக இருக்க, ரூ. 10.42 கோடி வசூலாகியது. வேளாண்மை வருமான வரித் துறை தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து இதுவே மிக அதிக வசூலாகும். சம்பந்தப்பட்ட கணக்கு ஆண்டில், தேயிலை நல்ல விலைக்கு விற்கப்பட்டது. வருவாய் உயர்ந்ததற்கான முக்கியமான காரணமாக அந்த ஆண்டில் ஏராளமான வரிப்பாக்கி இனங்கள் குறித்து நடவடிக்கை எடுத்ததும் ஓரளவுக்குக் காரணம். 1979–80ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 6.40 கோடியாக இருக்க, அந்த வரி விதிப்பு ஆண்டில் ரூ. 6.93 கோடி வசூலாகியது.

66. 1979–80, 1980–81ஆம் வரி விதிப்பு ஆண்டுகளில் வரி இணக்கம் வருமான அடிப்படையில் (Composition nd return B sis) வரி விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

மலைத் தோட்டம்.

	வரி இணக்கம்.	வருமானம்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1979–80	3,401	855	4,256
1980–81 (28–2–1981 நாள் நிலவரப்படி.)	3,421	1,211	4,632

மலைத் தோட்டம் அல்லாதவை.

	வரி இணக்கம்.	வருமானம்.	மொத்தம்.
	(5)	(6)	(7)
1979–80	51,587	4,931	56,518
1980–81 (28–2–1981 நாள் நிலவரப்படி).	27,459	4,521	31,980

67. மலைத் தோட்டம் அல்லாத ஏனையவற்றிற்குரிய வரி விதிப்புகளின் எண்ணிக்கை குறைந்ததற்கு முக்கியக் காரணம், வரி விலக்கு வரம்பு 10 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 20 ஸ்டாண்டர்டு ஏக்கராக உயர்த்தப்பட்டதே ஆகும்.

சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளைப் போக்க எடுக்கப்படும் பல நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, குறிப்பாக, அதிக வரி கட்டுபவர்கள், வரி ஏய்ப்புச் செய்வதற்கு உள்ள வாய்ப்பைக் குறைப்பதற்காக, 1977 செப்டம்பரில் அரசு, உதவி ஆணையாளர் (புலனாய்வு) பதவி ஒன்றை ஏற்படுத்தியது. புலனாய்வு பிரிவை வலுப்படுத்த, மற்றொரு உதவி ஆணையாளர் (புலனாய்வு) பதவிக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

68. வேளாண்மை வருமான வரி உதவி ஆணையாளர்கள், வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் ஆகியோர் அனைவருக்கும் பயிற்சி அளிப்பதற்கான விரிவான பயிற்சித் திட்டம் ஒன்று முதல் முதலாக வகுக்கப்பட்டது. இதற்கு அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர், 6–6–1980 முதல் 2–7–1980 வரை 27 நாட்கள்

வேளாண்மை வருமான வரி தொடர்பாக பல்வேறு சட்டங்கள், கணக்கு வைப்பு முறைகளில் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள் பயிற்சி அளித்தனர். வேளாண்மை வருமான வரி விதிப்புகளை முடிவு செய்வதில் இந்தப் பயிற்சி மிகவும் பயன் பட்டது.

69. 1979ஆம் ஆண்டு 32ஆம் எண் திருத்தச் சட்டத்தின்படி, வரி விதிப்புக்கு உட்படுவதற்குரிய வரம்பு 10 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 20 ஸ்டாண்டர்டு ஏக்கராகவும் வருமான வரி விதிப்பு விலக்கு வரம்பு ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000 ஆகவும் உயர்த்தப்பட்டது. வருமானத்தின்மீது விதிக்கப்படும் பேரளவு வரி வீதத்தை 55 சதவீதத்திலிருந்து 65 சதவீதமாக உயர்த்துகையில் இணக்க வரியும் சீரமைக்கப்பட்டுள்ளது. இம் மாற்றங்களினால் சிறு உழவர்களுக்கு நிவாரணம் கிட்டியுள்ளது. அதிக அளவிலான நிலங்கள் மீது விதிக்கப்படும் வரி ஓரளவுக்கு உயர்ந்துள்ளது.

70. தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் விதித்துறைகள் மேலும் தெளிவாகவும், முழுமையானவையாகவும் இருக்கும் வகையிலும், சட்டத்தில் காணப்படும் சில குறைபாடுகளைப் போக்கவும், சட்டத்தின் செயல் வரம்பிலிருந்து தப்பும் வரி விதிப்புகளை குறைக்கவும் உள்ளாட்சி அதிகார மன்றங்கள், பல்கலைக் கழகங்கள், ஓரளவு அரசுத் தன்மை வாய்ந்த நிறுவனங்கள், முதலியவற்றுக்குச் சட்டத்தின் செயல்வரம்பிலிருந்து விலக்கு அளிக்கவும், அரசு, பல்வேறு உயர் நீதிமன்றத் தீர்ப்புகள், நடுவர் மன்ற ஆணைகள் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு விரைவிலேயே சட்டத்தின் சில பிரிவுகளில் திருத்தம் செய்யக் கருதியுள்ளது.

13. நகர்புற நிலவரி.

71. தமிழ்நாடு 1966ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள சில பகுதிகளில் உள்ள நகர்ப்புற நிலங்களைப் பொறுத்தமட்டில் நகர்ப்புற நிலவரி செலுத்தத் தக்கதாகும். இந்த வரி, ரயத்துவாரி, நிலவரி ஏற்பாடு, விடுவரி, மனைவரி முதலியவற்றிற்குப் பதிலாக விதிக்கப்படுகிறது. இச்சட்டம் சென்னை மாநகரில் 1963, ஜூலை 1ஆம் நாளிலிருந்தும், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நகராட்சிகளிலும், மதுரை மாநகரிலும் 1971, ஜூலை 1ஆம் நாளிலிருந்தும் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது.

72. சென்னை மாநகரில் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் செயலுக்கு வரத்தொடங்கியபோது, 1963 ஜூலை 1ஆம் நாள் அன்றிருந்த அங்காடி மதிப்பு நகர்ப்புற நிலவரியைக் கணக்கிடுவதற்கு 0.4 சதவீதம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. இச்சட்டம் அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டது சென்னை மாநகர எல்லையோரப் பகுதிக்கு இச்சட்டம் நீட்டிக்கப்பட்டு கடைசியாக 1975-இல் திருத்தி அமைக்கப்பட்டது. 1971 ஜூலை 1-ஆம் நாள் அன்றிலிருந்த அங்காடி மதிப்பு, நகர்ப்புற

நிலவரியைக் கணக்கிடுவதற்கு அடிப்படையாகப் பின்பற்றப் பட்டது. 0.5 சதவீதத்திலிருந்து 1 சதவீதம் வரை என்ற ஒரேபடித்தான வீதம் 0.7-லிருந்து 2.5 சதவீதம் வரை என்ற அளவில் உயர்த்தப்பட்டது. குடியிருப்புக்குப் பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்கள், குடியிருப்புக்கல்லாமல் வேறு காரியங் களுக்குப் பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்கள் ஆகியவற்றிற் கிடையே வேறுபாட்டை ஏற்படுத்தி அவற்றுக்கு வெவ்வேறு வரிவீதங்கள் விதிக்கப்பட்டன.

73. 1975-ல் நகர்ப்புற நிலவரிச் சட்டம் திருத்தப்பட்ட தன் விளைவாக நகர்ப்புற நிலவரி உயர்ந்ததை எதிர்த்து, தனிப் பட்டவர்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் ஏராளமான முறையீடுகள் வந்தன. அரசு இம்முறையீடுகளை ஆராய்வதற்கு ஒரு குழுவை அமைத்து அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படை யில் அரசு, வருவாய்த்துறையின் 27-12-1976ஆம் நாளிட்ட 2625 ஆம் எண் ஆணையில் பல சலுகைகளை அளித்தது. இந்தச் சலுகைகளைச் சட்ட ரீதியிலே கொண்டுவருவதற்காகத் தமிழ் நாடு 1979ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்தச்) சட்ட முன் வடிவை அரசு கொண்டு வந்தது. அப்போதிருந்த சட்டமன்றம் கலைக்கப்பட்டதால் இச்சட்ட முன்வடிவு, செல்திறனற்றுப் போனது. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1980 ஜூலையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. சட்டமன்றத்தின் ஆய்வுக் குழுவிற்கு இது அனுப்பப்பட்டுள்ளது. அக்குழுவின் முதற்கூட்டம் 17-1-1981ஆம் நாளில் நடைபெற்றது. இக் குழுவின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

74. சிறுதொழில்கள் செலுத்தும் நகர்ப்புற நிலவரியில் 1385 பசலி ஆண்டிலிருந்து (1-7-1975) 25 சதவீதமும் ஏனைய தொழில்களைப் பொறுத்தவரையில் 10 சதவீதமும் அரசு குறைத்துள்ளது. (வருவாய்த்துறையின் 4—11—1978 ஆம் நாளிட்ட 2516 ஆம் எண் அரசு ஆணையைக் காண்க.)

75. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 2.57 கோடி வசூலிக்கப் பட்டுள்ளது.

14. நிலச் சீர்திருத்தங்கள்.

76. நில உச்சவரம்பு.—அவ்வப்போது திருத்தப்பட்டவா றுள்ள தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின்கீழ், 5 அல்லது அதற்குக் குறைவான நபர்களைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு அனுமதிக் கத் தக்க மொத்த உச்ச வரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்களாகும். 5 நபர்களுக்கும் மேற்பட்டு உள்ள குடும்பத்திற்கு, ஒவ்வொரு கூடுதல் நபருக்கு 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் வீதம் அத்தகைய தொரு குடும்பத்திற்கு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் என்ற மொத்த உச்சவரம்பிற்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது. இந்த 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள் மொத்த உச்சவரம்புக்கு உட்பட்டு,

பெண் ஒருவர் குடும்ப உச்சவரம்புக்கு மேலாக 10 ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள் வரை ஸ்திரிதன நிலமாக உடைமையில் வைத்திருக்க அனுமதிக்கப்படுகிறார். (ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலம் என்பது நல்ல முறையில் பாசனம் பெறும் நிலமான 0.8 ஏக்கரிலிந்து மோசமான நிலையில் பாசனம் பெறாத நிலமான 4 ஏக்கர்கள் வரை வேறுபடுகிறது) இச்சட்டம் சில விலக்குகளுக்கும், சலுகைகளுக்கும் வகை செய்கிறது.

வேளாண்மை நில உச்சவரம்பு சட்டத்தை செயல்படுத்துவதில் 1—3—1981ஆம் நாள் நிலவரப்படி ஏற்பட்டுள்ள பணி முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—

		ஏக்கர்கள்.
(i)	உபரியாக அறிக்கையிடப்பட்ட பரப்பு ..	1,31,457
(i)	உடைமையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பரப்பு.	1,25,627
(ii)	(அ) வினியோகிக்கப்பட்ட பரப்பு ..	95,945
	(ஆ) தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்திற்கு வினியோகிக்கப்பட்ட பரப்பு.	4,041

1965ஆம் ஆண்டு உபரி நிலங்களை வினியோகம் செய்தல் விதிகளின்கீழ் ஒதுக்கம் செய்யப்பட்ட பரப்பு 8,496 ஏக்கர்கள்.

(v)

பயனடைந்தோர்.	எண்ணிக்கை.	பரப்பு. (ஏக்கர்.)
(அ) ஆதி திராவிடர்கள்	25,432	29,630
(ஆ) பழங்குடியினர்	24	17
(இ) ஏனையோர்	37,390	53,761
மொத்தம் ..	62,846	83,408

77. மேற்சொன்ன சட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட உபரி நிலங்களுக்குச் செலுத்தத்தக்க தொகை சில இனங்களில் அத்தகைய நிலத்தின் அங்காடி விலையைக் காட்டிலும் அதிகமாக இருந்தது எனக் கண்டறியப்பட்டது. நிலச் சொந்தக்காரர்களுக்குச் செலுத்தத் தக்க தொகையை கணக்கிடும் அடிப்படை, தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள்

(நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1979) மூலம் மாற்றப்பட்டுள்ளது. இதன்படி நல்ல தரமான நிலத்திற்குச் செலுத்தத் தக்க தொகை, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3,500-க்கு மேற்படாது. வன, தரிசு நிலங்களுக்குச் செலுத்தத் தக்க தொகையைக் கணக்கிடுவதற்குரிய தெளிவான விதி முறைகளும் இல்லை. அதே சட்டத்தினால் தெளிவான நடைமுறையும் நிர்ணயிக்கப்பட்டது. திருத்தப்பட்ட நடைமுறை 27—10—1978 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது.

78. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட உபரி நிலங்கள், 5 ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் என்ற உயரளவு வரை தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்கள் விநியோகம் செய்தல்) விதிகளின்கீழ் நபர் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படலாம்; அதாவது சாதாரண ஏக்கர் கணக்கில் பார்த்தால், உபரி நிலங்கள் 20 ஏக்கர் வரை தகுதியுள்ளவர்களுக்கு ஒப்படை செய்யப்படலாம். ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் என்ற உயரளவு 1965 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது. நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் அதிக மக்கள் பயனடையும் பொருட்டு, தகுதியுள்ள நபர் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் உபரி நிலங்களின் உயரளவு பரப்பளவு, தற்போதுள்ள ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து புன்செய் நிலமாயின் 3 சாதாரண ஏக்கர்கள் அல்லது நன்செய் நிலமாயின் $1\frac{1}{2}$ சாதாரண ஏக்கர்களாகவும் குறைப்பதற்காக அரசு தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தையும், தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நில சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை விநியோகம் செய்தல்) விதிகளையும் திருத்தம் செய்துள்ளது.

79. நில உச்ச வரம்புக்காகச் சட்டம் கொண்டு வருவது பற்றி சட்ட மன்றத்தில் அறிவிப்புகள் வெளியானதைத் தொடர்ந்து 1—1—1958-க்கும் 6—4—1960-க்குமிடையே பல நில உடைமை மாற்றங்கள் நிகழ்ந்தன. இதன் விளைவாகச் சட்டத்தின் குறிக்கோள் முறியடிக்கப்பட்டதுடன் எதிர்பார்த்த உபரி நிலங்களின் அளவும் குறைந்தது. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின்மீது உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டில் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. சிறு நில உடைமையாளர்கள் செய்த சில நிலவுடைமை மாற்றங்களுக்கு விலக்குகள் அளித்ததற்கு உட்பட்டு 1—1—1958-க்கும் 6—4—1960-க்குமிடையே செய்த நில மாற்றங்கள் அனைத்தையும் செல்திறனற்றவையாக்க இச்சட்ட முன்வடிவு வகை செய்கிறது. இச்சட்ட முன்வடிவிற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் இன்னும் இசைவளிக்கவில்லை.

80. குத்தகைச் சீர்திருத்தங்களின்கீழ், குத்தகைதாரர்களைப் பதிவு செய்வதற்காகத் தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு வேளாண்மை நிலக் குத்தகை உரிமைகள் பதிவேடுகள் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. பதிவு செய்து கொண்ட குத்தகைக்காரர்களின் எண்ணிக்கை 1980-ஆம் ஆண்டு

நவம்பர் மாதம் 30ஆம் நாள் நிலவரப்படி 4,35,969 ஆகும்; பரப்பு 6,25,587 ஏக்கர். குத்தகைப் பதிவேடுகளை நாளது வரையில் பதிவு செய்வதற்கான முன்னோடித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகத் தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் உள்ள ஒரு வட்டத்திலும், தனிப் பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஒப்புதல் வழங்கியது. முன்னோடித் திட்டத்தின் விளைவுகளின் அடிப்படையில், மாநிலத்தின் பிற பகுதிகளில் இதே போன்ற நடவடிக்கை எடுப்பது பற்றி பரிசீலிக்கப்படும். 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் நாளன்றுள்ளவாறு 51,771 குத்தகை உரிமைகள் சம்பந்தப்பட்ட 8,433 பொறுப்புக் கழகங்களும் 1,27,593·25 ஏக்கர் நிலங்களும் சரிபார்க்கப்பட்டுள்ளன. இதனால் 4,636 பினாமி குத்தகை உரிமைகளும், அதிகப்படியான உழவர் உடைமைகள் 2,245ம் உள்ளது தெரிய வந்தது. மொத்தத்தில் இதில் 13,786·41 ஏக்கர் நிலம் அடங்கி உள்ளது. கண்டு பிடிக்கப்பட்ட இனங்களில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

81. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 19/1969) நியாய ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ள பகுதிகள் நீங்கலாக ஏனைய பகுதிகளுக்கு, வேளாண்மைத் தொழிலாளர்களுக்குரிய குறைந்தளவு ஊதியங்கள், குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ் 1976ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டன. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு 19-வது சட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தின் மன்னார்குடி திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், மாயவரம், சீர்காழி, நன்னிலம், நாகப்பட்டினம் திருவாரூர் ஆகிய எட்டு கிழக்கு வட்டங்களில் செயலில் உள்ளது. இது, சாகுபடி, அறுவடை காலத்தின்போது வேளாண்மைத் தொழிலாளர்கள் செய்யும் பணிக்கான ஊதியங்களை வரையறுக்க வகை செய்கிறது. சட்டத்தைச் செயல்படுத்தும் பணியாளர்களுக்கு இது குறித்துத் தக்க அதிகாரம் அளிப்பதன் மூலம் நியாய ஊதியங்கள் வழங்குவதைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவதற்காக 1969 ஆம் ஆண்டு 19-வது சட்டத்தைத் திருத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

82. 1969 ஆம் ஆண்டு 19-வது சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட நியாய ஊதியங்கள் 1974 இல் திருத்தி அமைக்கப்பட்டன. விவரம் வருமாறு :—

சாகுபடியின்போது எல்லா வகையான பணி.

ஆண்— நாள் ஒன்றுக்கு ரூ. 6 அல்லது 6 லிட்டர் நெல்லும் ரூ. 2·75 காசும்.

பெண்—நாள் ஒன்றுக்கு ரூ. 4 அல்லது 5 லிட்டர் நெல்லும் ரூ. 1.50 காசும்.

விளக்கம்.—எருதுகளையும், கலப்பைகளையும் உழவர்கள் சொந்தமாகக் கொண்டு வருகிறபோது, ''பணி'' என்பதில் உழுதல் என்பது அடங்காது. அறுவடை செய்தவர்க்கு அறுவடை செய்யப்பட்ட ஒவ்வொரு ஐம்பத்தி நான்கு லிட்டர்கள் நெல்லில், ஆறு லிட்டர்கள் நெல் கொடுக்கும் நடைமுறை தொடர்ந்து செயலில் இருக்கும்.

83. இச்சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட நியாய ஊதியங்களைத் திருத்தியமைப்பது குறித்த பிரச்சினையை விசாரணை செய்ய, அரசு 1978 ஜூலைத் திங்களில் வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் திரு. இராமச்சந்தர், ஐ.ஏ.எஸ். அவர்களை ''ஒரு நபர் குழுவாக'' அமைத்தது. ''ஒரு நபர் குழு'' அறிக்கையின் அடிப்படையில் 1979 இல் ஊதியங்கள் திருத்தியமைக்கப்பட்டன. தேவைப்பட்ட சூழ்நிலைகளையொட்டி அத்திருத்தங்கள் பின்னர் மேலும் திருத்தியமைக்கப்பட்டன. 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் நாள் முதல் நடப்பில் உள்ள ஊதிய வீதங்கள் வருமாறு :—

உரிய வயது வந்தவர்கள்.

உழுதல், விதைத்தல், நாற்றுகளைப் பிடுங்குதல், நிலங் நாளுக்கு வரப்பு வெட்டிப் பராமரித்தல், கால்வாய்களை வெட்டி பராமரித்தல், விதைப்பதற்கும், நாற்று நடுவதற்காகவும் நிலத்தைத் தயார் செய்தல், இடு பொருட்களை அல்லது உற்பத்திப் பொருள்களைக் கொண்டு செல்லுதல் ஆகிய உடலுழைப்பில் ஈடுபட்டவர்களுக்கு :

நாள் ஒன்றுக்கு 7 லிட்டர் நெல்லுடன் ரூ. 2·80 வழங்கப்படும்; அல்லது

நாள் ஒன்றுக்கு ரூ. 7·80 வழங்கப்படும்.

நாற்று நடுதல், களையெடுத்தல் அல்லது திட்டவட்டமாகக் குறிப்பிடாத ஏனைய வேளாண்மைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு :

நாள் ஒன்றுக்கு 6 லிட்டர் நெல்லுடன் ரூ. 1.80 வழங்கப்படும்; அல்லது

நாள் ஒன்றுக்கு ரூ. 6.20 வழங்கப்படும்.

உரிய வ்யதடையாதவர்கள்.

எல்லா வகை வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் நாள் ஒன்றுக்கு 4 லிட்டர் நெல்லுடன் ரூ. 1·50 வழங்கப்படும். அல்லது நாள் ஒன்றுக்கு ரூ. 4.40 வழங்கப்படும்.

'' உழுதல் '' என்பதில், எருதுகள், கலப்பைகள் ஆகியவற்றை உழவுத் தொழிலாளர்கள் கொண்டு வருவது என்பது அடங்காது. உழுதலைத் தவிர எல்லா வகைப் பணிகளுக்கும் பணி புரியும். நேரம் நாளொன்றுக்கு ஏழு மணி நேரமாகும். உழுதலுக்கு நாளொன்றுக்கு ஐந்து மணி நேரமாகும். இரவில் பணி புரியும் நபர்களுக்கு 50 சதவீத ஊதியம் கூடுதலாக அளிக்கப்பட வேண்டும்.

அறுவடை செய்பவருக்கு அறுவடை செய்யப்பட்ட ஒவ்வொரு 54 லிட்டர் நெல்லுக்கும் ஆறு லிட்டர் நெல் வழங்கப்பட வேண்டும் என்ற தற்போதுள்ள முறையே தொடர்ந்து செயலில் இருக்கலாம்.

இவ்வாறு திருத்திய ஊதிய அமைப்பு முறை ஆண்களுக்கும் பெண்களுக்கும், ஒரே பணிக்கு அல்லது ஒத்த தன்மையுடைய பணிக்கு சமமான ஊதியம் அளிப்பதை உறுதி செய்கிறது.

84. கிழக்குத் தஞ்சாவூரைச் சேர்ந்த வட்டங்களைத் தவிர, ஏனைய பகுதிகளில் குறைந்தளவு ஊதியங்கள் சட்டம் செயலில் உள்ளது. முன்னாள் வருவாய் வாரிய நிலவரி ஆணையாளர் திரு. கா. திரவியம், இ.அ.ப. அவர்கள் தலைமையின்கீழ் குழு, ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு ஊதிய வீதங்கள் திருத்தப்பட்டுள்ளன.

85. தமிழ்நாடு 1976ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (வெளியேற்றுவதனின்றும் பாதுகாப்பு) சட்டம் (குடியரசுத் தலைவர் சட்டம் 36/1976) அவ்வப்போது திருத்தப் பட்டுள்ளது. 1976 ஜூன் 30இல் முடிவடைந்த விளைச்சல் ஆண்டிற்கும் (1385 விளைச்சல் ஆண்டு) முந்திய எந்தவொரு விளைச்சல் ஆண்டிற்கும் நிலச் சொந்தக்காரர்க்கு குத்தகையை செலுத்தாமல் நிலுவையாக வைத்துள்ள பயிரிடும் குத்தகை தாரர்களை வெளியேற்றுவதனின்றும் பாதுகாப்பதற்கு இச்சட்டம் வகை செய்கிறது. பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப்படாமல் சேர்ந்து வந்து நிலுவையாகவுள்ள குத்தகை களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு நிலையான குத்தகை நிவாரணம் அளிக்கப்படும் வகையில் 1980 ஜூலை 15 வரை இப்பாதுகாப்பு அளிக்கப்பட்டது. குத்தகை நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டபின் இது ரத்து செய்யப்பட்டது. இதன் மூலம் குத்தகை நிலுவைகள் குறைக்கப்பட்டுள்ளன.

86. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்டம் 1977ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடும் குத்தகைக்காரர்களை பாதுகாப்பதற்கும், 1978 ஜூன் 30 முடிய உள்ள விளைச்சல் ஆண்டிற்கும் (1387 விளைச்சல் ஆண்டு) குத்தகை செலுத்தப்படாத காரணத்தால் அல்லது முந்தைய விளைச்சல் ஆண்டுகள் தொடர்பான குத்தகை பாக்கியைச் செலுத்தாத காரணத்தினால், அக்குத்தகையை வசூலிப்பதற்குரிய அல்லது அவர்களை வெளியேற்றுவதற்குரிய நடவடிக்கைகளின்றும் பாதுகாப்பு அளிப்பதற்கும் இயற்றப்பட்டது. அவ்வப்போது இச்சட்டம் திருத்தப்பட்டதன் மூலம் 1980 ஜூலை 15 வரை இப்பாதுகாப்பு அளிக்கப்பட்டது. குத்தகை நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டபின் இது ரத்து செய்யப்பட்டது இதன் மூலம் குத்தகை நிலுவைகள் குறைக்கப்பட்டுள்ளன.

87. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களில் பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பை நீட்டித்ததால் குத்தகை நிலுவைகள் சேர்ந்து விட்டன. குத்தகை நிலுவைகளைச் செலுத்துவதிலிருந்து பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (குத்தகை நிலுவை) நிவாரணச் சட்டமும் (தமிழ்நாடு சட்டம் 15 1980), தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரணம்) சட்டமும் (தமிழ்நாடு சட்டம் 16/1980) இயற்றப்பட்டுள்ளன. இச்சட்டங்களுக்கிணங்க, 30—6—1973க்கு முந்தைய (1382 விளைச்சல் ஆண்டுக்கும் அதற்கு முந்தைய விளைச்சல் ஆண்டுகளுக்கும்) கால அளவு, தொடர்பான குத்தகை நிலுவை எவையேனும் இருந்தால் அவை 30—6—1980ஆம் நாளுக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். குறைக்கப்பட்ட குத்தகை நிலுவை அதாவது 1—7—1973 முதல் 30—6—1976 வரையிலான கால அளவில் (அதாவது 1383 விளைச்சல் ஆண்டிலிருந்து 1385 விளைச்சல் ஆண்டு வரை) ஒவ்வொரு விளைச்சல் ஆண்டிற்கும், குத்தகையில் மூன்றில் ஒரு பகுதி சட்டத்தில் குறிப்பிட்ட கால வரையறைக்குள் மூன்று தவணைகளில் செலுத்தப்பட வேண்டும். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 1—7—1973 முதல் 30—6—1978 வரையிலான கால அளவில் (அதாவது 1383 விளைச்சல் ஆண்டிலிருந்து 1387 விளைச்சல் ஆண்டு வரை) ஒவ்வொரு விளைச்சல் ஆண்டிற்கும் குறைக்கப்பட்ட குத்தகை நிலுவையான ஐந்தில் ஒரு பகுதி, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள், மூன்று தவணைகளில் செலுத்தப்பட வேண்டும்.

88. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கி (நிவாரண) திருத்தச் சட்டமும் (தமிழ்நாடு சட்டம் 37/1980), தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு புயல்-வெள்ளத்

தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கி (நிவாரண) திருத்தச் சட்டமும் (தமிழ்நாடு சட்டம் 40/980) பின்வருவனவற்றுக்கு வகை செய்வதற்காக இயற்றப்பட்டன :—

(i) 1381ஆம் பசலியாண்டிற்குச் சேர வேண்டிய நிலுவையாக உள்ள (1—7—1971-இல் தொடங்கும் ஆண்டு) குத்தகை பாக்கியை மூன்று சம தவணைகளில், முறையே 31—12—1980 30—6—1981, 30—6—1982 ஆகிய நாட்களுக்கு முன் செலுத்துதல்; அவ்வாறு செலுத்தப்பட்டால் 1381ஆம் பசலியாண்டிற்கும் அதற்கு முந்தைய பசலி ஆண்டிற்கும் உரிய குத்தகைப் பாக்கி முழுவதும் தீர்த்து விட்டதாகக் கருதப்படும்.

(ii) 1382 ஆம் பசலியாண்டிற்குரிய (1—7—1972 இல் தொடங்கும் ஆண்டு) குத்தகைப் பாக்கியை மூன்று சம தவணைகளில் முறையே 31—12—1980, 30—6—1981, 30—6—1982 ஆகிய நாட்களுக்குமுன் செலுத்துதல்.

(iii) வெள்ளத்தால் பாதிக்கப்படாத பகுதிகளில் 1383 85 ஆம் பசலி ஆண்டுகளுக்குரிய குத்தகைப் பாக்கியில் மூன்றில் ஒரு பகுதியையும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 1383—87 ஆம் பசலி ஆண்டுகளுக்குரிய குத்தகைப் பாக்கியில் ஐந்தில் ஒரு பகுதியையும், மூன்று சம தவணைகளில் முறையே 31—12—1980, 30—6—1981, 30—6 1982 ஆகிய நாட்களுக்கு முன் செலுத்துதல்.

89. மேற்சொன்ன சட்டங்கள் 1980 நவம்பரில்தான் வெளியிடப்பட்டன. பயிரிடு குத்தகைதாரர்கள் தங்களது குத்தகைப் பாக்கியை சனவரி, பிப்ரவரியில் அறுவடை முடிந்த பிறகு செலுத்த முடியுமாதலால் மேற்சொன்ன பாக்கித் தொகையின் முதல் தவணையைச் செலுத்துவதற்கான கால வரையறையை 31—12—1980 இல் இருந்து 30—6—1981 வரைக்கும் நீட்டிக்கவும், 30—6—1981-ல் செலுத்த வேண்டிய இரண்டாவது தவணைக்கான காலவரையறையை 31—3—1982 வரை நீட்டிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. மேற்சொன்ன முடிவுற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கான சட்ட முன்வடிவுகள் சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இப்பொழுது குடியரசுத் தலைவரின் இசைவு பெற அனுப்பப்பட்டுள்ளன.

90. தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயக் குத்தகை செலுத்துதல்) சட்டம், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களில் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) சட்டம் ஆகியவற்றின் தற்போதுள்ள விதித்துறைகளின்கீழ், பயிரிடும் குத்தகை

தாரர்கள், நிலச் சொந்தக்காரருக்குச் செலுத்தத்தக்க நியாய குத்தகை நன்செய் நிலங்களைச் தவிர ஏனைய நிலங்களைப் பொறுத்தமட்டில், அந் நிலங்களில் சாதாரணமாகக் கிடைக்கும் மொத்த உற்பத்தியில் $33\frac{1}{3}$ சதவீதம் என்பதிலிருந்து, நன்செய் நிலங்களைப் பொறுத்தமட்டில் அந்நிலங்களில் சாதாரண மாகக் கிடைக்கும் மொத்த உற்பத்தியில் 40 சதவீதம் என்று உள் ளது. தேசியக் கொள்கையின்படி பயிரிடும் குத்தகைதாரர்கள் நிலச் சொந்தக்காரர்களுக்குச் செலுத்த வேண்டிய நியாயக் குத்தகை மொத்த உற்பத்தியில் 25 சதவீதத்திற்கு மேற்படாமல் இருக்கும் வண்ணம் வரையறுக்கப்பட வேண்டும். சாதாரண மாகக் கிடைக்கும் மொத்த உற்பத்தியில் நியாயக் குத்தகை 25 சதவீதமாக ஆக்கி, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்த கைதாரர்கள் (நியாயக் குத்தகை செலுத்துதல்) திருத்தச் சட்ட மும் (தமிழ்நாடு சட்டம் 17/1980), தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர் வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமும் (தமிழ்நாடு சட்டம் 18/1980) இயற்றப்பட்டன. கரும்பைப் பொறுத்த மட்டில் இதுவரையில் நியாயக் குத்தகைச் சட்டத்தில் அளிக்கப் பட்டிருந்த விலக்கு இச்சட்டங்களினால் நீக்கப்பட்டதின் மூலம் கரும்புக்குரிய குத்தகை சாதாரணமாகக் கிடைக்கும் மொத்த உற்பத்தியில் 25 சதவீதமாக வரையறுக்கப்பட்டது.

குடியிருப்பு :

91. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோக தாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் நாள் அன்று குடியிருப்போராக அல்லது உரிமைதாரராக யாதொரு குடியிருப்பை (வீட்டு மனை) அனு போகத்தில் வைத்துள்ள உழவுத் தொழிலாளருக்கு உடைமை உரிமையை வழங்குகிறது. இச்சட்டத்தின் கீழ் 1,78,484 பட் டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்ட 98,430 பட்டாக்களும், பழங்குடியினருக்கு வழங் கப்பட்ட 243 பட்டாக்களும், பின் தங்கிய வகுப்பினருக்கு வழங் கப்பட்ட 48,879 பட்டாக்களும், ஏனையோருக்கு வழங்கப் பட்ட 30,932 பட்டாக்களும் அடங்கும். 19—6 1977 அன்று இம்மாநிலத்திலுள்ள மலைத்தோட்டப்பகுதிகளுக்கு இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது. எனவே, இச்சட்டத்தின் பயன்கள் அப் பகுதிகளிலுள்ள மலைத்தோட்டப் பணி அல்லாத பணிபுரியும் உழவர்கள்மலைத் தேட்டப் பணி அல்லாத பணிபுரியும் உழவுத் தொழிலாளர்கள் ஆகியோரில் குத்தகைதாரர்களாக அல்லது உரிமைதாரர்களாக 19—6 1971 ஆம் நாளன்று குடியிருப்பை அனுபோகத்தில் வைத்திருந்தவர்களுக்குப் பொருந்தத்தக்க தாகும். இச்சட்டம் தற்போது, மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப் பட்டுள்ளது. ஆனால், இதில் தஞ்சாவூர், நீலகிரி ஆகிய மாவட்

டங்கள் தவிர, ஏனைய மாவட்டங்களிலுள்ள நகராட்சிகள், நகரியங்கள், சென்னை மாநகரம் ஆகியவைகளுக்கு இச்சட்டம் நீட்டிக்கப்படவில்லை. இச்சட்டம், மலைத்தோட்டத்திற்கும், மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொருந்தாது.

92. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு சட்டத்தின் அடிப்படையில் இயற்றப்பட்ட தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கிராமப்புறக் கைவினைஞர்கள் (குடியிருப்பு உரிமை வழங்கல்) சட்டம், 1—7—1975 ஆம் நாளன்று குடியிருப்போர்கள் என்ற வகையில் அல்லது உரிமதாரர்கள் என்ற வகையில் அவர்கள் அனுபோகத்திலுள்ள குடியிருப்புகள் குறித்த உடைமை உரிமையை அவர்களுக்கு வழங்குகிறது. இச்சட்டம், சென்னை, மதுரை மாநகர்களுடன் யாதொரு நகராட்சியில் அல்லது நகரியத்தில் உள்ள பகுதிகள் ஆகியவை நீங்கலாக இம்மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் சுமார் 578 கிராமப்புறக் கைவினைஞர்கள் பட்டாவைப்பெறத் தகுதியானவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது. அதில் 255 பேர்களுக்கும் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

93. ஏழை வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேலை அல்லது நியாயமான ஊதியம் வழங்காதிருக்கும் நோக்குடன் பெருநிலச்சொந்தக்காரர்கள், வழக்கமாகத் தொடர்ந்து உணவுப் பயிரிட்டு வந்த நிலங்களை வேண்டுமென்றே பயிரிடாது வைத்து அல்லது,உணவுப்பயிரை மாற்றி சவுக்கு போன்றவற்றை வளர்த்து வரும் நேர்வுகளும் உள. வேளாண்மைத் தொழிலாளர்களுக்குத் துன்பம் விளைவிக்கும் இத்தகைய நிலையைப் போக்கும் நோக்கத்துடன், அரசு அத்தகைய நிலங்களைக் கையகப்படுத்தி அவற்றில் உணவுப் பயிர்களைப் பயிர் செய்யும்பொருட்டு அவற்றை நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், ஏனையோருக்கும் பகிர்ந்து வழங்கச் சட்டமியற்றக் கருதியுள்ளது. இந்நோக்கத்திற்கான சட்டம் விரைவில் இயற்றப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

15. நகர்புற நில உச்சவரம்பு.

94. சென்ற பத்தாண்டுகளுக்கு மேலாக, பல்வேறு காரணங்களால், நகர்ப்புற மக்கள் தொகை பெருமளவு வளர்ந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம், கிராமங்களிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற தொழிற்சாலைகளும், ஏனைய நிறுவனங்களும் வளர்ந்து வருகின்றபடியால், கிராம மக்கள், கிராமங்களைவிட்டு, வெளியேறுகின்றனர். சிறு நகரங்கள் நடுத்தர நகரங்கள் மக்கள் தொகையைவிட பெருநகரங்களிலும், அதிகப் பரப்பளவுள்ள மாநகரங்களிலும் மக்கள்தொகை அதிகரித்துள்ளது கட்டுக்கடங்காது குடிசைகள் பெருகி வருவதாலும் சுகாதாரமற்ற வாழ்க்கைச் சூழல்கள் பெருகிவருவதாலும் பொருளா

தார, சமூகப் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. எனவே அரிதாகக் கிடைக்கும் நகர்ப்புற பகுதிகளை பயன்படுத்துவதையும், முறையாக மேம்படுத்துவதையும், முறைப்படுத்துவதிலும் ஒரு சிலரிடமே நிலங்கள் குவிந்து கிடப்பதையும் நிலங்கள் குறித்த ஊக வாணிகம் நடப்பதையும் தடுப்பதிலும் நாட்டம் செலுத்தப்பட்டது.

95. நகர்ப்புற பகுதிகளிலுள்ள நிலங்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது. இதன் பலனாக அரிதிற்கிடைக்கும் மதிப்பு மிக்க நகர்ப்பகுதி நிலங்களை வாங்கி முடக்கி வைப்பதும் பின்னர் அதிக விலைக்கு விற்க முயலும் ஊகவாணிக மூலம், பெருகிவிட்டது. தனிப்பட்ட ஒருவர் வைத்துள்ள நிலங்களுக்கு உச்ச வரம்பு விதிக்கலாம் என்றும் நியாயமான அளவிற்கு மேல் நகர்ப்புற நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பதைத் தடை செய்யலாம் என்றும், இவ்வாறு செய்தால் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது. தனியாரின் உடைமையில் உள்ள நிலங்களின் அளவுக்கு உச்ச வரம்பு விதித்தும், வீடுகளின் அளவை வரையறுத்தும் நகர்ப்பகுதி நிலங்கள் அனைத்தையும் சமுதாயவுடைமை ஆக்குவதே இதன நோக்கம். இந்த நோக்கத்துடன், தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு கட்டுதல் முறைப்படுத்துதலும்) சட்டம் (குடியரசுத் தலைவர் சட்டம் 34/1976) இயற்றப்பட்டது.

96. இச்சட்டத்தின் மூன்று முக்கியமான அம்சங்கள் வருமாறு :

() தனிப்பட்ட ஒருவர், குடும்பம், கூட்டுப்பங்கு நிறுவனம், நிறுவனம் அல்லது ஒரு குழு அல்லது ஒரு சங்கம் அல்லது தனிப்பட்டவர்கள் வைத்திருக்கின்ற காலி நிலத்தின் மீது உச்சவரம்பு விதித்தல்.

(ii) எதிர்க்காலத்தில் கட்டப்படும் வீடுகளின் தரைப் பரப்புக்கு உச்ச வரம்பு விதித்தல்.

(iii) நகர்ப்புற சொத்தை மாற்றுவதை முறைப்படுத்தல் போன்றவையாகும்.

97. இச்சட்டம் செயல்படுத்தப்பட்டதில் பொதுமக்கள் அடைந்த இடர்பாடுகள் குறித்து எண்ணற்ற முறையீடுகள் வந்தன. இவற்றைக் கருத்திற்கொண்டு அரசு, குடியரசுத் தலைவரின் 1976 ஆம் ஆண்டு 34 ஆம் சட்டத்தை ரத்து செய்து, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்பகுதி நிலஉச்ச வரம்பு கட்டுதலும் முறைப்படுத்தலும்) சட்டத்தை (தமிழ் நாடு சட்டம் 24/1978) இயற்றியது. நகர்ப்பகுதிச் சொத்துச்

இணைப்பு

களைச் சமுதாயவுடைமை ஆக்குவதென்ற குறிக்கோளையும் தொடர்ந்து வைத்துக்கொண்டு அதே சமயம் பழைய சட்டத்தின் இடர்பாடான விதித்துறைகளின் மூலம் பொதுமக்களுக்கு ஏற்பட்ட தொல்லைகளை நீக்கவேண்டிய அவசியத்தையும் கருத்தில்கொண்டு இச்சட்டம் இயற்றப்பட்டது.

98. சட்டத்தின விதித்துறைகளை எளிதாக்கியதன் விளைவாகக் கட்டிட வரைப்படங்களுக்கு உள்ளாட்சி மன்றங்களின் அனுமதியைப் பெறுவதில் உள்ள இடர்பாடுகள் அகற்றப்பட்டு, கட்டிடப் பணிகள் விரைந்து நடைபெறத் தொடங்கியுள்ளது.

99. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில மீது (உச்சவரம்பு கட்டுதலும் முறைபடுத்தலும்) சட்டத்தின் 14 15, 20 (3), 27, 48 ஆகிய பிரிவுகள் நீங்கலாக ஏனைய பிரிவுகள் 3-8-1976 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன, 14, 15, 20 (3), 27, 48 ஆகிய பிரிவுகள் 17-5-1978 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு 14 ஆம் சட்டத்தின் மூலம் 20 (3) பிரிவு திருத்தப்பட்டு, 1-2-1979விருந்து செயலுக்கு வந்தது.

100. நிர்வாக அமைப்பு.—திருநெல்வேலியைத் தவிர ஏனைய இடங்களில், நகர்ப்புற நில உச்சவரம்புப் பணியை நகர்ப்பகுதி நிலவரி சட்டத்தை நிர்வகிக்கின்ற உதவி ஆணையாளர்கள் கவனிக்கின்றனர். திருநெல்வேலியில் நகர்ப்பகுதி உச்ச வரம்புப் பணியை மாவட்ட தனித்துணை ஆட்சித் தலைவர் கவனிக்கிறார். தற்பொழுது நிலச்சீர்திருத்த தனி ஆணையாளரே நகர்ப்பகுதி உச்ச வரம்புப் பணிக்கும் பொறுப்பு வகிக்கின்றார்.

101. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு புதிய நகர்ப்புற (உச்ச வரம்பு கட்டுதலும் முறைப்படுத்தலும்) சட்டத்தில் (தமிழ் நாடு சட்டம் 24/1978) சென்னை நகர்ப்புற கூட்டுப் பகுதியின் பரப்பு 1,400 சதுர கிலோ மீட்டரிலிருந்து 576 சதுர கிலோ மீட்டராகக் குறைக்கப்பட்டுள்ளது; ஏனைய நகர்ப்புற கூட்டுப் பகுதிகளைப் பொறுத்த மட்டில், எல்லையோரப் பகுதிகளை நீக்கியதன் மூலம் அவை, மொத்தப் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியாகக் குறைந்துள்ளது

102. பின்வரும் நகர்ப்புறக் கூட்டுக் பகுதிகளில் இச்சட்டம் செயலிலுள்ளது :—

நகர்ப்புற கூட்டுப் பகுதியின் பெயர் :—

(1) சென்னை.

(2) மதுரை.

(3) கோயம்புத்தூர்.

(4) திருச்சிராப்பள்ளி.

(5) சேலம்.

(6) திருநெல்வேலி.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகர்ப்புறக் கூட்டுப்பகுதி ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட ஒருவரோ, ஒரு குடும்பமோ, ஒரு தொழில் நிறுவனமோ நிலம் வைத்துவர அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பின் விவரம் வருமாறு :—

தமிழ்நாடு சட்டம் 241/1978.

நகர்ப்புறக் கூட்டுப்பகுதி. (1)	வகைப் பாடு. (2)	தனிப்பட்ட ஒருவர். (3)	ஒரு குடும்பம். (4)	தொழில் நிறுவனம். (5)
			(சதுர மீட்டர்கள்).	
சென்னை ..	I	500	2,000	2,000
மதுரை .. கோயம்புத்தூர் திருச்சிராப்பள்ளி, சேலம்	II	1,500	3,000	3,000
திருநெல்வேலி.	III	2,000	4,000	4,000

103. தனிப்பட்ட ஒருவரைப் பொறுத்தமட்டில், ''குடும்பம்'' என்பது, அத்தனிப்பட்ட நபர், அவருடைய மனைவி அல்லது கணவன், அவர்களுடைய உரிய வயதடையாத திருமணமாகாத குழந்தைகள் ஆகியோரைக்கொண்டது எனப்படும், கணவன் மனைவி, உரிய வயதடையாத இரு குழந்தைகள் கொண்ட ஒரு குடும்பத்தில் ஒவ்வொருவரும் 500 சதுர மீட்டர் (அதாவது மொத்தமாக 2,000 சதுர மீட்டர்) காலி நிலத்தைச் சென்னை நகரப்புறக் கூட்டுப்பகுதியில் வைத்துக் கொள்ளலாம். சென்னை நகரப்புறக் கூட்டுப்பகுதியில், இருவர் அடங்கிய ஒரு குடும்பம் உச்சவரம்பாக, 1,000 சதுர மீட்டர் நிலத்தையும், மூன்று பேர் அடங்கிய ஒரு குடும்பம் உச்சவரம்பாக, 1,500 சதுர மீட்டர் நிலத்தையும் வைத்துக்கொள்ளலாம்.

இணைப்பு

ஏனைய நகர்ப்புறக் கூட்டுப்பகுதியில் இரண்டு அல்லது அதற்கு மேலும் நபர்களைக்கொண்ட ஒரு குடும்பம் வைத்துக்கொள்ள வேண்டிய நிலத்தில் உச்ச வரம்பு (4) ஆம் பக்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. உரிய வயதடையாதவர்கள் உச்சவரம்பிற்குட்பட்ட காலி நிலத்தைத் தாமே சுதந்திரமாக வைத்து வரத் தகுதியுடைய வராவார். உரிய வயது வந்த மகன்கள், தந்தை அல்லது தாய் சுயமாக சம்பாதித்த சொத்து மற்றும் கூட்டுக் குடும்பச் சொத்தில் பெயரளவு பங்கினை வைத்துக்கொள்ள தகுதி உடையவர் களாவார்கள். திருமணமாகாத உரிய வயதடைந்த மகன்கள், தந்தை அல்லது தாய்ச் சுயமாகச் சம்பாதித்த சொத்தில் மட்டும் பெயரளவு பங்கினை வைத்துக்கொள்ள தகுதி உடையவர்கள் பிரிவினையாகாத இந்துக் குடும்பத்திற்கு அளிக்கப்பட்டுள்ள இச்சலுகை, கிருத்துவ, முகம்மதிய மதத்தைச் சேர்ந்த குடும் பங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

104. ஒரு கட்டிட ஒழுங்குமுறைப் பரப்பு 500 சதுர மீட்டர் என்று ஒரே படித்தாக அனுமதிக்கப்படுகிறது. குடி யிருப்பு வீட்டுடன்உள்ளதும், 1976 ஆகஸ்ட் 3 ஆம் தேதிக்கு முன் அல்லது அத்தேதியன்று கட்டப்பட்டதுமான ஒரு கட்டிடத் திற்கு 500 சதுர மீட்டர் கூடுதல் இணைந்த நிலப்பகுதி அனுமதிக்கப்படுகிறது. மற்றும் எந்தக் கட்டிடம் தொடர்பாகத் தகுதிவாய்ந்த அதிகாரியின் ஒப்புதலுடன் குடியிருப்புப் பகுதியை சேர்த்துக் கட்டுவதற்காக வரைபடம் பெறப்பட்டுள்ளதோ அக் கட்டிடம் தொடர்பாகவும் மேற்சொன்ன கூடுதல் இணைந்த நிலப்பகுதி பொருந்தும்.

105. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்பகுதி நில (உச்ச வரம்பு கட்டுதலும் முறைப்படுத்தலும்) விதிகளின் 3 ஆம் விதியின் படி முறையே 100, 250, 300 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலங்கள், முறையே ஒரு குடும்பம், இரண்டும், ஐந்து குடும்பங்கள் பயன்படுத்தும் பாதையாக இருந்தால் அவற்றை அவர்கள் அவ் வாறு வைத்துவர அனுமதியளிக்கப்பட்டுள்ளனர்.

106. நிலங்கள் வைத்துள்ள நபர்களின் தரைப்படங்களுக்கு 3-8-1976 ஆம் நாளுக்கு முன்பாக ஒப்புதல் அளிக்கப்பட்டு இருந்தால் அத்தகைய நபர்கள் அதிகப்படியாக வைத்துள்ள காலி நிலத்தை பிறருக்கு விற்பனை செய்யும் பொருட்டு வைத்துவர அனுமதிக்கப்பட்டுள்ளது.

107. இச்சட்டத்தின் வரம்பு நிபந்தனைகளிலிருந்து, பயிரிடும் நிலங்கள் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன. பயிரிடப்படாத நிலமாகப் பெருந்திட்டத்தில் காட்டப்பட்டு அவை தொடர்ந்து பயிரிடும் நிலமாகப் பயன் படுத்தப்பட்டு வருமானால் அந்நிலங் களுக்கு இச்சட்டம் பொருந்தாது. ஆனால், வேறு பணி களுக்காக இந்நிலங்கள் பயன்படுத்தப்படுமானால் இச் சட்டம் அத்தகைய நிலங்களுக்குப் பொருந்தும்.

இணைப்பு

108. விற்பனைப் பத்திரம், ஏனைய பத்திரங்களில் குறிப்பிட்டுள்ள நிலங்கள் காலி நிலங்களா அல்லது பயிரிடும் நிலங்களாகப் பயன்படும் நிலங்களா என்பது குறித்து பொருத்தமான அதிகாரிகள் சரிபார்க்கப் பயன்படும் வகையில் 1980 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின்படி உரிமை மாற்றம் செய்யக்கருதியுள்ளவர்களும், உரிமை மாற்றம் பெறுவதற்குக் கருதியுள்ளவர்களும் தாக்கல் செய்யும் பத்திரங்களை எல்லா நேர்விலும் அவர்கள் படிவம் XIII இல் அமைந்த உறுதிமொழியின் இரு நகல்களைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று பத்திரப் பதிவு செய்யும் அதிகாரிகள் வலியுறுத்த வேண்டும்.

109. உச்சவரம்பிற்குக் கூடுதலாகக் காலி நிலம் வைத்துள்ள நபர் ஒருவர், அவர் அவ்வாறு வைத்துள்ள நிலம் குறித்து, இச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி விவர அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும்; இச்சட்டத்தின 11 ஆம் பிரிவின உட்பிரிவு (1)இன் படி அறிவிக்கை ஒன்றை வெளியிடவேண்டும்; அவ்வாறு செய்திருந்தால் மட்டுமே அவர் அந் நிலத்தை முழுமையாகவோ அதன ஒரு பகுதியையோ விறபனைஅடமானம், கொடை, குத்தகை அல்லது ஏனைய பிற வழிகளில் உரிமை மாற்றம் செய்ய முடியும்.

110. இச்சட்டம் செயல்படுத்தப்பட்ட நாளில், உச்ச வரம்பிற்குக் கூடுதலாகக் காலி நிலம் வைத்துள்ள ஒவ்வொருவரும் அவ்வாறு கூடுதலாக வைத்துள்ள நிலம் குறித்த அறிக்கை ஒன்றை, அப்பகுதியின் அதிகார வரம்பைப் பெற்றுள்ள பொருத்தமான அதிகாரியிடம் தாக்கல் செய்ய வேண்டும். இச்சட்டத்தின் 7-ஆம் பிரிவின்படி, அறிக்கை தாக்கல் செய்யவேண்டிய கடைசி நாள் 14-9-1978 அன்றுடன் முடிவடைந்து விட்டது. 1976-ஆம் ஆண்டு சட்டத்தின் 6 (1) ஆம் உட்பிரிவின்படியும், 1978ஆம் ஆண்டுச் சட்டத்தின் பிரிவு 7 (1) ஆம் உட்பிரிவின்படி 17-1-1981ஆம் நாள் வரை, 15,026 அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 1978-ஆம் ஆண்டுச் சட்டத்தின் விதித்துறைகளின்படி தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகளில் 11,635 அறிக்கைகள் உச்சவரம்பிற்கு உட்பட்டவை என்று அறிவிக்கப்பட்டன. எஞ்சியுள்ள 3391 அறிக்கைகள் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. கையகப்படுத்தும் பொருட்டு, உச்ச வரம்பிற்குக் கூடுதலாக உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளன. காலி நிலங்களின் பரப்பு 3,74,26,420 சதுர மீட்டர்களாகும். தகுவாய்ந்த அதிகாரிகள், அறிக்கைகளைப் பரிசீலனை செய்து வருகின்றனர். 174 அறிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 22,58,034 சதுர மீட்டர் பரப்பளவு காலி நிலம் உச்சவரம்பிற்குக்கூடுதலாக வைக்கப்பட்டிருப்பதை அறிவிக்கப்பட்டது. அவை குறித்து, பிரிவு 11, உட்பிரிவு (1)ன்படி தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டது.

இணைப்பு

74 இனங்களில் 9,20,292 சதுர மீட்டர் பரப்பளவு காலி நிலம் உச்சவரம்பிற்குக் கூடுதலாக வைத்திருப்பது குறித்து, பிரிவு 11, உட்பிரிவு (3)-ன படி அறிவிக்கை வெளியிடப்பட்டது.

31—12—1980-ஆம் நாள் வரை. பல்வேறு நபர்களிட மிருந்து வரப்பெற்ற அறிக்கைகளின் மொத்த எண்ணிக்கை 15,016 ஆகும். அவற்றில் 11,669 அறிக்கைகள் மீது நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள 3,347 அறிக் கைககள், பரிசீலனையில் உள்ளன. இதுவரை தனிப்பட்டவர் களுக்கும், தொழில்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள விலக்குகளின் எண்ணிக்கை முறையே 390, 297 ஆகும். இவ்விரண்டு இனங்களிலும் விலக்களிக்கப்பட்டுள்ள நிலத்தின் பரப்பு 1,346·013 எக்டேர் ஆகும். தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நகர்ப் பகுதி நிலச் (உச்சவரம்பு கட்டுதலும் முறைப்படுத்துதலும்) சட் டத்தின் பிரிவு 11, உட்பிரிவு (3)-ன் கீழ் 91·700 எக்டேர் நிலப் பரப்பு கொண்ட 74 நேர்வுகள் குறித்து அறிவிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

உச்சவரம்பிற்குக் கூடுதலாக உள்ள காலி நிலங்கள் கையகப் படுத்தப்படும்போது, ஒவ்வொரு நகர்புற கூட்டுப்பகுதியிலும் வழங்க வேண்டிய ஈட்டுத் தொகை குறித்து கீழே குறிப்பிடப் பட்டுள்ளது.

நகர்ப்புறக் கட்டுப் பகுதி.	வகைப் பாடு.	வழங்க வேண்டிய தொகை (உயரளவு).
(1)	(2)	(3)
I சென்னை ..		ஒரு சதுர மீட்டருக்கு 50 ரூ. மிகைப்படாமல் தொகை வழங்கப்பட வேண்டும்.
II மதுரை, கோயம்புத்தூர் திருச்சி, சேலம்.		ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூ. மிகைப் படாமல், தொகை வழங்கப்பட வேண்டும்.
III திருநெல்வேலி ..		ஒரு சதுர மீட்டருக்கு 15 ரூ. மிகைப்படாமல், தொகை வழங்கப்பட வேண்டும்.

இணைப்பு

இப்பணிக்காக், நகர்ப்புற கூட்டுப் பகுதியில் காலி நிலம் அமைந்துள்ள பகுதி, அந்நிலம் பொதுவாகப் பயன்படும் விதம் நகர்ப்புற கூட்டுப் பகுதியின் முறையான நகர வளர்ச்சிப் பணியில் அந் நிலம் பயன்படும் விதம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, மாநிலத்திலுள்ள நகர்ப்புற கூட்டுப் பகுதிகள், பல் வேறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

நகர்ப்புறக் கூட்டுப் பகுதி	மண்டலங்களின் எண்ணிக்கை.
சென்னை	20
மதுரை	10
கோயம்புத்தூர்	20
திருச்சிராப்பள்ளி	11
சேலம்	13
திருநெல்வேலி	14

ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள காலி நிலங்களுக்கும், சதுர மீட்டர் ஒன்றிற்கு 0·10 காசுகள் முதல், உச்ச அளவுத் தொகை எவ்வளவு வழங்கலாம் என்பது குறித்து இச்சட்டத்தின் 12 (b) பிரிவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ அந்த அளவிற்கு ஈட்டுத் தொகை வழங்கலாம்.

111. தகுதி வாய்ந்த அதிகாரிகள் 12 ஆம் பிரிவின்படி தொகை பெறுவதற்குரிய உரிமை குறித்து பிறப்பித்த ஆணைகளாலும் 29 ஆம் பிரிவின்படி அந்நிலத்திலுள்ள கட்டிடத்தை இடிப்பதற்கோ அல்லது அங்கு உள்ள கட்டிடத்தை மாற்றியமைப்பதற்கோ பிறப்பித்த ஆணைகளாலும் பாதிக்கப்பட்ட நபர்கள் நகரப் பகுதி நில நடுவர் மன்றத்திடம் மேல் முறையீடு செய்து கொள்ள வேண்டும். நடுவர் மன்றத்தின் முடிவிற்கெதிராக மேற் சொன்ன பிரிவுகளின்படி ஆணைகள் பெற உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ள வேண்டும், ஏனைய நேர்வுகளில் மேல் முறையீட்டு அதிகாரியிடம், அதாவது நிலச் சீர்திருத்த ஆணையர் அவர்களிடம் மேல்முறையீடு செய்து கொள்ளப்பட வேண்டும்.

இணைப்பு

112. காலி நிலத்தை அரசு கையகப்படுத்தும்போது மொத்த தொகையில் 25 சதவீதம் அல்லது ரூ. 25,000 இவற்றுள் எத்தொகை குறைவானதோ அததொகை உடனடியாக வழங்கப்படும். எஞ்சியுள்ள தொகை காலி நிலத்தை அரசு எடுத்துக் கொண்டுள்ளதாகக் கருதப்படும் நாளிலிருந்து 15 ஆண்டுய கால அளவில் ஆண்டு ஒன்றிற்கு 6 சதவீத வட்டியுடன், ஆண்டுச் சம தவணைகளில் வழங்கப்படும்.

113. மத்திய அரசு, மாநில அரசு, அரசு நிறுவனங்கள், அட்டவணையிடப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள், சமய அறக்கட்டளை நிறுவனங்கள் முதலியவை வைத்துள்ள நிலங்களுக்கு இச் சட்டத்தின் விதித்துறை பொருந்தா.

114. தமிழ்நாடு 24/1978ஆம் ஆண்டுச் சட்டத்தின் 20ஆம் பிரிவில், உட்பிரிவு, (3)ல் சொல்லியுள்ள விதித் துறைகளை செயல்படுத்துவதில் நடைமுறை இடர்ப்பாடுகள் இருந்தன. இவ்விடர்ப்பாடுக்களைக் களையும் பொருட்டு, மேற் சொன்ன 20 ஆம் பிரிவின் (3) உட்பிரிவிற்கு பதிலாக, தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு நகரப் பகுதி நில (உச்ச வரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) திருத்த சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 4/1979) புதிய உட்பிரிவு, சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. பொது, அற சமயப் பொறுப்பு கழகங்களிடம் (வக்ஃப் வாரியம் உட்பட) உச்ச வரம்பிற்குக் கூடுதலாக உள்ள நிலங்கள் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியோ, விற்பனை, அடமானம், கொடை, குத்தகை அல்லது ஏனைய பிற வழிகளில் உரிமை மாற்றம் செய்யக் கூடாது என்றும், அவ்வாறு செய்யப்படும் உரிமை மாற்றம் சட்டப்படிக்கு செல்லாது என்றும் இச்சட்டம் வகை செய்கிறது. மேலும், பொது, அற சமயப் பொறுப்புக்கழகங்களிடம் (வக்ஃப் வாரியம் உட்பட) உள்ள நிலங்கள் அத்தகைய பொது, அற, சமயப் பணிகளுக்காகத் தேவைப்படுவதும் பயன்படுவதும் அற்றுப் போகுமானால் தமிழ்நாடு சட்டத்தின் விதித்துறைகள் அவற்றிற்குப் பொருந்தும், அத்தகைய நிலங்களை, தமிழ்நாடு சட்டத்தின் அத்தியாயம் III-ல் சொல்லியுள்ள விதித் துறைகளின்படி அரசு கையகப்படுத்திக் கொள்ளும்.

பொது நலன் கருதியும், தனி நபருக்கு ஏற்படும் வரம்பிற்கு மீறிய இடையூறுகளைக் களையும் பொருட்டும், விலக்களிக்க அரசுக்கு அதிகாரமுண்டு. தனி நபர் ஒருவர் இச்சட்டம் செயலாக்கப் படுவதற்கு முன்னால், அதாவது 3—8—1976-ஆம் நாளுக்கு முன்பாக உச்ச வரம்பிற்குக் கூடுதலாக உள்ள காலி நிலத்தை, முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ, மாநில அல்லது மத்திய அரசு அல்லது மாநில அல்லது மத்திய

இணைப்பு

அரசிற்குச் சொந்தமான அல்லது அவற்றின் அதிகாரத்திற்குட்பட்ட நிறுவனம் அல்லது கழகம் அல்லது கல்வி அல்லது மருத்துவ நிறுவனத்திற்கு விற்பனை செய்வதாக ஒப்பந்தம் செய்திருந்து, அவர் செய்துள்ள ஒப்பந்தம் முறையானது என்று அரசு கருதுமானால் அத்தகைய காலி நிலங்களுக்கு அரசு விலக்களிக்கலாம்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் குடியிருப்புக்கள் கட்டுடிக் கொடுக்கும் திட்டத்திற்கு ஏற்பளிக்கவும், அதன்பொருட்டு, உச்சவரம்பிற்குக் கூடுதலாக உள்ள காலி நிலங்களைத் தொடர்ந்து வைத்து வருவதற்கான வரம்புகளையும், நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்யவும் உரிய செயற்குறிப்புகள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

115. தனி நபர்கள், தொழிற்சாலைகள் அல்லது தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புக்கள் கட்டிக் கொடுக்கும் பொருட்டு, கையகப்படுத்தப்பட்ட கூடுதல் நிலங்களை ஒப்படை செய்யும் வகையில் இச்சட்டத்தில் விதிதுறைகள் இயற்றப்பட்டுள்ளன. மேலும், இத்தகைய நிலங்களைப் பொது நலன் கருதி, ஒருவகை செய்யவும், அரசிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படிக் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை ஒதுக்கீடு செய்யும் பொருட்டு, ஒதுக்கீடு செய்யும் விதிகளில் விதித்துறைகள் இயற்றப்பட்டுள்ளன.

தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நகரப்பகுதி நில (உச்சவரம்பு முறைப்படுத்தல்) சட்டத்தின் 11 (3) ஆம் பிரிவின்படி, கையகப்படுத்தப்பட்ட காலி நிலங்களை ஒதுக்கீடு செய்யும்பொருட்டு, விண்ணப்பம் செய்து கொண்ட பல்வேறு நபர்களில், நிலம் ஒதுக்கீடு செய்யப்படுவதற்குத் தகுதியுள்ளவர்களை மதிப்பிட்டறியவும் அவர்களுடைய விண்ணப்பங்களை, அரசிற்குப் பரிந்துரை செய்யவும் அலுவலர் குழு அமைக்கப்பட்டது.

இச்சட்டத்தின்படி, ஒதுக்கீடு செய்யப்படும் காலி நிலத்திற்குக் கீழ்க்கண்ட முறையில் விலை நிர்ணயிக்கப்படுகிறது ;—

(அ) அரசுத்துறை ..	நிலம் கையகப்படுத்துவதற்காகும் செலவுடன், 40 சதவீதம் பணி கட்டணம்:
(ஆ) (i) அரசு நிறுவனங்கள் அல்லது அரசால் ஏற்பளிக்கப்பட்ட நிறுவனங்கள் நிறைவேற்றிய நலிந்த பிரிவினருக்குரிய வீடுகள் கட்டித்தரும் திட்டம்.	நிலத்தை கையகப்படுத்துதற்குரிய விலையும், கையகப்படுத்தும் பணிக்குரிய செலவில் 40 சதவீதத் தொகையும்.
(i) நலிந்த பிரிவினர் தவிர ஏனையவர்களுக்குரிய திட்டம்.	ஒரு மடங்கு அங்காடி விலை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY · SATYAMEVA JAYATE · TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு

(இ) தொழில் நிறுவனங்கள்—

(i) அரசுத்துறை நிறுவனங்களும் கூட்டுத்துறை நிறுவனங்களும்.	ஒரு மடங்கு அங்காடி விலை.
(ii) தனியார் துறை நிறுவனங்கள்.	அங்காடி விலையில் ஒன்றரை மடங்கு.

(ஈ) பள்ளிகள், மருத்துவமனைகள் முதலிய நிலையங்கள்.	ஒரு மடங்கு அங்காடி விலை.

வருவாய்த்துறையின் 1975 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 22ஆம் நாளிட்ட 1868 ஆம் எண் அரசாணையில் (பின்னர் திருத்தம் செய்யப்பட்டது) குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளின் படி அங்காடி விலை தீர்மானிக்கப்பட வேண்டும்.

நிலம் ஒதுக்கப்பட்டவர் அந்நிலத்தை உடைமை உரிமையில் எடுத்துக்கொள்வதில் காலதாமதம் ஏற்படின், மேலே தீர்மானிக்கப்பட்டவாறு காலி நிலத்தின் மதிப்புடன் அந்நிலம் எந்நாளன்று ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அந்நாளிலிருந்து, மேலே குறிப்பிட்டவாறு தீர்மானிக்கப்பட்ட நிலத்தின் மதிப்பிற்கு ஆண்டொன்றுக்கு 9 சதவீதம் என்னும் வீதத்தில் வட்டியும் விதிக்கப்பட வேண்டும்.

116. ஒருவரது நில உச்சவரம்புக்குள் நகர்ப்புறச் சொத்து உச்சவரம்புக்குள் வரும் காலி நிலத்தைப் பிறிதொருவருக்கு மாற்றிக் கொடுப்பது குறித்து பின்பற்றப்படும் சிக்கலான நடைமுறையை எளிதாக்கும் பொருட்டு பழைய சட்டத்தில் காணப்படும் 25 முதல் 27 வரையிலான பிரிவுகள் விட்டுவிடப்பட்டுள்ளன. நில உரிமையை மாற்றிக்கொடுப்பவரும், நில உரிமை மாற்றிக் கொடுக்கப்பெறுபவரும், அவர்கள் வைத்திருக்கும் காலி நிலத்தின் மொத்தப் பரப்பு குறித்து, நில உரிமை மாற்றத்தைப் பதிவு செய்யும் அதிகாரியின் முன், XIII ஆம் படிவத்தில், இரு படிகளில் விவர அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்யின், அவ்வாறு காலி நிலத்தை விற்பனை, அன்பளிப்பு பரிவர்த்தனை குத்தகை பயிரிடும் உரிமையை தன்னகத்தே வைத்துக் கொண்டு அடமானம் வைத்தல் திருப்பிக் கொடுத்தல், ஒப்பந்தம், அறுதியாவணம் அல்லது வேறு வகையில் உரிமை மாற்றம் செய்து கொடுக்க புதிய சட்டத்தின் 27 ஆம் பிரிவில் புதிய விதித்துறைகள் இயற்றப்பட்டுள்ளன.

117. உள்ளாட்சி மன்றங்களிடம் கொடுக்கப்பட்ட கட்டிடங்கள் கட்டுவதற்குரிய வரைபடங்களை நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் நிறைவேற்றப்படும் வரை ஏற்பளிக்க வேண்டாமென அரசு 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் கட்டளைகள்

இணைப்பு

பிறப்பித்ததன் காரணமாக, மேற்கூறிய சட்டம் செயல்படத் தொடங்குவதற்கு முன்னர் உள்ளாட்சி மன்றங்களிடம் கொடுக்கப்பட்டவையும், சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்தால் அல்லது நகர நாட்டுப்புற அமைப்புத் திட்ட இயக்குநரால் ஏற்பளிக்கப்பட்டவையுமான கட்டிட வரைபட விண்ணப்பங்களுக்கு உள்ளாட்சி மன்றங்கள் ஒப்புதலளிக்க இயலவில்லை. 1976-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்கள் 3 ஆம் நாள் வரையில் தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து ஒப்புதல் பெறாமலிருந்த கட்டிட வரைபட விண்ணப்பங்களை அனுப்பியவர்களுக்கு பெருந் துன்பம் ஏற்பட்டதன் காரணமாக, வரைபட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்களுக்குப் பின்னர் ஒப்புதலளிக்கப்படுகையில், மேற்கூறிய இச்சட்டத்தின் கீழ் நில உச்சவரம்பிற்கு மிகாமல் மொத்தத்தில் நிலம் வைத்திருப்பவர்களுக்கு மனைகளை ஒதுக்கீடு செய்வதன் மூலமாக விற்பனை செய்வதற்குக் காலி நிலத்தை அந்நபர்கள் வைத்திருக்கலாம் என்னும் வகையில் மேற்கூறிய சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவைத் திருத்தி அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இச்சட்ட முன்வடிவு, சட்ட மன்றப் பேரவையின் கடந்த கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டுப் பின்னர் தேர்வுக் குழுவின் ஒப்புதலைப் பெறும் பொருட்டு அனுப்பப்பட்டது.

16. கடன் நிவாரணம்.

118. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம், 2,400 ரூபாய்க்கு மிகாமல் ஆண்டு வீட்டு வருமானமுள்ள நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள், கிராமப்புறக் கைவினைஞர்கள், முதலியவர்களுக்கு நிரந்தரமாக நிவாரணம் அளித்தது. அடகுப் பொருட்களை விற்பதற்கு 15—6—1979 வரையில் தடை விதிக்கப்பட்டது.

119. கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் வசிக்கும் சில வகைகளைச் சேர்ந்தோர் வாங்கிய கடன் தொகையின் அளவைக் குறைப்பதற்கு வகை செய்யும் வகையில் தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/1979) நிறைவேற்றப்பட்டது. இவ்வகைகளைச் சேர்ந்தோர் வாங்கிய கடன் தொகையில், 14—7—1978 ஆம் நாளன்றுள்ளவாறு திருப்பிக் கொடுக்கப்படாமலுள்ள தொகையில் $1\frac{1}{2}$ மடங்குத் தொகையை அசலுக்காக அல்லது வட்டிக்காக அல்லது அசலுக்கும் வட்டிக்குமாகச்சேர்த்துச் செலுத்தியிருந்தால் அல்லது செலுத்தினால், 14—7—1978 ஆம் நாளன்று வரையில் திருப்பிக் கொடுக்கப்படாமலுள்ள, மேற்கூறிய வகையினர் வாங்கிய கடன் தொகை திருப்பிக் கொடுக்கப்பட்டதாகக் கருதப்படும். இச்சட்டத்தின்படி நிவாரணம் பெறும் பொருட்டு, நிவாரணம் வேண்டுவோர், அப்பகுதியிலுள்ள சம்பந்தப்பட்ட ஒரு நீதிமன்றத்தை அணுக வேண்டும். தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு அடகுக் கடைக்

இணைப்பு

காரர்கள்-கடன் நிவாரண விதிகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறுள்ள இச்சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 35 1980) குறைக்கப்பட்ட கடன் தொகையை, மூன்று அரை ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தலாம்.

120. கிராமப் பகுதிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் வாழ்பவர்களும், 31—12—1979 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டுக்குரிய ஆண்டு வீட்டு வருமானம் 4,800 ரூபாய்க்கும் மிகாமல் உள்ள நபர்களுக்கு கடன் நிவாரணம் அளிக்கும் பொருட்டு தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 13/1980) நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் 19—4—1980 அன்று முதல் செயலுக்கு வந்தது.

121. சொந்தமாகப் பெருமளவு நிலங்களும் இயங்காச் சொத்துக்களும் உடைய செல்வந்தர்களும், 31—12—1979 அன்றுடன் முடிவடைந்த ஆண்டில் தம்முடைய வீட்டு ஆண்டு வருமானம், வரையறுக்கப்பட்ட வருமான வரம்பான 4,800 ரூபாய்க்கு உட்பட்டிருந்தது என்பதன் பேரில் இச்சட்டத்தின்கீழ் நிவாரணம் அளிக்கும்படிக் கோரினர் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. கடன்பட்ட ஏழைகளுக்கு மட்டுமே நிவாரணம் அளிக்க வேண்டுமென்பது அரசின் நோக்கமாதலால், குறிப்பிட்ட வருமான வரம்பு வரையில் வருமான வரி, விற்பனை வரி, சொத்து வரி அல்லது வீட்டு வரி, தொழில் வரி விதிக்கப்பட்டவர்களையும், 10 ஏக்கர் புன்செய் நிலம் அல்லது 5 ஏக்கர் நன்செய் நிலத்துக்கு அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களையும், 25,000 ரூபாய்க்கு மேல் மதிப்புடைய இயங்காச் சொத்துக்களுக்கு உரிமையுடையவர்களையும் இச்சட்டத்தின் செயல் வரம்பிலிருந்து நீக்கும் பொருட்டு, மேற்கூறிய சட்டம், தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) அவசரச் சட்டத்தால் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 11/1980) திருத்தப் பட்டுள்ளது.

122. தகுதியுடையவர்களிடமிருந்து, கடன் நிவாரணம் வேண்டி வரும் விண்ணப்பங்களை வட்ட ஆட்சியர்கள் மேலும் ஒரு திங்கள் காலத்திற்குப் பெறலாம் என வட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரமளிப்பதுடன், இச்சட்டத்தின்கீழ் கடன் நிவாரணம் பெறுவதற்கு விண்ணப்பங்களை அனுப்பும் கால வரம்பு 31—12—1980 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

123. மேற்கூறிய அவசரச் சட்டத்திற்குப் பதிலாக தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்தச்) சட்டம் இயற்றப் பட்டுள்ளது.

இணைப்பு

124. பல்வேறு கடன் நிவாரணச் சட்டங்களின்கீழ் 1980 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31 ஆம் நாள் வரையில் வரப்பெற்ற விண்ணப்பங்களுக்கு நிவாரணம் அளித்த விவரம் வருமாறு :—

	வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை.	நிவாரணம் அளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.	வழங்கப் பட்ட நிவாரணத் தொகை.
(1)	(2)	(3)	(4)
			ரூ.
சட்டம் 31/1976 ..	41,814	*30,745	14,33,261
சட்டம் 40/1979 ..	1,758	**1,569	28,675
சட்டம் 13/1980 ..	62,688	***26,324	82,05,657

*நிராகரிக்கப்பட்டவை 29,659 பயனடைந்தவை 1,086

**நிராகரிக்கப்பட்டவை 1,537 பயனடைந்தவை 32

***நிராகரிக்கப்பட்டவை 23,604 பயனடைந்தவை 2,720

17. தக்கரவிக் கடன்களைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தல்.

125. தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் தக்காவிக் கடன் திட்டங்களின்கீழ் அவர்கள் திரும்பச் செலுத்த வேண்டிய வேளாண்மைக் கடன்கள் மற்றும் வட்டிச் சுமைகளிலிருந்து தங்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டி அவ்வப்போது முறையீடுகள் செய்து கொண்டுள்ளனர். விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்காக உயர் அதிகாரக் குழு ஒன்றை1977ஆம் ஆண்டு, டிசம்பர் திங்களில் அரசு நியமித்தது. அந்த உயர் அதிகாரக் குழு 1979, மே திங்களில் தனது அறிக்கையை அளித்தது. அரசு, அந்த உயர் அதிகாரக் குழுவின் பொருத்தமான பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, தக்காவிக் கடன் திட்டத்தின்கீழ் உழவர்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறுவகைக் கடன்களைப் பொறுத்த வரையில், நேர்விற்கேற்ப அசல் அல்லது வட்டியைக் கணக்கில் இருந்து தள்ளுபடி செய்ய, 1979 மே திங்களில் தேவையான கட்டளைகளைப் பிறப்பித்தது. இந்த ஆணைகளைச் செயல்படுத்தியதன் விளைவாக ரூ. 5,42,09,826 கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் 8,51,680 உழவர்கள் பயனடைந்தனர்.

இணைப்பு

126. தக்காவிக் கடன் தொடர்பாக உழவர்கள் மேற்கொண்டு கொடுத்த மனுக்களைக் கருதிப் பார்த்தும், அவர்களுடைய பொருளாதார இடர்பாடுகளைக் கருத்திற்கொண்டும், அரசு, சில தக்காவிக் கடன்கள் தொடர்பாக அரசுக்குச் சேரவேண்டிய கடன் தொகை வசூலைத் தள்ளுபடி செய்யுமாறு 1980–81 ஆம் ஆண்டில் ஆணைகள் பிறப்பித்தது. இவ்வாணைகளைச் செயலாக்கியதன் காரணமாக, 1980 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 31 ஆம் நாளன்றுள்ளவாறு 21,41,98,812 ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் 9,46.029 உழவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

வரி செலுத்த மறுக்க அல்லது ஒத்திப்போடத் தூண்டுவதைத் தடுக்கும் அவசரச் சட்டம்.

127. அண்மையில் சிலர் போராட்டங்கள் நடத்தியதன் காரணமாக, அரசிற்கும் இம்மாநிலத்திலுள்ள உள்ளாட்சி மன்றங்கள், தமிழ்நாடு மின்வாரியம், கூட்டுறவுச் சங்கங்கள் (மாநில, தொடக்க நிலவள வங்கிகள் உட்பட) ஆகியவற்றிற்கும் சேர வேண்டிய வரி வசூல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அரசுக்கு அல்லது உள்ளாட்சி மன்றங்களுக்கு அல்லது தமிழ்நாடு மின்வாரியத்துக்கு அல்லது கூட்டுறவுச் சங்கங்களுக்குச் (மாநில, தொடக்க நிலவள வங்கிகள் உட்பட) சேர வேண்டிய அல்லது செலுத்தத்தக்க நிலவரி, பிற வரிகள், அல்லது பிற தொகைகளை உழவர்கள் செலுத்தாதிருக்கும்படி இவர்கள் உழவர்களைத் தூண்டுகின்றனர் என்பது அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. போராட்டங்களை நடத்துபவர்கள், வரி வசூலிக்கச் செல்லும் அரசுப் பணியாளர்களிடம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வன்முறையாக நடந்து கொள்ளும்படித் தூண்டுகின்றனர். ஆகவே, அரசுக்கும், மேலே குறிப்பிடப்பட்ட பிற நிறுவனங்களுக்கும் சேர வேண்டிய, வரி, செஸ்வரி, பிறவரி வீதங்கள், ஏனைய பாக்கித் தொகைகள் ஆகியவற்றை உழவர்கள் செலுத்த மறுக்குமாறு அவர்களைத் தூண்டுபவர்களுக்கும் கடும் தண்டனை விதிக்க நடவடிக்கை வேண்டுமெனக் கருதப்பட்டது. மேற்கூறிய நோக்கத்தை எய்தும் பொருட்டு தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வரி செலுத்த மறுக்க அல்லது ஒத்திப்போடத் தூண்டுவதைத் தடுக்கும் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 9/1980) ஆளுநர் அவர்களால் அதிகார முறையில் வெளியிடப்பட்டது.

128. மூல அவசரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள, வரி செலுத்த மறுப்பதை ஊக்குவிப்பதால் அல்லது வரி செலுத்த மறுக்கத் தூண்டுவதால் இம்மாநிலத்தின் பாதுகாப்பிற்கு அல்லது பொது ஒழுங்கிற்கு அல்லது கண்ணியத்திற்கு அல்லது கட்டுப்பாட்டிற்கு அல்லது இந்தியாவின் முழுமுதல் அதிகாரத்திற்குப் பங்கம் ஏற்படுமாயின், மேற்கூறிய மூல அவசரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்படி இழைக்கப்பட்ட

இணைப்பு

தாகக் கருதப்படும் குற்றத்துக்கு, உரிய தண்டனை விதிக்கப்படும் என்பதைத் தெளிவாக்க, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வரி செலுத்த மறுக்க அல்லது ஒத்திப்போடத் தூண்டுவதைத் தடுக்கும் (திருத்த) அவசரச் சட்டம் பின்னர் ஆளுநர் அவர்களால் அதிகார முறையில் வெளியிடப்பட்டது.

129. மூல அவசரச் சட்டத்தையும், பின்னர் வெளியிடப்பட்ட திருத்த அவசரச்சட்டத்தையும் நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகத் தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வரி செலுத்த மறுக்க அல்லது ஒத்திப் போடத் தூண்டுவதைத் தடுக்கும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

18. கட்டிடங்கள்.

130. வருவாய் ஆய்வாளர்களுக்கென்று அலுவலகத்துடன் கூடிய வசிக்கும் குடியிருப்புகளைக் கட்டுதல்.—1980–81 ஆம் ஆண்டுக் காலத்தில், பிர்கா வருவாய் ஆய்வாளர்களுக்கென 208 அலுவலக குடியிருப்புகளைக் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் பொருட்டு ரூ. 35 இலட்சம் செலவிடவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1978–79 முதல் 1980–81 வரையிலான ஆண்டு காலத்தில் 558 குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது; அவற்றில் 235 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. எஞ்சிய குடியிருப்புகளைக் கட்டும் பணி நடந்தேறி வருகிறது. 1981–82 ஆம் ஆண்டுக் காலத்தில் மேலும் 200 குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிப்பதற்கான செயற் குறிப்புப்பற்றி அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

1980–81 ஆம் ஆண்டுக் காலத்தில், ரூ. 31.50 இலட்சம் செலவில், 2 மாவட்ட வருவாய் அதிகாரிகளுக்கும், 3 வருவாய் கோட்ட அதிகாரிகளுக்கும், 14 வட்ட ஆட்சியர்களுக்கும், 40 துணை வட்டாட்சியர்களுக்கும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வாடகைக் குடியிருப்புகள் கட்டித் தருவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டுக் காலத்தில் 1 மாவட்ட ஆட்சியர், 2 மாவட்ட வருவாய் அதிகாரிகள், 3 வருவாய்க் கோட்ட அதிகாரிகள், 3 வட்ட ஆட்சியர்கள், 50 தலைமையிடத் துணைவட்ட ஆட்சியர்கள் ஆகியோருக்கு வாடகைக் குடியிருப்புகள் கட்டித் தருவது குறித்த செயற் குறிப்பு, வீட்டுவசதி—நகர்ப்புற மேம்பாட்டுத்துறையின் பரிசீலனையில் உள்ளது.

131. வருவாய்த் துறைக்கென அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல்.

(அ) மாவட்ட ஆட்சியர் அலுவலகம்: நாகர்கோயிலில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கெனப் புதிதாகக் கட்டப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இணைப்பு

(ஆ) கோட்ட அலுவலகங்கள்.—கோட்ட அலுவலகங்களைப் பொறுத்தமட்டில், விருத்தாசலத்திலுள்ள வருவாய்க் கோட்ட அதிகாரி அலுவலகத்திற்கென்றும், பெரியகுளத்திலுள்ள மாவட்ட துணை ஆட்சியர் அலுவலகத்திற்கென்றும் புதிய கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஏனைய 8 வருவாய்க் கோட்ட அதிகாரிகள் அலுவலகங்களுக்குரிய கட்டிடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 1981—82-ஆம் ஆண்டுக் காலத்தில் 2 வருவாய்க் கோட்ட அலுவலகங்களுக்கெனப் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒப்புதலளிக்கக் கருதப்பட்டுள்ளது.

(இ) வட்ட அலுவலகங்கள்.—எட்டு வட்ட அலுவலகங்களுக்கெனப் புதிய கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 1981—82 ஆம் ஆண்டுக் காலத்தில், 3 வட்ட அலுவலகங்களுக்கெனப் புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்த செயற்குறிப்புப் பற்றி அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

1980—81 ஆம் ஆண்டில், மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்களிலும், ஒரு கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்திலும், 25 வட்ட அலுவலகங்களிலும் பார்வையாளர்கள் அமர்வதற்குரிய கூடங்கள் முதலியவை போன்ற கூடுதல் கட்டிடங்களைக் கட்டுவதற்காக அரசு, ரூ. 10 இலட்சம் அனுமதித்துள்ளது. மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்கள், 19 கோட்ட அலுவலகங்கள், 68 வட்ட அலுவலகங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் கழிப்பிட வசதிகளுக்காக 1980—81 ஆம் ஆண்டிற்கு அரசு ரூ. 10 இலட்சம் செலவுத் தொகை அனுமதித்துள்ளது.

மேலும், இதுவரையில் குளிர்ந்த குடிநீர்க் கருவிகள் இல்லாத அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்களுக்கும் இக்கருவிகளைப் பொருத்துவதற்கான செலவுத் தொகையை அனுமதிக்கக் கோரும் செயற்குறிப்பினை அரசு பரிசீலித்து வருகிறது.

வருவாய்த் துறை அலுவலகங்களும், ஏனைய அலுவலகங்களும் தனியார் கட்டிடங்களில் இருந்து வருவதற்கு, வாடகை கொடுப்பது குறித்து ஆகும் செலவைத் தவிர்க்கும் பொருட்டு வருவாய்த்துறை அலுவலகங்களுக்கு மட்டுமல்லாது, அப்பகுதியில் செயல்பட்டு வரும் வணிக வரிகள் துறை, பத்திரப் பதிவுத் துறை முதலியவை போன்ற பிற துறை அலுவலகங்களுக்கும் ஒருங்கே அமையும் பல்நோக்கக் கட்டிடங்கள் கட்டுவதற்குரிய செயற்குறிப்புகளையும் அரசு பரிசீலித்து வருகிறது. அண்மையில், மைலாப்பூர், திருவல்லிக்கேணி வட்ட அலுவலகத்திற்காக அத்தகைய கட்டிடத்தைக் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்துவதற்குரிய செயற்குறிப்புக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு

132. கிராமச் சாவடிகள்.—1980–81 ஆம் ஆண்டில், பிர்காத் தலைமையிடங்கள் நீங்கலாக, கிராமங்களில் 48 புதிய கிராமச் சாவடிகளைக் கட்டுவதற்காக ரூ. 6 இலட்சமும் பழைய சாவடிகளையும் கால்நடைப் பட்டிகளையும் செப்பனிடவும் பராமரிக்கவும் ரூ. 2 இலட்சமும் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில், 40 கிராமச் சாவடிகள் கட்டுவதற்காக ரூ. 5 இலட்சம் அனுமதிக்கக் கருதப்பட்டுள்ளது.

133. மேசை, நாற்காலிகள் முதலியவை.—வருவாய்த் துறை அலுவலகங்களில் நீண்ட நாட்களாகப் பயன் படுத்தப்பட்டு, மேலும் பழுதுபார்க்க இயலாத பழைய மேசை, நாற்காலி முதலியவற்றை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் புதிய மேசை, நாற்காலி முதலியவற்றை வாங்குவதற்காக 1980–81 ஆம் ஆண்டில், அரசு ரூ. 10 இலட்சம் செலவுத் தொகை அனுமதித்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் மேற்படி நோக்கத்திற்காக அதே போன்று ரூ. 10 இலட்சம் அனுமதிக்கக் கோரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

19. கூடுதல் பணியாளர்கள்.

134. நாளுக்கு நாள் பெருகிவரும் பணியை விரைந்து முடிப்பதற்காக 1980–81 ஆம் ஆண்டில், வருவாய்த் துறையின் பல்வேறு அலுவலகங்களில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது:—

மாவட்ட ஆட்சித் தலைவர்—அலுவலகம்

வட்டத் துணை ஆட்சியர்கள்	16	(மாவட்டங்களில் பரவலாக நியமிக்கப்படுவர்).
கணக்கு முதுநிலை அலுவலர்கள்	16	(ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவர் என்ற வீதத்தில்).
வட்டத் துணை ஆட்சியர்கள்	2	(கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒருவரும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒருவரும்).
உதவியாளர்கள் ..	4	
வருவாய்த் துறை ஆய்வாளர் (உதவியாளர் நிலையில்).	1	
இளநிலை உதவியாளர் ..	38	

இணைப்பு

தட்டச்சர்கள்	24	(16 பேர், முதுநிலைக் கணக்கு அலுவலரின் கீழ்ப் பணியாற்றுவர்).
அடிப்படைப்பணியாளர்கள் ..	20	(16 பேர் முதுநிலைக் கணக்கு அலுவலரின் கீழ்ப் பணியாற்றுவர்).
குற்றேவலர்	1	
வருவாய்க்கோட்ட அலுவலகங்கள்—		
உதவியாளர்	1	
பதிவேட்டு எழுத்தர்கள் ..	36	
வட்ட அலுவலகங்கள்—		
உதவியாளர்	1	
தட்டச்சர்கள் ..	71	
பதிவேட்டு எழுத்தர்கள் ..	65	
இரவுக் காவலாட்கள் ..	3	
துப்புரவுப் பணியாளர் ..	1	

1981–82 ஆம் ஆண்டில், மாவட்டங்களில் அதிகரித்துள்ள பணிகளை விரைந்து முடிப்பதற்காக, வட்ட அலுவலகங்களிலும் துணை வட்ட அலுவலகங்களிலும் கூடுதலாக 75 தட்டச்சர்கள் பதவிகளுக்கு அனுமதி வழங்கக் கருதப்பட்டுள்ளது.

மேலும், கீழே குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு நோக்கங்களுக்காகப் பின்வரும் பணியாளர்களை நியமிக்கவும் அரசு அனுமதித்துள்ளது:—

() வீடு கட்டுவதற்கு முன் பணம் வழங்குதல்.— ஏழு மாவட்டங்களுக்கு, அதாவது, வட ஆற்காடு, செங்கற்பட்டு, மதுரை, கோயம்புத்தூர், தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் உதவியாளர் வீதம் ஏழுஉதவியாளர் பதவிகள்.

() சிமிட்டி அனுமதிச் சீட்டுகளை வழங்குதல்.— (அ) சென்னை மாவட்டத்தில் 5 வட்ட அலுவலகங்களுக்கு 5 உதவியாளர்கள்.

இணைப்பு.

(ஆ) வரையறுக்கப்பட்டுள்ள கோட்பாடுகளின்படி 11 உதவியாளர் பதவிகளை மாவட்டங்களில் பரவலாக ஏற்படுத்துதல்.

(iii) மது அனுமதிச் சீட்டுகளை வழங்குதல்.—16 உதவியாளர்கள் பதவிகளும், 60 இளநிலை உதவியாளர் பதவிகளும் 6 மாவட்டங்களில் பரவலாக ஏற்படுத்தப்பட்டன.

(iv) முதியோருக்கு ஓய்வூதியம் வழங்குதல்.—47 உதவியாளர், 40 இளநிலை உதவியாளர் பதவிகள் மாவட்டங்களில் பரவலாக ஏற்படுத்தப்பட்டன.

135. முன்னாள் வருவாய் வாரியத்திற்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்ட அலுவலகங்களைப் பொறுத்தவரையில் பின்வரும் செயற்குறிப்புகளுக்கு ஒப்புதல் வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது:—

(i) தற்போது உதவியாளர் நிலையிலுள்ள சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவிகள் 5-ஐச் சாதாரண கண்காணிப்பாளர்கள் பதவி நிலைக்கு உயர்த்தி அவர்களை அந்தரங்க காரியதரிசி எனக் குறிப்பிடுதல்.

(i) தற்போதுள்ள 13 சுருக்கெழுத்துத் தட்டச்சர்களை, உதவியாளர் நிலையிலுள்ள சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவி நிலைக்கு உயர்த்தி அவர்களை நேர்முக உதவியாளர் எனக் குறிப்பிடுதல்.

(iii) நேர்முக எழுத்தராகப் பணிபுரிய கூடுதலாக 5 சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவிகளை ஏற்படுத்த அனுமதியளித்தல்.

20. இடைத் தரகர்களை நீக்குதல்

136. ஜமீன், இனாம், கீழ்குத்தகை எஸ்டேட்டுகள் ஆகியவற்றிலுள்ள உழவர்களுக்கும் அரசுக்கும் இடையே உள்ள இடைத் தரகர்களை நீக்கியது அரசு மேற்கொண்ட வேளாண்மைச் சீர்திருத்தங்களில் முக்கியமான சீர்திருத்தமாகும்.

இணைப்பு

கீழே குறிப்பிட்டுள்ளவாறு, இக்காரியத்திற்காக இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் அண்மை ஆண்டுகளில் இது தொடர்பாக கணிசமான அளவு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது:—

(அ) தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (நீக்குதல் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 26 1948).

	எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை.	பரப்பு (ச.கி. மீட்டர்)
(1)	(2)	(3)
1. எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை.	5,134	29,931.21
2. 31—12—1980 வரை இந்த ஏற்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு.	5,134	29,931·21
3. எஞ்சியுள்ளது		

(ஆ) தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 36/1963)

(1)	(2)	(3)
1. எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை.	2,091	4,149·26
2. 31—12—1980 வரை இந்த ஏற்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு ..	2,057	4,123·91
3. எஞ்சியுள்ளவை	34	25.35

(இ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (நீக்குதல் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 30/1963)

1. எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை	13,568	4,051·63
2. 31—12—1980 வரை இந்த ஏற்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு ..	13,562	4,048·04
3. எஞ்சியுள்ளவை ..	6	3.59

இணைப்பு

(ஈ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு குத்தகைக் கிராமங்கள் (நீக்குதல் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 27/1963).

(1)	(2)	(3)
1. எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்தப் பரப்பு ..	13	83.20
2. இந்த ஏற்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு	13	83.20
3. எஞ்சியுள்ளவை	..	..

(உ) தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜன்மம் எஸ்டேட்டுகள் (நீக்குதல் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 24/1969)

1. எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை	10	324.10
2. இந்த ஏற்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பு.	3	146·17
3. எஞ்சியுள்ளவை	7	177.93

137. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் விதித்துறைகளின் கீழ், ரயத்துவாரி நிலவரி ஏற்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட வேண்டிய எஞ்சிய 34 இனாம் எஸ்டேட்டுகள் குறித்து உயர் நீதிமன்றமும் சிவில் நீதிமன்றங்களும் தடையாணைகளைப் பிறப்பித்துள்ளன. நீதிமன்றங்கள் இத்தடையாணைகளை நீக்கிய பின்னர் இந்த எஸ்டேட்டுகளில் நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கல்ராயன் ஜாகீர் இனாம்கள்

138. மொத்தம் 671.73 ச.கி.மீ. பரப்புள்ள 140 கிராமங்கள் அடங்கிய மூன்று கல்ராயன் ஜாகிர் இனாம்கள் இரண்டு நாடுகள் [அதாவது தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள, (1) ஆரிய கவுண்டர் ஜாகிர், (2) குரும்ப கவுண்டன் ஜாகிர், (3) ஜடாய கவுண்டன் ஜாகிர்; சேலம் மாவட்டத்திலுள்ள (1) பெரிய கல்ராயன் மேல்நாடு, (2) பெரிய கல்ராயன் கீழ் நாடு] ஆகியவை தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள்

இணைப்பு

(நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின்கீழ் இனாம் எஸ்டேட்டுகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை, 1976 ஆகஸ்டில், ஜாகிர்தாரர்கள் தாக்கல் செய்த வழக்குகள் திரும்பப் பெற்று கொள்ளப்பட்டவுடன் அரசால் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன.

139. சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்திலுள்ள கிராமங்களைப் பொறுத்தவரையில், 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் நாள் அன்று சரியான கணக்குகள் வருவாய்த் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. தென் ஆர்க்காடு, மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள 244·43 ச.கி.மீ. பரப்புள்ள 21 ஜாகீர் கிராமங்களைப் பொறுத்த வரையில் சரியான கணக்குகள் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் அன்று வருவாய்த்துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. கள்ளக்குறிச்சி வட்டத்தில் எஞ்சியுள்ள ஜாகிர் கிராமங்களில் நிலவரி ஏற்பாட்டுப் பணி 31—3—1980-ல் முடிக்கப்பட்டது.

வழங்கப்பட்ட ரயத்துவாரி பட்டாக்களும், அவற்றால் எத்தனை பேர் பயனடைந்தனர் என்பதும்.

140. பல்வேறு எஸ்டேட்டு ஒழிப்புச் சட்டங்களைச் சேர்ந்த விதித்துறைகளின் கீழ், ரயத்துவாரி பட்டா வழங்கப்பெற்ற நபர்களின் எண்ணிக்கையைப் பின்வரும் விவர அறிக்கைக் காட்டுகிறது.

சட்டத்தின் பெயர்.	பயனடைந்தோரின் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட பட்டாக்களின் பரப்பளவு.
(1)	(2)	(3) (ஹெக்டேரில்.)
தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 26/1948).	23,33,840	18,17,389.72.00
தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.	3,55,963	1,93,741.22.00
தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு குத்தகைக் கிராமங்கள் (நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.	6,003	5,605.91.50

இணைப்பு

சட்டத்தின் பெயர்.	பயனடைந் தோரின் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட பட்டாக்களின் பரப்பளவு.
(1)	(2)	(3)
		(ஹெக்டேரில்.)
தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.	5,11,120	3,23,223,86.50
கூடலூர் 1969 ஆம் ஆண்டு ஜன்மம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 24/1969).	6,468	10,771,00,00

எஸ்டேட்டுகள் ஒழிப்புச் சட்டங்களின் செயல்வரம்பிற்கு அப்பால் பட்டா வழங்குதல்.

141. தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் செயலுக்கு கொண்டு வரப்பட்ட பின்னரும் பட்டா வழங்குவதற்குரிய நடைமுறைகள் நிபந்தனைகளைத் தளர்த்தி நிர்வாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பின்னரும், இச்சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளில் உள்ள நிலங்களைப் பல ஆண்டுகளாகத் தங்களது அனுபோகத்தில் வைத்து அனுபவித்து வரும் பலருக்கு பட்டாக்கள் வழங்கப்படவில்லை. ஏனெனில் இச்சட்டத்தின்கீழ் அல்லது அரசின் ஆணைகளின் கீழ் பட்டா வழங்குவதற்குரிய தகுதிகளைப் பெறாத காரணத்தால் அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. எனவே அறிவிக்கப்பட்ட நாளன்றும் அதற்கு முன்னரும், நிலத்தைத் தொடர்ந்து தங்களது அனுபோகத்தில் வைத்து வந்தவர்களுக்குப் பட்டா வழங்குமாறு அரசு 1971-ல் ஆணையிட்டது. எஸ்டேட் ஒழிப்புச் சட்டங்களின் செயல் வரம்பிற்கு அப்பாலும் உரிய தகுதி பெற்றவர்கள் பட்டாவிற்கு விண்ணப்பிக்க இயலும் வகையில் அரசு, விண்ணப்பிப்பதற்கான கால அளவை அவ்வப்போது நீட்டித்தது; கடைசியாக 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் நாள் வரை இக்கால அளவு நீட்டிக்கப்பட்டது.

142. நாளது வரை, 22,527 பேர்கள் பயனடைந்து உள்ளனர்; இது வரை 34,190,73,00 ஹெக்டேர் அளவுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

இணைப்பு

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் உள்ள ஜன்மம் எஸ்டேட்டுகளை நீக்குதல்.

143. நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் அதிக பரப்புள்ள நிலங்களை வைத்துள்ள ஜென்மிகள் (Janmies) தங்களின் கீழ்ப் பயிரிடு உரிமைகளோடு குத்தகைதாரர்களை அனுமதித்துள்ளனர். குத்தகை உரிமை, 1929 ஆம் ஆண்டு மலபார் குத்தகை உரிமைச் சட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப் பட்டு, குத்தகைதாரர்களுக்கு, நிலையான பயிரிடு குத்தகை உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன. குத்தகைத்தாரர்களுக்கு அனுபோக உரிமைகளை அளிக்கும் பொருட்டு, கூடலூர் 1969 ஆம் ஆண்டு ஜன்மம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (24/1969) இயற்றப்பட்டது. இச் சட்டம் 1974 நவம்பர் 27 ஆம் நாளன்று செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. 324,10 ச.கி.மீ. பரப்புள்ள நிலம் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு நில அளவைப் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. முழுப் பரப்பளவையும் பொறுத்தவரையில் ரயத்துவாரி பட்டா வழங்குவதற்குரிய சட்டப்படிக்கான விசாரணைகள் முடிக்கப்பட்டுள்ளன. ஜன்மம் நிலம் வைத்துள்ள சிலர், தங்களது நிலத்திற்கு இச்சட்டம் பொருந்துவது குறித்து எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்தனர். இந்த ''ரிட்'' மனுக்கள் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாள் அன்று தள்ளுபடி செய்யப் பட்டன. எனினும், அவர்கள் தலைமை நீதிமன்றத்தில் மேல் முறையீடுகளைத் தாக்கல் செய்து தடையாணையைப் பெற்றனர். கூடலூர் வட்டத்தில் தடையாணை பிறப்பிக்கப்படாத பகுதி களில் நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி, 146.17 ச.கி.மீ. பரப்பளவிற்கு நிலவரி ஏற்பாட்டு முறை கொண்டு வரப்பட்டுள்ளது. 10,771,00,000 ஹெக்டேர் பரப் பளவிற்கு ரயத்துவாரி பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து மேற்கொள்ளப்படும் வரி வருவாய்ப் பணிகள்.

144. இம்மாநிலத்தில் சில பகுதிகளின் முதலாம் நில அளவைப் பணியானது, காலம் பல கடந்ததால் நாளடைவில் நின்றுபோய் விட்டதாலும், தற்போதுள்ள நில அளவை பொருட்களைக் கொண்டு இப்பணியைத் தொடர்ந்து செய்ய இயலாததாலும். இத்தகைய பகுதிகளில் மறுநில அளவை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, பதிவேடு களை நாளது தேதி வரையிலானதாகவும் செயல் முறையிலும் கொண்டுவர வரி வருவாய் தொடர் பணிகள் மேற்கொள்ளப்

பட்டன. பெரியார், தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் இப்பணி கடைசியாக முடிக்கப்பட்டன. அதன் விவரம் வருமாறு:—

மாவட்டம்.	வட்டம்.	பரப்பளவு. (சதுர கிலோ மீட்டர்களில்)
பெரியார் ..	கோபிச்செட்டிப் பாளையம்.	657.67
ஷை	சத்தியமங்கலம்.	729.07
ஷை	பவானி ..	699.17
ஷை	ஈரோடு ..	1,548.79
தென் ஆர்க்காடு ..	கடலூர் ..	949.13
ஷை	திண்டிவனம்	1,404.14

145. கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் வரி வருவாய் தொடர் பணிகள் நடந்தேறி வருகின்றன. அநேகமாய் முடிவுறும் நாள் கடைசிக் கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டம்.	வட்டம்.	பரப்பு (சதுர கிலோ மீட்டர்களில்).	உத்தேசமாய் பணி முடிவுறும் நாள்.
மதுரை ..	கொடைக்கானல்	372.96	31—12—1981
நீலகிரி ..	கூடலூர் ..	210.02	30—6—1981
சேலம் ..	மேட்டூர் ..	237.67	30—6—1981

146. சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்தில் பணி முடிக்கப்பட்டப் பின்னர் பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டத்தில் வருவாய் தொடர் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். நீலகிரி மாவட்டத்தில் அதாவது கூடலூர் வட்டத்திலுள்ள ஜன்மம் எஸ்டேட்டுகள் நீங்கலாக, தனி வகைப்பாடு வரி வருவாய் தொடர் பணிகள் அல்லது புதிய நிலவரி ஏற்பாடு தொடர்பான பணி, நில நிர்வாக ஆணையாளரின் விரிவான

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு

ஆய்விலும், பரிசீலனையிலும் உள்ளது. மறு அளவீடு நடந்தேறி வருகின்ற எஞ்சிய பகுதிகளில் வருவாய் தொடர் பணிகள் இனிமேல்தான் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

மாவட்டம்.	வட்டம்.	பரப்பு (சதுர கிலோ மீட்டர்களில்).
வட ஆர்க்காடு ..	வேலூர் ..	502.95
ஷை	வாணியம்பாடி ..	521.45
ஷை	திருவண்ணாமலை	921.40
பெரியார் ..	தாராபுரம் ..	2,210.95
நீலகிரி ..	கூனூர், கோத்தகிரி.	524.68
ஷை	உதகமண்டலம் ..	1,195.12

தமிழ்நாடு 1973-ம் ஆண்டு தீர்வையில்லா நிலங்கள் மீது ரயதுவாரி வரி விதிப்புச் சட்டம்.

147. 1859 ஆம் ஆண்டு முதல், குறிப்பிட்ட சில நிலங்கள், நிலவரி விதிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டன. இத்தகைய நிலச் சொந்தக்காரர்கள் ஆண்டுத் தீர்வையைப்போல் 20 மடங்கு தொகை மொத்தமாகச் செலுத்திவிட்டு நிலவரியின்றி அனுபவித்து வந்தனர். ஏனைய சில நிலங்களுக்கு, நிலவரி சலுகை வீதத்தில் செலுத்தப்பட்டு வந்திருக்கிறது. இத்தகைய நிலங்கள் ''தீர்வையில்லா நிலங்கள்'' என்றழைக்கப்படுகின்றன. இத்தகைய நிலங்களுக்கும், ரயத்துவாரி நிலங்களுக்குமுள்ள வேறுபாடு என்னவெனில், ரயத்துவாரி நிலங்களின் உரிமையாளர்கள் அந்நிலத்திற்கு நிர்ணயிக்கப்படும் ஆண்டு வரியைச் செலுத்த வேண்டும். ஆனால், தீர்வையில்லா நிலங்களின் உரிமையாளர்கள் வரி எதையுமே அல்லது சலுகை வீத வரியையோ செலுத்த வேண்டியதில்லை. இம்மாநிலத்திலுள்ள இந்நிலங்களை செஸ்வரி உட்பட ஆண்டு வரி செலுத்தத் தக்க சாதாரண ரயத்துவாரி முறையின் கீழ் கொண்டு வர இயலும் வகையில், வரி விதிக்கப்பெறாத இந்நிலங்களை வைத்திருக்கும் முறையை நீக்கிவிட 1972 ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்டது. மேற்கூறிய நோக்கத்தை எய்துவதற்கு, தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தீர்வையில்லா நிலங்கள் மீது ரயத்துவாரி வரி விதிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் I ஆம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு, இம்மாநிலத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் 11,675.31 ஏக்கர் பரப்பளவுடைய தீர்வை விதிக்கப்பெறாத நிலங்களுக்கும்,

இணைப்பு

இச்சட்டத்தின் II ஆம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வாறு ''மோகினி இனாம் நிலங்கள்'' எனப்படும். 5,845.72 ஏக்கர் பரப்பளவையுடைய நிலங்களுக்கும் பொருந்தும். மோகினி இனாம் நிலங்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்ப கோணம், மாயூரம், சீர்காழி, நன்னிலம் ஆகிய வட்டங்களில் உள்ளன. இவற்றை சமய நிறுவனங்கள் வைத்து வருகின்றனர். இந்நிலங்களைப் பொறுத்த வரையில், நிலவரியானது, முன்னாள் அரசர்களால் ரொக்க மானியமாக அல்லது படியாகக்கொடுக் கப்பட்டது. இதற்குப் பதிலாக அப்போதிருந்த ஆங்கிலேய அரசு அவர்களுக்கு இந்நிலங்களை ஒப்படைசெய்தது.

148. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு வரியிலா நிலங்கள் மீது ரயத்துவாரி வரி விதிப்புச் சட்டம் 1973 ஆம் ஆண்டு 31 ஆம் சட்டமாக வெளியிடப்பட்டபோதிலும், வணிகவரிகள் அறநில யத் துறையின் 16-10-1979 ஆம் நாளிட்ட 1646 ஆம் எண் அரசாணையின் படி, அரசு 16-10-1979 ஆம் நாளை இச்சட்டம் செயலுக்கு வரும் நாளாகக் குறிப்படும் வரை அது செயலுக்கு வரவில்லை. இச்சட்டத்தின் கீழ் விரைவில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் தீர்வையில்லா நிலங்களைப் பற்றி இச்சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள பட்டியலுக்குரிய இணைப்பு தனியே அறிவிக்கப்படும்.

நில அளவை செய்தல்

149. நில அளவை நிலப் பதிவேடுகள் துறை தமிழ்நாட்டின் மொத்தப் பகுதியேயும் நில அளவை செய்வதிலும் வரைபடம் வரரைவதிலும் ஈடுபட்டுள்ளது. மேலும், நில அளவை வகைப் பாட்டின் மாற்றங்களை முறைப்படுத்தல், நில ஒப்படை உரிமை விட்டுவிடுதல், நிலத்தைக் கைப்பற்றுதல், விற்பனையின் மூலம் நிலங்களின் சொந்தம் மாற்றப்படல், வாரிசுரிமை, பிரிவினை, நன்கொடை, நீதிமன்றத்தீர்ப்பாணைகள், வருவாய்த் துறை விற்பனை, ஆகியவற்றின் மூலம் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவை குறித்தும் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை நில அளவை செய்யப்படுகிறது. நிலப் பிரிவினைக்குரிய கட்டணம் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டுகளை உள்ளடக்கிய நிலப் பிரிவினைப் பற்றிய விண்ணப்பங்கள் வட்ட ஆட்சியரிடம் செய் யப்பட வேண்டும். பதிவு செய்யப்பட்ட நிலங்கள் தொடர்பான நில வரைபடங்கள் அவற்றிற்குரிய விண்ணப்பத்திற்கான கட்ட ணத்தைச் செலுத்துவதன் பேரில், வட்ட ஆட்சியரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நில அளவை நிலப் பதிவேடுகள் துறை வளர்ச்சிப் பணிகளுக்கான அடிப்படை உள் அமைப்பு வசதியா யுள்ள கிராம வரைபடங்களையும், வட்ட வரை படங்களையும், மாவட்ட வரைப் படங்களையும், அளிக்கிறது. நகர்கள், நகர் நில அளவை முறையிலும், ஊராட்சிகளின் தெருக்களும், சந்துகளும் தெரு நீலஅளவை முறையிலும் நில அளவை செய்யப்படுகின்றன.

இணைப்பு

150. நில அளவை செய்தலும்-நிர்வகித்தலும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒன்றாகத் திகழ்கின்றன. 1949 ஆம் ஆண்டில், 1948ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் 26 ஆம் சட்டத்தின் (நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) படி நில அளவை எடுத்துக் கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகள் நில அளவை செய்யப்பட்டன. பின்னர், தமிழ்நாடு 1963 ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்-தரயத்துவாரியாக மாற்றுதல்) 26 ஆம் சட்டம், தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு குத்தகை கிராமங்கள் (நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல் 27 ஆம் சட்டம், தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) (30 ஆம் சட்டம்) ஆகியவற்றின் கீழ் வரும் பகுதிகள் அளவை செய்யப்பட்டன.

151. சென்னை, நீலகிரி, பெரியார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களும், சமீபத்தில் நில அளவை செய்யப்பட்ட பகுதிகளும், கல்ராயன் மலைப் பகுதிகளும், நிலங்களை உட்பிரிவு படுத்தும் திட்டத்தின் கீழ் நில அளவை செய்யப்பட்ட நிலங்களும் நீங்கலாக, இம்மாநிலத்திலுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் ஏறக்குறைய 30,000 சதுர மைல் பகுதியில் பதிவேடுகளை நாளது வரையிலானதாக ஆக்கும் திட்டத்தை நிறைவேற்ற அரசு அனுமதி அளித்துள்ளது 31—12—1980 வரையிலான பணி முன்னேற்றம் குறித்த விஷயம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

1.	நில எல்லை வரையறுக்கப்பட்டு நில அளவை முடிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை.	1,031
2.	அமைப்பிடம் முடிக்கப்பட்ட மொத்த பரப்பளவு	7,623 சதுர கிலோ மீட்டர்கள்
3.	அளக்கப்பட்ட மொத்த உட்பிரிவுகளின் எண்ணிக்கை	8,36,442
4.	பட்டா அளிக்கப்பட்ட கிராமங்களின் பயனடைந்தோரின் எண்ணிக்கை	1,62,203
5.	நியாயமான கணக்குகள் தரப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை	283

152. இத்திட்டம், உழவர்களுக்கும் அரசுக்கும் பயன்தரக் தக்கதாகும். தனது நிலத்தின் மீது தனக்குள்ள உடைமை, உரிமை, நாற்புற எல்லைகள் ஆகியவற்றைப் பொருத்தவரையில் உழவர்களுக்கு இது சிறந்த பயனுள்ளதாகும். இத்திட்டத்தின் கீழ், நாளது வரையிலான பதிவுகளுடன் அடிப்படை நில ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன உழவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களின் நிலங்களைப் பற்றிய வரைபடங்களடங்கிய பட்டா புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கு கூடுதலாக ரூ. 1.48 கோடி வரை செலவு ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

17 AUG 1982

IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 8/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai 1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate. Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street. Calcutta-17.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery and Printing, Madras.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS